

# மாதர் போதினி

No. 276 | ஜனுவரி 1921 | No. 1

## A NEW YEAR'S GREETING

## ஒரு புது வருஷ வாழ்த்து

God with us
Christ in us
The Holy Spirit anointing us.

தேவன் நம்மோடு
கிறிஸ்து நம்மில்
பரிசுத்தாவியால் நமக்கு அபிஷேகம்.

நமது கிறிஸ்மஸ் தியானத்தில் இம்மானுவேலாக தேவன் நம்மோடிருக்கிறார், கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்கிறார் என்று பார்த்தோம், இவ்வித பதவியை அடைந்தவர் வல்லமையாய் ஊழியஞ் செய்ய விரும்பினால் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெறவேண்டும். முதலாவது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பார்த்தோம். அதோடு பரிசுத்தாவியின் வல்லமை அவசியம். திரித்துவ தேவனுடைய அருள் பெறவேண்டும்.

கிறிஸ்து தேவனுடைய குமாரனாக தேவன் அவரோடு எப்போதும் இருந்தும், ஞானஸ்நானத்திற்குப் பின் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றார். அவ்வண்ணமே நாமும் அபிஷேகம் பெறவேண்டும். இயேசுவானவர் பெற்ற அபிஷேகம் அவர் ஊழியத்திற்கு முத்திரையாயும் அவருக்கு விசேஷ வல்லமை கொடுக்கிறதாயுமிருந்தது. இந்த வல்லமை பிசாசை ஜெயிக்கிறதற்கும் மகத்தான ஊழியஞ் செய்கிறதற்கும் ஏதுவுண்டாக்கிற்று. கிறிஸ்து பரிசுத்தாவியைப் பெறுமுன் ஊழியந் துவக்கவில்லை. அவ்வண்ணமே நாமும் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெறுவது ஊழியத்துக்கு அவசியமானது. சாத்தானை முற்றுமாய் ஜெயிக்க இவ்வபிஷேகம் அத்தியா

161-11



வசியமானது. ஆத்தாளை ஜெயிக்க வேதவசனம் தேவை. சமயத்திற்கேற்ற வசனங்களைப் போதித்து நினைப்பூட்டுவது பரிசுத்தாவியானவர் வேலை. ஆதலின் அவராபிஷேகம் முக்கியமாய் வேண்டியது.

கிறிஸ்துவை கற்றுக்கொண்டிருந்த சீஷருக்கு அவர் பரமேறுமுன் பரிசுத்தாவியின் வல்லமையைப் பெறும்படி காத்திருக்கக் கட்டளையிட்டார். கட்டளைப்பிரகாரம் ஒருமித்து ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தவர்களுக்கு அபிஷேகம் கிடைத்தது. அவர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாய் வல்லமையோடே கிடைத்தது. நாமும் ஜெபித்து வேண்டுதல் செய்தபோதிலும் அபிஷேகம் பெறு இருப்பதின் காரணம், தரித்திராததுதான். தரித்திருப்பதாவது, தொடர்ந்தேர்ச்சியாய் சோர்ந்துபோகாமல் காத்திருந்து ஜெபிப்பது தான். தேவன் மனுஷர் ஜெபிக்கும் வார்த்தைகளை யல்ல, இருதயத்தின் முழு வாஞ்சையையே பார்க்கிறார். இருதயத்தின் முழு வாஞ்சையே உண்மையான ஜெபமாகும். அநேக அறிவில்லாதவர்களுக்குள்ளும் வல்லமையான ஜீவியம் பார்க்கிறோம். அவர்கள் இருதய வாஞ்சையால் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றதே இதின் இரகசியம். அநேக கல்விமான்களும் மேன்மக்களுங் கூட இருதய வாஞ்சையால் இந்த அபிஷேகம் பெற்று வல்லமையுள்ள ஊழியர்களாயிருக்கிறார்கள். வல்லமையுள்ள பரிசுத்த ஜீவியமும் ஊழியமுஞ் செய்ய நிலையான வாஞ்சை உதித்தவுடன் இந்த அபிஷேகம் கிடைக்குமென்பது நிச்சயம். இவ்வித வாஞ்சைக்கு அடையாளம் இடைவிடாதுண்டாகும் ஜெப சிந்தையே.

திரித்துவ தேவன் பூரணர். நமக்கு திரித்துவ அருள் அவசியம். திரித்துவ அருள் பெற்றால் தேவசிந்தை அதாவது கிறிஸ்துவின் சிந்தை அதாவது ஆவியின் சிந்தை உண்டாகும். நமது பாக்கியம் வளர்ந்தோங்கும்.

இவ்வித பாக்கியத்தை இப்புது வருஷத்தில் அடைவோமாக. இது உன்னத ஜீவியம். தேவனை மகிமைப்படுத்தும் ஜீவியம். நாளுக்கு நாள் வளரும் ஜீவியம். பிறரைக் கிறிஸ்துவண்டை நடத்தி தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கும் ஜீவியம். ஓயாத இன்ப ஜீவியம். மெய்ச்சமாதானமும் திருப்தியுமான ஜீவியம். மரணமோ ஜீவனோ, நிகழ்காரியமோ வருங்காரியமோ, உயர்வோ தாழ்வோ, எதுவும் பங்கப்படுத்தாத ஜீவியம்.

ஜெபம். என் தேவனே, எனக்கு இவ்வித ஜீவியமுண்டா? இது எனக்கு சொந்தமே. இதோ உம் சமுகத்தில் இதைப் பெறும்வரை தரித்திருப்பேனென்று உமக்குமுன் பிரதிக்கினைபண்ணுகிறேன்.



# WOMEN'S EVANGELISTIC FORWARD MOVEMENT IN MADRAS

# சென்னையில் பெண்கள் சுவிசேஷப் படைமுயற்சி

கடந்த வருஷம் டிசம்பர் மாதம் 11-ம் தேதி 3-30 மணிக்கு கனம் குரோவர் அம்மாளவர்கள் (Miss P. Grover) வீட்டில் சுவி சேஷ வேலையில் வாஞ்சையுள்ள பெண்களுக்காக ஓர் கூட்டம் நடந் தேறியது. அதில் கனம் H. பாப்லி ஐயரவர்கள் (Rev. H. Popley) சுவிசேஷ வேலை ஒரு தொடர்ந்தேர்ச்சியான வேலை, அதாவது ஓர் குறித்த காலத்தில் செய்து பின் நிறுத்தப்படாமல் தொடுத்துச் செய்ய வேண்டிய வேலை யென்பதை வற்புறுத்தி, இவ்வேலையை கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் தடையின்றிச் செய்யவேண்டுமென்றும், இது ஒவ் வொருவருடைய உத்தரவாதமான வேலையென்றும், இவ்வேலைக்கு நடத்தும் நாயகிகள் அவசியமென்றும், அங்கங்குள்ள பெண் பாட சாலைகளை இலக்காகக் குறித்துக்கொண்டு, மாணுக்கரின் பெற் றோரை மாத்திரமல்ல அந்த வட்டகையிலுள்ள பெண்களையெல்லாம், உபாத்திமார் மாத்திரமன்றி வேதாகம ஸ்திரீகளும் அவ்விடங்களில் வசிக்கும் கிறிஸ்தவ குடும்பத்து ஸ்திரீகளும் தனித்தான் வேலையால் ஆயத்தப்படுத்தி காலத்துக்குக் காலம் பெண்களுக்காக விசேஷ படை முயற்சிக் கூட்டம் அப்பள்ளிக்கூடங்களில் நடத்துவதால் கிறிஸ்து வண்டை கொண்டுவரலாம் என்று சொல்லி, ஞானோதய வித்தியா சாலைக்கு (Summer School) அநேக கிறிஸ்தவப் பெண்கள் போவ தால் ஒருவரோடொருவர் அந்நியோந்நியமாய்ப் பழகி, சுவிசேஷ ஊழியஞ் செய்வதற்குப் பயமும் கூச்சமுமுள்ளவர் தைரியமுடையவ ராகி, அவரவர் வேலையிலுண்டான கஷ்டங்கள், தடைகளைப்பற்றிப் பிறரோடு கலந்துபேசுவதால் அவற்றை நீக்கிக்கொள்ளும் வழிவகை களைக் கற்றுக்கொள்ளலாமென்று சொன்னார்கள்.

அதற்குப்பின் இந்த ஜனுவரிமாதம் நடக்கும் ஞானோதய வித்தியா சாலை (Summer School) ஏற்பாடு ஒழுங்குகளைப்பற்றிப் பேசி, ஆலோசிக்கப்பட்டது.

இந்த வித்தியாசாலை ஜனுவரி மாதம் 13-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை நடந்தேறும். இதற்கு லாப் பிரியமானவர் சென்னை

செட்டித் தெருவிலுள்ள கனம் L. பஞ்சாத்னம்மாளவர்களுக்கு (Mrs. L. Pancharathnam) தங்கள் பெயரையும் மேல்விலாசத்தையும் தெரிவிக்கலாம். நாளொன்றுக்கு 8 அணுவாக 4 நாட்களுக்கும் 2 ரூ. ஒவ்வொருவரும் செலுத்தவேண்டியது.

## THOU SHALT SEE GREATER THINGS THAN THESF

## 'இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்'

I. நம் ஆண்டவருடைய வல்லமை பெரிது. வனாந்தரத்திலே இஸ்ரவேலர் கர்த்தர் வல்லவர் என்பதை மறந்துபோன சமயத்திலே தான், மோசே இந்த வாக்கியத்தை சொல்லுகிறார். தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டதை இஸ்ரவேலர் மறந்து புலம்புகிறார்கள். எகிப்திலே அதிசயங்களைச் செய்தவரும், காமின் தேசத்திலே பெரிய காரியங்களை நடப்பித்தவருமான வல்லவரை மறந்துபோயினர். 1921-ம் வருஷத்தைத் துவங்கும் நாமும், நவ வருட காலையில் கடந்த காலங்களில் நம்மை நடத்தியதெல்லாம் நினைத்து துதிப்போமாக. கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்ததால் அவரையே நோக்குவோமாக. பெரிதானவைகளைக் காண நாம் என்ன செய்யவேண்டுமென்று பார்ப்போமாக.

II. தேவனோடு அதிகமாய்தனித்து ஐக்கியப்பட்டிருக்கும்போது தான் நாம் பெரிதானவைகளைக் காண்போம். யாக்கோபு பெனியேலில் கர்த்தருடன் தனித்துப் போராடி, தேவபிரபு என்ற சிறந்த பட்டம் பெற்றான். அடிக்கடி என் ஜீவியத்தின் ஒளி மங்குகிறது. அதின் குறைவு என்னவென்றால், தனி ஜெபம் கொஞ்சமும், வீண் பேச்சு அதிகமும் என்று கண்டறிந்தேன். ஆகையால் நாமும் நமது ஜீவியத்தில் பெரிதானதைக் காண மனுஷருடன் உறவாடுவதைவிட்டு தேவனோடு உறவாடவேண்டும். எப்படி உறவாடலாம்? (1) கர்த்தரின் வசனத்தை தினமும் ஆராயவேண்டும். 'வேதத்திலே யானை மூழ்கி குளிக்கத்தக்க பெரிய பள்ளங்களும் தீர்தடாகங்களும் உண்டு' என்று ஓர் பக்தர் கூறுகிறார். சிறிது காலத்துக்குமுன் என் சிநேகிதர் ஒருவர் என்னை பொருட்காட்சிசாலை (Museum) காட்ட கூட்டிக்கொண்டு போனார். அவர் நின்று நின்று பார்த்தார். நான் சீக்கிரம் சீக்கிரம் பார்த்து கடந்தேன். கடைசியாய் அவர் என்னை ஒரு நூதன வஸ்துவின் பெயர் சொல்லி, அதை நன்றாய்ப் பார்த்தாயா என்று கேட்டார். அதை நான் பார்க்காததற்குக் காரணம், சீக்கிரம் சீக்கிரம்



ஓடினதுதான் என்று விசனப்பட்டேன். அப்படியே வேதத்திலும் சீக்கிரம் ஓடி வாசித்தால் நாம் சத்தியங்களை நன்றாய் அறியமுடியாதென்று சொல்லக்கூடும். கடைசியாக, நாம் பெரியவைகளைக் காண விசுவாசமென்னும் கண்ணாடி போடவேண்டும். ஆனால் கர்த்தருடைய பெரிதான கிருபையால் விசுவாசக்கண்ணாடியில் அடிக்கடி பெரிதானதைக் கண்டிருக்கிறேன். விசுவாசக்கண்ணாடியால் இனி வரும் உலகத்தையும் அதின் பல்லையும் நம் துன்ப நோங்களில் கண்டு அவைகளால் மயங்காமல், இனி வெளிப்படும் பெரிய மகிமையை நம்பி ஆனந்திப்போம். இதை நம்பி இப்புதிய வருஷத்தில் பெரிய காரியங்களை எதிர்பார்ப்போமாக. கர்த்தர் இப்புதிய வருஷத்தில் பெரிய காரியங் காண கிருபைசெய்வாராக.

H. R. Samuel.

## NEW YEAR—1921

## புது வருஷம்—1921

2 கொரிந்தியர் 5: 17, 18

பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின;
இவையெல்லாம் தேவனாலுண்டாயிருக்கிறது.

இந்த ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தோராம் வருஷத்தில் சந்தோஷத்தோடு பிரவேசிக்கும்படியான சலாக்கியம் 1920-ம் வருஷத்திலிருந்த எல்லாருக்கும் கொடுக்கப்படவில்லை. மகா பராக்கிரமசாலிகள், நல்ல சுகதேகிகள், ஐசுவரியவான்கள், பேர்பெற்ற ராஜாக்கள், பெரிய அதிபதிகள், பிரபுக்கள், டாக்டர்கள், வாலிபர்கள், வயோதிபர்கள், பிள்ளைகள் இந்த வருஷத்தைக் காணக்கூடாமற் போய்விட்டது. ஆனால் நமக்கோ இந்தப் புதுவருஷப்பிரவேசம் நம்முடைய அன்பின் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. புது வருஷத்தைச் சுகத்தோடும் பலத்தோடுங் காணும்படி கிருபைகூர்ந்த தேவனுக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக.

நாம் மூன்று விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

முதலாவது, பழைய வருஷம்.—எத்தனையோ பழைய வருஷங்கள் நம்மேல் கடந்துபோயிருக்கிறது. ஆனால் எல்லாவற்றைப்பார்க்கிலும் கடந்துபோன 1920-ம் வருஷத்தை நினைவுகூருவோம். ஏனென்றால் எத்தனையோ கஷ்டங்கள், எத்தனையோ வியாதிகள்,

எத்தனையோ பலயீனங்கள், எத்தனையோ தரித்திரங்கள், கவலைகள்,
சத்துராதிகளின் பகைகள், விரோதங்கள், ஆபத்துகள், மரணத்தறு
வாய்களினின்று இரட்சித்துக் காப்பாற்றினது மாத்திரமல்ல,
எத்தனையோ பாவச்சோதனைகள், பாவங்கள், அக்கிரமங்கள், பகைகள்,
வைராக்கியங்கள், கோபங்கள், மூர்க்கங்கள், அசுத்தங்கள், அன்புத்
தாழ்ச்சிகள் நம்மேல் காணப்பட்டபோதிலும் பொறுமையோடு
சகித்து நம்மைக் காப்பாற்றின அன்பின் பெருக்கத்தை ஆராய்ந்து
இயேசுகிறிஸ்துநாதரை ஸ்தோத்திரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**இரண்டாவது, புது வருஷம்.**—புது வருஷம் நல்லதுதான்.
புதுவருஷ சலாக்கியங்களும் நல்லவைகள்தான். இந்த வருஷத்தைத்
துவங்கியிருக்கிற நாம் முடிப்போமென்பதற்கு அத்தாட்சியுண்டோ?
சுகத்தோடு துவங்கின நாம் சுகத்தோடும் பலத்தோடும் முடிப்போ
மென்று எண்ண என்ன நியாயமுண்டு? நாம் அறியாத அநேக
தீமைகள், பொல்லாங்குகள், சந்தோஷங்கள் இந்த வருஷத்தில்
நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கலாம், யார் அறிவார்? ஆகையால்
நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து பயபக்தியாய் இந்தப் புது
வருஷத்திற்குள் பிரவேசிப்போமாக. வருஷத்தின் வாரங்கள், நாட்
கள் எப்போதும்போல இப்போதும் மாறுதலைவகளாயிருக்கிறது
போல நம்முடைய குணங்களும் மாறுதலடையாமலிருக்குமானால்
மகா பரிதாபம்! ஆனால் வருஷத்திலே ஓர் இலக்கம் மாறுதலடைந்
திருக்கிறது. நம்முடைய ஜீவகால ஓட்டத்தின் வயதிலே ஒரு வரு
ஷம் கடந்து புதுவருஷம் வந்துவிட்டது. இனிமேல் நம்முடைய
ஆயுசு வருஷத்தில் 1920-ம் வருஷத்தை எதிர்பார்க்கமுடியாது.
மனுஷனுடைய வருஷங்கள் பறந்துபோகிறது. அறுப்புக்காலம்
சென்றது, கோடைகாலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்பட
வில்லை என்று சொல்வோமானால் நம்முடைய நிலைமை மகா பயங்
கரம்! ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம்,
பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடுமல்ல, துப்புரவு, உண்மை
என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்
கடவோம்.

**தேவனாலுண்டானவைகள்.** எல்லாம் தேவனாலுண்டாயிருக்
கின்றன. நம்முடைய உருவம், ஜீவன், சுகம், உத்தியோகம்,
வாழ்வு, செல்வம், மேன்மை, உட்காருதல், எழுந்திருக்குதல்,
போக்கு, வரத்து எல்லாம் தேவனாலுண்டானவைகள். ஒரு மனுஷ
னும் இவைகளை மறுக்கக்கூடாது. இவை யெல்லாவற்றிற்கும்
மேலாகத் தம்முடைய அருமைக் குமாரனாகிய இயேசு இரட்சகனா
அன்பின் வடிவாக நம்மை இரட்சிக்கும்பொருட்டு மானிட சாய

லாக்கினார். நமக்குச் சமாதானம், சந்தோஷம், இரட்சிப்பு, நித்திய
ஜீவன் எல்லாம் நமக்குச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். நாம்
நன்றியறிந்த இருதயத்தோடே இயேசுகிறிஸ்துவை நம்முடைய
இருதயங்களில் ஏற்றுக்கொண்டு புதுவருஷ வந்தனம் யாவருக்கும்
கூறுவோமாக. நம்முடைய தேசம் கடவுளின் அருளில்லாமல் எவ்
வளவாய் இருளடைந்திருக்கிறது. அவர்களுக்கு இந்த இரட்சிப்பின்
செய்தியை கூறியறிவிக்க முயல்வோமாக. ஒரு நல்ல வார்த்தை
சொல்ல, ஒரு நல்ல செய்கை செய்ய, மற்றவர்களுக்கு இரட்சகரைப்
பற்றிச் சொல்ல மறக்கக்கூடாது. தேவன்தாமே நம்மை இந்தப்
புதுவருஷத்தில் தம்முடைய மேன்மையான ஆசீர்வாதங்களினால்
நிரப்புவாராக.

## LEADING TO CHRIST IN TIME OF TROUBLE

## கிறிஸ்துவை இக்கட்டுக்காலத்தில் நம்ப ஏவுதல்

இராகம், பந்துவராளி. ஆதிதாளம்.

பல்லவி

அஞ்சவேண்டாம் நெஞ்சே—யேசு
தஞ்சமே யுன் பங்கே.

அனுபல்லவி

மிஞ்சிக் கவலைகள் தங்கி யுலக்கினில்
நேராகத் தீமைகள் நின்று எதிர்க்கினில்— அஞ்சவேண்டாம்

1

தாவீது சிங்கத்தைக் கொன்ற தெவ்விதம்
தாட்டிகன் கோலியாத்துத் துண்டான தெவ்விதம்
தரணியில் மோர்தேகாய் தகைகொண்ட தெவ்விதம்
தம்பிரா னேசுவே யுன்செயலா லல்லோ— அஞ்சவேண்டாம்

2

அனனியா, மீசாவேல் அசரியா பக்தர்
அக்கினி யுக்கிரம் பற்றுமற் தப்பினர்
அக்யான மன்னனும் மனமுறி வுற்றனர்
அமலவன் கருணையினா லல்லோ நடந்தன— அஞ்சவேண்டாம்

3

தீர்க்கன் தானியேல் திடநம்பிக்கை கொண்டான்
திண்ணமாய்த் தரியுவின் கட்டளை எதிர்த்திட்டான்
தீங்காக முடிமன்னன் சிங்கக் குகையிலிட்டான்
திகில்கொண்டு அதிசயங் கண்டு கலங்கினான்— அஞ்சவேண்டாம்

4

எலிசாவின் பகைவர் கண்கெட்டுப் போகினர்
ஏகிய இஸ்ரேலைத் தாவித் தொடர்ந்தவர்
ஏகமாய் ஆழியில் மாண்டு மடிந்தனர்
ஏகபர னருளாலே நடந்தனர்— அஞ்சவேண்டாம்

5

ஏரோதின் சற்பனை எவ்வள விருந்தாலும்
என்னமாய்க் காவலை யத்திரஞ் செய்தாலும்
எப்படிப் பேதுரு தப்பிக் கடந்தனன்
ஏசுவின் அன்பின் பெருக்கத்தினா லல்லோ— அஞ்சவேண்டாம்

6

சங்காரச் சவுலைப் பவுலாக மாற்றினார்
சதியாகச் சீலாவும் பவுலு மடைபட்டார்
சத்தமாய் அர்த்தராத்திரி ஜெபஞ் செய்தார்
சகலமும் அநுகூலமாக நடத்தினார்— அஞ்சவேண்டாம்

7

எவ்வித ஆயுத மெவரெவ ரெடுக்கினும்
எட்டாமல் பட்டென்று தன்னிலே தைத்திடும்
எவ்விதப் புரணியும் நாவும் விழுந்துபோம்
எல்லாவித அகங்கார மொழிந்துபோம்— அஞ்சவேண்டாம்

8

பூமி யுருண்டு நிலைமாறினா லென்ன
பொறைகள் பெயர்ந்து சமுத்திரஞ் சாய்ந்தென்ன
பொங்கி வெள்ளம் புரண்டோடினா லென்ன
புண்ணிய னேசு வுனக்கிருக்கும் போது— அஞ்சவேண்டாம்

9

நித்தமும் பக்தியாய் நிமலனை யண்டிக்கொள்
நின் விசுவாசத்தை நிதம்நிதம் பிடித்துக்கொள்
நிர்மல னேசுவை யுன்னக மேற்றுக்கொள்
நீங்காம லவர்பாத முன்கண்ணீ ரூற்றிக்கொள்— அஞ்சவேண்டாம்



10

வேதத்தை யனுதினந் தவறாமல் வாசி
வேளை மும்முறை ஜெபமதை யேற்றிக்கொள்
வேண்டிய போதெல்லாம் தனித்தியானஞ் செய்துகொள்
வேதநாயகன் கவி விட்டிடா சாற்றிக்கொள்— அஞ்சவேண்டாம்

V. D. Kailasam.

## WORLD'S NEWS

## உலக வர்த்தமானங்கள்

**கிரீமியா யுத்தம்.** பால்ஷவிக்கரென்ற ருஷியருக்கும் ஜெனரல் உராங்கலென்பவரின் சயினியங்களுக்கும் நடந்த பெருத்த யுத்தத்தில் ஜெனரல் உராங்கலென்பவரின் சேனைகள் அபஜெயமடைந்துவிட்டதால் கிரிமியாவிலிருந்த குடிஜனங்களில் மிச்சமான பேர்களும், மேற்சொன்ன ஜெனரலும் அவரது சேனைகளும் பத்திரமாய் கான்ஸ்டான்டிநோபில் பட்டணம் சேர்ந்தனர்.

**ஆர்மீனியா.** கெமலிஸ்டிற்ஸ் என்ற துர்க்கிய பிரிவினைக்காரர் ஆர்மீனியரோடு யுத்தஞ்செய்கிறார்கள். ஆனால் பிரிட்டீஷ்காரரும் அவர்களைச் சேர்ந்த மற்ற தேசத்தவர்களும் உதவிபுரிவதாய்த் தீர்மானஞ் செய்துவருகிறார்களென்பது சந்தோஷத்தைக் கொடுக்கின்றது.

**விநோத வியாதி.** பாரிஸ் பட்டணத்தில் அதிசய நோய் ஒன்று தற்காலம் தொடங்கியிருக்கிறதாம். அது இன்ன நோயென்று சொல்ல ஏதுவில்லையாம். ஆனால் பிளேக் என்ற உபாதையைப் போன்றதென்கிறார்கள். அதைப் பரிகரிக்கும்படி அநேக பிரயோகங்களைப் பிரான்சு கவர்ண்மென்டார் செய்யும்படி முயற்சிக்கிறார்கள்.

**ஓர் பயங்கர கடற்காற்று.** ஒரு மணிக்கு 70 மைல் வேகமாக ஒரு பெருங்காற்று பிரிட்டனிலுண்டாகி தரையிலும் கடலிலும் பெரும் நஷ்டத்தை யுண்டாக்கிவிட்டது. அநேகர் சமுத்திரத்தில் மாண்டார்கள். கட்டடங்கள் இடிந்து விழுந்தால் அநேகர் உயிர் துறந்தார்கள். இன்னும் அநேகருக்குப் படுகாயமுண்டாகிவிட்டது.

**பூமியதிர்ச்சி.** அல்பேனியாவில் பூமியதிர்ச்சி யுண்டானதால் அநேகங் கிராமங்களழிந்ததோடு 200 பேர் உயிர்துறந்தார்கள், 15,000 பேர் வீடுவாசலற்றவர் களானார்கள்.

**கடுங்காற்று.** ஜப்பானில் பயங்கரமான காற்று அடித்ததால் இரும்பும் நிலக்கரியும் ஏற்றியிருந்த 29 கப்பல்கள் அமிழ்ந்து போயின. அநேக 12 அங்குல பீரங்கிகளும் அமிழ்ந்தன. ஐந்து லட்சம் என் பெறுமான நஷ்டமுண்டாகிவிட்டது.

**பனிமூடல்.** இங்கிலாந்தில் சில மாகாணங்களில் ஏராளமான மூடுபனி பெய்ததால் ரெயில்வேகளும் தந்திகளும் ஓடத்தடைப் பட்டன.

## THE FIRST ADVENT

## கிறிஸ்துவின் முதல் வருகை

‘நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்’

ஏசா. 9 : 6

உலகிலுள்ளோர் எல்லாருக்கும் உரித்தாய் நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்பது ஒரு அதிசய சம்பவமன்றோ! ஒரு வீட்டுக்கு அல்லது ஓர் குடும்பத்துக்கு பாலகன் பிறந்தால் அவரவர்க்குச் சந்தோஷம், அல்லது ஓர் தேசத்துக்கு இராஜனாகும்படி பட்டத்துக் குமாரன் பிறந்துவிட்டால் அந்த தேசம் முழுவதும் சந்தோஷம் கொண்டாடும் என்கலாம். ஆனால் சுவிசேஷ தீர்க்கதரிசியாகிய ஏசாயா நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்றும், லூக். 2:10 ல் தேவதூதன் உங்களுக்கு இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்றும், பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றும் உரைக்கிறார். இதைக் கவனிக்கும் போது ஐந்து கண்டத்துள்ளோருக்கும் ஓர் குமாரனாக தேவபாலன் அவதரித்தார். அதெப்படி என்று சற்று கவனிப்போம்.

நமது ஆதித்தாய் தகப்பன்மார் தேவகற்பனை மீறி பாவஞ் செய்து பாவிகளானபோது தேவகோபத்துக்குள்ளாய் தேவநீதியின் படியே ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே துரத்திவிடப்பட்டார்கள். அப்போ அவர்களின் மறுக்கடியைப் பார்த்த இரக்கமுள்ள



தேவன் அன்பினாலே பொங்கி ‘உங்களை மீட்க ஸ்திரீயின் வித்
திலே ஒரு ரட்சகனைத் தருவோம், அவர் உங்கள் சத்துருவின் தலையை
நசுக்கி உங்களை ஈடேற்றுவார்’ என்பதாய் கிருபையுள்ள வாக்கருளி
னார் (ஆதி. 3 : 15). அந்த வாக்குத்தத்தம் பெற்ற ஆதித்தாய் தகப்பனின்
பிள்ளைகள்தான் இப்போது உலகிலுள்ள நாமனைவரும். நாமெல்லா
ரும் பாவிகளானதினால் நம்மை இரட்சிக்கவே தேவகுமாரன் இரட்
சணிய பாலகனாக கன்னிகை வயிற்றிலுதித்தார். இவர் ஜென்மித்த
நாள் பூவுலகமெங்கும் சந்தோஷம் கொண்டாடும் நாள். திருஷ்டாந்த
மாக, ஆயிரம் ரூபாய் கடன்பட்ட ஒருவன் கடன் கொடுக்க வகை
யின்றி பிறரால் இம்சையும் தண்டனையும் அடையக் காலம் நெருங்கு
கையில் தூரதேசமிருந்து தந்தையின் கடனைத் தீர்த்துவிட அவன்
மைந்தன் வந்துவிட்டால் அந்தக் கடன்பட்ட மனுஷனுக்கு எவ்வளவு
ஆனந்தமிருக்குமோ அதைவிட நமக்கு அதிகமான சந்தோஷத்தைக்
கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில் இவர் நமது பாவக்
கடன்களை மாத்திரமல்ல, தேவகோபத்தினால் வரும் தண்டனைக்கு
உத்தரவாதம் செய்து நம்மைத் தேவனோடே ஒப்புரவாக்கி சமாதான
முண்டுபண்ணும்படி தேவனால் நேசிக்கப்பட்ட குமாரனாக இருந்
தும் நமக்கு மத்தியஸ்தராகப் பூவில் பிறந்தது எத்தனை சந்தோஷமான
காரியம்! இவர் தேவநீதிக்கு உத்தரவாதம்செய்ய, ஸ்திரீயினால் பாவம்
உலகில் வந்ததினால், ஸ்திரீயின் வித்தில் உருவாகி அடிமையின் ரூப
மெடுத்து மனுஷர் சாயலானார். எட்டுத்திசையும் பதினாறு கோண
மும் எங்குமொன்றாய் முட்டித்ததும்பி முளைத்தோங்கும் ஜோதி
யான கடவுள் எளிய கன்னிகையின் வயிற்றில் அவதரித்தது என்ன
விந்தை! பாவி உன்னை ரட்சிக்கத் தேவகுமாரன் மனுஷனானொன்
பதைக் கவனி. அன்றியும் இன்னுமோர் அதிசயத்தைக் கவனி: உலக
ரட்சணியபாலகன் பிறந்ததினம் ‘ராமரிருக்குமிடம் அயோத்தி’ என்
றாற்போல வானம் பூமியாக மாறிவிட்டதாம். ‘வானம் பூமியோ
பராபரன் மானிடனானரோ என்ன இது! வானலோக பரமண்ட
லாதிபதி பூதலத்தில் அவதரித்ததும், பரமசேனைகளின் திரள் பூதலத்
தின்கண்ணிறங்கி பரமண்டல கீதங்கள் பாடி முழங்கினதும், பரம
ஜோதிப்பிரகாச ஒளி வீசினதும், தேவதூதன் ஒளிமய ரூபியாகத்
தோன்றி ‘பயப்படாதேயுங்கள், உங்களுக்கு நற்செய்தியை அறிவிக்
கிறேன்’ என்று சாட்சிபகர்ந்ததும் உன்னதங்களிலிருக்கிற தேவனுக்கு
மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்பேரிலே பிரியமும்
உண்டாயிற்று என்று தேவதூதர்கள் பாடினதும், பூமி அன்று வானம்
போல தோன்றினதாம். பாவத்தினாலே சிக்கில்பிடித்து தங்களை இரட்சிக்

கும் மத்தியஸ்தர் எப்போ வருவார் என்று சகல சிருஷ்டியும் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும்போது சமாதான வாழ்த்துதல் கூறப்பட்டது தேவனுக்கு மனுஷர்பேரிலே பிரியம் உண்டாயிற்று என்று கேட்பது எத்தனை சந்தோஷம்! இந்த சந்தோஷநாளிலே நமது ஆத்தும கண்களை ஏறெடுத்து பெத்லேமட்டும் போய் அந்த சத்திரத்துக் கடுத்த மாட்டுக்கொட்டிலில் படுத்திருக்கும் தேவபாலகனை உற்றுப் பார்த்து வருவோம் வா. இப்பிள்ளையை நீ உற்றுப்பார். இதே உன் இயேசு சுவாமி. ஆ! ஆ! நானும் வருவேன்.

உலகஞானிக்கும் விசுவாசிக்கும் சம்பாஷணை:

**உலகஞானி.** தேவாதிதேவன் உலகரட்சகர் இராஜாதி ராஜனும் கர்த்தாதிகர்த்தனுமான தேவபாலகன் இப்படி மாட்டு முன்னணையில் கந்தைத்துணியால் சுற்றி பனிகுளிரில் படுத்திருப்பது என்ன?

**விசுவாசி:** 'மாட்டுக் கொட்டிலோ உச்சம் ஆட்டுக் குட்டிக்கோ மிச்சம், வந்த தெனமோ லெட்சம் உந்தன் மனமோ பட்சம்' என்று சாஸ்திரியார் பாடியபடி, தேவ ஆட்டுக்குட்டிக்கு மாட்டுக்கொட்டில் பெரிதுதானே. உன்மேல் வைத்த அன்பினாலே நமது நிமித்தம் தரித்திரரானாரே. நம்மை ஐசுவரியவான்களாக்க இக்கோலமானார்.

**உலகஞானி:** சீனாய் மலையில் கற்பனை கொடுக்கும்போது மாடு மலையைத் தொடக்கூடாது, அடிவாரத்தில் வரவுங்கூடாது என்று விளம்பின தேவனின் குமாரன், மாட்டு முன்னணையில் பிறக்க சம்மதித்ததென்ன?

**விசுவாசி:** தேவசாயலாய் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர் மிருகக் குணமுள்ளவர்களாகி முரட்டுத்தனமுடையவர்களாயும் சுபாவ அன்பில்லாதவர்களும் அடங்காதவர்களுமாயும் திரிவதாலே அவர்கள் நடுவில் பிறந்து தமது சிந்தையை அவர்களுக்குள் உண்டாக்கும் அடையாளமாக மாட்டுக்கொட்டிலில் பிறந்தார்.

'காட்டு முரட்டுமனம் மேட்டுத் துறட்டுச்சிந்தை
போட்டு விட்டிட்டேற மாட்டுக் கொட்டில் பிறந்தார்.'
'மிருகமாக நரர் திரிவதால் அந்த
மிருகமேவும் குடில் வருகலானீர்.'

**உலகஞானி:** அப்பப்பா! அண்டசராசரங்களையும் படைத்த நாதனுக்கு ஒரு அரண்மனை கிடையாமலா போயிற்று? தாவீதின் குமாரனுக்கு சாலொமோன் கட்டின அரண்மனையிலே இடந்தர



மாட்டார்களா, அல்லது பனி குளிர் தாங்கக்கூடிய மெத்தை மச்ச வீடு கிடையாதா?

**விசுவாசி:** நல்லது, இந்த பரமசேனைகள் பாடின சந்தோஷத்தைக் கேட்டவுடனே நீயும் நானும் அடுத்தவீட்டு இருளப்பக் கோனாரும் அவர் இனத்தார்களில் அநேகரும் புறப்பட்டு வந்தோமே. அரண்மனைகளிலேயும் மாடமாளிகை கூடகோபுரங்களிலேயும் தேவபாலகன் பிறந்திருந்தால் வாசல்காப்போனும் சேவகரும் நம்மை உள்ளேவிடுவார்களோ? இதற்குள்ளே எத்தனை அடி கிடைத்திருக்கும்! நமக்குக் கொடுக்கப்பட்டவர் பெரியோர் சிறியோர், வலியோர் எளியோர் யாவரும் காணக்கூடியதாக தாழ்வான இடத்திலே பிறந்தார்.

'வானங் கொள்ளான் ஞான முள்ளான்
ஏனம் எதையும் கள்ளான் ஈனக்கொட்டிலையும்
தள்ளான்—வலமைதேவன் மானிட னானாரே.'

**உலகஞானி:** நல்லது, இந்த தேவபாலகனுக்கு நல்ல பட்டு பட்டாவளிகளாலே சுற்றிவையாமல் பழம்புடவைகளிலே சுற்றியிருக்குதப்பா. பிள்ளைக்கு குளிர் தாங்குமா? ஏன் நல்ல கம்பளி மேல்ஜோடு கம்பளி ஷால் போட்டு போர்த்திவைக்கக்கூடாது? பரிதாபமாயிருக்கிறதே!

**விசுவாசி:** நான் முன் சொன்னதுபோல நமது நிமித்தம் தரித்திரகோலம் எடுத்ததேதெனில் நம்மை நீதியின் வஸ்திரங்களினால் அலங்கரிக்கவும், நம்மை ராஜபுத்திரர்களாக்கி அந்த மேன்மைகளை நாம் அநுபவிக்கவும், நமது கந்தையாகிய நீதியை அவர் உடுத்திக்கொண்டு தம் சிந்தையை நாம் தரித்துக்கொள்ளவும் சித்தமானதினால்தான் இக்கோலமானார்.

**உலகஞானி:** சரி, காரிருளாயிருக்கிறதே, பெற்றோரும் தட்டுத் தடுமாறி என்ன சங்கடப்பட்டிருப்பார்கள்! அந்தப் பரமஜோதியின் வெளிச்சம் இல்லாவிட்டால் நாம்கூட வந்திருக்க முடியாதே. ஏனப்பா அர்த்தஜாமத்திலே ஜோதிகளின் பிதாவின் சுதன் உதிக்க வேணும்?

**விசுவாசி:** இருளிலுள்ளோருக்கு வெளிச்சம் உதித்தது என்பதை உணர்த்திக் காட்டும்படி இராத்திரியிலே இயேசு பிறந்தாராக்கும். சர்வலோக சிருஷ்டிகர்த்தா பாவிகளுக்காக தமது நேசமைந்தனை உலகுக்கனுப்பும் காலத்தை நிர்ணயிக்கையில் சூரியனும் சந்திரனும் மங்கி நின்று பொன்னுலகதிபதி பூவுலகத்தில் தோன்றுவது

எங்களில் யார் காலத்திலென உத்தாவாகவேணும் என வேண்டிக் கொள்ள, இரட்சண்ய பிறப்பு குளிர்ந்த இரவுகாலத்திலும் இரட்சண்ய பூரண நிறைவேறுதல் சூரியன் எரிக்கும் பகல்காலத்திலும் என்று பங்கிட்டு விடை பகர்ந்ததாகவும் பூர்வ கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள்.

'அர்த்த ஜாமந்தனிலே ஆர்ந்த குளிர்நாளிலே
செத்தை புல்மீதினிலே ஜென்மித்தார் பெத்லேமிலே.'

உலகஞானி: கல்லுக்குள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் விருப்புற்றமுதளிக்கும் பரமசுதன் பால் பசியால் தயங்கி அழுவதேன்? ரிஷிகளைப்போல பசிதாகமில்லாதவர்போல ஜீவிக்கக் கூடாதோ?

விசுவாசி: நம்மை இரட்சிக்க மனுக்கோலம் பூண்ட மன்னாதி மன்னருக்கு வானமும் பூமியும் சமுத்திரமும் அதிலுள்ளவைகளும் சொந்தமாக இருந்தும், பாவம் தவிர எல்லாவற்றிலும் நம்மைப் போல சோதிக்கப்பட்ட பிரதான ஆசாரியாயிருந்ததினால் இவருக்குப் பசிதாகமிருந்தது. நம்மைப்போல அன்னையின் பால் அருந்தும் மனுஷ சுபாவத்தை தரித்துக்கொண்டதால் ஜீவ இரட்சண்யபதி அன்னைபால் அருந்தினார்.

உலகஞானி: அண்டசராசரங்களையும் அமைத்தவர் ஒரு பெரிய பட்டணத்தில் பிறக்கலாகாதா? சின்ன குக்கிராமத்தில் பிறந்தால் என்ன மதிப்பு இருக்கும்? பெத்லகேம், யூதேயா தேசங்களில் எப்பிராத்தா சிறிது அல்லவா? அவருடைய அப்போஸ்தலனாகிய பவுல் என்பவரும் 'நான் கீர்த்திபெற்ற தர்சுப்பட்டணத்தான்' என்கிறாரே.

விசுவாசி: 'எப்பிராத்தா சிறிது இராஜா வந்ததால் பெரிது
தப்பிலான் கூறினதுதான் நிறைவேறினது.'

மீகா. 5 : 2 ல் சொல்லியபடி, பெத்லகேமே நீ சிறியதல்ல இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிலிருந்து புறப்படுவார் என்ற தீர்க்கதரிசன வாக்கு நிறைவேறப் பிறந்ததுமாத்திரமல்ல, அணுவை மலையாக்கி அமரரைப் பேயாக்கும் வல்லமையுள்ள தேவன் சிறிய பெத்லகேம் ஊரை ஐந்து கண்டங்களும் அறிய பரிசுத்த நாடாக்கிவிட்டார். பொற்கிண்ணத்துக்குப் பொட்டிட்டால்தான் அழகோ?

'தாமரை பொன்முத்துச் சாமரை கோரோசனைபால்
பூமருதேன் பட்டு புனுகுசவ்வாது தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரோ நல்லார்கள்
எங்கே பிறந்தாலு மென்.'



உலகஞானி: தேவகுமாரன் உலகத்தில் வெளிப்படும்போது ஆதாமைப்போல ஏன் பெரிய ஆளாய் பூவுலகில் தோன்றிடக் கூடாது? சிறு குழந்தையாய் கன்னி அன்னை மடியினுள் அடங்கியிருக்கவும் சர்வ ஞானத்தின் ஊற்றானவர் சிறு குழந்தையைப்போல சுபாவமாய்ப் படுத்திருக்கவும் காண்பது என்ன பாவம்போலிருக்கிறதே! மனுஷன் செய்த பாவத்துக்கு மனுஷனாய்த் தோன்றி தேவநீதிக்கீடுசெய்தல் சரிதான் என்றாலும் சிறு மதலையாய்த் தோன்றவும் வேணுமா?

விசுவாசி: குழந்தைகள் பாலகர் வாயினாலும் துதியுண்டுபண்ணும் தேவன், சிறு குழந்தையைப்போல ஆகாவிட்டால் வானராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடாது என்றவர் தாமும் குழந்தையைப்போல உருவெடுத்து குழந்தைமுதல் பரிசுத்தராக விளங்கி குழந்தைப் பருவத்தை அணிந்து குழந்தைகளையும் மோட்சத்துக்குக் கருவிகளாக்க தேவாதி தேவன் சிறு குழந்தையானார். மேலும் குழந்தையின் வடிவம் எல்லாரும் விரும்பத்தக்கதே.

உலகஞானி: பாரும், இக்குழந்தை என்ன அழகு ஜோதிமயமாயிருக்கிறது! நாம் இரு கரங்களாலும் எடுத்து அணைத்து முத்தியிடலாம் என்ற ஆசைமேலிட்டாலும் அச்சமாயிருக்கிறதே, ஏன்? இவர் ஒரு அற்புத பாலகன்போல் இருக்கிறதே.

விசுவாசி: ஆம், அது இருக்கக்கூடியதுதான். இப்பாலகன் கன்னி வயிற்றில் பிறந்ததும், தேவதூதன் பரத்திலிருந்து வந்ததும், கர்த்தருடைய மகிமைச் சுற்றிலும் பிரகாசித்ததும் (லூக். 2 : 9), சந்தோஷமான அசரீரி நற்செய்தியைக் கூறினதும், பரமசேனைகள் சேர்ந்து வந்து பாடினதும், இவர்கள் சொல்லியபிரகாரமே நாம் காண்கிறதுமான காரியாதிகள் அச்சத்தையும் ஆச்சரியத்தையும் கொடுக்கிறதல்லவா? இதுதான் இப்பிள்ளை தேவபாலகன் என்பதற்கு அத்தாட்சி. ஆகையால் நாம் முழந்தாளூன்றி பயபக்தியோடும் மிகுந்த பணிவாய் வணக்கம் செய்வோமாக.

தேவனான நீ மனுடனாகினை
திறமையான நீ சிறுமையாகினை
ஆவியான நீ ஜீவியாகினை
அருவமான நீ உருவமாகினை
பாவியாகினை தாழ்வில்லாத நீ
பாடதாகினை ஆடதாகவே
லீவிலாத நீ சாவுமாகினை
[illegible] வேதநாயகா,

நித்திரைக்கெனத் தாயாராட்டியும்
யழுங்குரலே மிருப்பதேன்
எத்தனைக்கு நீ கூவிலாடினும்
ஏழைமாதிடம் வந்துண்டுதான்
பெத்லேமினில் உற்றபேரவர்
பெருமைகண்டுனைக் கருமைசெய்யவே
மெத்தவும்துயில் விழிகொளப்பனே
வேதநாயகா வேதநாயகா.

[1] உடுகணுற்ற சாஸ்திரிகள் தேடவும்
உகம்வனைந்த நீ அமுதுண்ணவும்
இடையர் வந்து கண்டடி துதிக்கவும்
இரவிலே குளிர் பனி மிகுக்கவும்
[2] படி சிரிக்க நீ யழுதுகொண்டதும்
பரம சேனைகள் பாடி நின்றதும்
விடையின் முன்பு வந்ததுவு மென்சொலாய்
வேதநாயகா வேதநாயகா.

விசுவாசி: இத்தேவ பிள்ளையை எடுத்து அணைத்து முத்திசெய்ய விரும்பினையே. அப்பாலகன் உன்னோடே தங்க விரும்புகிறார். குழந்தையும் தெய்வமும் கொண்டணைக்கும் இடத்திலே உனக்கு சந்தோஷம் வேணுமா, சமாதானம் வேணுமா, தேவன் உன்மேல் பிரியமாயிருக்கவேணுமா, நீ தேவனுக்கு மகிமையாக ஜீவிக்கவேணுமா? இந்த பாலகனுக்கு இடம் ஆயத்தம்செய். எங்கே? உன் இருதயத்திலேதான். எப்படி? மேட்டிமை மேடு தாழ்த்தப்பட்டு அன்பின் தாழ்ச்சிபள்ளம் நிரப்பப்பட்டு கோணலுமாறுபாடும் திருத்தப்பட்டு சாந்தம் என்னும் சமுக்காளம் விரித்து அன்பின் நேசக்கொடி பிடித்து ஆவலோடே தூரத்திலிருந்து இயேசுவைக் காணவந்த சாஸ்திரிகள் வைத்த காணிக்கையாகிய பொன் தூபப்போளம் மட்டுமல்ல, உன் ஜீவன் செல்வம் சுகம் யாவும் அவருக்கே படைத்து துதி தோத்திர ஜெபங்களை தினமும் ஏறெடுப்பாயாக. உலக முடிவுமட்டும் சகல நாட்களிலும் நம்மோடேகூட இருப்பார் (இம்மானுவேல் என்பது அவர் நாமம்).

'பயப்படாதிருங்கள் இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.'

D. E. M.

1 நக்ஷத்திரம். 2 பூமி.

C. L. S. PRESS, MADRAS—1921

மாதர் போதினி

17 FEB 1921 MADRAS.

No. 277 பெப்ருவரி 192[illegible] No. 2

## THE SECRET OF TRUE CHRISTIAN LIFE

## உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்தின் இரகசியம்

இயேசுகிறிஸ்துவானவர் பூமியில் அவதரித்த நோக்கம் மனுஷருடைய பாவங்களை மன்னிப்பது மாத்திரமல்ல மனுஷரை பாவத்தினின்று இரட்சிப்பதுமே. பாவிகளை இரட்சிக்க இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார். அநேகர் இயேசுவானவர் பாவத்தை மன்னிக்கிறார், என் பாவங்களை மன்னித்திருக்கிறார் என்று சந்தோஷத்தோடே திருப்தியடைந்து, கிறிஸ்து பாவ சுபாவத்தினின்று நீங்கும்படி செய்கிற வல்லமையை அடையாது திரும்பத் திரும்ப பாவஞ்செய்து மறுபடியும் மறுபடியும் மன்னிப்புக்காக ஜெபித்து மன்னிப்புப் பெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள். தேவன் நம்மைப் பரிசுத்தத்திற்கென்று அழைத்திருக்கிறார். நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இரட்சிப்பு என்ற பதத்திற்கு, செய்த பாவத்தின் மன்னிப்பென்ற அர்த்தம் மாத்திரமல்ல பாவத்தினின்று விடுதலையென்ற அர்த்தமும் சேர்ந்தது.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவஞ்செய்த ஆத்துமா [illegible] பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனைச் சந்திக்கமுடியாது. தேவனைச் சந்திக்க நாம் செய்யவேண்டிய ஆயத்தம் பரிசுத்தமே. [illegible] மது பாவங்கள் மன்னிக்கப்பட்டபோதிலும் பரிசுத்தமாக்கப்படாவிட்டால் தேவனைச் சந்திக்கமுடியாது. இயேசுவானவர் [illegible] [illegible] நமது பாவங்களை மன்னிக்கவும், உயிர்த்தெழுந்தவர் பாவ வல்லமையினின்று நம்மை விடுவித்து புது ஜீவனைக் கொடுக்கவும் கூடியவராயிருக்கிறார். நாம் அவருடைய பலியின் [illegible] உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அடையவேண்டும். இயேசுவானவர் என் பாவங்களுக்காக மரித்தார் என்று விசுவாசித்[illegible] [illegible], ஆனால் இச்சத்தியத்தை நம்பினவுடன் பாவமு[illegible]

கிடைக்கிறது. கிறிஸ்து இருதயத்திற்குள் வந்தவுடன் பாவத்தினின்று விடுதலை கிடைக்கிறது.

பாவத்தினின்று மனந்திரும்புதலில் இரண்டு பாகமுண்டு. ஒன்று செய்த பாவத்திற்காக துக்கப்பட்டு மன்னிப்பை விரும்புதல், இன்னொன்று பாவவழியைவிட்டு ஜீவவழியில் நடக்க ஒப்புக்கொடுத்தல். இந்த இரண்டு பாகமான மனந்திரும்புதலும் சேர்ந்தே பூரண மனந்திரும்புதலாகும். சாதாரணமாய்க் கிறிஸ்தவர்களிடம் காணப்படும் மனந்திரும்புதல் முதல்பாகம் மாத்திரம்தான். இவர்கள் பாவத்தினின்று விடுதலையடைந்தவரல்லர். திரும்பத் திரும்ப பாவஞ்செய்து மறுபடியும் மறுபடியும் எங்களுக்கு சுகமேயில்லையென்று பாவ அறிக்கைசெய்து மன்னிப்புப் பெறவேண்டியவர்களுக்கு எந்த நேரத்திலும் தேவனைச் சந்திக்க ஆயத்தமிராது. சடுதி மரணத்திற்கு அஞ்சுவார்கள். கிறிஸ்து என்னை பாவத்திலிருந்து விடுவித்திருக்கிறாரென்று சாட்சி சொல்லக்கூடாதவர்களாவர். இவர்களுக்கு நிலையான சந்தோஷங் கிடையாது.

இரண்டாவது பாகத்தைச் செய்தவர்கள் பரிசுத்த ஜீவியத்திற்காக தங்கள் ஆவி ஆத்துமா சரீரம் தங்களுக்குள்ள யாவற்றையும் ஒப்புக்கொடுத்து கிறிஸ்து உள்ளே வந்து வாசஞ்செய்யும்படி எல்லாவற்றையும் விட்டவர்கள். அவர்கள் இருதயத்தில் கிறிஸ்துவுக்குத்தான் இடமுண்டு. உலகமும் அதிலுள்ள யாவும் அவர்களுக்குக் குப்பையாய்த் தோன்றும். உலகத்திலிருந்தாலும் உலகத்திற்குரியவர்களாயிராதிருப்பார்கள். கிறிஸ்து அவர்களிலிருப்பதால் சரீரமானது பாவத்துக்கு செத்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயுமிருக்கும். முதல்பாகம் மனந்திரும்புதலை யடைந்து இரண்டாவது பாகத்தையும் அடையாதிருப்பதால்தான் பாவசுபாவம் மாறாமல் பாவத்தின்மேல் ஜெயங்கிடையாதிருக்கும். கிறிஸ்து இருதயத்தில் வாசமாயிருக்கப்பெற்றவர்களே கிறிஸ்தவர்கள். பாவம் மன்னிக்கப்பட்டதென்று விசுவாசித்து புதுஜீவனை யடையும்படி பரிசுத்தாவியானவரைப் பெறவேண்டும். ஆவியானவரே கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்கிறதைப்பற்றி சாட்சியிடுகிறவர். பழைய மனுஷனை பாவம் சாகுமுன் புதுமனுஷனாகிய கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்ய முடியாது. ஆதலின் மாமிசமும் அதின் ஆசை இச்சையும் சிலுவையிலறையப்படவேண்டும். இரண்டாம் பாகமான பூரண மனந்திரும்புதலுண்டானால் முன்செய்த பாவங்களை நினையாமல் பரிசுத்த ஜீவியத்தையே நோக்கி எல்லாவற்றிலும் ஓயா ஸ்தோத்திரமிருக்கும். கிறிஸ்து வாசஞ்செய்யும்போது 'நான்' அல்லது பாவம் ஒழிந்து பரிசுத்த ஜீவியமுண்டாகும். கிறிஸ்துவின் வாசனை எல்லாவிதத்திலும்



வெளிப்படும். கிறிஸ்து வாசம்பண்ணுவதைப் பரிசுத்த ஆவியினால் நாமே அறிவதுமன்றி பிறரும் அறிந்துகொள்வார்கள். இவ்வித பரிசுத்த ஜீவியத்தின் இரகசியம் கிறிஸ்து நம்மில் வாசஞ்செய்வதேயாம். 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.'

## SUMMER SCHOOL AT ENNORE

## என்னூரில் கூடின ஞானோதய வித்தியாசாலை

கடந்த ஜனுவரி மாதம் 13-ம் தேதிமுதல் 16-ம் தேதிவரை சென்னைக்கருகிலுள்ள என்னூரில் சுமார் 80 பேர் சேர்ந்த ஞானோதய வித்தியாசாலை கூடினது. இச்சாலையில் சேர்ந்தவர் சுவிசேஷ ஊழியத்திற்குத் தங்களை ஒப்புவித்தவர்கள். இவர்கள் அங்கு கூடின நோக்கமென்னவென்றால், பற்பல மிஷனிலுமுள்ள சுவிசேஷ ஊழியஞ்செய்யுங் கிறிஸ்தவப் பெண்கள் கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டு பரிசுத்தாவியானவரின் வல்லமையை அடைந்து தைரியத்தோடும் ஊக்கத்தோடும் வல்லமையோடும் கிறிஸ்துவைப்பற்றி சாட்சிகூறிப் பிரசங்கிக்குங் கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே.

வந்தவர் அநேகர் விசேஷ பலனடைந்ததாக சாட்சியிட்டுப் போயினர். காலைதோறும் வேத ஆராய்ச்சிக் கூட்டங்கள் ஏழு பிரிவாக (Bible circles) நடந்தேறின. அவற்றில் அப்போஸ்தலர் நடபடிகள் 1–17 அதிகாரங்களை விசுவாசம், ஜெபம், பரிசுத்தாவியானவர், சாட்சிப் பிரசங்கம் என்ற நான்கு பிரிவாகப் பிரித்துக் கற்றுக்கொள்ளச் சமயமிருந்தது. இதற்குப்பின் சுவிசேஷப் படைமுயற்சி, ஓய்வுநாட் பள்ளிக்கூடம், ஊழியக்தெரிந்துகொள்ளுதல் என்ற விஷயங்களின்மேல் சம்பாஷணைகள் முறையே முதல் மூன்று நாட்களில் நடந்தேறின. பிற்பகலில் விண்ணப்பக் கூட்டமும் கிராமப் பிரசங்கமும் ஸ்தோத்திரக்கூட்டமும் நடந்தன. மாலை 6½ மணிதோறும் சகரியா தீர்க்கதரிசனத்தினின்று கிறிஸ்துவினால் நமக்குக் கிடைக்கும் ஐசுவரியத்தைப்பற்றி 'அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்' என்ற வாக்கியத்தை விளக்கும் ஆதாரமாகக்கொண்டு தொடர்ந்தேர்ச்சியாய் நாலு நாட்களிலும் பக்தி தியானப் பிரசங்கமும் ஐக்கிய ஜெபமும் செய்யப்பட்டன. ஞாயிற்றுக்கிழமையன்று விசேஷ ஆராதனையும் நடந்தேறியது.

சரீர இளைப்பாறுதலுக்கென்றும் உற்சாகத்துக்கென்றும் தினந்தோறும் பகல் 1½ மணிமுதல் 2½ மணிவரை இளைப்பாறும் நேரமும் சாயங்காலம் 5½ மணிமுதல் 6½ மணிவரை வெளியில் போய் உலாவும் நேரமும் குறிக்கப்பட்டிருந்தன. அமைதியான தனித்த இடமாய்க் கடலோரத்திலிருந்ததால் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் ஆறுதலும் அமைதலுமிருந்தது. கடற்கரையோரமாய் மீன் பிடிப்போரைச் சந்தித்ததும் பேசினதும் உலாவினதும் அருமை இரட்சகருடைய கலிலேயாக் கடலோரமான ஜீவியத்தை அடிக்கடி ஞாபகத்தில் கொண்டுவந்து சந்தோஷிப்பித்தது.

ஞானோதய வித்தியாசாலையைச் சேர்ந்தவர் ஸ்தோத்திரத்தோடும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தவேண்டுமென்ற ஆவலோடும், உற்சாகத்தோடும், புதுஜீவன் சாட்சியாயிருக்கவேண்டுமென்ற வாஞ்சையோடும் போயிருக்கிறார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் இன்னொரு முறை ஞானோதய வித்தியாசாலை கூடும்போது இந்த முறை வந்தவர்கள் அநேகரைப் புதிதாய் அழைத்துவருவார்களென்று நம்புகிறோம். இந்த முறை வரக்கூடாதுபோனவர்களும், ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் சுவிசேஷப் படைமுயற்சி வேலைக்கென்று பிரதிஷ்டைபண்ணி உழைத்துவருவார்களாக.

## THE NEW YEAR—1921

## புது வருஷம்—1921

புதிதென்றால் எவர்க்கும் பிரியம். புதுப்புஸ்தகம் ஒரு பையனுக்குக் கிடைக்கட்டும், அவனுக்குண்டாகும் சந்தோஷத்துக்கு மட்டுண்டா? புதுச்சேலை, புது நகை ஒரு பெண்ணுக்குக் கிடைக்கட்டும், அதன் உல்லாசத்தை மதிக்க முடியுமா? அப்படியே நமக்கு 1921 ஆகிய ஓர் புது வருஷத்தை ஆண்டவர் அருளியிருக்கும்போது நம்மெல்லாருக்கும் விசேஷ கொண்டாட்ட முண்டாவது இயல்புதானே. இப்புதுவருஷத்தில் ஒவ்வொருவரும் அடைந்து கொள்ளவேண்டிய சில புது விஷயங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1. இப்புதுவருஷத்தில் உனக்கு ஓர் புதுப்பெயர் வேண்டும். ஏசா. 62 : 2. ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு ஒரு புதுப்பேர் கொடுக்கிறதாகச் சொல்லியிருக்கிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தாலாட்டும்போது,



'கண்ணே என் கண்மணியே, கானகத்துப் பைங்கிளியே
பொன்னே என் பொன்மணியே, பூமரத்து வண்டினமே
தேனே திரவியமே, திகட்டாத தெள்ளமுதே
மானே மரகதமே, மல்லிகையே மருக்கொழுந்தே'

என்று என்னென்ன பேரெல்லாம் சொல்லி அழைக்கிறார்கள். ஆண்டவரும் உன்பேரிலுள்ள அளவற்ற பட்சத்தினால் உனக்கு ஓர் சிங்காரமான பேர்வைத்துக் கூப்பிட விரும்புகிறார். நீ அவருக்குப் பிரியமாக நடந்துகொண்டால் அப்பெயரைப் பெற்றுக்கொள்வாய்.

2. இப்புதுவருஷத்தில் நீ புதிதான கிருபைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இரட்சகர் காலைதோறும் உனக்குப் புதிதான இரக்கங்களை வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார். புலம். 3 : 23. அவருக்குப் பஞ்சமா? நமக்குத்தான் பஞ்சம். வானமும் பூமியும் அவைகளின் நிறைவும் அவருடையதே. ஆகையால் உனக்கும், உன் ஆத்துமாவுக்கும், உன் வீட்டாருக்கும், மற்றவர்களுக்கும் வேண்டிய சகல புதிய நன்மைகளையும் அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்.

3. இப்புது வருஷத்தில் நீ ஆண்டவரோடு புதிய உடன்படிக்கை செய்யவேண்டும். அவர் தமது இரத்தத்தினிமித்தம் உன் பாவத்தை மன்னிக்கிறோமென்று உன்னுடன் புதிய உடன்படிக்கை செய்கிறார். மத். 26 : 28. ஆகையால் நீ சொல்லவேண்டியதாவது, நான் உம்முடையவன், நீர் என்னுடையவர்; உம்மை நீர் எனக்குத் தத்தம்பண்ணினீர், என்னை நான் உமக்குத் தத்தம்பண்ணுவேன்; எனக்காக இரத்தம் சிந்தினீர், நான் உமக்காக இரத்தம் சிந்துவேன்; என்னை நேசித்தீர், நான் உம்மை நேசிப்பேன் என்று நீ அவருடன் புது உடன்படிக்கை செய். தாமதமின்றி இன்றே, இப்பொழுதே செய்.

4. இப்புதுவருஷத்தில் உனக்குப் புது இருதயம் வேண்டும். எசேக். 36 : 26. நமது இருதயம் பாவத்தால் மெத்தவோ கறைப்பட்டுப்போயிருக்கிறது. அது உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் நொதிக்கிற இரணமாயும், அதின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாயுமிருக்கிறது. ஆகையால் இப்புதுவருஷத்தில் ஆண்டவரிடம் போய் அழுது கண்ணீர் சொரிந்து, புது இருதயத்துக்காக வேண்டிக்கொள், அப்போது அவர் உனக்கு அழகுள்ள திவ்விய வாசனை பொருந்திய புது இருதய கமலத்தைக் கடாக்ஷிப்பார். நீ இருக்குமிடமும் நடக்கும் பாதையும் பரிமளம் பொருந்தியிருக்கும்.

5. இப்புதுவருஷத்தில் நீ ஓர் புதிய கட்டளையைக் கைக்கொள்ளவேண்டும். யோவா. 13 : 34. வந்த சண்டையை விடாதே

தன்னைக் கொல்லவந்த பசுவைக்கொல், ஒன்று சொன்னால் இரண்டு சொல் என்பது உலகத்தார் போதனை. தெய்வ மைந்தனாகிய இயேசுவோ, நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிறார். ஓர் வயோதிப கிறிஸ்தவ கவிஞன் தன் குருவினிடம் வந்து 'என் மகன் செத்த அன்றுதான், நான் அவனுடன் பேசினேன்' என்றான். தகப்பனும் மகனும் ஒரே ஊர், மகனும் பெரிய குடும்பஸ்தன். இருவருக்கும் தகப்பன் பிள்ளை என்கிற பாந்தம் போய், ஒருவருக்கொருவர் பிராண சத்துருக்களாகி பேச்சு வார்த்தையே கிடையாது. இருந்தாற்போல் மகன் செத்துப்போனான். அன்றுதான் தகப்பன் போய், இறந்துபோன மகன்மேல் விழுந்து அப்பா, அப்பா என்று கூப்பிட்டான். இறந்தவன் பேசப்போகிறானா? மகன் உயிரோடிருக்கும்போதே தகப்பனும் மகனும் கிட்டக் கிட்ட உட்கார்ந்து, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, சம்பாஷித்துக்கொண்டிருந்தால் அது என்ன ஆனந்தமாயிருக்கும்! சகோதரனே, சகோதரியே, நீ பேசாத யாருமுண்டா? அப்படியானால் இன்றே போய் பேசி சமாதானமாகு, உன் நேசபாசத்தைத் தெரியக்காட்டு.

6. இப்புதுவருஷத்தில் நீ உன் மீட்பருக்கு ஓர் புதுப்பாட்டுப் பாடவேண்டும். சங். 96 : 1. ஆண்டவர் உனக்குத் தினம் தினம் எத்தனைப் புது ஈவுகளை அருளுகிறார். உனக்குப் புதிய காரியங்கள் மேல் எப்படி ஆசையுண்டோ அப்படியே உன் இரட்சகருக்கும் ஆசையிராதா? உன் பிள்ளை அன்றைக்குப் புதிதுபுதிதாக வாயைத் திறந்து அம்மா சோச்சி என்றபோது, நீ உன் பிள்ளையைக் கட்டித் தழுவி, கண்ணே கரும்பே என்று திரும்பத்திரும்ப முத்தமிட்டாயே. அப்படியே ஆண்டவரும் நீ உன் வாயைத் திறந்து பாடும் புதுப்பாட்டுகளையும், செய்யும் புதுப் பிரசங்கங்களையும் கேட்டு ஆனந்தங்கொள்ளமாட்டாரா? "வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்."

Rev. Y. J. Taylor.

## HIS EXCELLENCY LORD WILLINGDON'S SPEECH

## மேன்மைதங்கிய கவர்னர் வில்லிங்டன் பிரபுவின் வார்த்தைகள்

பம்பாயில் நான் கவர்னராயிருக்கையிலேயே, கனம் காந்தி என்பவரைப்பற்றியும், அவருடைய நடவடிக்கைகளைப்பற்றியும், எனக்கு சற்று தெரியும். ராஜ்ஜியத்தின் நன்மையை உத்தேசித்தே, அவர் மனப்பூர்வமாய் காரியம் செய்வதாய்ச் சொல்வது ஒன்றும், அவர் நினைத்து நடத்துவதுபோல, ஒருவித நன்மையை



யும் இந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவிற்கு உண்டாக்காது என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். இச்சமயத்தில் காந்திபோல ஒருவர், இந்தியாவில் தப்புவழியில் இறங்கி, மாறுபாடாயும் எட்டிக்குப் போட்டியாயும் செய்யும் காரியங்களும், பிரசுரங்களும் இந்தியாவின் தௌர்ப்பாக்கியத்திற்குக் காரணம் என்பதே, என் தீர்மானம். அந்த காந்தி கிளப்பிவிட்ட 'ஸத்தியாக்கிருகம்' என்பது ராஜ்ஜியத்திற்கு எவ்வளவு தீங்கு இழைத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாதா! அவரே இப்பொழுது 'ஒற்று உழையாமை' என்பதைக் கிளப்பிவிட்டிருக்கிறார்.

இதினாலே, ராஜ்ஜியத்திற்கு அநர்த்தம் உண்டாகாமல் இருக்கவேண்டுமென்பது எனது விசாரம். அவருக்கு ஜனங்களை ஆக்கிரோசப்படுத்திவிடத் தெரிவதுபோல, அவர்களை சமரசப்படுத்தி ஆக்கிரோசத்தை அடக்கச் சக்தி இராமலும் இருக்கிறது. இதை எல்லாம் அவர் முன்னமே தீர்க்காலோசித்துப் பார்த்து, ராஜ்ஜியத்தில் அவர் குழப்பம் உண்டாக்காதிருக்கவேண்டும். அது போகட்டும். அவர் செய்த பிரசாரத்தால் இந்தியாவிற்கு என்னதான் கைமேல் பலன் கிடைத்திருக்கிறது? வட இந்தியாவிலே, ஜனங்கள் ஆயிரக்கணக்காய் இவர் பிரசாரத்தைக் கேட்டு, அதற்குள்ளாகி, அனுபவிக்கும் கஷ்டநிஷ்டூரம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாமல் இருக்கிறது!! ஜனங்களுக்கு நன்மைபுரிந்து, ஜனங்களுடைய நன்மையே நாடி, ஜனங்களாலே நன்குமதித்து பாராட்டப்பெற்ற ஒரு ஆங்கில உத்தியோகஸ்தர் அநியாயமாய் அபாண்டமாய்க் கொல்லப்பட்டிருப்பதையும் நீங்கள் அறியீர்களோ!!!

ஆகவே, தற்சமயம் நாம் இன்னது செய்வது உசிதம், இன்னது அநுசிதம் என்பதைக் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. ஸர்க்காரோடு மனம் ஒத்து ராஜ்ஜியம் நடைபெறச்செய்தல் யுக்தமா? அல்லது ஸர்க்காரோடு விரோதப்பட்டு, ஒத்து இயங்காமல் இருத்தவா யுக்தம்? என்பதை தீர்மானப்படுத்திக்கொள்ளவேண்டும். ஜனங்கள் சட்ட பூர்வமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ராஜ்ஜியபரிபாலனத்தை அவலம்பித்து, ராஜ்ஜியத்தை முன்னுக்குக் கொண்டுவருவது சிரேஷ்டமா? அல்லது ராஜ்ஜியாபிவிர்த்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒழுங்கு மீறி, ராஜ்ஜியத்தைச் சின்னாபின்னப் படுத்தும்படிக்குள்ள பிரசாரங்களை ஆதரித்து, ராஜத்துரோகிகளாய் இருப்பது சிரேஷ்டமா? என்பதை விஸ்தாரப்படுத்தவேண்டும். இது அல்ப சொல்பமான காரியம் என்று நினைக்கக்கூடாது. பஞ்சாபில் நடந்த கலகங்களினாலே, ராஜ்ஜியத்திற்கு சம்பவித்த அநர்த்தம் எவ்வளவென்று உங்களுக்குத் தெரியாதா? அவ்வநர்த்தங்

களைப்பற்றி இந்தியர்களுக்கு உண்டாயிருக்கும் அபிப்பிராயம் இன்
னது என்று எனக்குத் தெரிந்திருக்கிறது! எனது தேசத்தவராகிய
இங்கிலீஷ்காரரும் அவ்வனர்த்தங்களைப் பார்த்து அவர்களுக்கு உண்
டாகிய மனக்கிலேசம் இன்னது என்பதையும் ஒவ்வொரு இந்திய
புருஷனும் மனதில் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஏதாகி
லும் ராஜ்ஜிய பரிபாலனத்தில் குற்றம் குறைகள் நடந்துவிட்டால்,
அவைகளை சட்டவிரோதமின்றி, ஒழுங்குபடத் திருத்திவைக்க
வேண்டுவது அவசியம் என்பது உங்களுக்குத் தெரிந்திராத விஷய
மல்ல. 'ஒற்று உழையாமை' என்பதை ஜனங்கள் மேற்கோளாகக்
கொண்டபிறகு, மேலே சொல்லியபடி பஞ்சாபில் நடந்த கலகம்
ஒரு காரணமாம். இதைத் தவிர வேறு ஒரு காரணமும் உண்டு.
அதாவது, 'துருக்கியரோடு செய்த உடன்படிக்கை.' இந்த இரண்
டையுமே ஒற்றுழையாமைக்குக் காரணங்கள் என்கின்றனர். துருக்
கியர், பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு விரோதமாய் சண்டை செய்யத்
தலைப்பட்டு, அகோர யுத்தம் நடக்கும்போதும்கூட, இந்தியாவிலுள்ள
முஸ்ஸல்மான்கள் யாவரும், நமது சக்கிரவர்த்தியார் பக்கமே
இருந்து, நமது பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு இடைவிடாமல் புரிந்
திருக்கப்பட்ட நன்மையை ஒருநாளும் மறக்கற்பாலதன்று. அவர்
செய்த உதவியும் அதிசயிக்கத்தக்கது. அவர்களுக்கு உள்ள அந்த
ரங்க விசுவாஸமும் பக்தியும் ஒருவருக்கும் தெரியாததல்ல. துருக்
கியர், பிரிட்டிஷாருக்கு விரோதமாய்ப் போர்புரியும் காலத்து, அவர்
மதத்தினரைச் சேர்ந்த இந்தியாவிலுள்ள முஸ்ஸல்மான்களுக்கு
உண்டாயிருக்கும் மனக்கிலேசத்தைப் பார்த்து, எனக்கு அவர்களிட
முள்ள ஆதங்கம் அதிகம் என்பதையும் அடிக்கடி வெளிக்காட்டி
யிருக்கிறேன். இப்படியெல்லாம் இருக்க, துருக்கியர் அபஜயப்
பட்டு, சமாதான உடன்படிக்கையில் கையொப்பம் போட்டிருப்
பது, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு முஸ்ஸல்மானுக்கும் தெரி
யாத விஷயமல்லவே! உடன்படிக்கையின் நிபந்தனைகள் வாஸ்தவ
மாய், கடோமானவை என்பதற்குத் தடையில்லை. ஆயினும், தோல்வி
யடைந்தவருக்கு விதிக்கவேண்டிய நிபந்தனைகளை விட அவை
அதிகக் கடுமையானவை அல்ல. மேலும், காலிப்பு ஆகிய துருக்கி
ஸுல்தானும் கான்ஸ்டாண்டிநோபில் என்னும் நகரத்திலேதான்
இருந்துவருகிறார். துருக்கியரின் உடன்படிக்கைப்படி, முஸ்ஸல்
மான்களுக்கு சிரேஷ்டமாயுள்ள புண்ணிய ஸ்தலங்கள் ஒருவித
சேதப்படுத்தப்படாமல் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. துருக்கியர்,
இவ்வித உடன்படிக்கையை ஒப்புக்கொண்டதில், இந்தியா கவர்ன்
மெண்டாருக்கு ஒருவித அவகாசமும் கிடையாது. இந்திய கவர்ன்



மெண்டாரைக் கேட்டு அந்நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டவைகளு
மல்ல, யுத்தத்தில் ஒருங்குசேர்ந்துள்ள, ராஜாங்கத்தார் யாவரும்
ஐக்கியமாயிருந்து தீர்க்காலோசனை செய்து ஏற்பட்ட நிபந்தனை
களேயாகும். இப்படிக்கெல்லாம் இருக்க, துருக்கியர் கையொப்பம்
போட்ட உடன்படிக்கையினாலே, இந்தியாவில் கலகம் உண்டாக்கி
விடுவது எதற்காக? அவ்வுடன்படிக்கையை இந்திய கவர்ன்மென்
டார் மாற்றி, துருக்கி ராஜ்ஜியத்தை, யுத்தத்திற்கு முன்னிருந்த
பதவிக்குக் கொண்டுவைத்தல் எப்படி முடியக்கூடிய காரியம்?
ஆகையினாலே, துருக்கியர் செய்த உடன்படிக்கையானது இந்தியா
வில் 'ஒற்றுழையாமை' என்பதை பிரசாரப்படுத்தி இந்தியாவை
கோலாகலப்படுத்த எங்ஙனம் நியாயமாகும்?

ஆகவே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி, நீங்கள் மன
தைத் திடப்படுத்திக்கொள்ளுவது வெகு பிரமாதமான காரியம்
இல்லையா? இந்த ராஜதானியில் உள்ள மகா ஜனங்கள் இது சரி,
இது தப்பு என்று அறிந்து நடக்கக்கூடிய நல்ல ஞானம் உடையவர்
கள் என்றும், அவர்களுக்கு ஆங்கில அரசாக்ஷியில் ஆழ்ந்த பக்தி
யும், ராஜவிசுவாஸமுமுண்டு என்றும், ராஜ்ஜியவிரோதமாயும் சட்
டத்திற்குப் பிரதிகூலமாயுமுள்ள ஒரு காரியமும் செய்ய அவர்கள்
இடங்கொடுக்கமாட்டார்கள் என்றும், அப்படி பிரதிகூலமாயுள்ள
காரியங்களுக்கு இடம் கொடுப்பதானால் ராஜ்ஜியம் முழுவதும் அல்
லோலப்பட்டு, சிதைந்துபோய்விடும் என்பதை நன்கு அறிந்தும்,
தற்காலம் ஜனங்களுக்கு ஜவாப்பு சொல்லும் ஸ்திதியில் ஏற்படுத்
தப்பட்டிருக்கும் நூதனச் சீர்திருத்தங்களை முதல் முதலில் சரியான
படி அனுஷ்டானத்திற்குக் கொணர்ந்து, அவைகளை சீர்பெற நடத்தி
வைக்க ஸர்க்காருடன் ஜனங்கள் மனம் ஒத்து முயல்வார்கள்
என்றும் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

நம் இருவகுப்பினர்க்குள்ளும் வரவர ஜாஸ்தி ஒற்றுமை ஏற்பட்
டால்தான நாம் இப்புது அரசாக்ஷியை முன்னுக்குக் கொண்டுவர
முடியும் என்று எனக்கு எப்போதும் அபிப்பிராயமுண்டு. அதில்
எனக்குத் திடபக்தியும் உண்டு. யாதாயினும் ஒரு பிரிட்டிஷ்காரர்
இந்தியாவிற்கு வந்து, இந்தியர்களுடைய உபசரணைகளை சிறிது
காலம் இருந்து பார்க்குமிடத்து, அவருக்கு தான் எந்த வேலையில்
அமர்ந்திருந்தாலும் இந்தியர்களிடம் அபிமானம் மிக்கு. இந்தியரும்
தனக்கு சமானமானவர் என்றே மதிக்கலாகி, இந்தியர் மேன்மைக்கு
வேண்டிய விஷயங்களில் இந்தியருக்கு தன் அபிமானத்தைக்
காட்டி, அவரை உத்ஸாகப்படுத்துவதே தன் கடமையாகப் பாவித்
தும் ஸ்திதியில் இருந்துவருகின்றனர். அங்ஙனமிருக்க, இந்திய

ரும், தங்களுக்கு பிரிட்டிஷ் ராஜ்ஜியக்காரர் காட்டும் மரியாதையை
யும், அன்பையும் கிரகித்து, பிரிட்டிஷ் தேசத்தவர் இந்தியா மே
லோக்கி அபிவிர்த்தியடையும்படி, தலைமுறை தலைமுறையாய் பாடு
பட்டு, தங்கள் காலத்தை இந்தியர்களின் நன்மையை உத்தேசித்தே
இந்தியாவில் கழித்திருக்கின்றனர் என்றும், இந்தியர்கள், தங்கள்
ராஜ்ஜிய பரிபாலனத்தில் உள்ள ஒவ்வொரு விஷயத்திலும் தேர்ச்சி
பெற்று, ராஜ்ஜியாதி பத்தியம் தாங்களே பரித்துவரவேண்டிய
ஏற்பாடுகள் அப்பிரிட்டிஷ் தேசத்தவர் செய்திருக்கின்றனர் என்றும்
இந்தியர் மனதில் ஞாபகம் வைத்து, இந்தியாவிற்கு பெரிய
பரோபகாரியாகிய கோபாலகிருஷ்ண கோக்லே என்பவர் சொல்லி
யிருக்கும் வாக்கையும் மறவாமல் எப்பொழுதும் மனதில் ஊன்றிக்
கொண்டு, இங்கிலீஷ்காரருக்கும் இந்தியருக்கும் பரஸ்பரம் அந்நி
யோந்நிய பாவம் மேலிடுமாயின், இந்தியாவிற்கு இனிமேல் ஒருவித
இடைஞ்சலும் ஏற்படாது என்று நான் விசாரப்படாமலிருப்பேன்.
இந்த கோபாலகிருஷ்ண கோக்லே என்ற மகானிடம் எனக்கு
எப்பொழுதும் பேரன்பு உண்டு. அவர் எனக்கு அத்தியந்தம் ஆத்ம
சிநேகிதர் என்று நான் உங்கள் முன்னிலையில் சொல்லிக்கொள்ளு
வதே எனக்கு வெகுப்பெருமை. அக்கோக்லே சொல்லியிருப்பதா
வது, 'இந்திய ராஜ்ஜியத்தில், சமாதானம் உண்டாக்கிக் கலகமில்
லாமல் காப்பாற்றினது ஆங்கில அரசாக்ஷி! சட்டமும் ஒழுங்கும்
இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு, இந்தியருக்கு ஐரோப்பியருக்குள்ள
கல்வி சாமர்த்தியத்தைக் கற்பித்து, இந்தியர்கள் தங்கள் மனதில்
உள்ளதைத் தாராளமாய் வெளியிட்டுப் பேச இந்தியாவில் இடம்
உண்டாக்கியதும் ஆங்கில அரசியலே!! இந்தியர்களுக்கு இப்படி
மேற்கூறிய சாதனங்களைக் கொடுத்து, இந்தியர்களும் அவைகளால்
விளையும் பலனை அடைந்து ஆனந்திக்க ஆஸ்பதமும் ஆங்கில
அரசே!!! ஆகவே, இந்தியாவில் இம்மாதிரியான ஸ்த்காரியங்கள்
நடைபெறும்படிச் செய்தது ஆங்கில அரசியலின் மகிமை என்று
விளங்கவில்லையா!!!' ஆகையினாலே, எனது நண்பரும், இந்தியர்
அபிவிர்த்தியைப் பூர்ணமாய்க் கைக்கொண்ட இம்மகானின் வாக்
கைப் பரிசீலனைசெய்து இந்தியர்கள் நடந்துவருவாராயின், இந்தி
யாவிற்கு இனி க்ஷேமமேதவிர, ஒருவித பயமும் கிடையாது. ஜனங்
களுக்கு தற்காலத்தில் உள்ள ஆக்கிரோசமும், அருவருப்பும்,
நாளடைவில் பறந்துபோய்விடும். பிரிட்டிஷ்காரரும், 'இதுகா
றும் இந்தியாவை ஆண்டுவந்தது போதுமானது. இந்தியர்களுக்
குத் தங்கள் ராஜ்ஜியபாரத்தை அவர்களே வகித்துவரும்படிக் கொ
டுத்துவிடலாம். இந்தியர்களுக்கு உள்ள ராஜபக்தி விசுவாஸத்திற்கு



அழிவு கிடையாது. ராஜ்ஜியத்தில் கலகமின்றி, சமாதானம் மேலி
ட்டு, ராஜ்ஜியத்திற்கு வெளியிலிருந்து ஒருவிதத் தொல்லையும் இங்
கிலீஷ் ராஜ்ஜியாதிபத்தியத்திற்கு இந்தியா ஒரு அங்கமாகி இருப்ப
தினாலே ஏற்படாது' என்று கண்டறிந்து, எங்களிடம் ஒப்புவிக்கப்
பட்டிருக்கும் இந்திய ராஜ்ஜியபாரம் என்னும் பெரும் கடமையை
இந்தியர்கள் கையிலேயே ஒப்புவித்தல் நிச்சயமாயும் முடிந்துவிடும்
என்று இப்பொழுதே உங்களுக்குப் பின்வருவதை ஊக்கமாய்ச்
சொல்லுகிறேன்.

அந்தக்காலம், இப்பொழுதுதானோ, அல்லது கொஞ்சம் காலம்
கழித்தோ, வருவது நிச்சயமே. அந்தக்காலத்தைப் பிரதிஷ்டித்
திருப்பது, நூதனச் சீர்திருத்தங்களை எங்ஙனம் இந்திய மகா ஜனங்
கள் நிர்வகிப்பார்களோ அதைப் பொருத்திருக்கிறது. ராஜ்ஜிய விஷ
யங்களில் அபிப்பிராயபேதங்கள் ஏற்படுவது ஸகஜம்தான். ராஜ்
ஜிய பரிபாலன விஷயமாய் கக்ஷிப் பிரதிகக்ஷிகளும் சமீபத்தில்
உண்டாகலாம். ஒவ்வொரு கக்ஷியிலும் தலைவராயிருப்பவர், ஒரு
வருக்கொருவர் இருக்கும் கேவலக் குரோதகுணத்தை வெளியிடா
மல் அடக்கிக்கொண்டு, தங்களுக்குள்ள அபிப்பிராயபேதத்தைப்
பாராட்டாமல், ராஜ்ஜிய நன்மையை உத்தேசித்து ஒருமனப்பட்டு
சிநேகபாவமாய் நடந்து, ஜனங்களிடத்தில் நல்ல அபிப்பிராயம்
உண்டாக்கி, தங்களுக்குப் பஞ்சபூத ஸாக்ஷியாய்ச் சரி என்று
தோன்றுவதை நிலைநாட்டி நடத்தத் தைரியம்வாய்ந்து, தங்கள்
அபிப்பிராயத்தை ஜனங்கள் ஒப்புக்கொள்ளாமலிருந்தாலும் அதைப்
பார்த்து மனம் தளராமலும், அதைரியப்படாமலும், ராஜ்ஜிய காரியம்
முன்னேக்கி அபிவிர்த்திக்கு வரவேண்டும் என்கிற ஒரு கருத்தை
யே மனதில் கெட்டியாய் ஊன்றி நடந்துவருவார்களாயின், ராஜ்ஜி
யத்திற்கு அநுகூலம் வரும் என்பதற்குத் தடையே இல்லை. இவ்
விஷயத்தை நீங்கள் நன்றாய்க் கவனித்து நடந்துவரவேண்டியது
அவசியம்.

நான் உங்களுக்குச் சொல்லவேண்டுவது இன்னம் ஒன்று
உண்டு. அதைப்பற்றி உங்களுக்கு இதற்கு முன்னாடியே ஒருதட
வையில் சொல்லி இருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்திலும் அவ்விஷ
யத்தைப்பற்றிக் கூறுவது வெகு ஆவசியகம் என்று நினைத்தே
அதை உங்களுக்கு இப்பொழுது தெரிவிக்கிறேன். நம்முடைய
சென்னை ராஜதானி வித்தியாபிவிர்த்தியிலும், ராஜ்ஜிய பரிபாலனத்
திலும் அநேகமாய் இதர ராஜதானிகளைவிட, மேனேக்கியே இருந்
துவருகிறது வாஸ்தவம் என்பது என் அபிப்பிராயம். ஆயினும்,
இவ்விராஜதானியில் ஜாதிபேதம், இதர ராஜதானிகளைவிட, மிக்க

கட்டுபாடுள்ளதாயிருந்து வருகிறதற்கு ஒருவித ஆக்ஷேபனையுமில்லை. இவ்விதமாயுள்ள ஜாதி வித்தியாசத்தினாலே, ராஜ்ஜிய பரிபாலனம் மேனோக்கி விளங்க இடையூறு இனிமேல் ஏதாகிலும் உண்டாகுமோ என்கிற பெரிய சந்தேகம் மாத்திரம் என் மனதில் உண்டாகிறது. இப்படி நான் சொல்லுவதினாலே, உங்களுடைய ஜாதி மதாசாரங்களை விட்டுவிடவேண்டு மென்றாவது, அவைகளை தற்காலத்திற்கு மாற்றிக்கொள்ளவேண்டு மென்றாவது நான் எண்ணிவிடுவதாக நீங்கள் நினைக்கவேண்டாம். தலைமுறை தத்துவமாய் நீடித்துவந்திருக்கும் ஜாதிபேதங்கள் மாறிப்போவது சிரமம் என்பது எனக்குத் தெரிந்தவிஷயமே. இப்பொழுதோ, நீங்கள் இந்தியாவிலும், பிரத்தியேகமாய், இந்த ராஜதானியிலும், ராஜ்ஜிய பரிபாலனம் ஜனங்கள் கையில் இருக்கவேண்டுமென்று நீங்கள் கோறிக்கொண்டுவருகிறீர்கள். இவ்வித ராஜ்ஜிய பரிபாலனத்தை, இந்திய நூதன ஆக்ட்டு, ஆரோபிக்கப்போகிறது என்பதும் உங்களுக்குத் தெரிந்தவிஷயம். ஆகவே, ராஜ்ஜியம் அபிவிர்த்திக்கு வரவேண்டிய ஊக்கத்தை நீங்கள் கிரியாம்சையில் காண்பித்து, உங்களோடு சேர்ந்து, ராஜ்ஜியாபிவிர்த்திக்குப் பாடுபடும் மனிதர், பஞ்சம ஜாதியானாலும் சரி, ஸர்வோத்கிருஷ்டமான ஜாதியானாலும் சரி, அவரை இன்ன ஜாதி வருணாசிரமத்தவர் என்று பாராமல், அவரையும் உங்களோடு சேர்ந்து ராஜ்ஜியத்திற்குப் பாடுபடுபவர் என்றே மதித்து, நீங்கள் அன்னவர்களை ஆதரிக்கவேண்டுவது அத்தியாவசியகம் என்பதை நான் உங்களுக்கு வெகு வணக்கத்துடன் தெரிவித்து, நீங்கள் யாவரும் என் வேண்டுகோளின்படி உங்களுக்குள்ள ராஜ்ஜிய விசுவாஸத்தை மனப்பூர்வமாயக் காட்டுவீர்கள் என்றும் நம்பி இருக்கிறேன்.

## THE SECOND ADVENT OF CHRIST

## இயேசுவின் இரண்டாம் வருகையைச் சொல்லி எல்லாரையும் குணப்படுதலுக்கு ஏவுதல்

இராகம், சக்ரவாகம். மிஸ்ரதாளம்.

பல்லவி

இயேசு ரட்சகரை நீ நம்பு—இனி
வேறாரை நம்பினால் நேருமே துன்பு.



1

காலம்வீண் போகுது பாரு—இப்போ
கருத்துடன் ஆத்தும ரட்சிப்பைக் காரு,
இதுவேநல் தருணமென் றெண்ணு—யேசு
ஏக னுரைப்பதை இன்றைக்கே எண்ணு.— இயேசு

2

நாளைக் கிருப்பதோர் மாயம்—அதை
நம்பிடில் விடிந்திடும் மெத்த அபாயம்,
கிருபையின் காலமிதோ பாரே—வெகு
அருமையாய் இரட்சகர் அழைக்கிறார் நேரே.— இயேசு

3

ஐங்காயம் அங்கத்திற் கொண்டார்—உனைப்
பங்கப்படுத்தும் பல பாவத்தைக் கொன்றார்,
பாவ மனைத்தையுந் தள்ளு—இயேசு
பாதத்தை யண்டிப் பிடித்துத் தழுவு.— இயேசு

4

ஆகாய மேலேறி வருவார்—அப்போ
பாவிக ளானபேர் பதறி அழுவார்,
தூதர்கள் பலகோடி வருவார்—பூமி
முழுதிலு முள்ளோரைக் கூட்டியே சேர்ப்பார்.— இயேசு

5

நியாயத்தீர்ப் பொன்றுமே வைப்பார்—அங்கே
நியாயா சனத்தினிற் கிறிஸ்துதான் வசிப்பார்,
மோட்சம் நரகமென்ற இரண்டு—சரியான
பதவிகள் மானிடர்க் குண்டு.— இயேசு

6

என்னபோக்கு அப்போ சொல்வாய்—பல
ஏற்காத போக்குகள் யாதொன்றும் செல்லா,
பெரியோர்கள் சிறியோர்கள் நிற்பார்—பின்னும்
பேர்பெற்ற ராஜாக்கள், பிரஜைகள் நிற்பார்.— இயேசு

7

சுவாமிக ளனந்தம்பேர் நிற்பார்—ஜெக
கோத்திர எமாற்றக் குருக்களும் நிற்பார்,
மக்கள் மனிதர்கள் நிற்பார்—மற்றும்
பஞ்ஜனங்கள் பல தேசத்தார் நிற்பார்.— இயேசு

8

எக்காளம் சத்தமாய்த் தொனிப்பார்—ஒரு
நொடியினில் மரித்தோர்கள் உயிரோடே வருவார்,
பாவத்திற் செத்தோர்கள் விழிப்பார்—பரி
தாப நிலைமையில் நின்று தவிப்பார்.— இயேசு
பக்தர்கள் பலகோடி நிற்பார்—பரி
சுத்தர்க ளனந்தம்பேர் சந்தோஷங் கொள்வார்.— இயேசு
தாமதஞ் செய்யாதே ஐயா—வேத
நாயகன் சொல்வது மெய்யென்று ஏற்பாய்.— இயேசு

V. D. Kailasam.

## JOY AND ADORATION

## இயேசுகிறிஸ்து மனுக்குலத்துக்காகச் செய்த மகத்துவ செயல்களை நினைத்து பக்தன் ஆனந்தங்கொள்ளல்

இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி

ஆ! ஆ! கேள் என்ன ஆனந்தம்—யேசு
அன்பனின் மகத்துவம்.

அனுபல்லவி

ஆ! ஆ! வானத்தின் தூதர் தேவானந்தன்
அழகிய மோட்சத்தின் பக்தர் சுகானந்தன்
அமலவனோ டுறவாடு மேகானந்தன்
அகிலத்தின் மனுவாயுதித்த தேவானந்தன்.— ஆ! ஆ! கேள்

1

ஆதியில் தேவனின் சப்தமா யிருந்து
அதிசய வான்புவி கொடியி லமைத்து
ஆதி மனுஷரை உருவாகப் பிடித்து
நாசியில் ஜீவ சுவாசத்தை வைத்து
நரர்களை யெங்கும் பரவிட வைத்து
நலமாக யாவையும் மனுவுக்கா யமைத்து
நாசமாய்ப் பாவத்தி லகப்பட்ட போது
நரர்வடி வமைந்த சச்சிதானந்தன்.— ஆ! ஆ! கேள்



2

வேதாளம் பெருமையால் வாதுகள் பண்ணி
சதியாக வோர்சமர் புரியவே யெண்ணி
சர்வ வல்லவரின் சமுகமே உன்னி
காந்தவர் மிகாவேல் கணங்களும் தோன்றி
கடுமையாய்ப் பதிவிசை தாக்கியே தள்ளி
புவியிடை மரண வுபாதையை நண்ணி
பாதாள மட்டுந் தொடர்ந்துமே சென்னி
பிடித்து வுடைத்த நித்தியானந்தன்.— ஆ! ஆ! கேள்

3

மரணத்தின் கட்டுக ளவிழ்த்துமே யுயிர்த்து
மாட்சிமை யான சரீரத்தை யெடுத்து
மறுபடி சீஷர்கள் மத்தியிலு தித்து
மகத்துவ னவர்கள் முன்பு புசித்து
மற்று மநேக புத்திக ளுரைத்து
மானிட ரவரையே நம்ப விதித்து
மகிமையாய் மேக வாகனம் பிடித்து
மன்னிய மேலோகஞ் சென்ற ஜீவானந்தன்.—ஆ! ஆ! கேள்

4

பிசாசினால் விளைந்த தீமையைப் போக்கி
பாவங்கள் யாதொன்று மில்லாம லாக்கி
பாவிகள் பயங்க ளனைத்துமே நீக்கி
பரிசுத்த ஜீவியம் மனசிலே யாக்கி
பற்பல ஜாதியை ஒருமைப்பா டாக்கி
பாமுன் வந்திட இடமே யுண்டாக்கி
பட்சத்தாற் தம்முட னிருக்க வொன்றாக்கி
பார்த்திபனோடு வசிக்கும் விண்ணானந்தன்.—ஆ! ஆ! கேள்

5

சாட்சிக ளனந்தங் கோடிகள் கூட்டம்
சாட்சியாய் ரத்தஞ் சிந்தினோர் கூட்டம்
சுத்த வஸ்திரக் தரித்தவர் கூட்டம்
சூரிய வொளிபோற் மின்னுவர் கூட்டம்
சுற்றி நிற்கும் கற்புள்ளோர் கூட்டம்
சூதுவா தில்லாப் பாலகர் கூட்டம்
சுகுண குணமுள்ள மாதுகள் கூட்டம்
சகலமும் ஜொலிக்க வைக்கும் மோட்சானந்தன்.—
ஆ! ஆ! கேள்

6

தலையினிற் தங்கக் கிரீடமும் பூண்டு
வாயினி லானந்தப் பாட்டையுங் கொண்டு
கண்களி லானந்தக் காட்சியுங் கண்டு
கரங்களிற் வீணை வாத்தியங் கொண்டு
அங்கத்திற் சுத்த அங்கியும் பூண்டு
பாதத்தில் பாத ரட்சையும் பூண்டு
பளிங்கு நதியி னோரத்திற் நின்று
பாடிடுங் கும்பலை பார்க்கும் கருணானந்தன்.—ஆ! ஆ! கேள்

7

அல்பா வோமேகா வோசன்னாப் பாட்டு
ஆதியு மந்தமு மவரென்ற பாட்டு
ஆட்டுக் குட்டி மோசேயின் பாட்டு
அதிசய ரட்சிப்பி னானந்தப் பாட்டு
அவரவர் வாயினி லகந்தனிற் பாட்டு
அன்பர்க்கு யேசு ஈந்தபின் மீண்டு
அருளினாற் வேத நாயகன் பாட்டு
ஆசையாய்க் கேட்டு மகிழும் வேதானந்தன்.— ஆ! ஆ! கேள்

V. D. Kailasam.

## NOTICE

## விளம்பரம்

நீலகிரியிலும், சென்னையிலும், வேலூர் வட்டகையிலும், திருநெல்வேலியிலும் சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையுள்ள வேதாகம ஸ்திரீகள் இந்துக்களுக்குள் வேலைநடத்த தேவை.

30 வயது முதல் 40 வயது வரையுள்ள சுவிசேஷவேலையில் கருத்துக்கொண்டவர்கள் இந்த வேலைக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுக்குப் பிரியமான இடத்தைக் குறிப்பிட்டு, சென்னை கனம் P. குரோவர் அம்மாளவர்களுக்குப் பின்வரும் மேல்விலாசம் போட்டுத் தெரியப்படுத்தலாம்: Miss P. Grover, C. E. Z. M. House, Vepery, Madras.

வேலை துவக்குமுன் யாருக்காவது இவ்வேலையில் பயிற்சி வேண்டுமென்று விரும்பி தெரியப்படுத்தினால் அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்படும்.

C. L. S. PRESS, MADRAS—1921


# மாதர் போதினி

No. 278 மார்ச்சு 1921 No.


## LOVE AND GRACE FROM CALVARY

## கல்வாரிக் கருணையுங் காதலும்

கல்வாரிக் கருணையைச் சற்றே சிந்தனைசெய். தேவன் ம
ஷன்மேல் கொண்ட கருணையுங் காதலும் கிறிஸ்துவின் மூலமா
கல்வாரியில் வெளிப்பட்டது. யோவா. 3[16]. 'எனக்காக மரித்
கல்வாரி சிலுவையில்.'

கிறிஸ்து உனக்காகவும் எனக்காகவும் கல்வாரி சிலுவை
இரத்தஞ் சிந்தினார். கிறிஸ்தியான் கல்வாரி சிலுவையை விசுவா
தோடு நோக்கினவுடன் பாவமூட்டை தெறித்தோடிற்று. பா
பாரம் நீங்கி மகிழ்ந்தான். உனக்கு இன்னும் பாவப்பாரமுண்ட
பாவத்தைப்பற்றிய திகில் உண்டா? உன் பாவத்தைப் போக்
கொண்டு கிறிஸ்துவண்டை வரலாமென்று காத்திருந்தால், நீ எங்
போனாலும் எதைச் செய்தாலும் பாவம் நீங்காது. நீ உள்ளபடி
உன் பாவப்பாரத்தோடு கிறிஸ்து கல்வாரியில் உன் பாவத்
தொலைத்துவிட்டாரென்று நம்பிக்கொள். உன் பாவம் பஞ்சாய்
பறந்துவிடும். கல்வாரியை விசுவாசத்தோடு நோக்கினவுடன் பாவ
பறந்தோடும். 'நான் நம்புவேன். ஏசு எனக்காய் மரித்தார், பாவ
நீங்க சிலுவையில் உதிரம் சிந்தினார்.' 'இயேசுகிறிஸ்துவின் இ
தம் சகல பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரிக்கும்' என்ப
உடனே நம்பு. உன் பாவம் நீங்கிப்போம். அது உன்னை யறி
மலே ஓடிப்போம்.

மறுபடியும் கல்வாரியை நோக்கு. கல்வாரி நேசம் உன்னை உ
ஆண்டவருக்குத் தத்தஞ்செய்ய ஏவும். பூரண தத்தஞ்செய், கீழ்ப்ப
உடனே பாவத்திலிருந்து விடுதலைபெறுவாய்.

'இந்த அன்பின் பாசந்தான்
மீட்பருக்கு எந்தனை
முழுத்தத்தஞ் செய்யத்தான்
ஏவி ஆத்மா தேகத்தை
சர்வாங்க பலியாக
ஸ்வாமியே படைக்கிறேன்.
எனக்காக மரித்தீர்
கல்வாரிச் சிலுவையில்.'

ரோமர் 12[1] வாசி. அதின்படி கீழ்ப்படி. உனக்காக சிலுவை
யில் தம் சரீரத்தை பலியாக்கினவருக்கு நீ ஓர் கல்வாரி பீடத்தி
உன்னைப் பலியாக ஒப்புவி. அப்போது மகிழ்வாய்.

# PRAYER WITH FAITH

## விசுவாசமுள்ள ஜெபம்

இதோ! தேவனுடைய கண்கள் பூமி எங்கும் சுற்றி உலாவுகிறது. தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகளை நோக்கிப் பார்க்கிறார். அவரை முழு இருதயத்தோடு நேசித்து வருகிறவர்களின் ஜெபங்களை ஆவலாய்க் கேட்டு அவர்களை ஆசீர்வதித்துவருகிறார். அவருடைய நாமத்தின் மகிமைக்கென்று அவர்கள் எவைகளை விரும்புவார்களோ, அவைகளை நிச்சயமாகவே பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆ! ஜெபத்தின் இரகசியத்தை தேவனுடைய உத்தம பிள்ளைகளைப் போல் அறிந்தவர்கள் யார்? ஜெபம்பண்ணுகிற சிலாக்கியத்தை நமக்கு அருளிச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். பூர்வகாலத்திலும் எக்காலத்திலும் இருந்த தேவபக்தர்கள் ஜெபத்தின் மேன்மையையும் அதின் மூலமாய் அவர்கள் அடைந்த வல்லமையையும் குறித்து 'ஜெபமே ஜெயம்' என்று சாட்சி பகர்ந்திருக்கிறார்கள். நாம் நமது அனுபோகத்தில் இப்படிச் சொல்லக்கூடுமா? ஜெபம் பண்ணாதபடி செய்ய ஒருவனாலும் கூடாது. ஜீவன்போகும் பரியந்தம் ஜெபம் பண்ணக்கூடியவர்களாய் இருக்கிறோம். ஏனென்றால் 'ஜெபம் இருதயத்தின் வாஞ்சையாயிருக்கிறது.' நாவைப் பூட்டினாலும் ஜெபம் தடைப்படாது. வாய்திறந்து பேசக்கூடாத ஜீவப்பிராணிகளும் ஏற்ற வேளையில் தங்களுக்கு ஆகாரம் கொடுக்கிறவரை நோக்கிக் காத்திருக்கிறது. தேவன் சகல பிராணிகளுடைய வாஞ்சையையும் பார்த்து அவைகளைத் திருப்தியாக்குகிறார்.

இருதயத்தின் வாஞ்சையே ஜெபம். இருதயத்தில் வாஞ்சையில்லாமல் நாம் எவ்விதமாய் ஜெபம்பண்ணினாலும் பிரயோஜனமில்லை. கர்த்தர் சாலொமோனைப் பார்த்து 'விரும்புகிறதை என்னிடத்தில் கேள்' என்று சொன்னார். அநேக சமயங்களில் நாம் வேண்டிக்கொள்ளப்போகிற காரியங்களின்மேல் நமக்குச் சரியான விருப்பமும், வாஞ்சையும் இல்லாதிருந்தும் ஒரு கடமைபோல ஜெபம்பண்ணியுமிருக்கிறோம். ஆண்டவரே! அந்தப் பாவங்களை எங்களுக்கு மன்னியும். வேறொன்றும் செய்ய ஏலாத சமயத்திலும் ஜெபம் செய்யக்கூடும். சமுத்திரத்தின் ஆழங்களில் சென்று, மீனின் வயிற்றிற்குள் போய்ச் சேர்ந்து வேறே ஒரு பிரயத்தனமும் செய்யக்கூடாத நிலைமையிலும் யோனா ஜெபம் செய்யக்கூடாதவனாயிருந்ததில்லை. சிங்கக் கெபியின் அடியில் போய்ச் சேர்ந்தபோதிலும் தானியேல் தன் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணத்



தடைப்பட்டதில்லை. கர்த்தர் இவர்களை ஆச்சரியமாய் இரட்சித்தார். சத்துருக்களின் கையில் அகப்பட்டபோதும், சிறைச்சாலையில் அடைபட்டு ஒடுக்கப்பட்டபோதும், கண்கள் பிடுங்கப்பட்டுப் பரியாசம் செய்யப்பட்டபோதும், சமுத்திர அபாயத்திலிருந்தபோதும் வேறே ஒரு பிரயத்தனமும் செய்யக்கூடாதிருந்த சமயத்தில் தங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். கர்த்தர் அவர்களைக் கேட்டருளி ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்.

ஜெபத்தின் வல்லமையை அறிந்த தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் பாக்கியவான்கள்! பூர்வகாலத்து பக்தர்களில் ஒருவர் ஜெபத்தின் வல்லமையையும், அதில் தான் அடைந்த வெற்றிகளையும் நினைத்துத் தன் தேவனை நோக்கி 'ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்' என்கிறார். பூர்வகாலத்தைப் பற்றி மாத்திரம் பேசுவானேன்? தேவன் பூர்வகாலத்துக்கு மாத்திரமா தேவன், இக்காலத்துக்கும் அவர் தேவன் அல்லவா? ஆம்! இந்நாளிலும் அவர் மாறாத வல்லமையும் மகத்துவமும் கிருபையும் நிறைந்தவராயிருக்கிறார். தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய விஷயங்களில் அவர் நடப்பித்த அதிசயங்கள் எத்தனை? நமக்கும் அவர் ஜெபத்தைக் கேட்கிற தேவனாக இருக்கவில்லையா? யாக்கோபு தேவனோடு ஜெபத்தில் போராடின சமயம் அவனால் மறக்கப்படத்தக்கதல்ல. நாம் ஜெபத்தின்மூலமாய் தேவனோடு ஐக்கியப்பட்ட சமயங்களையும், அவர் நம்மை ஆசீர்வதித்த நேரங்களையும் நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம். நம்முடைய இருதயங்கள் தேவனுடைய மகிமையினால் நிரப்பப்பட்டதுண்டு, நம்முடைய ஆவி நம்முடைய இரட்சகராகிய தேவனில் களிகூர்ந்ததுண்டு. தனித்துப்போய் உட்கார்ந்து, சகலத்தையும் மறந்து, தேவ அன்பில் மூழ்கிப் பரவசமாகி கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்ட ஆத்துமாவுக்கே இதின் இரகசியம் தெரியும். ஜெபம் விரைவான தந்தி, அது ஆச்சரியமான காரியங்களைச் செய்கிறது. ஓரிடத்திலிருந்த ஒருவன், தூரத்திலிருந்த இன்னொரு தேவனுடைய பிள்ளைக்காக ஊக்கமாய் ஜெபித்தபோது, அதே மணிநேரத்தில் அந்த தேவனுடைய பிள்ளையின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் கிரியைசெய்தார் என்பதை அறிந்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். இப்படி ஒன்றல்ல, அநேகம் நடந்திருக்கிறது. இதைக்குறித்து ஆச்சரியப்படவேண்டாம். இன்றைக்கும் தேவனுடைய பிள்ளைகள் கூடி ஒரு காரியத்திற்காக ஊக்கமாய் ஜெபம்பண்ணி முடிந்தவுடனே தேவன் ஜெபத்தைக் கேட்டார், நிச்சயமாகவே கேட்டார் என்று ஏகமாய் சொல்லித் துதித்ததுண்டு, அந்தப்படியே அதே நேரத்தில் ஜெபம் கேட்கப்பட்டதுமுண்டு. ஆ!

எவ்வளவு ஜல்தியாய் அவருடைய தாசர்களின் ஜெபம் கேட்கப்படுகிறது. ஜெபத்தைப்போல் தீவிரமான தந்தி எது? இந்தத் தந்தி அடிக்கப் படித்துக்கொண்டவனே பாக்கியவான். எல்லாம் ஏகமாய் அவனுக்கு விரோதமாய் எழும்பினாலும், ஒரு உதவியும் தனக்கு இல்லாமல்போனபோதிலும், சகலமும் இருண்டு காணப்பட்டாலும் இவன் கலங்காமல் உடனே தந்தி அடிக்கிறான், சர்வவல்லவரும் அவருடைய சர்வ சேனைகளும் தன் பக்கமாய் நிற்பதைக் கண்டு களிகூருகிறான். இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்கிற ஜெபமானது யாதொரு காசுபணத்தையாகிலும், வேறே அரும்பிரயாசங்களையாகிலும் கேட்கிறதில்லை. எவரும் ஜெபிக்கலாம், எந்த நேரத்திலும் ஜெபிக்கலாம், எங்கேயிருந்தும் ஜெபிக்கலாம். தேவன் ஜெபத்திற்குப் பதிலாக வேறொரு காரியத்தை ஏற்படுத்தி அதின் மூலமாய்த் தம்மிடத்தில் நன்மை பெற்றுக்கொள்ளும்படி செய்திருப்பாரானால் அது எல்லாருக்கும் ஒத்துவராது. திமிங்கிலத்தின் வயிற்றிலிருந்தவன் தான் தப்புகிறதற்கு தன் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறதைத் தவிர வேறே என்ன செய்யக்கூடும்?

ஆ! தேவன் எவ்வளவு ஞானமுள்ளவரென்று பாருங்கள், எவ்வளவு இலேசான வழியைக்கொண்டு தம்மிடத்தில் பெரிதான நன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்படி செய்திருக்கிறார். அவரை நோக்கிப் பார்க்கும் ஒரு பார்வை, ஒரு பெருமூச்சு, இயேசுவே என்கிற ஒரு சிறு வார்த்தை, இன்னும் சில குறிப்பு முதலானவைகள் என்னவெல்லாம் செய்யக்கூடும் என்பதை தேவனோடு நெருங்கி ஜீவிக்கிறவர்களே தவிர வேறே யார் அறியக்கூடும்? இவ்வளவு இலேசான வழியை எல்லாவற்றிலும் மேலான கிருபையாகத் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

ஜெபமானது இவ்வளவு இலேசான வழியாயிருந்தும் நமக்கு மகா வருத்தமானதாகத் தோன்றுவானேன்? அது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிற கருவியாயிருக்க, நாம் எத்தனையோ ஜெபங்கள் பண்ணியும் மிகுதியான ஆசீர்வாதங்களைக் காணாதிருப்பானேன் என்று நாம் யோசிக்கலாம். ஆம், தேவன் ஏற்படுத்தின வழிகளெல்லாம் மகா இலேசானவைகளாயிருக்கிறது போலவே, மகா வருத்தமான வழிகளாகவும் தோன்றுகிறது. தேவன் இரட்சிப்பை எவ்வளவு இலேசான வழியாக உண்டாக்கியிருந்தபோதிலும், சுயநீதிக்காரருக்கும், பெருமைச் சிந்தையுள்ளவர்களுக்கும் அது மகா வருத்தமான வழியாகத் தோன்றுகிறதில்லையா? அப்படியே ஜெபமும் இருக்கிறது. ஜெபங்கள் வியர்த்தமாய்ப் போகிறதற்கு முகாந்தரம் ஜெபத்



தைக் கேட்கிறவரிடத்தில் இருக்கவேண்டும்; அல்லது ஜெபம்பண்ணுகிறவனிடத்தில் இருக்கவேண்டும்.

முதலாவது, ஜெபத்தைக் கேட்கிறவரிடத்தில் தடை உண்டோ என்று பார்ப்போம்.

**ஜெபத்தைக் கேட்கிறவர்.** இவர் யார்? இவர் தேவன்! மகா வல்லமையுள்ளவர்! வாக்கு மாறாதவர்! பாவிகளின்பேரில் இரக்கம் நிறைந்தவர்! பாவிகளை இரட்சிக்கச் சித்தமுள்ளவர்! தமது பிள்ளைகளின் பெருமூச்சைக் கேட்டு அவர்களை ஆசீர்வதிக்க ஆவலுள்ளவர்! தமது உத்தம ஊழியக்காரரைத் தைரியப்படுத்த அவர்களுக்குச் சமீபத்திலிருக்கிறவர்! சர்வத்தையும் தமது வல்லமையுள்ள வசனத்தினால் தாங்குகிற அவரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. விருதாவாக என்னைத் தேடுங்கள் என்று அவர் தமது ஜனத்துக்கு சொன்னதுமில்லை. என் உண்மையைக்குறித்தும் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்கிறார். கேளுங்கள் என்று சொன்ன உண்மையுள்ளவரே, கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார். இவைகள் எல்லாவற்றையும் தமது குமாரனுடைய இரத்தத்தினால் முத்திரித்திருக்கிறார். நம்முடைய ஜெபங்கள் வீணாய்ப்போகுமானால் அது நம்முடைய தப்பிதமேயல்லாமல், தேவனுடைய விஷயத்தில் இல்லை. ஆகையால் 'தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யனென்றும் சொல்வோமாக.' அப்படியானால் நம்மைச் சோதித்துப் பார்ப்போம்.

(இன்னும் வரும்)

## MEDITATION ON THE CROSS

## சிலுவைத் தியானம்

ஜெபம். சிலுவையில் எனக்காய் அறையப்பட்ட என் இரட்சகா, 'ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்' என்றவரே, நீசப்பாவியாகிய நான் ஜீவனுக்குப் போகும் மார்க்கம் சிலுவை வழியேயென்று உணர்ந்து, அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்பதை மறவாமல், நான் பிறர் நிமித்தம் உமது நாம மகிமைக்காக அனுபவிக்கிற பாடுகளில் மனமகிழ்ந்து, உம்முடைய உபத்திரவங்களில் குறைவானதை உமது சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்தில் நிறைவேற்ற நேரிடில், அதைப் பெருஞ் சிலாக்

கியமாய்க் கொண்டாடி ஏற்றுக்கொள்ள அடியாளுக்குக் கிருபை யளிப்பீராக, ஆமென்.

பல்லவி

உமக்கேது இந்தப் பாடையா—ஏசுநாதையா,
உமக்கேது இந்தப் பாடையா?—தேவகுமாரா,
உமக்கேது இந்தப் பாடையா?

அனுபல்லவி

எமக்காகப் பாடுபட ஒப்புக்கொண்டீரோ ஐயா?
பவக்கடன் தீர்க்காமலே நீர் எப்படித் தப்பக்கூடுமையா?

சரணம்

கெத்செமனே தோட்டத்தில் நீர்—கடுந்துயரால்
ரத்தவேர்வை வேர்த்திருந்ததேன்?
மும்முறை முகங்குப்புற—விம்மி விம்மியே அழுது [நீர்
'உம் சித்தமே என் சித்தமாகும்—என் பிதாவே' என்றதேன்

மூங்கில்கோலால் அடிபட்டதேன்?—முள்முடியுடன்
வீங்கி முகங் காணப்பட்டதேன்?
அன்னா காய்பாமுன் கைகட்டி—அலசடிப்பட்டதன்றி
மன்னா இந்த மானுக்கினை—பிலாத்து துரை விதிக்க

சிலுவை சுமந்து போனதேன்?—தள்ளாடியே நீர்
சிலுவையி லறைபட்டதேன்?
மூன்றாணிகளில் நீர் தொங்கி—மூவுலகுமேயறிய
ஆன்றோர் முன்னேகூறியவண்ணம்—சாவுவரக்கோரினதேன்?

The Paradise Bird.

## SUMMER SCHOOL AT ENNORE

## என்னூரில் கூடின ஞானோதய வித்தியாசாலை

1921-ம் வருஷம் ஜனுவரி மாதம் 13-ந் தேதியிலிருந்து 16-ந் தேதிவரை கிறிஸ்தவ சகோதரிகளுக்கென்று ஞானோதய வித்தியாசாலை என்னும் கன்வென்ஷன் மீற்றிங் என்னூரில் நடந்தது. அதற்கு வேலூர், சித்தூர், ஆற்காடு, காட்டுப்பாடி, திண்டிவனம் முதலிய இடங்களிலிருந்தும் சென்னபட்டணத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்த சகோதரிகள் ஏறக்குறைய 80 பேர் கூடியிருந்தோம். சித்தூரிலிருந்து இரண்டு மிசிமாரும் வந்திருந்தார்கள். ஏற்கனவே அந்தக் கூட்டங்களுக்கு வருகிறவர்களுக்கு அப்போஸ்தலர் நடபடி 1-17



அதிகாரங்கள் வாசித்து, அதில் விசுவாசம், ஜெபம், பரிசுத்தாவி, சாட்சி, இவைகளைக் குறித்த வாக்கியங்கள் ஆயத்தப்படுத்தும்படி ஒழுங்கு செய்திருந்தது. இந்தக் கூட்டம் நடத்தப்படுமுன் மூன்று நாள்களாக அதிக மழை பெய்ததினால் கூட்டம் நடக்குமோ என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனாலும் நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபத்தினால் தடைகள் நீங்கும் என்றபடி 13-ந் தேதி காலை மழையில்லாமல் நாங்கள் எல்லாரும் சந்தோஷமாகப் புறப்பட்டோம். எங்களுக்குப் பிரத்தியேகமாக ரெயிலில் 2 வண்டிகள் ஆயத்தப்படுத்தப் பட்டிருந்தன. நாங்கள் தங்கியிருந்த இடம் கடலோரமாயிருந்தது. நாங்கள் போனவுடன் ஒருவிதமான சந்தோஷமும், ஒருவரையொருவர் பார்த்ததினாலே உற்சாகமுமுண்டானது. அங்கு வந்திருந்த சகோதரிகளை 5 பிரிவாகப் பிரித்து, 5 தலைவர்களால் ஒவ்வொரு காலையிலும், ஏற்கனவே அப். 1-17 அதிகாரங்களிலும் முக்கியமாய் எடுக்கப்பட்ட விசுவாசம், ஜெபம், பரிசுத்தாவி, பிரசங்கம் என்றவைகளைப்பற்றிய குறிப்புகளை ஒவ்வொரு வகுப்புத் தலைவரும் ஆயத்தத்தோடும், ஜெபத்தோடும், பரிசுத்தாவியின் ஒத்தாசையைக்கொண்டு வெகு நேர்த்தியாக நடத்தினார்கள். இது எல்லாருக்கும் ஒரு ஞான முசிப்பாறும் நேரமாயிருந்தது மாத்திரமல்ல, தனித்தனியாகவும் அதிக பிரயோஜனமாயும் அருமையாயுமிருந்தது. காலையில் நடந்த வேத ஆராய்ச்சி தருணத்தில், விசுவாசம், ஜெபம், பரிசுத்த ஆவி, சாட்சி, பிரசங்கம் இவ்வகைகளைக் குறித்து, யார், யாருக்கு, எப்போ, நோக்கம், பலன், இவைகளை தலைப்பாக வைத்து அப். 1-17 அதிகாரங்களை திட்டமாய் ஆராய்ந்தறிந்தோம். அதில் பரிசுத்த ஆவி எப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதையும் அறிந்தோம்.

அதாவது:

1. கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கு (இதில், நீங்கள் கேட்கிறதை நான் செய்கிறேன், நான் கேட்கிறதை நீங்கள் செய்ய வேண்டும் என்று கற்பிக்கிறார்).
2. மனந் திரும்பினவர்களுக்கு (இப்படிப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்ய ஆயத்தமாயிருக்கிறார்).
3. ஜெபத்தில் காத்திருக்கிறவர்களுக்கு.
4. ஒருமனப்பட்டிருக்கிறவர்களுக்கு.
5. நற்சாட்சி பெற்று நல்ல ஜீவியம் செய்கிறவர்களுக்கு.
6. விசுவாசத்தினால் நிறைந்தவர்களுக்கு.
7. சிநேகிதனைப்போல அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவி கொடுக்கப்படும்.

13-ந் தேதி 11 மணிக்கு பொதுவான ஜெபக்கூட்டமிருந்தது. அதில் படைமுயற்சி செய்யும் முறைகளைப்பற்றியும், கிறிஸ்துவைப் பற்றி எப்படி இந்துக்களுக்கு சொல்லவேண்டும் என்பதைப்பற்றியும் பேசப்பட்டது. இது முடிந்தவுடன் நாங்கள் இளைப்பாறினோம். பிறகு 3 மணிக்கு, காலையில் நடத்தவேண்டிய வேதவாசிப்புக் கூட்டத்தை நடத்தினார்கள். இது முடிந்தபிறகு கடலோரம் போய் உலாவிவந்தோம்.

சாயந்திரம் $6\frac{1}{2}$ மணி முதல் $7\frac{1}{2}$ மணி வரை பிரசங்கம் நடந்தது. 1 கொரி. 1 : 31. ஞானம், நீதி, பரிசுத்தம், மீட்பு இவைகளை எடுத்துக்கொண்டு அதில் ஒரு நாளைக்கு ஒரு பொருளாகப் பேசினார்கள்.

முதல் நாள் ஞானத்தைப்பற்றி பேசப்பட்டது. இதற்கு உதவியாக சகரியா 1-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டது. அதில் 4 கொம்புகள் அதாவது நாலு திசைகளிலுமிருந்தும் மனுஷர் ரட்சிக்கப்படுதல், புஸ்தகச்சுருள் இரண்டு பாகமாக, பத்து கற்பனை, இவைகளைப் பல திருஷ்டாந்தங்களோடு விஸ்தரித்துப் பேசினார்கள்.

14-ந் தேதி காலை 8 மணி முதல் 11 மணி வரை ஜெபம். இதைப் பற்றிய வேதவாசிப்புக் கூட்டம் நடந்தது. திரும்ப 11 மணி முதல் 12 மணிவரை ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தை வைப்பதின் நோக்கத்தைப் பற்றியும் அவர்களை நாம் எப்படி வசப்படுத்தலாம் என்பதைப்பற்றியும் பேசப்பட்டது. திரும்ப $2\frac{1}{2}$ மணி முதல் 4 மணி வரையும், எல்லா சகோதரிகளையும் 4 பிரிவாகப் பிரித்து பக்கத்திலுள்ள கிராமங்களுக்குப் போய் பிரசங்கம்பண்ணும்படி அனுப்பினார்கள். நாங்கள் அவர்களுக்குச் சில தாள்களையும், புஸ்தகங்களையும் கொடுத்துவந்தோம். பின்பு 5 மணிக்கு சித்தூரிலிருந்து வந்திருந்த மிசியம்மாள் எங்களெல்லாரையும் படகிலேற்றி கடலோரம் கொண்டுபோனார்கள். நாங்களெல்லாரும் பாட்டுகளைப் படித்துக்கொண்டுபோய் சந்தோஷமாய் திரும்பிவந்தோம். திரும்ப $6\frac{1}{2}$ மணிக்கு 'அவரே நமக்கு நீதி' என்பதின்பேரில் பிரசங்கம் நடந்தது. இதற்கு சகரியா 3-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டது. பெருமை, சண்டை, மன்னிக்காத குணம், பொருளாசை, சோம்பல், சுயநீதி, இவைகளை திருஷ்டாந்தங்களோடு பேசினார்கள். இது அழுக்கு வஸ்திரம். கிறிஸ்து நீதியுள்ளவர், அதாவது அவர் நல்ல மேய்ப்பன், ஜீவனைக் கொடுத்தவர், பெரிய மேய்ப்பன், உயிரோடெழுந்தவர். பிரதான மேய்ப்பன் என்பது சொந்த மேய்ப்பன்.

15-ந் தேதி காலை 8 மணி முதல் $10\frac{1}{2}$ மணி வரை வழக்கம்போல் வேதவாசிப்புக் கூட்டம் நடந்தது. பொருள் : பரிசுத்த ஆவி. 11 மணி முதல் 12 மணி வரை, கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் எப்படி நடக்க



வேண்டுமென்றும், பெற்றோர் அவர்களை எப்படி நடத்தவேண்டுமென்றும், புதிதாக கிறிஸ்து மார்க்கத்துக்கு வருகிற கானவற்ஸ்களுக்கு செய்யவேண்டிய காரியங்களைப்பற்றியும் பேசப்பட்டது. திரும்ப 2 மணி முதல் 4 மணி வரை வியாதியுள்ளவர்களுக்காகவும், கிறிஸ்து மார்க்கத்துக்கு வரும்படி ஆசைப்பட்டு தடைப்பட்டிருக்கிற இந்து பெண்களுக்காகவும், கிறிஸ்தவர்களுக்காகவும், சபைகளுக்காகவும் ஜெபம் செய்யப்பட்டது. சாயந்திரம் $6\frac{1}{2}$ மணி முதல் $7\frac{1}{2}$ மணி வரை பரிசுத்தாவியானவரைப்பற்றி பேசப்பட்டது. அநேக நல்ல திருஷ்டாந்தங்களோடு பேசினார்கள்.

16-ந் தேதி காலை $8\frac{1}{2}$ மணி முதல் $10\frac{1}{2}$ மணி வரை வழக்கம்போல் அப். 1–17 அதிகாரங்கள் வேதவாசிப்புக் கூட்டம். பிரசங்கத்தைக் குறித்து.

பகல் 11 மணி முதல் 12 மணி வரை கனம் சான்லர் ஐயரவர்களால் ஓய்வுநாள் ஆராதனை நடத்தப்பட்டது. வாசிப்பு, 91-ம் சங்கீதம். பிரசங்கம் : சங். 140 : 13 'செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம்பண்ணுவார்கள்' என்பதின்பேரில். அதாவது : சாதனை, போதனை—இவை சதாமாகவிருக்கவேண்டும். சொல்லுகிறதும் செய்கிறதும் ஒன்றாயிருக்கவேண்டும். இவைகளுக்கு அன்பு வேண்டும்.

அன்று 3 மணி முதல் 4 மணி வரை 1 கொரி. 1 : 31, மீட்பைப் பற்றி பேசினார்கள். அதாவது : இயேசுகிறிஸ்து நமக்கு அக்கினி மதிலாக விருக்கிறார். நாம் அவர் அன்பின் சுவாலை நடுவிலிருக்கவேண்டும். பல நல்ல திருஷ்டாந்தங்களைக்கொண்டு பேசினார்கள். அன்று சாயந்திரம் ஸ்தோத்திர மீற்றிங் இருந்தது. 103-ம் சங்கீதம் வாசிக்கப்பட்டது. அங்கு வந்திருந்த எல்லா சகோதரிகளும், கர்த்தர் தங்களுக்குச் செய்த நன்மைகளுக்காகவும், அவருடைய கிருபைக்காகவும் ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்.

இதைக் கேட்கும் பிரிய சகோதரிகளே! இந்தப் புதுவருஷத்தில் கர்த்தர் எங்களுக்கருளிச்செய்த அவரது அன்பின் கிருபைக்காக ஸ்தோத்திரிக்கிறோம். நீங்களும் வந்து அந்த இடத்தில் பங்குபெற்றிருப்பீர்களானால் என்ன ஆனந்தமாயிருக்கும்! கர்த்தர் எங்களோடே பேசின அவரது அன்புக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறோம்.

'ஆடுவோம், பாடுவோம், கூடுவோம், ஒன்றாய் மகிழ்கொண்டாடுவோம், நாடியே நம்மைத் தேடியே வந்த நாதனைப் போற்றிடுவோம்' என்று பாடி எங்களிடங்களுக்கு வந்தோம்.

கிறிஸ்துவுக்குள் உங்கள்

**உடன் சகோதரிகள்.**

# THE GOVERNMENT OF INDIA AND NON-CO-OPERATION

## இந்தியா கவர்ன்மெண்டும் ஒத்துழையாமையும்

உதவி மறுப்பு என்னும் இயக்கத்தைப்பற்றி இந்திய ராஜாங்கத்தார் கொண்டிருக்கும் எண்ணத்தையும் அதன் விஷயமாய் அவர்கள் எப்படி நடந்துகொள்ளப்போகிறார்களென்பதையும் விளக்கிச் சொல்லும் அடியில்கண்ட தீர்மானமானது அந்தந்த மாகாண ராஜாங்கத்துக்குப் பிரயோஜனப்படும்பொருட்டும் இந்தியாவிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் தெரிந்திருக்கும்பொருட்டும் இந்திய ராஜாங்கத்தாரால் வெளியிடப்பட்டிருக்கிறது :—

ஸமீபத்தில் நடந்திருக்கும் விஷயங்களை ஆலோசிக்கும்போது, உதவி மறுப்பு ஸம்பந்தமாய் இந்திய ராஜாங்கத்தார் என்ன நோக்கம் கொண்டிருக்கிறார்களென்பதையும் அவ்விஷயத்தில் அவர்கள் எப்படி நடந்துகொள்ளப்போகிறார்களென்பதையும் அந்தந்த மாகாண ராஜாங்கங்களின் உபயோகத்தின்பொருட்டு மாத்திரமன்றி, இந்தியாவிலுள்ள ஸகல ஜனங்களும் தெரிந்துகொள்ளும்பொருட்டும், இன்னும் ஒரு தீர்மானம் வெளியிடவேண்டியது அவசியமென்று ஆலோசனை சபையிலுள்ள ராஜப்பிரதிநிதியவர்களுக்குத் தோன்றுகிறது. இந்திய சட்ட நிரூபண ஸபையானது ஸமீபத்தில் கூடினபோது அதன் ஆரம்பத்தில் உதவி மறுப்பு விஷயமாய் இந்திய ராஜாங்கத்தார் அதுவரையில் எப்படி நடந்துவந்தார்களென்பதைப்பற்றி ராஜப்பிரதிநிதியானவர் விவரமாகக்கூறினார். இந்த தேசத்தில் இப்போதிருக்கும் ராஜாங்கத்தை நடைபெறாதபடி செய்து அதை ஒழித்துவிடவேண்டுமென்பதே உதவிமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தவர்களின் உத்தேசம்; ஆகவே இது சட்ட வரம்பு மீறியது என்று ராஜாங்கத்தார் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆயினும், இந்த உதவி மறுப்பு என்பதைக் கைக்கொள்ளும்பொழுது பலாத்காரத்தை உபயோகிக்கக்கூடாது என்று சொல்லும் தலைவர்கள்மேல் கிரிமினல் நடவடிக்கையாவது வேறு எவ்வித நடவடிக்கையாவது ராஜாங்கத்தார் இதுவரையில் நடத்தவில்லை. யாராவது இந்த இயக்கத்தை விருத்திசெய்யவேண்டுமென்ற நோக்கத்துடன், இதை ஆரம்பித்தவர்கள் இது விஷயமாய் ஏற்படுத்திய வரம்புகளையும் மீறி, எழுத்து மூலமாயாவது வாய்வார்த்தையாகவாவது ஜனங்களை முரட்டுத்தனமான காரியங்களைச் செய்யும்படி பகிரங்கமாகத் தூண்டினலும் [illegible]



கத்தினிடம் இருக்கும் பக்தியைக் கெடுக்க முயற்சிசெய்தாலும், அவர்கள்மேல் மாத்திரம் நடவடிக்கை நடத்தும்படி அந்தந்த மாகாண ராஜாங்கத்துக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது.

ராஜாங்கத்தார் இவ்விதம் செய்வதாகத் தீர்மானிப்பதற்கு அநேக விஷயங்கள் காரணமாகும் :

முதலாவது.—இந்தியாவானது இங்கிலிஷ் ஆதிபத்யத்துக்குள் ஸ்வராஜியம் அடையும் தறுவாயில் இருக்கிறதினால், இந்தியர்களின் பேச்சு ஸ்வதந்தரத்தையும் பத்ரிகைகளின் ஸ்வதந்தரத்தையும் எவ்விதத்திலும் நிர்ப்பந்தப்படுத்துவதில் ராஜாங்கத்தாருக்கு இஷ்டமேயில்லை. அப்படிப்பட்ட ஸ்வராஜியமார்க்கமானது வெகுதூரத்தில் இல்லை. அதற்கு ஆதாரமாக எலெக்ஷன்கள் சமீபத்தில் நடக்கப்போகின்றன. தவிர, சக்ரவர்த்தியானவர் சென்ற டிஸம்பரில் அனுப்பிய விளம்பரத்தை அனுசரித்து, அக்காலத்தில் ஜெயிலில் அடைபட்டிருந்த ராஜியக் குற்றவாளிகள் நூற்றுக்கணக்காய் விடுதலை செய்யப்பட்டார்கள். ஜாமீன் வாங்கப்பட்டிருந்த அநேக பத்ரிகைகளின் ஜாமீன்களையும் அவைகளின்மேல் ஏற்படுத்தியிருந்த நிர்ப்பந்தங்களையும் ராஜாங்கத்தார் எடுத்துவிட்டார்கள். இவ்வளவு செய்தும், அநேகர் இதை நன்மையாகக்கொண்டு மெச்சவில்லை. ஆயினும், இவ்வளவு ஸமீபத்தில் நிவர்த்திக்கப்பட்ட நிர்ப்பந்தங்களை மறுபடியும் ஏற்படுத்த ராஜாங்கத்தாருக்கு மனமில்லை.

இரண்டாவது.—தனி நபர்களில் சிலர் நல்ல எண்ணத்துடன் தவறுதலான மார்க்கங்களில் போயிருக்கலாமாதலால், அப்படிப்பட்டவர்கள்மேல் எவ்வித நடவடிக்கையும் நடத்த எக்காலத்திலும் ராஜாங்கத்தாருக்கு இஷ்டமேயில்லை. தவிர, அப்படிப்பட்ட நடவடிக்கையை சாதாரணமான கிரிமினல் சட்டத்தின்படி எடுத்தாலும், யார்மேல் அந்த நடவடிக்கை நடத்தப்படுகிறதோ அந்த நபர் பெரிய தேசபக்தன்போலாகி அவனிடம் ஜனங்கள் அனுதாபம் காட்டுவதனால், இந்த இயக்கம் ஸ்வயமாகவே பிரயோஜனமற்றதாயினும், மிகவும் பலத்துவிடக்கூடும் என்பதும் ராஜாங்கத்தாருக்குத் தெரியும்.

மூன்றாவது.—ராஜாங்கத்தார் மேற்கண்ட தீர்மானம் செய்ததற்கு முக்கிய காரணமென்னவென்றால்; இந்தியர்கள் எந்த விஷயத்திலும் தங்கள் பகுத்தறிவை உபயோகிப்பார்கள் என்ற நம்பிக்கையும், திரானஸ்தர்களும் ஸாமான்னிய ஜனங்களும் 'இந்த உதவி மறுப்பு என்ற இயக்கமானது ஆகாசக் கோட்டைக்கு ஸமானம்; இது நடவாதகாரியம்; ஒருவேளை பலித்தாலும், தேசத்தில் எங்குபார்த்தாலும் கலஹத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கி, சொத்து ஆஸ்தி

உள்ளவர்களையும் அழித்துவிடும்' என்று சொல்லி இந்த ஆதரிக்காமல் தள்ளிவிடுவார்கள் என்ற நம்பிக்கையுமே. இந்த இயக்கமானது துவேஷத்தினாலும், அறியாமையினாலும் ஏற்பட்டது. உபயோகமான காரியங்கள்செய்ய இதில் ஒரு மார்க்கமுமில்லை. இதற்கு முன்னால் ஸத்யாக்ரஹம் அனுஷ்டித்த காலத்தில் அதன் பலனாக இந்தியர் என்ன பாடுபட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அதை கண்கண்ட எச்சரிக்கையாகக்கொண்டு அதைவிட அதிக கொடூரமான உதவி மறுப்பை இந்தியர்கள் தள்ளிவிடுவார்கள் என்னும் விஷயத்தில் ராஜப்பிரதிநிதிக்கு இன்னும் நம்பிக்கையிருக்கிறது. இந்த இயக்கத்தைப்பற்றி உபந்யாஸம் செய்பவர்களில் முக்கியமானவர்கள் —'இப்போதிருக்கும் ராஜாங்கத்தைத் தொலைத்து, இந்தியாவில் இங்கிலீஷ்காரர்கள் ஆளுவதற்கு ஆதாரமான விஷயங்களை அடியோடு ஒழித்துவிடுவதே தங்கள் நோக்கம்' என்று சொல்லுவதுடன், அவர்கள் சொல்லைமட்டும் எல்லோரும் கேட்டால் ஒரு வருஷத்துக்குள் இந்தியாவானது ஸ்வராஜ்யம் அடைந்துவிடும் என்றும் பிரதிக்ஞை செய்கிறார்கள். இவர்கள் ஆசைப்படுகிறபடி எல்லாம் பூராவாய் நடந்தால், இந்த தேசமானது வெளிதேசத்தார் படையெழுச்சிக்கும் உள்கலகத்துக்குமே உட்படவேண்டியதாகும். அவைகளைத் தடுக்க ஒருவித மார்க்கமுமில்லாமல் போய்விடும். நிலையான ராஜாங்கம் சாஸ்வதமான சமாதானம் ஆகிய இவைகளால் உண்டாகும் நன்மைகளும், ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்டகாலமாக நடந்துவரும் முன்னேற்றத்தின் பலன்களும், சீர்திருத்த சட்டத்தின்படி இன்னும் அடையும் விசேஷ பலன்களும், லௌகிக விஷயங்களில் அபிவிருத்தி ராஜ்ய அபிவிருத்தி ஆகிய இவைகளும், தவறுதலான மார்க்கத்தில் நடக்கும் சிலருடைய இஷ்டத்தை யனுசரித்து இழக்கவேண்டிவரும். தீரமான மனதுடையவர்கள் ஒன்றுகூடி இந்த உதவி மறுப்பு இயக்கம் கெட்டது என்று அதை திரஸ்காரம்செய்துவிட்டார்கள் என்பதே ராஜாங்கத்தார் இந்தியரின் நற்புத்தியில் வைத்த நம்பிக்கைக்குப் போதுமான ஸாக்ஷ்யமாகும். இன்னும் வித்வான்களான இந்தியர்களில் அநேகர் இந்தப் புதிய கொள்கையினால் இந்தியாவுக்குக் கேடு உண்டாகும் என்று சொல்லி இதைத் தள்ளிவிட்டார்கள்.

ஆனால், படிப்புள்ள இந்தியர்கள் இதை ஆதரிக்காததினால், இந்த இயக்கத்தின் தலைவர்கள் ஸாமான்ய ஜனங்களுக்கு உபந்யாஸம் செய்யும் காலத்தில் மிகக் கொடூரமாகப் பேசவேண்டிவந்ததுடன், புத்திவராத பள்ளிக்கூடப்பிள்ளைகளைத் தங்களுக்குள் வளைத்துப் போட்டுக்கொள்ள முயற்சியும் செய்கிறார்கள்.



இதில்தான் இந்தியர்களுக்கு இரண்டுவிதமான அபாயங்கள் இருக்கின்றன. அதை உத்தேசித்துதான் ராஜாங்கத்தார் இந்த விஷயங்களை வெளிப்படையாய் ஜனங்களுக்குச் சொல்லுகிறார்கள். இப்படிச் செய்வதில், இந்த அநியாயம் இனி பரவவொட்டாமல் தடுக்கவேண்டுமானால் ஸ்திரபுத்தியும் தீரமும் உள்ள எல்லோரும் ஒன்றுசேர்ந்து வேலைசெய்யவேண்டுமென்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியவேண்டுமென்று ராஜாங்கத்தார் ஆசைப்படுகிறார்கள்.

இப்போது சமீபத்தில் உண்டாயிருக்கும் மாறுதல்களில் மிகவும் அக்ரமமானது எதுவென்றால், ராஜ்ய விஷயங்களின்பொருட்டு தேசத்திலுள்ள சிறுவர்களைக் கெடுக்க உத்தேசித்திருப்பதே. இந்த இயக்கத்தின் தலைவர்களுக்கு ஆகவேண்டியதெல்லாம்கூடி தங்கள் இயக்கம் பலப்பட்டு, தங்கள் இஷ்டம் நிறைவேறவேண்டுமென்பதே. வீட்டில் தாய் தகப்பனுக்கும் பையன்களுக்கும் உள்ள பந்தம் அறுந்துபோய் உபாத்தியாயர், பெற்றோர் சொல்படி பையன் கேட்காமல்போனால் இவர்களுக்கு ஆவது என்ன?

படிப்பு இல்லாதவர்களுக்கும் அறிவீனர்களுக்கும் இவர்கள் செய்யும் உபந்யாஸத்தினாலும் அநேக கேடுகள் உண்டாகக்கூடும். இதற்கு முன்னாலேயே ஒரு குற்றம் நடந்துவிட்டது. தலைவர்கள் வேறு வேலை இல்லாமல், ஊர் ஊராய்ப் போய், அடிக்கடி ராஜாங்கத்தார் பொய்யென்று மறுத்துவிட்ட விஷயங்களைப்பற்றியே மறுபடியும் உபந்யாஸம் செய்துகொண்டுவந்து ஜனங்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்தால், அதனால் எப்போது வேணுமானாலும் கலஹம் ஏற்படும்.

இந்த இரண்டு அபாயங்களையும் நிவர்த்திக்க நிதானஸ்தர்களின் உதவிவேண்டும். ஆகவே அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, படிப்பில்லாதவர்களுக்கும் புத்திவராத மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவி மறுப்பினால் உண்டாகும் தீமைகளை எடுத்துக்காட்டி, அது தேசத்தில் அராஜகத்தைக் கொண்டுவந்துவிடும் என்பதையும் பகிரங்கமாக விளக்கி, தேசத்தில் சட்டத்தையும் நீதியையும் நிலைநிறுத்தும் விஷயத்தில் ராஜாங்கத்துக்கு உதவிபுரியவேண்டுமென்று ராஜாங்கத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இந்தியாவில் தாராள மனதும் நிதான புத்தியுமுடையவர்கள் இந்த விஷயமாக ஏற்கனவே நடந்துகொண்டிருக்கிற மாதிரியை ராஜாங்கத்தார் மெச்சுகிறார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் இந்த உதவி மறுப்பு இயக்கத்தை பகிரங்கமாய் அவர்கள் கண்டித்திருப்பதைப்பற்றி ராஜாங்கத்தார் சந்தோஷப்படுகிறார்கள். அலிகாரிலுள்ள மஹமதிய ஆங்க்லோ ஓரியண்டல் காலேஜின்

ட்ரஸ்டிகள், அம்ரிதஸரஸிலுள்ள கால்ஸா காலேஜ் அதிகாரிகள், இன்னும் இதர பள்ளிக்கூட உத்தியோகஸ்தர்கள், அநேக உபாத்தியாயர்கள், பெற்றோர்கள், ஆகிய இவர்களும் பள்ளிக்கூடப் பிள்ளைகளிலேயே அநேகரும் இந்த இயக்கத்துக்கு விரோதமாக இருப்பது நலமைக்குக் காலமென்றே எண்ணவேண்டும்.

இப்போது இந்தியாவைச் சூழ்ந்திருக்கும் அபாயத்தை நிவிர்த்திக்கவேணுமானால் படித்தறிந்த பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைத்தான் நம்பவேண்டுமென்று ராஜாங்கத்தாருக்குத் தெரியும்; ஏனென்றால், இந்தியாவின் ராஜிய விஷயமான முன்னேற்றம் அந்தப் பொது உணர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. இந்த நம்பிக்கையைக் கொண்டுதான் இதற்கு முந்தி ராஜாங்கத்தார் இவ்விஷயமாய் ஒருவித அடக்குமுறையையும் கையாளாமலிருந்தது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளைக் கடைசியாகத்தான், அதாவது, எப்போது அவைகளை அனுஷ்டிக்காமலிருந்தால் ஜனங்கள் ராஜாங்கத்தின்மேல் பெரிய பழிசுமத்துவார்களென்று தோன்றுகிறதோ அப்போது அவைகளை வேறு நிவிர்த்தியில்லாமல் கையாள வேண்டிவரும். பொதுஜன க்ஷேமம் ஸம்பந்தமாய் ராஜாங்கத்தாருக்குள்ள பொறுப்புக்கேற்றபடி அவர்கள், இந்த மாதிரி எவ்வளவுகாலம் சும்மாயிருப்பார்கள் என்பது நிதானஸ்தர்கள் இந்த இயக்கம் பரவவொட்டாதபடி தடுத்து அதனால் ஏற்படும் அபாயங்களைக் குறைக்க அவர்கள் செய்யும் பிரயத்னங்கள் எவ்வளவுதூரம் பலிக்கின்றன என்பதைப் பொறுத்ததாயிருக்கும்.

## GAMBLING

## சூதாட்டம்

'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.'

(1 தீமோ. 6-10.)

சூதாட்டம் என்பது தந்திரத்தால் பணத்தை அபகரிக்கும் விளையாட்டைமாத்திரங் குறிக்காமல் விளையாடுபவர்களில் யாருக்காவது நஷ்டத்தை விளைவிக்கும் ஆட்டத்தையுங் குறிக்கும். சூதாட்டம் 'அறத்தை வேர் கல்லும், அருநரகிற் சேர்க்கும், திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும், மறத்தையே பூண்டு விரோதஞ்செய்யும், உருவழிக்கும், உண்மையுயர்வழிக்கும், வண்மை திருவழிக்கும், மானஞ் சிதைக்கும், மருவும் ஒருவரோடன்பழிக்கும்' என்று புகழேந்திப் புலவர் சொன்னது மெய்யே. பேர் பெற்ற நளச்சக்கரவர்த்தி



புட்கரனென்னுமோர் சிற்றரசனோடு சூதாடி, அச்சூதில் நாடு நகர் முதலியவற்றை இழந்து, மனைவியும் மக்களும் பின்றொடர நாடு விட்டுக் காடடைந்ததும், பாண்டுவின் மைந்தர் துரியோதனாதிகளுடன் சூதாடி, நாடு நகர் இழந்து, சொலற்கரிய மானக்கேடடைந்து, காட்டை உறைவிடமாய்க் கொண்டதுமாகிய முற்காலச் சரித்திரங்கள் தற்காலத்தில் ஏட்டுச்சுரக்காய்போனதே தவிர, நமக்கு எச்சரிப்பாயிருக்கிறதாகக் காணோம். வழக்கமாய் வர்த்தமானப் பத்திரிகைகள் வாசித்துவருவோர் ஒரு ரூபாய் போட்டு ஆயிரம் ரூபாய் பெற்றவர்கள் பேர், விலாசம் முதலியவைகளைப் பார்த்து, தற்காலச் சூதாட்டம் சீமானாவதற்கோர் ராஜபாதையென நினைத்து, சூதாட்டத்தில் தலையிட நேரிடுகிறது. தற்காலப் புஸ்தகங்களில் சூதாடிக் கெட்டவர்கள் சரித்திரம் வாராமையாலும், சாராயம் அபின் முதலிய இலாகிரி வஸ்துக்களுடன் போர் புரிபவர்கள் தானும் தற்காலச் சூதாட்டக் கோஷ்டத்தைக் கவனியாதபடி செவிடுபட்டிருப்பதாலும் பக்திமான்கள் கூட சூதாட்ட விஷயத்தில் பாராமுகமாயிருக்கிறாப்போல் தோன்றுகிறது.

தற்காலம், வீட்டிலும் நாட்டிலும், விளையாட்டிலும் வேலைஸ்தலத்திலும், பெரியவர்களுக்குள்ளும் சிறியவர்களுக்குள்ளும், ஆண்களுக்குள்ளும் பெண்களுக்குள்ளும், சூதாட்டு ஒரு விளையாட்டு. பள்ளிக்கூடத்துக்குப் போகும் வயசு வருமுன்னே காலையிலே கையில் நாலு கோலியுண்டை, இரண்டடிக்கொன்று, ஒரு காசுக்கு இரண்டு கோலியுண்டை; மாலையிலே இரண்டு காசு நஷ்டம், அல்லது இரண்டு காசு இலாபம். பிள்ளை பள்ளிக்கூடம் போனால் பென்சிலாட்டம்; இரண்டு பென்சில் வந்தாலும் வந்தது, இரண்டு பென்சில் போனாலும் போனதுதான். அறையிலாடி அம்பலத்திலாடினாற்போல் பையன் வரவரத் தேர்ந்து பந்தயம் கட்டி பந்தயங் கெலித்தால் தந்தைக்குச் சந்தோஷம், தாய்க்குக் களிப்பு. ஆபீசுக்குப்போனால் அங்கொருவன் கையில் கைக்கடிகாரம்; ஆளுக்கொரு ரூபாய் அவிழ்த்துவைக்க உடமைக்காரனுக்குப் பத்து ரூபாய், ஒருவனுக்குக் கடிகாரம், ஒன்பது பேருக்குப் பெருமூச்சு. சென்னபட்டணத்து வீதியிலே மணிச்சப்தம், எட்டிப்பார்த்தால் சூதாட்டம்; சந்தியிலே நாடாவாட்டம், சேவகனைக் கண்டால் ஓட்டம்; தோட்டத்து மூலையிலே சூதாட்டம், ஏழை வாயிலே மண்; சந்தைக்குப் போனால் சார்ஜன்ற் குதிரைமேலே, சேவகர் அவனைச் சூழ, ஆனால் அங்கும் இங்கும் எங்கும் சூதாட்டம். எத்தனையோ வகைச் சூதாட்டம்! வளையமாம், துபாக்கியாம், லாட்டெரியாம்; நாட்டிலே காடைப் பந்தயமாம், கவுதாரிப் பந்தயமாம், புறாப் பந்தயமாம்,

கரும்புப் பந்தயமாம், சேவல் போராம், மல்யுத்தமாம், சல்லிகட்டாம்; பார்க்கிறவர்களுக்குள்ளும் பந்தயமாம், பணக்காரருக்குள்ளும் பந்தயமாம். கல்கத்தாவிலே குதிரை ஓட்டமாம்; அண்ணன் ஒரு ரூபாய் தங்கை ஒரு ரூபாய், அம்மாள் ஒரு ரூபாய், ஐயா ஒரு ரூபாய், தொட்டிலிலே தூங்குகிற பேரில்லாக் குழந்தையும் ஒரு ரூபாய்; வந்தால் ஆயிரரூபாயாம், போனால் ஒரு ரூபாய் தானும். ஒரு ஆலயம் கட்டவேண்டுமாம்; ஆளுக்கொரு ரூபாய் தானும், ஐந்நூறுபேருக்குப் பிரைசாம். ஆலயத்திலே அறுப்பின் பண்டிகையாம்; கத்தரிக்காயாம், ஏலமாம். ஐயோ! பிதாவின் வீடு வியாபார வீடும், கள்ளர் குகையுமாம்.

பெருத்த சூதாட்டங்கள்தான் நஷ்டத்தை விளைவிக்கும், அற்ப சுவல்ப ஆட்டங்களால் அதிர்ஷ்டமிருந்தால் ஆஸ்திக்காரர்களாகலாம் என்கிறீர்களோ? 'வேண்டற்க வென்றினுஞ் சூதினை வென்றதூஉந் தூண்டிற் பொன்மீன் விழுங்கியற்று' என்றபடி சூதினால் வென்ற பணம் சூதனுக்கே கேட்டையுண்டுபண்ணும். 'கோதாட்டொழி' என்பது மூதறிஞர் மொழி. சூதாட்டம் வாதாட்டம் என்றபடி சூதர் வாதாடுவர். 'சூதும் வாதும் வேதனை செய்யும்.' சூதாட்டத்திற்கு பண ஆசையே மூலகாரணம். 'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள்' என்று சத்தியவேதம் பகருகிறது. சூதாடுகிறவன் தன்னையே தூக்கில் போடுவதற்குக் கயறு திரிக்கிறவன் என்பது சத்தியமே. ஆதலால் நீங்கள் பிறருடைய கால் காசுக்கும் ஆசை வைக்காமல், எவ்வகைச் சூதாட்டத்தையும் வெறுத்துத் தள்ளி, 'பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்'. மேலும் உங்கள் பிள்ளைகளுடைய படிப்பைக் கவனித்து வருவதுபோல அவர்கள் விளையாட்டுகளையுங் கவனித்து, அவர்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் வராதபடி பாருங்கள்.

The Paradise Bird.

C. L. S. PRESS, MADRAS—1921


# மாதர் போதினி

No. 279 ஏப்ரல் 1921 No. 4


## PRAYER, THE CHRISTIAN'S CHARM

## கிறிஸ்தவர்களுடைய மந்திரமாகிய ஜெபம்

பிறருக்கு விளங்காதவண்ணம் கிரியை நடப்பிப்பதே மந்திரமாகும். கிறிஸ்தவர்கள் ஜெபத்தின் மூலமாய் அரிய பெருங் காரியங்களை நடப்பிக்க வல்லவராகிறார்கள். ஜெபத்தின் மூலமாய்க் கிரியை நடத்தும்போது அக்கிரியையை நடப்பிப்போர் மனுஷரல்ல, தேவனே. தேவன் நடப்பிக்கும் கிரியை மனுஷருக்கெட்டாததும் உன்னதமானதுமாயிருக்கும். 'இவைகள் மனுஷராலே கூடாதது தான். தேவனாலே கூடும். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.' உண்மையான விசுவாசமுள்ள ஜெபம் தேவனைக் கிரியை செய்ய ஏவி அசைக்கிறது. தேவன் செய்யும் கிரியை மனுஷருக்கு விளங்காததாயும் அதிசயமானதாயுமிருக்கும். அவருடைய நாமம் அதிசயமானவர். அவர் கிரியை அற்புதமும் அதிசயமுமானது. ஜெபத்தின்மூலமாய் இவ்வித கிரியை நடக்கும். ஆகையால் ஜெபம் கிறிஸ்தவர்களுடைய மந்திரமே.

கனம் லூயிசா வான் (Miss Louissa Vaughan) என்ற ஓர் அம்மாள் சீனாவில் மிஷனெரி வேலை செய்யப்போனபோது அங்குள்ள ஜனங்களின் நிலைமை அதிகப் பரிதபிக்கப்படத்தக்கதாயும் நம்பிக்கையற்றதாயுமிருந்தது. இப்படிப்பட்ட ஜனங்களுக்குள்ளே என்ன வேலை செய்யக்கூடுமென்ற அதைரியமுண்டானபோது, திடீரென்று மனத்தில் 'தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை' என்ற வசனம் தொனித்தது. உடனே யோவா. 14: 13, 14 'என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்' என்ற வாக்கியங்களை நம்பி பின்வரும் ஜெபத்தைச் செய்தார்கள்.

'பரம பிதாவாகிய தேவனே, எங்கள் பாவங்களை மன்னித்து, பரிசுத்தாவியை எங்கள்மேல் ஊற்றி, பாவத்தையும் நீதியையும் இனிவரும் உலகத்தையும்பற்றி எங்களைக் கண்டித்துணர்த்தி, கர்த்த

ராகிய இயேசுகிறிஸ்துவை எங்களுக்கு சொந்த இரட்சகராக வெளிப்படுத்திக்காட்டி, அவருடைய இரத்தத்தால் எங்கள் பாவக் கறையும் குற்றமும் நீங்க சுத்திகரித்து, எங்களைப் பரிசுத்தாவியானவரால் நிரப்பி, இவ்விடம்விட்டுப் போகும்போது உமக்கு சாட்சி கொடுக்கச் செய்யும்' என்பதே.

இந்த ஜெபத்தை அந்த அறிவீன ஜனங்களுக்குக் கற்றுக்கொடுத்து ஓர்நாளில் குறைந்தது மூன்று தடவை இப்படி ஜெபிக்கச் சொன்னார்கள். அப்படியே செய்தபோது பெரிய ஆசீர்வாதமுண்டாயிற்று. சில சமயங்களில் ஒருவாரம் ஜெபித்தபின்னும், சில வாரங்களாய், மாதங்களாய் ஜெபித்தபின்னும், ஜனங்கள் பாவத்துக்காக அழுது புலம்பி அறிக்கைசெய்து கிறிஸ்தவர்களானார்கள். ஓர் அம்மாள் 45 வருஷமாய் தினந்தோறும் குடித்துவந்த தன் கணவனுக்காக இந்த ஜெபத்தைச் செய்தபோது சில வாரங்களுக்குள் அவர் பின்வருமாறு குணப்பட்டார். வழக்கம்போல் சாராயக்கடையில் நுழைந்தபோது, வாசலில் கால் வைத்தவுடன் உரத்தசத்தமாய் 'உள்ளே போகாதே, வீட்டுக்குத் திரும்பிப் போ' என்ற சத்தங் கேட்டுத் திடுக்கிட்டு, யார் அப்படிச் சொல்லுகிறதென்று சுற்றிலும் பார்க்க, யாரும் அங்கில்லை, வழக்கப்படி சிலர் குடித்துக்கொண்டிருந்தார்கள். தன் கையிலிருந்த பையும் விழுந்து காசெல்லாம் சிதறிப்போய்விட்டது. அவைகளைப் பொறுக்கிக்கொண்டு தெருவில் வெளியேவந்து மறுபடியும் கடைக்குள் உட்பிரவேசிக்கவே, திரும்பவும் அதே சத்தம் 'உள்ளே போகாதே, திரும்பி வீட்டுக்குப் போ' என்று கேட்க, தனக்கு மூளை கெட்டுப்போயிற்றோவெனப் பயந்து திகிலோடு வீட்டுக்குத் திரும்பி, குடியாமல் வீடுசேர்ந்தார். மனைவி, 'இத்தனை சீக்கிரம் வந்ததென்ன? என் கலக்கம்?' என்று வினவ, 'எனக்குப் பித்தம் பிடித்தாற்போலிருக்கிறது. மூளையில் ஒன்றும் சரியாயில்லை' என்று நடந்த சம்பவத்தைப் பகர்ந்தார். இதைக் கேட்ட மனைவி, உடனே கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி தான் செய்த ஜெபத்தைச் சொல்லி, அவரையும் ஜெபிக்கச்செய்தாள். அன்று முதல் புதிய மனுஷனாகி, குடியைக் கட்டோடேவிட்டு தேவதொண்டனாயிருக்கிறார். இன்னும் அநேகர் இந்த ஜெபத்தால் குணப்பட்டிருக்கிறார்கள்.

ஓர் துன்மார்க்கன் புது சிருஷ்டியாவதைப்பார்க்க ஓர் பேரதிசயமுண்டோ? எல்லாரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவையடையவும் தேவன் விரும்புகிறார். ஒருவராவது கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆகையால்



நாம் புதிதாக்கப்படவும் பிறர் கிறிஸ்துவண்டை வரவும் உண்மையான விசுவாசத்தோடு ஜெபித்தால், இந்த அற்புதம் நடவாதோ? சந்தேகமின்றி நடக்கும். வியாதி சுகமாகும், பிசாசுகள் துரத்தப்படும், மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாய் பாவத்தில் செத்தவர்கள், நித்தியஜீவனை யடைவார்கள். பரிந்து பேசும் ஊழியத்தை உடனே துவக்குவோமாக.

## PRAYER WITH FAITH

## விசுவாசமுள்ள ஜெபம்

(தொடர்ச்சி)

தேவன் நல்லவரும் நன்மைசெய்யச் சித்தமுள்ளவருமாய் இருந்தபோதிலும், நாம் தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுவோமானால் நாம் விரும்புகிறவைகளைப் பெற்றுக்கொள்வதெப்படி? செய்யப்படுகிறதெல்லாம் ஜெபங்கள் அல்லவே; ஜெபத்தில் ஜீவனுள்ள தேவனோடு பேசுகிறோம். தேவனிடத்தில் பேசுகிறது விளையாட்டுக் காரியமல்ல. நம்முடைய ஜெபங்களில் எவ்வளவு கவலையீனமும், வீண் வார்த்தைகளும் நிறைந்திருக்கின்றன. 'தேவன் இருக்கிறார், அவர் பார்க்கிறார், அவர் கேட்கிறார், அவர் இருதயத்தை ஆராய்கிறார், நான் என் தேவனிடத்தில் பேசுகிறேன்' என்கிற உணர்வு நம்மிடத்தில் உண்டா? 'தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்கவேண்டும்' என்று ஆவியானவர் விருதாவிலே சொன்னாரோ? இந்த வாக்கியம் மனப்பாடமாய்த் தெரிகிறது பெரியகாரியமில்லை. வாக்கியத்தின் இரகசியத்தைக் கவனிக்கவேண்டும். தேவன் இருக்கிறார் என்கிற சரியான உணர்வு இருக்குமானால் ஜீவியம் மாறிவிடும், அவர் கேட்கிறார் என்கிற நிச்சயம் உண்டானால் ஜெபம் உண்மையுள்ளதாகிவிடும், அவர் பார்க்கிறார் என்கிற எண்ணம் இருக்குமானால் ஜீவியம் பரிசுத்தமாகிவிடும். ஆண்டவரே! உம்முடைய சமுகமே பரிசுத்தம், நாங்கள் உம்மைக் காணும்படி எங்கள் கண்களைத் திறந்தருளும்.

நம்முடைய ஜெபத்தின் தன்மையையும் நாம் கவனிக்கவேண்டும். விசுவாசமில்லாத ஜெபங்கள் எத்தனை ஏராளம்! அவிசுவாசம் ஆசீர்வாதத்தின் வாசலை அடைக்கிற ஒரு பெரிய கல். இரட்சகர் உலகத்திலிருந்தகாலத்தில் அநேகர் அவரிடத்தில் வந்து ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் பெற்றுக்கொண்டதுண்டு. அவர்களைப் பார்த்து: 'உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது', 'உன் விசுவாசத்தின்படி

உனக்காகக்கடவது', 'இதைச்செய்ய எனக்கு வல்லமையுண்டென்று விசுவாசிக்கிறீர்களா?' 'நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்', 'பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு'. 'நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்' என்று இரட்சகர் சொன்ன வார்த்தைகள் கவனிக்கப்படத்தக்கவை. நாம் தேவனிடத்திலிருந்து ஏதாவது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் 'விசுவாசமுள்ள ஜெபம்' அவசியம் என்று பார்க்கிறோம். 'நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்' என்று இரட்சகர் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். 'அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு கேட்கக்கடவன்' சந்தேகப்படுகிறவன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக' என்று ஆவியானவர் தெளிவாய்ச் சொல்லுகிறார்.

அருமை இரட்சகரே! நாங்கள் ஜெபம்பண்ணியும் ஏன் பெற்றுக்கொள்ளாமல் போகிறோம் ஐயா?

'உங்கள் அவிசுவாசத்தினாலேதான், விசுவாசம் உங்களுக்கு இருந்தால் உங்களால் கூடாதகாரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.'

ஆண்டவரே! அவிசுவாசம் நீங்கும்படி எங்களுக்கு உதவிசெய்து எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணியருளும்.

நாம் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபிக்கத்தக்கதாக மூன்று காரியங்களைக் கவனிப்பது நல்லது.

1. **தேவனை அறியவேண்டும்.** அவரை அறிகிற அறிவினாலேயே விசுவாசம் பலப்படுகிறது. அவருடைய வல்லமை, மகத்துவம், உண்மை, பூர்வகாலத்து அதிசயங்கள், நமது விஷயத்தில் அவர் நடப்பித்துவந்திருக்கிற ஆச்சரிய செயல்கள், இவைகளை நாம் தியானிக்கும்போது விசுவாசம் உண்டாகிறது. தேவனைப்பற்றி முன்னும் எழுதியிருக்கிறபடியால் திரும்பவும் சொல்லாமல் விடுகிறேன். ஆபிர காமுடைய விஷயத்தில் பார்த்தால், தேவன் தனக்குச் சொன்னவைகளை தான் எவ்வளவும் நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் தன்னைப் பாராமல் தேவனையே பார்த்ததால், அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான். ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்த விஷயத்திலும், மரித்தோரிலிருந்தும் அவனை எழுப்ப தேவன் வல்



வராயிருக்கிறாரென்று எண்ணி விசுவாசத்தில் உறுதியாயிருந்து விசுவாசிகளுக்குத் தகப்பனுமானான். நாம் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறிவோமானால் விசுவாசத்தில் வல்லவர்களாவோம்.

2. **தேவசித்தத்தின்படி ஜெபிக்கவேண்டும்.** நாம் விசுவாசத்தோடு ஜெபிப்பதற்கு தேவனுடைய வல்லமையை அறிவதோடுகூட அவருக்குச் சித்தமானதையே நாம் கேட்கவேண்டும். அவருடைய சித்தம் இன்னதென்று அறியாத காரியங்களைக்குறித்து நாம் தைரியமாய்க் கேட்கத் துணிகிறதில்லை. தேவனுடைய சித்தம் இன்னதென்று ஆவியானவர் தம்முடைய வசனத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்தச் சித்தத்தின்படி அவருக்கு மகிமையானவைகளை நாம் கேட்கும்போது விசுவாசத்தோடு ஜெபிக்க ஏவப்படுகிறோம். ஏனென்றால், 'நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்'.

3. **சுத்த மனச்சாட்சி வேண்டும்.** 1 தீமோ. 3 : 9. விசுவாச ரகசியத்தை சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள். விசுவாசமுள்ள ஜெபத்திற்கு தேவனுடைய வல்லமையை அறிவதும் தேவசித்தத்தின்படி ஜெபிப்பதும் அவசியமாயிருப்பதுபோலவே சுத்த மனச்சாக்ஷியும் மிக அவசியமாயிருக்கிறது. முந்தினவைகளை அறிந்தும் சுத்த மனச்சாக்ஷியில்லாவிட்டால் தைரியமாய் ஜெபிக்கமுடியாது. தேவன் வல்லவரென்று அறிந்திருக்கிறேன், தேவசித்தப்படிக் கேட்டால் தவறாதென்றும் அறிந்திருக்கிறேன், என் இருதயத்தில் அக்கிரம சிந்தைகொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார் என்பதையும் அறிந்திருக்கிறேன். சுத்த மனச்சாக்ஷி விசுவாசத்துக்கு ரகசியமாயிருக்கிறதுபோல குற்றமுள்ள மனச்சாக்ஷி அவிசுவாசத்திற்கும் அவநம்பிக்கைக்கும் ஏதுவாயிருக்கிறது. நம்முடைய ரட்சகர் தமது பிதாவுக்குப் பிரியமானவைகளையே எப்பொழுதும் செய்துவந்தபடியினால் பிதாவை நோக்கி, 'நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீரென்று நான் அறிந்திருக்கிறேன்' என்று சொல்லக்கூடியவராயிருந்தார். பாவங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, கிறிஸ்துவின் ரத்தத்தால் துர்மனச்சாட்சி நீங்கக் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு நடத்தப்படுகிற பிள்ளைகளின் ஜெபத்திற்கு தேவனுடைய செவிகள் எப்பொழுதும் திறந்திருக்கின்றன. அவர்கள் தேவனுடைய மகிமையை மாத்திரம் விரும்பி ஜீவிக்கிறபடியால், தைரியத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் தேவசமுகத்தைக் கிட்டிச்சேர்ந்து கேட்டுப் பெற்றுக்கொண்டு

ஸ்தோத்திரஞ் செலுத்துகிறார்கள். ‘அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறது எதுவோ, அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்’—இந்த விசுவாசத்தோடு தேவனை நோக்கி நாம் ஜெபம்பண்ணக்கடவோம்.

## THE TRUE WAY

## மெய் வழி

நம்முடைய பாவத்தை நிவிர்த்திபண்ண நமக்கு எவ்வளவும் திராணி இல்லை. இப்படியிருக்க, பாவம் நிவிர்த்தியாகிறதற்கு ஒரு வழி உண்டோ என்று ஆசையோடே நாம் தேடி அறிந்துகொள்ள வேண்டும். கடவுள் மகா தயவுள்ளவரானபடியினாலே அவரே அந்த வழியை நமக்காக ஏற்படுத்தினார். அவர் தம்முடைய குமாரனை நமக்காகப் பூலோகத்திலே அனுப்பினார். அவர் நம்மேல் அன்பு வைத்து, நம்முடைய பாவம் நிவிர்த்தியாகிறதற்கு வழியை உண்டாக்கும்படிக்கே பூமியிலே மனிதனாகப் பிறந்து, அன்பவதாரம் எடுத்தார். மனுஷர் யாவரும் செய்த தீவினைகளைப் பார்த்து, மனம் இரங்கினார். அவர் தரித்திருக்கிற நாமமே நமக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தரத்தக்க நாமமாய் இருக்கிறது. இயேசுகிறிஸ்து என்பதே அவருடைய பரிசுத்த மகத்துவ நாமதேயம். இயேசு என்றால், ‘இரட்சிக்கிறவர்’ என்று பொருள்படும். கிறிஸ்து என்றால், ‘சத்தியத்தைப் போதிக்கிற குருவும் பாவத்தைத் தீர்க்கிற ஆசாரியனும் உலகத்தை அரசாண்டு காக்கிற ராஜாவுமாய் அபிஷேகம் பண்ணப்பட்டவர்’ என்று தாற்பரியமாகும். அவர் சர்வஞானமும் தயவும் வல்லமையுமுள்ளவர். அவருக்கு ஒருவரும் நிகர் இல்லை. அவர் நம்முடைய பாவத்தைப் போக்கடிக்கிறதற்காகவே பூமண்டலத்திற்கு இறங்கிவந்தார்.

பூமியிலே இயேசுகிறிஸ்து ஏறக்குறைய முப்பத்துமூன்று வருஷம் தங்கினார். அவர் மனுஷனாய் இருந்தாலும், பாவமில்லாமல் பரிசுத்தராகவே இருந்தார். தமது வாக்கினாலே மனுஷர்களுடைய வியாதிகளை நீக்கினார். குருடு செவிடு ஊமைத்தனம் முதலான ஈனங்களையும் ஊனங்களையும் தமது வார்த்தையினாலே நீக்கினார். வெளிச்சத்தைப்போல் தம்முடைய அருளை எங்கும் வீசினார். துக்கப்பட்டோர் எல்லாரும் அவரிடத்தில் வந்து ஆறுதல் அடைந்தார்கள். இவ்விதமாய் அவர் தம்முடைய வல்லமையையும் கிருபாகடாட்சத்தையும் காட்டினார். கடைசியிலே அவர் அருளின நற்போதனையை விரும்பாத அவருடைய சத்துருக்கள் அவரைப் பிடித்து, சிலுவை



மரத்தின்மேல் அவருடைய கையிலும் காலிலும் ஆணிகளை அடித்து, குரூரமாய் அவரைக் கொன்றுபோட்டார்கள். பின்பு அவருடைய சீஷர்கள் வந்து ஒரு கல்லறைக்குள் அவரை அடக்கம்செய்தார்கள். மூன்றாம் நாளிலே அவர் அதிலிருந்து உயிருடன் எழுந்து மகிமையோடே வெளிப்பட்டு, தம்முடைய சீஷர்களுக்குத் தரிசனையானார். அவர்கள் எங்கும் போய், தம்மையும் தாம் மனுஷர்களுக்காக உண்டுபண்ணின பாவ நிவாரண மார்க்கத்தையும் யாவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். பின்பு அநேகர் பார்க்கவே, அவர் பரலோகம் சென்றார்.

மோட்சலோக கர்த்தாவாய் இருக்கிற இயேசுகிறிஸ்து ஏன் இப்படி இவ்வுலகத்திற்கு வந்து பாடுபட்டார் என்று கேட்கலாம். அது நல்ல கேள்வி. புண்ணியத்தினாலேமாத்திரம நமக்கு மீட்பு உண்டாகும். ஆனால் பாவிகளாகிய நாம் புண்ணிய பலன்களைச் சம்பாதிக்க முடியாது. ஆதலால் அவர் இவ்வுலகத்தில் கஷ்டப்பட்டு, பாடுகளைச் சகித்து, மரணம் அடைந்து, அளவற்ற புண்ணியத்தைச் சம்பாதித்தார். அவர்மேல் பக்திவைக்கிற யாவரும் அந்தப் புண்ணியத்தில் பங்குபெறுவார்கள். அவ்விதமாய்ப் பாவிகளாகிய நமக்குப் பாவநிவிர்த்தி உண்டாகும்படி அவர் வந்து பாடுபட்டார். வேறே காரணம் இல்லை.

அவருடைய அன்பு அளவில்லாததாய் இருக்கிறபடியினாலே, அவ்விதமாய்ப் பாடுபடுவதற்குச் சம்மதித்தார். அவர் செய்த புண்ணியங்களினால் பாவ நிவாரண மார்க்கம் உண்டாய் இருக்கிறது.

மனுஷர்களில் எவர்கள் தங்களைப் பாவிகள் என்று கண்டு உணர்ந்து, ‘ஐயையோ! நல்ல கடவுளுக்கு விரோதமாய்ப் பாவம்செய்தோம்’ என்று துக்கித்து, எல்லாப் பாவத்தையும் வெறுத்துவிட்டு, தமதுமேல் பக்தி வைக்கிறார்களோ, அவர்களை இயேசுகிறிஸ்து இரட்சிப்பார். அவர்களுடைய ஆத்மத்தைச் சுத்திசெய்யும்பொருட்டு அவர்களுக்குத் தம்முடைய பரிசுத்த ஆவியைத் தருவார். அவர்களைப் பராபரனுடைய பிள்ளைகளாக்குவார். அவர்கள் கிறிஸ்துவுடன் மோட்சலோகபதவி அடைவார்கள்.

‘மெய்வழி இயேசுவே
மெய்வழி இயேசுவே
வேறொன்று மில்லையே.’

‘நானே வழியும் சத்தியமும்
ஜீவனுமாயிருக்கிறேன்.
என்னாலேயல்லாமல் ஒருவனும்
பிதாவினிடத்தில் வரான்.’

## HUMAN SHIP

## மானிடக் கப்பல்

திரைமூடிய நெடுங்கடலில் ஓடுங் கப்பலைவிட மருள்நிறைந்த இவ்வுலகில் உலாவும் மானிடக்கப்பல்களுக்குள்ளது குணச்சீரால் பல மேன்மைகளும், குணக்கேட்டால் கூறொணா தாழ்மைகளுமே. மானிடக்கப்பல்கள் மற்றக் கப்பல்களைப்போல் உண்டாக்கப்படாமல், எல்லாவற்றிற்கு மேலாகவும் பிரமிக்கத்தக்க அதிசயமாகவும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. (சங். 139 : 14.) இம்மானிடக்கப்பல் தன்னை உண்டாக்கினவருடைய சாயலையே உடைத்தாயிருப்பதால் இது மகா பெருமைவாய்ந்தது. (ஆதி. 1: 26.) மானிடக்கப்பல்கள் நீர்மேல் ஓடுங் கப்பல்களைப்போல் உணர்வற்றவைகளாயுண்டாக்கப்படாமல், நன்மை தீமை இன்னதென்று பகுத்தறியக்கூடிய மதியுள்ளவையாயுண்டாக்கப்பட்டிருப்பதால் இக்கப்பல்களுக்கு நிகர் இவ்வுலகத்திலேது? (ஆதி. 3: 22.) மானிடக்கப்பல்களை மற்ற எவையும் ஆளமுடியாதென்றாலும், மற்றவைகளை ஆள மானிடக்கப்பல்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பெற்றிருப்பதால் இவற்றின் சிலாக்கியத்தை எவரால் எடுத்துரைக்கக்கூடும்? (ஆதி. 1: 28.) கப்பல்களென்றாலும் மானிடக்கப்பல்கள் மகா மேன்மையும் அதிசயமுமானவைகள். இவைகள் வீணிலே பல மார்க்கமாக ஓடியலுத்து முடிவில் ஒன்றுக்கும் பயன்படாமற்போகுங் கப்பல்களாகவல்ல, ஆனால் நன்மார்க்கத்தில் நடந்து கடையிற் கதிபெறவேண்டிய கப்பல்களாகவேயிருக்கின்றன. இக்கப்பல்கள் செல்லக்கூடிய பாதைகள் அழுகைதங்கிய நரக பாதையும் ஆனந்தம் பொங்கும் மோட்சபாதையுமே. இவ்விரண்டு பாதைகளில் ஏகத்தகாத பாதை எந்தப்பாதையென்று எந்த மானிடக் கப்பல்களுக்கும் செவ்வென விளங்கவே விளங்கும். இவைகள் உண்டாக்கப்பட்டபின் உலகமாகிய அந்தகாரக்கடலில் ஓடும்போதெல்லாம், இருதயமென்னும் மாலுமியின் உத்திரவின்படியே, நரக பட்டணத்திற்கோ அல்லது மோட்சபட்டணத்திற்கோ வேண்டிய பொருட்கள் ஓயாமல் ஏற்றுமதி செய்யப்பட்டுக்கொண்டிருக்குமேயொழிய, இறக்குமதியாவதேயில்லையானால், மானிடக் கப்பல்களினுடைய நீளத்தையும் அகலத்தையும் ஆழத்தையும் இவைகளை உண்டாக்கினவரேயல்லாது வேறெவரறிவார்? சிலசமயம் இறக்குமதி செய்யப்படுவதுண்டு. ஆனால் இறக்குமதி செய்யப்படும்போதெல்லாம், இருபங்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்றே ஒப்புக்கொள்ள வேண்டும். இக்கப்பலிலே ஏற்றப்படும் பொருட்கள் எத்தகையதென உணர்ந்துகொண்டால், எந்தப் பாதையில் நடக்கிறதென்றும்



உரைக்கலாகும். நரகபாதையும் மோட்சபாதையும் இங்கு வித்தியாச
மின்றி நிற்பதால், கப்பல்களில் ஏற்றப்படும் சரக்குகளைக் கண்டே
யல்லாமல் வேறெந்தவிதத்திலும் இக்கப்பல்கள் ஓடும் பாதைகளைப்
பிரித்தறிவதரிது. (மத். 7 : 20.) பொய்யாகிய கந்தகமும், பொறாமை
யாகிய பாஷாணமும், பெருமையாகிய நிலக்கரியும், புறங்கூறலாகிய
சிலாதைலமும், கோபமாகிய வெடிமருந்தும், மாய்மாலமாகிய பற்பல
விஷங்களும், மாமிச இச்சைகளெனும் துர்நாற்றமார்ந்த பல சரக்கு
களும் நரகமாகிய நாசபட்டணத்திற்கென்று ஏற்றுமதி செய்யப்படு
மென்பதை உணர்ந்திராதொருவருண்டோ! மேற்கூறிய சரக்குகள்
யாவும் ஓர் மானிடக்கப்பலில் ஏற்றப்படுமாயின் அது நாசபட்டணத்
திற்குத் தீவிரமாகச் செல்லுங் கப்பலென யாவரும் அறிந்துகொள்வ
தவசியம். சிலநாட் பயணமாகிய சஞ்சலச் சுழல்கள் சூழ்ந்த மாய
உலகமாகிய பெருங்கடலில் துறையறிந்து ஓட கொடுக்கப்பட்ட
படத்தை (Map) இருதயமெனும் மாலுமி கவனியாது கைவிடும்
போதுதான், மேற்கூறிய பொல்லாத சரக்குகள் ஏராளமாய் இக்கப்
பல்களில் ஏற்றப்படும். இவ்விதமாக, கொடிய சரக்குகளால் நிறைக்
கப்பட்ட ஓர் மானிடக்கப்பல் நாசபட்டணத்தின் பாதையிலமிழ்
தங்கு நீடூழிகாலம் நிலைத்திருக்க அதிதீவிரமாகச் செல்லும்போது
போகுந் திசையிலுள்ள சுத்த ஆகாயத்தையெல்லாங் கெடுத்துப்போடு
வதால், அந்த அசுத்த ஆகாயத்தை உட்கொள்ளும் சகஜீவிகளும் தங்
கள் சுகத்தையிழந்து பல பாடு படுவதை நாம் கண்டும் கேட்டுமிருக்
கிறோம். நிற்க, சில சமயங்களில் கோபமாகிய வெடிமருந்தில்
தீப்பிடித்து அநேகரைக் கொன்றும் பலபேரை படுகாயத்தினால்
மிகவருந்தச்செய்ததுமுண்டு. புறங்கூறலாகிய சிலாதைலத்தைப்பற்றி
(Petrol) அநேகருக்கு அதிகமாகத் தெரிந்திருப்பதால் அதினுடைய
செய்கையை இங்ஙனம் அதிகமாய் எழுதாமல்விட்டு, சிலாதைலப்
காற்றோடு சேர்ந்து பரவக்கூடியதாயிருப்பதால் இந்த அபாயமான
தைலத்தில் தீப்பிடித்தாலோ சுற்றிலுமுள்ள மனிதர்களுக்குத் துக்க
தையும் அநேகத்திற்குப் பெருநஷ்டத்தையும் விளைக்குமென்பது
போதும். சரியான வழியைவிட்டு விலகி நரகபாதையிற் செல்லுப்
இக்கப்பலோ, துன்பமெனும் பேரலைகளிலும் துக்கமெனும் நீர்ச்சுழ
களிலும் சிக்குண்டு கட்டுவிட்டதாகவே தனது முடிவைக் காணுமே
யொழிய வேறில்லை. (சங். 53: 3.) சிற்சில சமயங்களில் மோட்ச
மெனும் உச்சிதபட்டணத்திற்குச்செல்லுங் கப்பல்களிலேற்றப்படு
ஓதற்கரிய உயர்ந்த அன்பு அருள் அடக்கம் பொறை பொறுமை
யென்னுஞ் சரக்குகள், நரகமாகிய நாசபட்டணத்திற்கேகுங் கப்பலி
காணப்பட்டாலும், அவைகள் உண்மையிலே உச்சிதபட்டணத்தி

சேருங் கப்பல்களில் ஏற்றுமதிசெய்யப்படும் உயர்ந்த (real) சரக்குகளல்ல, ஆனால் அவைகளைப்போல வெகு எத்தாக (false) செய்யப்பட்டுள்ளதென்று, அவைகளை உபயோகிக்கும் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்குமென்பது திண்ணம்.

இதை வாசிக்கும் மித்திரியே, இப்பரிதாபமான நிலைமைக்குட்பட்ட மானிடக்கப்பல்களை நீ கண்டதுண்டா? ஐயோ! இக்கப்பல்கள் சர்வ மேன்மைகளும் பொருந்தியதாய் விளங்கினாலும், கடையில் ஒன்றுக்கும் உதவாமற்போகும். (சங். 49: 20.) நாமோ நாசபட்டணக் கப்பல்களில் ஏற்றப்படுமந்தப்பொருட்களை இச்சியாமலும் அவைகளைக் கொள்ளாமலுமிருக்க சர்வ ஜாக்கிரதையையும் போதுமான பெலத்தையும் பெற தேவாதிதேவனை நமது மீட்பர் இயேசுகிறிஸ்துவின் மூலமாக் வேண்டிக்கொள்வோமாக.

Y. M. Solomon.

## A KING'S THREE-STORIED HOUSE

## ஓர் அரசனின் மூன்று அடுக்கு மெத்தை வீட்டைப்பற்றிய கதை

ஒரு ராஜா ஒரு மெத்தை வீடு கட்டினார். அதற்கு மூன்று மெத்தைகள் உண்டு. அப்பேர்ப்பட்ட வீடு எங்குமே கிடையாது. அந்த வீட்டின் முதல் மெத்தைக்கு சமையல் அறை என்றும், இரண்டாம் மெத்தைக்கு சாப்பாடு பங்கிடும் அறை என்றும், மூன்றாம் மெத்தைக்கு படிக்கும் அறை என்றும் பெயர். சமையலறையில் சகலவித பதார்த்தங்களும் சமைக்கப்பட்டு, சாப்பாடு பங்கிடும் அறைக்குக் கொண்டுபோகப்படும். அங்கே மூன்று வேலைக்காரர் ஆயத்தமாயிருப்பார்கள். அவர்களிலொருவன் அந்த அரமனையிலுள்ள எல்லோருக்கும் அந்த சாப்பாட்டைப் பங்கிடுவான். மற்ற இருவரும் அந்த ராஜவீட்டிற்கு வேண்டிய காற்று எப்பக்கமும் பரவும்படி சகல வசதியும் செய்வார்கள். கடைசியான மூன்றாம் அறையில் ஒரு தந்தி ஆபீஸும் உலகத்திலுள்ள சகலவித பொருட்களும் படங்களும் நிறைந்திருக்கும். அங்கே இரண்டு கண்ணாடி ஜன்னல்களும் ஒரு வாசலுமுண்டு. அந்த வாசலுக்கு பலமான இரட்டைக் கதவுகள் இருக்கின்றன. அதில் ஒன்று கண்ணாடிக் கதவு, மற்றொன்று சாதாரணக் கதவு. இந்த வாசலில் எப்போதும் ஒரு காவற்காரன் சிவப்பு உடுப்பு தரித்தவனாய் அதை விட்டு நீங்காது காத்திருப்பான். இப்பேர்ப்பட்ட வீட்டைக் கட்டிமுடித்தவுடன் இதன் எஜமான் இரண்டு பெரிய பலமான தூண்களை உண்டாக்கி



அவ்வீட்டை உயர்த்திவைத்தான். அந்தத் தூண்கள் அவ்வீட்டைச் சுமந்துகொண்டு எங்கே போகவேண்டுமானாலும் போகுமாம். இதைப் பார்த்து எஜமான் அதிக சந்தோஷப்பட்டு மகிழ்ந்து, அவ்வீட்டையும் அதின் சிவப்பு உடைதரித்த காவற்காரனையும் பார்த்து: 'நான் பிரயாணமாய்ப் போய் வருகிறேன். வீடு பத்திரம். என் சிநேகிதர் தவிர வேறு யாரும் என் வீட்டிற்குள் பிரவேசிக்கக்கூடாது. நீதான் காவற்காரன். உன் வாசல் வழியாய்தான் யாரும் போகக்கூடும், ஏனென்றால் இந்த வீட்டில் வேறு வழியாதொன்றுமில்லை. காவற்காரனே, ஜாக்கிரதை' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். போனபின் சிலநாள் சகலமும் ஒழுங்காய் நடந்துவந்தது. அவ்வீட்டைப் பார்த்து சிலர் சந்தோஷமும் சிலர் பொறாமையு மடைந்தார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் ஒருவன் ஒரு பெரிய கோச்சுவண்டியில் வெல்வெற்றுசட்டை போட்டுக்கொண்டு ஏறி வீட்டின்முன் வந்து இறங்கி, காவற்காரனைப் பார்த்து: 'நான் இந்த வீட்டிற்குள் போய் சகலத்தையும் சுற்றிப் பார்க்கவேண்டும்' என்றான். உடனே காவற்காரன், 'ஓ! நீ என் எஜமானுடைய சிநேகிதனல்ல என் எஜமானின் சத்துருவாச்சே, நீ உள்ளே பிரவேசிக்கக்கூடாது' என்று சொல்லி கதவைத் தாளிட்டான். வெல்வெற்று சட்டையணிந்த வீரனோ பற்பல இனிய வசனங்களைப் பேசினான். ஆனால் பிரயோஜனப்படவில்லை, உடனே போய்விட்டான். மறுநாள் நிறமற்ற ஒரு சட்டையைப் போட்டுக்கொண்டு ஏதோ ரிப்பேர் செய்கிறவனைப்போல் வந்து, 'உங்கள் ராஜா இந்த வீட்டை ரிப்பேர் செய்ய என்னை அனுப்பியிருக்கிறார். ஆகையால் நான் வீட்டிற்குள் பிரவேசிக்கவேண்டும்' என்றான். உடனே காவற்காரன் உள்ளே செல்ல உத்தரவுகொடுத்தான். ரிப்பேர் செய்கிறவன் வாசல் வழியாய் உட்சென்று, சமையலறையில் போய் புகைபோகும் குழாயை ரிப்பேர் செய்கிறேனென்று சொல்லி அந்த சிம்னியைக் கெடுத்துவிட்டான். பிறகு படிக்கும் மூன்றாம் அறைக்கும் சென்று தந்திக்கம்பியை அறுத்துவிட்டு யாருக்கும் தெரியாமல் மறைந்துவிட்டான். மறுநாளும் அப்படியே வந்து புகைப்போக்கியை அதிகமாய்க் கெடுத்துவிட்டதுமல்லாமல் ஒரு கண்ணாடி ஜன்னலையும் உடைத்துவிட்டுப் போய்விட்டான். அதினால் மறுநாள் சமையலறையில் வேலை சரியாய் செய்யமுடியாமற்போய் சாப்பாடும் சரியான நேரத்தில் பங்கிடமுடியாமல் அவ்வீட்டிற் சம்பந்தப்பட்ட யாவரும் கஷ்டப்பட்டார்களாம். அப்போதுதான் காவற்காரன் தன் தப்பிதத்தை உணர்ந்து, 'ஐயோ! சத்துரு அல்லவோ வந்து பிரவேசித்துவிட்டுப் போயிருக்கிறான். ஆகையால்தான் இவ்வித கேடு

வந்தது' என்று அந்த அரசனுக்குக் கடிதம் எழுதினானாம். உடனே எஜமான் வந்து பார்த்து விசனப்பட்டு, சரியான ரிப்பேர் செய்தாராம். ஆனாலும் அந்த வீடு முன்போல சந்தோஷமும் ஒழுங்குமாய் இருக்கவில்லையாம்.

இக்கதையில் காணப்படும் சில உபமானப்பதங்களுக்கு அர்த்தம் பின்வருமாறு:

ராஜா = தேவன்.
வீடு = சரீரம்.
முதல் மெத்தை = வயிறு.
இரண்டாம் மெத்தை = மார்புக்கூடு.
இரண்டாம் மெத்தையிலுள்ள மூன்று வேலைக்காரரில் ஒருவன் = இரத்தாசயம்.
இருவர் = இரண்டு நுரையீரல்கள்.
மூன்றாம் மெத்தை = தலை.
தந்தி ஆபீஸ் = மூளை.
கண்ணாடி ஜன்னல் = இரண்டு கண்கள்.
ஒரு வாசல் = வாய்.
சிவப்புடை தரித்த காவற்காரன் = நாக்கு.
இரண்டு தூண்கள் = இரண்டு கால்கள்.
கோச்சுவண்டியில் வெல்வெற்று சட்டைதரித்தவன் = திராட்சரசம்.
நிறமற்ற சட்டை தரித்தவன் = பிராந்தி.
ரிப்பேர் செய்வது = வியாதிக்காக பிராந்தியை உபயோகித்தல்.
எஜமானுக்கெழுதப்பட்ட கடிதம் = உணர்ந்து பின் செய்யும் ஜெபம்.

Devathunai Ammal.

## LIFE OF LATE
## Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

## கனம் அருளம்மாள் ஞானதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அவர்கள் பர்த்தா சங். நோவா ஞானதிக்க சாஸ்திரியார் அவர்களோடே திருவனந்தபுரம், கொச்சி, கொல்லம், கோட்டையம் முதலிய நாடுகளில் ஐந்து வருடங்களாகச் சுற்றித்திரிந்து புறமதஸ்தருக்கும் சுரியானி கிறிஸ்தவர்கள் நடுவிலும் பாடலோடு பிரசங்கம் நடத்திவருங்காலையில் கோவில் ஆராதனைகளில் மலையாள பாஷையில் ஆராதனை, பிரசங்கம் முதலியவை நடத்தப்பட்டதால் இந்த அம்மாள் 40 வயதுக்குமேல் மலையாள பாஷையைக் கற்று, ஜெப புத்தகமும் வேதபுத்தகமும் மலையாளத்தில் வாசித்து பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்தார்கள். அந்தப் பாஷை மறந்துபோகாதபடி மலையாளத்தில் வேதபுத்தகம் வாசித்துவருவார்கள். அன்றியும், இளமை பக்தி, ஞானருசிப்பாறும் நேரம், விசுவாசிகளின் பரம இளைப்பாறுதல், திருப்போராடல், மோட்ச பிரயாணம், ஜெபமாலை, பேரின்பக்காதல், ஞான உலா, கல்வாரி தியானம் முதலிய பக்திக்குரிய புஸ்தகங்களையும் மாதாந்தர மிஷன் பத்திரிகைகளையும் வாசிப்பார்கள். இவர்களுடைய ஓய்வுநாளாசரிப்பு மிகவும் கவனிக்கப்படத்தக்கது. சாதாரணமாக சாஸ்திரியாரவர்கள் வீட்டுக் குடும்ப ஜெபம் காலை $5\frac{1}{2}$ மணி முதல் 7 மணி வரை பாடல், வேத வாசிப்பு, பிரசங்கம், லித்தனி முதலியவைகளுடன் நிறைவேறிய பின்னர், தந்தசுத்திசெய்து காப்பி முதலிய காலை போஜனமருந்தி, 8 மணிக்குள் ஆயத்தப்பட்டு குடும்பத்தாரெல்லாரும் கோவிலுக்குப் போய்வந்தவுடன் பிள்ளைகளும் மற்றவரும் ஒருவரை ஒருவர் வினவி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லும் முறை ஒன்றுண்டு. அப்படிச் சொல்லும்போது தோத்திரம் என்றுமட்டும் சொல்லாமல் பராபரனுக்குத் தோத்திரம் என்று தெளிவாகச் சொல்லவேணும்; ஏனெனில், மனிதருக்கல்ல போனவாரமுழுதும் நம்மைக்காத்து இந்த ஓய்வுநாள் மட்டும் கொண்டுவந்த தயவுக்காக நன்றியறிந்த இருதயத்தோடும் உற்சாகமான ஆவியோடும் கர்த்தருக்கு நாம் தோத்திரம் சொல்ல வேண்டுமென்பார்கள்.

அதன்பின் பிள்ளைகளுக்கு ஞானப்பாட்டுகள், வேதவாக்கியங்கள் பாராயணம்பண்ணும்படி கற்பித்துவிட்டு போஜனாதிகளுக்குரிய காரியாதிகளைக் கவனிப்பார்கள். ஞாயிறில் அதிக வேலைக்கிடமான கறி பதார்த்தங்கள் வைக்கவுமாட்டார்கள். மலிவாய் விற்கக் கண்டாலும், இன்றைக்கு ஓய்வுநாளில் வாங்காமல்விட்டால் சுவாமி இன்னொரு நாளில் நயமானதாகக் கிடைக்கப்பண்ணுவார் என்பார்கள். ஞாயிறில் வேண்டியதை முந்தினநாளிலே வாங்கி ஆயத்தம்செய்வது நல்லது என்பார்கள். அன்றைக்கு லேசாக வேலைசெய்து போஜனத்துக்கடுத்தவைகளைத் திட்டம்செய்து பகல் அசனம் முடிந்ததும் வீட்டிலுள்ள பிள்ளைகள் படிக்கவேண்டிய பாடம் கேட்பார்கள். கேட்டபின் அவர்கள் ஒப்புவித்த வாக்கியங்களுக்கும் ஞானப்பாட்டின் கவிகளுக்கும் ஒப்புவித்தவர்களின் வயதிற்கேற்றபடி காசுகொடுத்துப் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவார்கள். 'இளமையில் கல்வி சிலையி

லெழுத்து' என்றாற்போல பிள்ளைகளுக்குச் சிறுவயதில் படிக்கும் வேதவாக்கியம் முதிர்வயதிலே ஆறுதலையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணுகிறதாயிருக்கிறது.

கோவிலிலே பிள்ளைகள் சிரிக்க விளையாடக்கூடாது என்று கண்டிப்புசெய்வார்கள். கோவிலிலே சிரிக்கவும் விளையாடவும் விடப்பட்டு வேடிக்கைபார்த்து செல்வமாய் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் பிற்காலத்தில் மற்றவர்களால் கேவலமாகப் பேசப்பட்டு சிரித்து அவமதிக்கப்படும் நிலைமைக்கு வந்திருக்கிறதை நான் பார்த்திருக்கிறேன் என்று சொல்லி எச்சரித்து கோவிலில் ஒழுங்காயிராத பிள்ளைகள் மூன்று, நான்கு வயது குழந்தைகளாயிருந்தபோதிலும், அவர்களை வீட்டிற்கு வந்தவுடன் சிறு மிலாறினால் சிட்சித்து கண்டிப்பார்கள். தன் பிள்ளைகளை மட்டுமல்ல, கொழுந்தன் மைத்துனர் சம்மந்திமார் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் அவ்விதமாகக் கண்டிப்பார்கள். அவர்கள் அவ்விதம் கண்டிப்பதைப்பற்றி பிள்ளைகளின் பெற்றோர் சிபார்சுக்கு வராமல் அவர்கள் அப்படி கண்டிப்பது சிறுபிள்ளைகளின் ஆத்துமாவுக்கு நலமென்று கருதி இனி தங்கள் பிள்ளைகள் கோவிலில் விளையாடாவண்ணம் எச்சரித்துவிடுவார்கள்.

'என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கிஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கிஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப் பேச்சைப் பேசாமலிருந்து ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று' (ஏசா. 58 : 13-14) இதை படிக்கச்சொல்லி, அன்று வீண் கதைகள், சமாசாரபத்திரிகைகள் வாசிக்காதபடி தடுத்து, வீட்டிலுள்ள மற்றப் பிள்ளைகளையும் பெரியோரையும் 'வேதம் வாசித்தாயா? கோவிலில் என்ன பிரசங்கம் கேட்டாய்?' என்று வினவி புத்தி சொல்லுவார்கள். ஆடு, மாடு முதலிய மிருகங்கள் இரைதின்று மேய்ந்து திரும்பிய பின், தான் தின்ற இரையைத் திரும்பவும் அசைபோடுவதைப் பார்க்கிறோமே அதன்பின்தான் இரை அதனதன் குடலுக்குள் சேர்ந்து ஜீரணித்து பிரயோஜனப்படுகிறதாம், அதுபோல நாமும் பிரசங்கங்களைக் கேட்பதும் வேதம் வாசிப்பதும் மாத்திரம் போதாது அதைத் திரும்பவும் தியானித்து உணர்ந்து நமது ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் பிரயோஜனப்படும்படி நடந்துகொள்ளவேணும் என்பதைக் கவனிக்க ஏவு



வார்கள். காணிக்கை விஷயத்திலும் அதிக கவனமாயிருந்து பிள்ளைகளெல்லாருக்கும் காசுகொடுத்து ஒருவரும் வெறும் கையோடே கர்த்தருடைய சமுகமாகிய ஆலயத்தில் காணப்படக்கூடாதெனச் சொல்லி, 'தாராளமாய்க் கொடுக்கிறவன் ஏராளமாய்ப் பெறுவான்' என்று போதிப்பார்கள்.

பின் சற்று இளைப்பாறி சாயுங்கால ஆராதனைக்குப் போவார்கள். சிலர் இரண்டு வேளையும் கோவிலுக்குப்போவது அவசியமல்ல என்று நினைக்கிறார்கள். ஒருநாளில் ஒருமுறை போஜனமட்டும் போதுமென்று இருப்பாயோ என்பதைச் சிந்தித்துப்பார். இன்னும் அந்த வேதநாயகசாஸ்திரியாரவர்கள் வீட்டில் இரவு 8 மணி முதல் 10 மணி வரைக்கும் பஜனை பிரசங்கத்தையும் கவனமாக கவனித்திருந்து சொல்லப்படும் விஸ்தரிப்புகளை வியந்தும் தன் மனதில்பட்ட முக்கிய குறிப்புகளையும் சாஸ்திரியார் பாடல் உண்டுபண்ணின நோக்கங்களையும் பற்றி மகிழ்ச்சிகொள்ளுவார்கள். பின்பு இராவசனம் பகிர்ந்து புசித்து நித்திரைக்குப் போகுமுன் தனிஜெபம் சிலநேரப்பட உணர்வோடே செய்து படுக்கைக்குப் போவார்கள்.

'ஞாயிறில் கோவிலுக் கேகாமல் அதை
நாதனின் நாளென் றுணராமல்
ஞாயிறில் பேதிக்கு வாங்கிற நாளென்று
நாட்டின தாரடி ஞானப்பெண்ணே'

என்று சாஸ்திரக்கும்மியிலும்,

'கூட்டச் சபைகளுடன் கோவிலுக்குப் போகாமல்
வீட்டில் வாசிப்பனென்போர் வீணர் பராபரனே'

என்று பராபரக்கண்ணியிலும் சாஸ்திரியார் பாடிவைத்தார்.

ஓய்வுநாளை அற்பமாயெண்ணின ஒரு நடந்த சரித்திரத்தை இந்த அம்மாள் சொல்லி எச்சரிப்பார்கள். அதாவது தஞ்சாவூரில் சங். ஞானதீப சாஸ்திரியம்மாள் தன் இனத்திலுள்ள ஒரு அம்மாள் ஞாயிறில் கோவிலுக்கு ஏகாமல் வீட்டுவேலைகளைச் செய்துகொண்டிருப்பதைக் கவனித்து 'ஏனம்மா நீங்கள் கோவிலுக்கு வரவில்லை?' என்று வினவ, 'கத்தரிக்காய் வற்றலைக் காயவைத்துக் கவனியாவிட்டால் பூசணம் பூத்துக் கெட்டுப்போகுமல்லவா' என்றார்களாம். அதற்கு சாஸ்திரி அம்மாள் 'நீங்கள் ஞாயிறுநாளை ஆசரியாமல் கோவிலுக்கு வராமல் அசட்டைசெய்துவிட்டீர்களே' என்று சொல்ல, 'அதற்கென்ன, அடுத்தஞாயிறு போய்க்கொள்வேன், கோவிலுக் கென்ன' என்றார்களாம். அப்போ சாஸ்திரியம்மாள் மனத்தாங்கல் அடைந்து 'அடுத்த ஞாயிறு உன் கைக்குள்ளே இருக்கிறதோ?'

என்றார்களாம். அதற்கும் அந்த அம்மாள் அஞ்சாது மனம் துணிந்து, 'இந்த ஏழுநாளுக்குள் செத்தாபோகிறேன்!' என்று வீம்பு பேசினார்களாம். அந்தோ! பரிதாபம்! அந்தப்படி பேசின அம்மாள் விஷவியாதி கண்டு மறுஞாயிறு கோவில் நேரத்தில் பிணமாய்க் கிடந்தார்களாம். இது ஊராரால் பேசப்பட்டு எச்சரிப்புக்கிடமாயிற்று. 'வல்லமை பேசாதே நாளை வருவதறியாய்.' நாளை நம்முடைய நாளல்ல என்று உணர்ந்து இன்றைக்கே இரட்சிப்பை, நற்காரியங்களைத் தேடப் பிரயாசப்படவேணும்.

மேலும் இந்த அம்மாளுடைய பரோபகார சிந்தையையும் தரும சிந்தையையும் சற்று கவனிப்போம். தன் அயலார், வேலைக்காரர் பசியாயிருக்கும்போது தன் வீட்டிலுள்ள ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுப்பார்கள். சபையில் வியாதியஸ்தருக்கும் ஆதரவற்றவர்களுக்கும் தான் சமையல் செய்த உருசியான பதார்த்தங்களையும் ஊறுகாய், பலகாரம் முதலான பண்டங்களையும் தன் பிள்ளைகளிடத்தில் கொடுத்து அனுப்பும் வழக்கமுண்டு. வியாதியஸ்தர்கள் வீட்டுக்கு அடிக்கடி போய்ப் பார்த்து அவர்களுக்கு உதவிசெய்து அவர்களுடன் அன்பாகப் பேசி வருவார்கள். முதிர்வயதுள்ள கிருபையாச்சி என்ற ஓர் அம்மாள், 'நான் கோவிலுக்கு வர ஆசைப்படுகிறேன், தேவ நற்கருணை பெற்று நாளாகிறது, நடக்கப் பெலனில்லை' என்றார்கள். அப்போ இவர்கள் அந்த அம்மாளுக்கு வண்டி வாடகை கொடுத்து வண்டியில் ஏறி கோவிலுக்குப்போய் நற்கருணை பெற்று வரும்படியாய் சொன்னார்கள். அழுகிறவர்கள் துக்கப்படுகிறவர்களைக் கண்டால் தன் சொந்த துக்கமாகப்பாவித்து அனுதாபத்துடன் ஆறுதல் சொல்லுவார்கள். கர்த்தருடைய வசனத்தைச் சொல்லி தேற்றுவார்கள். கலியாணம் முதலிய சுபகாரியங்கள் நடக்கும் வீடுகளுக்கும் சென்று அங்குள்ளவர்களுடன் களித்து அவர்களை ஆசீர்வதித்து வருவார்கள். முதியோரைக் கண்டால் தானும் மரியாதை செய்து, பிள்ளைகளும் அவர்களுக்கு மரியாதை செய்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவும் பழக்குவார்கள். ஏழைகளைக் கண்டால் தனக்குள்ளதிலிருந்து இல்லை என்காமல் தருமம் கொடுப்பார்கள்.

C. L. S. PRESS, MADRAS—1921

# மாதர் போதினி

No. 280 மே 1921 No. 5

## 'MIRACLES OF FAITH IN CHINA'

## 'சீனாவில் விசுவாசத்தால் நடந்த அற்புதங்கள்'

### முகவுரை

1896-ம் வருஷம் அக்டோபர் மாதத்திலிருந்து 1912-ம் வருஷம் ஜனுவரி மாதம் வரை சீனாவில் கர்த்தராகிய இயேசுவுக்காக நான் செய்த ஊழியத்திலும் என் ஜீவியத்திலும் சம்பந்தப்பட்ட சில விஷயங்களைச் சுருக்கமாயும் சுலபமாய் விளங்கத்தக்கதாயும் இந்நூலில் எழுதலாமென்றிருக்கிறேன். இதிலடங்கிய சம்பவங்கள் சீனருக்குள் நான் சாட்சியாயிருந்த விஷயத்தில் கர்த்தர்தாமே எனக்கு வெளிப்படுத்திய தரிசனங்களினாலுண்டானவை. இந்த சாட்சி யோவான் 14 : 1, 13, 14-ம் வசனங்களில் இயேசுதாமே கொடுத்த வாக்குத்தத்தங்கள் பேரிலுள்ள விசுவாசத்துக் கடுத்தவை. கர்த்தருடைய பிள்ளைகள் அநேகருக்கு அதைரியமும் அவிசுவாசமுமுண்டாகும் இக்காலத்தில் இச்சரித்திரங்கள் சமயோசிதமான உதவியும் உற்சாகமுமுண்டாக்கும் வார்த்தைகளாய்ப் பயன்படுமென்று நம்புகிறேன்.

இதில் குறிக்கப்பட்ட சிலர் இவ்வுலகைவிட்டுப் பரலோகத்திலுள்ள தங்கள் எஜமானோடிருக்கப் போய்விட்டார்களென்றாலும், இன்னுமநேகர் வடசீனாவிலுள்ள ஷான்றங் நாட்டுச் சபைகளில் இருக்கிறார்கள். இந்நூலில் எழுதியுள்ள விஷயங்களில் ஒரு வார்த்தையாகிலும் தவறல்லவென்பதற்கு அவர்கள் சாட்சிகள்.

டிங் பாதிரியார் சீனாவின் தற்கால மூடி என்றழைக்கப்படுகிறார். சுவென் ஐயர் நான்கிங் பட்டணத்திலுள்ள ஓர் பெரிய சுதேச சபையின் குரு. இன்னும் அநேக ஊழியரும் போதகன்மாரும் மற்ற இடங்களிலிருந்து தேவனுடைய கிருபையைக் குறித்தும் அவருடைய வார்த்தையை உள்ளபடி நம்புவதாலுண்டாகும் வல்லமையையும் அன்பையும் குறித்தும் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

லூயிஸா வான் (Louisa Vaughan)

மேற்கண்ட நூலில் பின்வரும் 18 அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

1. என் முதல் வேதாகம வகுப்பு.
2. டிக் லேமை என்பவர்
3. மற்ற ஆறு பேர்.
4. விசுவாசத்தில் முதல் துணிபு.
5. ஓர் குடியானவனுடைய பத்தி லொருபாகம் (தசாம்ச பாகம்).
6. பின்வாங்கிப்போன சபை.
7. ஓர் சுவிசேஷகனது விழுதல்.
8. சாவு—கெட்ட குமாரனும், துன்பப்பட்டோனும்.
9. மோட்சத்தைக்கண்ட பெண்.
10. மழைக்கதை.
11. மழைக்கதையின் பிற்பாகம்.
12. பிசாசு பிடித்தவன்—சந்திர ரோகி.
13. தத்துப்புத்திரர்.
14. சீன நியாயவழக்கு.
15. என் சமையற்காரன் மறுரூப மாதல்.
16. கடற்கொள்ளைக்காரர் தீவு.
17. தேவர்கள் சமாதி.
18. தேவ ஈவு.

அற்புதங்கள் நடக்கும் காலம் கடந்துவிட்டதென்று சிலர் சொல்லுகிறார்களே. அவர்கள் எங்கும் நடந்துவரும் அற்புதங்களைக் காணாது எங்கு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்? அற்புதங்களா! ஆம், அற்புதங்களே. வேதத்தில் நாம் வாசிக்கும் விதமாயும் அவ்வித காரணங்களோடும் அற்புதங்கள் நடந்தேறுகின்றன. அதிசயமானவரும், ஆலோசனைக்கர்த்தரும், வல்லமையுள்ள தேவனும், நித்திய பிதாவும், சமாதானப் பிரபுவும், சதாகாலங்களிலுமுள்ள அற்புதக் காட்சியுமான இயேசுகிறிஸ்துவையன்றி பேரற்புதம், தற்காலத்தில் நடந்தேறுபவைகளைப் பார்க்க அதிசயமானவை வேதத்தில் கூறப்படவில்லை. அற்புதமென்றால் என்னவென்று A. G. ஹாக் பண்டிதர் (Professor A. G. Hogg) பின்வருமாறு கூறுகிறார்: 'அற்புதங்களும் இயற்கைக்கு மாறான செயல்களும் அதிசயத்தை விளைத்து புத்திக் கெட்டாதவையாகின்றன. மனுஷரால் கூடாதவை நடந்தேறுகையில் கடவுள் அவற்றைச் செய்தாரென்று நம்புகிறோம். அற்புதங்களை நடப்பிப்பதும், மனுஷருக்கு எட்டாதவை நடக்கும்படி நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதும் கிறிஸ்தவர்கள் கடமையும் சிலாக்கியமுமாய் இருக்கின்றன. என்றாலும் அற்புதம் நடப்பிப்பது சுலபமல்ல, அதிக கடினமானது. அது நம் முழு இருதயத்தோடும் தேடிக் கண்டுபிடிக்கும் கிருபையே.'

இந்த அத்தியாயங்களை எழுதினவர் விசுவாசத்தையும் ஜெபத்தையும் கைப்பிடித்து, கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவன் முயற்சிக்குமிடமாகிய அதிசயமான இடத்தில் வந்து சேருகிறார். கடவுள் தமது உண்மையான ஊழியரைக்கொண்டு மரித்தோரை எழுப்பி இன்னும் பல அதிசயச் செயல்களை நடப்பிக்கிறதைக் குறித்து சந்தேகங் கொள்வதேன்? கிறிஸ்தவர்கள் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்தால்



போதும். அப்போது கிறிஸ்து செய்த கிரியைகளைத் தாங்கள்
செய்வதோடு, அவற்றைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்
வார்கள். ஏனென்றால், கிறிஸ்து பிதாவினண்டை போய் அவரது
புதிதும் மனுஷபுத்திக்கெட்டாததுமான அன்பு, சந்தோஷம், சமா
தானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம்,
இச்சையடக்கம் முதலியவைகளைத் தாங்களே அனுபவித்துப் பிற
ருக்கும் அறிவிக்க விருப்பமுள்ளவர்களாய், காணாமற்போன உலகத்
தாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அவரோடு செல்கிறவர்மேல் அதி
சயங்களை நடப்பிக்கும் ஆவியானவரைப் பொழிந்தருளியிருக்கிறார்.
அப்படியே, கனம் வான் துரைசானியம்மாள் விசுவாசத்திற்கும்
ஜெபத்திற்குமுள்ள வல்லமையை நம்புகிறார்கள். ஜெபமும் விசு
வாசமும் இயேசுகிறிஸ்துவுக்கு கீழ்ப்படியும் வழிகள்தான். ஏனென்
றால், 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்
கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல
ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திலே
அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்த
யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு உபதேசம்பண்ணுங்கள்.
இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்க
ளுடனே கூட இருக்கிறேன்' என்று இயேசுவானவர் சொல்லுகிறார்.
யாராலுஞ் சரி, ஒவ்வொருவரும் இந்த சொந்த சாட்சியை
வாசித்து, தத்தம் விருப்பப்படி தேவசித்தத்திற்கேற்ற அவர் வசனத்
தில் சொல்லியபடி எத்தனித்து, தாங்களே இவ்வித அனுபவத்திற்கு
வர விரும்புகிறோம். இதில் சொல்லியிருக்கிறபடியே எல்லாரும்
செய்யவேண்டுமென்பதல்ல, இங்கு சொல்லியுள்ள முக்கிய காரி
யங்களான விசுவாசத்தையும் ஜெபத்தையும் பிரதானமாய்க் கொண்டு,
தினசரி நடபடிகளில், உலகிலுள்ள தீமையையும் குழப்பங்களையும்
தேவனுடைய வழிப்படி செவ்வைப்படுத்துவோமாக. ஒவ்வொரு
விஷயத்தையும் குறிப்பிட்டு அவற்றை ஒவ்வொன்றாய்த் திட்டமாய்
தேவனுக்கு விசுவாசத்தோடு தெரியப்படுத்தி, விசுவாச ஜெபசாலையில்
வைப்போமானால், தேவன் நமது பிதாவென்றும் தமது பிள்ளைகள்
தம்மை நோக்கிக் கூப்பிடுகையில் கேட்டு உத்தரவு கொடுக்கிறவ
ரென்றும் சீக்கிரத்தில் அறிந்துகொள்ளுவோம். ஒவ்வொருவருக்
கும் தத்தம் மனதில் பூரண தீர்மானம் வேண்டும். இழந்துபோன
உலகை இரட்சிப்பதில் இயேசுவோடு எங்கேயாகிலும் செல்ல மன
தாரக் கீழ்ப்படிந்து, சுவிசேஷத்தின் சத்தியத்தைப் பூரணமாய் நம்பி
அதிலுள்ளபடி செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டியது என்பதை
அறியவேண்டும். சுயநயம், தன்னிஷ்டம், ஜாதியபிமானம், ஆசை

இச்சை, கொள்கை, நாட்டபிமானம், வெளிநலம் பாராட்டல் முத்
லிய எல்லாப் பாவங்களையும் தேவனிடத்தில் அறிக்கையிட்டு, மனஸ்
தாபத்தோடு அவைகளைக் கட்டோடே விட்டுவிடவேண்டும். தேவ
னுடைய கட்டளையென்று தெரிந்ததொவ்வொன்றிலும் அவருக்குக்
கீழ்ப்படிய சித்தமும், அவர் நோக்கப்படியெல்லாம் செய்யப் பூரணமான
ஆசையும் உண்டாவென்று பார்க்கவேண்டும். இப்படிச் செய்தால்
அப்போஸ்தலர் நடபடியில் முதல் அப்போஸ்தலர் காலத்தில் நடந்த
படியே இப்போதும் நடக்கும். இவ்விதம் செய்வதில் என்ன கஷ்டம்
கஷ்டம் நேர்ந்தாலும் செய்ய ஆசையா? இப்படிப்பட்டவை நடக்க
நாம் அநேக காரியங்களை இழந்துவிடவேண்டும். ஆனால் கிடைப்
பதோ பெரிய லாபம் என்று பின்வரும் சம்பவங்களால் அறியலாம்.

ராபட் மக்குவில்கின் (Robert C. McQuilkin) என்பவர்
சொல்வது :—

சீனாவில் நடந்த சம்பவங்களை விளக்கும் பன்னிரண்டு கதைகள்
என்ற புஸ்தகத்தை வாங்கிப் படித்தவர், ஜெபத்தைப்பற்றி எழுதப்
பட்ட புஸ்தகங்களில் உண்மையாய் விசேஷித்ததொரு புஸ்தகத்தை
வாசிக்கும் பாக்கியம் கிடைத்ததாயறிவார். இப்போது அதோடு
ஆறு கதைகளைக் கூட்டி கிறிஸ்தவ சபையானது ஆவிக்கடுத்த விஷ
யத்தில் கலக்கத்தோடு மறுகிநிற்குஞ் சமயத்தில் அச்சிட்டு வெளிப்
படுத்துகிறோம்.

சபையில் சரியான முறையை எப்படி உபயோகிக்கலாமென்று
மிக்க கவலைகொள்ளும் இச்சமயத்தில், தேவனுடைய முறையான
ஜெபத்தையும் விசுவாசத்தையும் அனுசரித்தால் என்ன நடக்குமென்று
ஜெபத்தின் உட்கருத்தை விளக்கும் இச்சிறுபுஸ்தகம் காட்டுகிறது.
தற்காலத்தில் நடக்கும் திடுக்கிடத்தக்க அற்புதங்களைப்பற்றிக் கூறும்
இப்புஸ்தகத்தில் கடவுளையும் அவர் நடத்துதலையும் தெளிவாய்க்
காணலாம்.

புதிய ஏற்பாட்டில் முக்கியப்படுத்திக் காட்டியிருக்கும் விஷயத்
தையே இங்கும் வற்புறுத்தியிருக்கிறது—அதாவது உத்தரவு பெற்ற
ஜெபம், அல்லது விஷயங்களை மாற்றும் ஜெபம். உத்தரவு கிடைத்
தது உத்தரவு கிடைக்கவில்லையா? என்ற கேள்வி நமது காரியங்களை
தேவன் நடத்தும்படி செய்கிற ஜெபத்தின் தன்மையை விளக்கும்.
வேண்டியவைகளை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அப்
போஸ்தல வல்லமையினின்று எவ்வளவாய் ஓர் சபை விலகுமோ,
அவ்வளவாய் தத்துவசாஸ்திர மேலாய் ஜெபத்தைப்பற்றி அல[illegible]
[illegible] தர்க்கஞ்செய்து, அற்புதம் நடப்பிக்கும் ஜெபங்களைப்பற்றி[illegible]
சாட்சியை விளக்கிடும் புஸ்தகங்களை விருப்பத்தோடு ஏற்றுக்கொள்



ளும். பூர்வ பாதைகளில் உண்மையாயிருக்கும் ஆயிரக்கணக்கானவ
நேற்றும் இன்றும் என்றும் மாறுதவராய் நமக்குச் செய்வதுபோலவே
விசுவாசிக்கும் சீனக் கிறிஸ்தவர்களுக்கும் கிரியை நடப்பிக்
வல்லவரானவருக்கு இந்த சாட்சிகளின் நிமித்தம் நன்றிபாராட்டுவர்

## 'ART THOU HE THAT SHOULD COME'

Matthew 11 : 3

## வருகிறவர் நீர்தானாவென்று விசாரிக்க யோவான் ஸ்நானகன் தனது சீஷர்களை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடம் அனுப்பினான்

நாம் அனுதினமும், ஒவ்வொரு நிமிஷந் தவறாமல், நமத
சிந்தனைகள், வார்த்தைகள், செய்கைகளின் மூலமாக, நமக்குள்ளும்
நமக்குள்ளிருந்து மற்றவர்களுக் கெதிரிலும் வருகிறவர் கிறிஸ்த
இயேசுதானா வென்று, விசாரித்தறிவது இன்றியமையாதது. ம
மார்ந்த ஓர் குடிசையில் மகாப் பிரபு வசிப்பதரிது, மாபெரிய பளிங்கு
மாமாளிகை அதிக அசுத்தனுக்கு அகப்படுவது அரிதினுமரிது
இதைப்போலவே அசுத்த இருதயத்திலே பரிசுத்த கடவுள் வ
தமாார், அதிசுத்தமான இருதயத்திலே பொல்லாங்கன் புகுவதுமரிது
சுத்தமாகவாவது அசுத்தமாகவாவது புலப்படாத இருதயத்தையே
தேவன் அருவருக்கிறார். உலகத்தை இச்சித்து அதிலே சந்தோஷ
மில்லாமலும், பரத்தை யடையக்கருதியும் அதற்கேற்ற பிரயத்தனங்க
செய்யாமலும், ஐயோ! வெறும் நிலைமையிலுழலும் இந்த மந்த இரு
தயமோ, இம்மையிலும் மறுமையிலும் பாடுபடும் அதாவது வேதனை
யடையும். அசுத்தமான இருதயத்திற்கு இவ்வுலகத்திலே சுகமுண்
டோவென கேட்போமாகில், ஆம், பாவமாகிய மதுவை தாராளமாய்
பருகி அதினால் மயங்கி அல்லது வெறித்திருக்கும் இருதயம், சஞ்
லத்தையே சந்தோஷமாகக்கொண்டு அதாவது துன்பத்தையே இன்ப
மாகப் பாவித்து அதிலே இறுமாப்புறுவதால் அந்த வெறிகொண்ட
இருதயத்திற்கு, நமது இரட்சகர் கொடுக்குஞ் சந்தோஷமல்ல, [illegible]
உலகங் கொடுக்குஞ் சந்தோஷமுண்டெனப் பகரலாம். உலக
கொடுக்குஞ் சந்தோஷம் எவ்விதமானதென்கிலோ, நமையுள்ள
ஒருவன் தன் சரீரகத்தை இரத்தம் வடிய கீறிக்கொள்வது, தனக்கு
சுகமாக சற்று தோன்றினாலும், சடுதியிலே, அப்பா! ஐயா! என்

2

பல்லை நெறித்து தீயிடை விழுந்த புழுபோல் துடிதுடிப்பதற்கொப்பானதே யன்றி வேறில்லை.

ஐயோ சிற்றின்பம்! அற்பசுகமென்பது இதுதான். இம்மையிலே சிற்றின்பத்தை நாடி அதைத் தேடி அதின்மேல் தங்கள் சிந்தையைப் பிணைப்பவருக்கு மறுமையிலே மாபெருந் துன்பம் லபிக்கும் (லூக். 16 : 25). அப்படியானால் பேரின்பம், அல்லது மாருத சுகத்தைப் பெறுவதெது? இம்மையிலும் மறுமையிலும் பேரின்பம் அல்லது முடிவில்லாத சந்தோஷத்தைப் பெறக்கூடியது சுத்த இருதயமே. நமது ஆண்டவர் சுத்த இருதயத்தைப்பற்றி சொன்னதென்ன? 'இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்' என்றல்லவா? (மத். 5 : 8.) ஆம், சுத்த இருதயத்தார் மறுமையிலே தேவனை முகமுகமாய்த் தரிசிப்பதுமாத்திரமல்ல, இம்மையிலே தங்கள் மனக்கண்களினால் தேவனைக் காண்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படி இவர்கள் இடைவிடாமல் தேவனை தரிசிப்பதினாலே, ஜீவமார்க்கத்தை தேவன் இவர்களுக்குப் போதிப்பதுமல்லாமல், தமது சமுகத்திலுள்ள பரிபூரண ஆனந்தத்தையும் தமது வலதுபாரிசத்திலுள்ள நித்திய பேரின்பத்தையுமளித்து களிக்கச்செய்கிறார் (சங்கீதம் 16 : 11).

நம்மிடத்தில் சுத்த இருதயமுண்டா?

நம்முடைய இருதயம் சுத்தமாகவேண்டுமானால், 'என் எண்ணத்திலும், எனது வார்த்தையிலும், என்னுடைய செய்கையிலும் வருகிறவர், இயேசுவே, நீர்தானா?' என்று நம்மைநாமே கேட்டறியவேண்டும். சிந்தனைகள் எப்படியோ அப்படியே வார்த்தைகளுஞ் செய்கைகளுமாம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்குள்ளும் நம்மூலமாக பிறருக்கெதிரிலும் வருகிறவராக இருக்க விரும்புவோமானால், யோவான்ஸ்நானகன், 'மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்' (லூக். 3 : 8) என்று சொல்லியவண்ணம், நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கேற்ற கனி கொடுக்கவேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கேற்ற கனி மாம்சத்திற்குரியதாயிராமல் ஆவிக்கேற்ற கனியாயிருக்கிறது. ஆவியின் கனியோ அன்பு (கலாத். 5 : 22).

நமக்குள்ள அன்பு எவ்வளவு?

அன்பிலா எண்ணங்கள் நமது உள்ளத்திலுதிப்பது கர்த்தருக்கு சந்தோஷமும் பிரியமுமல்லவே. ஆகவே நமக்குள்ளும் நமக்குள்ளிருந்து புறமதஸ்தருக்கு முன்னேயும் கர்த்தர் வருகிறவராயிருக்கவேண்டுமானால், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்தி (2 கொரி. 10 : 5) நல்லெண்ணங்



களை மாத்திரம் எண்ண முயற்சிப்பது அவசியம். அன்பிலா எண்
ணங்கள் உள்ளத்தில் உலாவித்திரிவதால், அன்பிலா வார்த்தைகள்,
அதாவது பலனற்ற வார்த்தைகள் உடனுக்குடன் வாயைவிட்டு விரை
வாக வெளியே ஓடிவருவதை உணர்ந்திருக்கிறவர் அனேகருண்டு.
ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்
தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கவேண்டியவர்களிடத்தி
லும் அன்பிலா வார்த்தைகள் இடை இடையே நடமாடுமாயின், நமக்
குள்ளாவது நமக்குள்ளிருந்து பிறர்முன்னாவது கர்த்தர் வருகிறவரா
யிருப்பாரா? மனிதரின் நாவோ மகா தீயதும் சாவுக்கேதுவான
விஷம் அடங்கியதும் அடக்கக்கூடாததுமானதென்று கர்த்தர் அறிந்
திருந்ததினாலல்லோ (யாக்கோபு 3 : 8) வீணான வார்த்தைகள் யாவும்
நியாயத்தீர்ப்பிலே கேட்கப்படும் என்று எழுதிவைத்திருக்கிறார்
(மத்தேயு 12 : 36). ஆகையால் கெட்டவார்த்தை யாதொன்றும் வாயி
லிருந்து புறப்படப்பண்ணாமல் பக்திவிருத்திக் கேதுவான நல்ல
வார்த்தை உண்டானால் அதையே, கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன
முண்டாகப் பேசி (எபேசியர் 4 : 29) வாயைவிட்டு வெளிவரும் ஒவ்
வொரு வார்த்தையிலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வருகிறவ
ராயிருக்கிறாரவெனப் பாராதார் தேவனுடைய ராஜ்யத்தில் சேரா
தாரல்லோ. உதட்டோடு உள்ளமும், உள்ளத்தோடு உதடும் சேர்ந்து
புறப்படாத எந்த வார்த்தையிலும் கர்த்தர் வருகிறவராயிரார். உள்ளத்
தில் உண்மையிருக்க விரும்புகிற தேவன் மனிதருடைய இருதயங்
களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிய வல்லவராயிருக்கிறா
ரென்பதை மறந்துபோனவர்கள் எத்தனைபேர்! வெளியரங்கமாகாத
அந்தரங்கமுமில்லை, வெளிக்குவராத மறைபொருளுமில்லை யென
நம்மை எச்சரித்திருக்கிற தேவன், அந்தரங்கத்தில் செய்யப்படுவதை
பகிரங்கமாகவும் அறையிற் செய்யப்படுவதை கூரையின் மேலும்
கொண்டுவருவார் என்பதை மறக்கலாமோ? ஆகவே நன்மையான
வைகளை யோசித்து, நன்மையானவைகளைப் பேசி, நன்மையானவை
களை மாத்திரம் செய்ய எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம்.
கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொருவரிடத்தி
லும் அவருக்கேற்ற கிரியை யுண்டாயிருக்குமென்கிற நிச்சயத்தினா
லல்லோ, கிரியையில்லாத விசுவாசம் செத்ததென்று அதாவது
விசுவாசமல்லவென்று பரிசுத்த யாக்கோபு எழுதியிருக்கிறார். ஆன
படியினால், அஞ்ஞானிகளைப்போல் நடவாமல் ஞானமுள்ளவர்களைப்
போல் கவனமாய் நடந்துகொண்டு, நாட்கள் பொல்லாதவைகளான
தால், நாட்களைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளும்படி (எபேசியர்
5 : 16) ஒருவரோடொருவர் ஏக சிந்தையாயிருந்து மேட்டிமை

யானவைகளை சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்கி (ரோமர் 12: 16) தீமைக்குத்தீமை செய்யாமல் மனுஷர்களுக்கு முன்பாக யோக்கியமானவைகளைச் செய்து (ரோமர் 12: 17) கூடுமானால் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருந்து (ரோமர் 12: 18) நம்மை அழைத்தவர் பரிசுத்தமாய் இருக்கிறதுபோல நாமும் நம்முடைய நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தமாயிருந்தால் (பேதுரு 1: 15) நமது ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளியபடி, நாம் உலகத்திற்கு வெளிச்சமாயும் (மத்தேயு 5: 14) பரிசுத்த பவுல் எழுதியிருக்கிறபடி கிறிஸ்துவின் நிருபங்களாகவும் இருப்போமென் பதற்கையமில்லை (2 கொரி. 3: 2). இப்படியேயிருக்க, நமது வல்ல பராபரனை மீட்பர் இயேசுகிறிஸ்துவின் மூலமாக வேண்டிக் கொள்ளுவோமாக.

Y. M. S.

## A MODEL LESSON FOR THE BIBLE WOMEN'S WORK

## எப்படி இந்துப் பெண்களுக்கு வேதோபதேசம் செய்வித்தல்

### மலைப் பிரசங்க தொடர்ச்சி

| விஷயம் | போதனு முறை |
|---|---|
| 14-ம் பாடம். மத். 9: 20-22; மாற். 5: 25-34.<br>பேர்போன பண்டிதரும் பெரும்பாட்டு வியாதிக்காரியும். 'அருமைநாதரின் அங்கவஸ்திரம் அநேக வருஷத்துப் பிணிநீக்கும் அருமருந்து' வேத சுலோகம்.<br>1. ஸ்திரீயைப்பற்றிய பாடம்<br>பெரும்பாடு பெண்களுக்கு உண்டாகும் வியாதிகளில் மிகக் கொடியது. தினம் சாவை நினைப்பூட்டும் வியாதியால் 12 வருஷம் தன் சாவை எதிர்பார்த்திருந்த ஸ்திரீயின் சரித்திரம். | மாற்கு சுவிசேஷகன் சொல்லுவதை திட்டமாய்ப் படித்து கதை ரூபமாய் பாடத்தைச் சொல். பெரும்பாடு பயங்கரமான வியாதி. இது எப்படி உண்டாகும் என்று விசாரித்து அப்படிப் பட்ட பெண்கள் உண்டா என்று தேடிப்பிடித்து அவர்களுக்கும் இச்செய்தியைச் சொல்லவேண்டும். |





| விஷயம் | போதனு முறை |
|---|---|
| 12 வருஷம் வியாதி தீரும்படி திரளான திரவியத்தை விரயம் செய்தும் குணமடையாத ஒரு ஸ்திரீ. அவளிடம் இருந்த அருமையான குணம் சொஸ்தமாவேன் என்ற மனத்திடன். | |
| விசுவாசத்தாலுண்டான கிரியை:<br>(1) திட்டானவளாய்இருந்தும் கூட்டத்திற்குள் நுழைந்து வந்தாள். வச. 28.<br>(2) பெண் என்று கூச்சப்பட்டாலும் பின் பக்கமாய் வந்துதொட்டாள். வ. 28.<br>(3) அவரிடம் தன் காரியத்தை சொல்லவெட்கப்பட்டாலும் வஸ்திரத்தை தொட்டாள்.<br>(4) ஆண்டவரிடம் அறிக்கையிட உடனே சுகம் பெற்றாள். வச. 29.<br>(5) பயமிருந்தாலும் ஆண்டவர் கூப்பிட்டவுடனே தன்னை எல்லாருக்கும் காட்டினாள். வ. 33. | இந்த ஸ்திரீயோ வீட்டையும் ஜனக்கூட்டத்தையும்விட்டு புறம் பாக்கப்பட்டாள். அப்படிப்பட்டவர்களை நேசிப்பதே கிறிஸ்துவின் சிந்தை என்றும், இப்படி கைவிடப்பட்ட வியாதிக்காரர், குஷ்டரோகிகள், குருடர், ஊமையர் முதலியவர்களுக்காக மிஷன்கள் ஏற்படுத்தி யிருக்கும் பாடசாலைகள், வைத்தியசாலைகள், கைத்தொழிற்சாலைகள் முதலியவற்றை தெளிவாய் சொல்லி இவர்களுக்கு கிறிஸ்தவர்கள் செய்யும் உதவியை சொல்லவும்.<br>வசனம் 26. அநேக வைத்தியர்களால் . . . குணமடையவில்லை. தற்காலம் வைத்தியர்களுக்கு திரண்ட பணங்களை கொடுத்து வியாதியை அதிகமாக்கி சாகும் தருணத்தில் ஆஸ்பத்திரியைத் தேடி குணமடையாமல் சாகிறதை விவரித்துச் சொல்லவும். |
| விசுவாசத்திற்கு காரணம்:<br>இயேசுவைக்குறித்து கேள்விப் பட்டாள் (வச. 27). எப்படி?<br>(1) கிறிஸ்து பரம வைத்தியர்,<br>(2) கிறிஸ்து எல்லாருக்கும் சுகம் கொடுக்கிறார்,<br>(3) கிறிஸ்து பெண்களையும் தள்ளாமல் நேசிக்கிறார், | மனுஷர்கள் அல்லது வருத்தப் படுகிற பெண்கள் சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அடையும் நன்மையைச் சொல்லவும். கிறிஸ்துவைப்பற்றிகேள்விப்பட்டிருந்தால் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கவும். |

| விஷயம் | போதனை முறை |
|---|---|
| (4) கிறிஸ்து மகா அன்பர் என்று பேதுருவின் மாமி, குருடன், குஷ்டரோகி, பிசாசு பிடித்த மனுஷர் இவர்களுக்கு நடந்தவிசேஷங்கள்மூலமாய் விசுவாசம் வளர்ந்தது. | |
| 2. வைத்தியரைப்பற்றியபாடம்.<br>(1) தன் வல்லமையை அறிந்தார். வ. 28.<br>(2) கூட்டத்தில் அவளை தேடினார்.<br>(3) தொட்டது யார் என்று கேட்டார்.<br>(4) சுற்றிலும்பார்த்தார். வ. 32.<br>(5) மகளே என்றார். வ. 34.<br>(6) சமாதானத்துடன் போ என்றார்.<br>(7) ரட்சிப்புடன் போ என்றார்.<br>(8) சுகத்துடன் போ என்ற அன்பின் கட்டளையிட்டார். | ஒரு வைத்தியன் வியாதிக்காரனுக்கு என்ன செய்வான், அதிலும் பெண்களுக்கு என்ன செய்யக்கூடும் என்பதைக்கேட்டு அல்லது சொல்லி கிறிஸ்து வைத்தியரைப் பற்றியதைச் சொல்லவும்.<br>தற்காலத்தில் பெரிய பட்டணங்களில் கட்டப்பட்டிருக்கும் ஸ்திரீகள் ஆஸ்பத்திரிகளும், அவைகளைக் கட்டி நடத்தும் லேடி டாக்டர்களும், அவர்களின் அன்பான செய்கைகளும், இயேசுகிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக்கொண்டதால் உண்டான நன்மை என்று விவரித்துச் சொல்லவும். |
| பழமொழி:—'வல்லமையுள்ள தேவனுக்கு வஸ்திரமும் மருந்து.' | |
| வேதம். அவர் நமது துக்கங்களை (வியாதிகளை) சுமந்தார். ஏசா. 53 : 4.<br>3. போதனை.<br>கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்டாள். எப்படி?<br>(1) பாவங்களை நீக்கும் வல்லமையுடையவர்.<br>(2) வருத்தப் படுகிறவர்களுக்கு உதவிசெய்கிறவர்.<br>(3) ஏழைகளை நேசிக்கும்குணமுடையவர். | பாடத்தில் சுட்டிக்காட்டப்படும் வசனங்களை பலமாய் மனதில் பதிப்பிக்க படி. கிறிஸ்துவின் இரட்சிப்பு பெண்கள் விஷயத்தில் எப்படியிருந்தது என்பதை சமாரியாஸ்திரீ, நாயீனூர் விதவை, அவருக்கு ஊழியம் செய்த மரியாள், சலோமே, மகதலேனா மரியாள் இவர்களின் சரித்திரத்தை கதைரூபமாகச் சொல்லி இவர்களை இரட்சிக்க கிறிஸ்து எப்படிக் கவலைகொண்டாரென்று காட்டவும். |



| விஷயம் | போதனை முறை |
|---|---|
| சுற்றிப் பார்த்தார், யாரை?<br>(1) தம்மிடம் வந்த பாவியை.<br>(2) வல்லமையால் பிடிபட்டவர்களை.<br>(3) கூட்டத்தில் மறைந்த ஒரு பெண்ணை. | |
| உணர்த்தல். அநேகர் கிறிஸ்துவை சூழ்ந்துகொண்டிருந்தாலும் தொட்டது ஒரே ஒரு பெண் மாத்திரம். சீகார் ஊரில் அநேகம் பெண்கள் இருந்தாலும் கிறிஸ்துவை அறிந்தவள் பெரிய பாவி. சிலுவையைச் சுற்றி திரளான ஜனங்கள் காட்சியைக் கண்டாலும் இரட்சிக்கப்பட்டவன் ஒரே ஒரு கள்ளன். கிறிஸ்து எல்லா பாவிகளையும் இரட்சிக்க வந்தார், ஆனால் இரட்சிக்கப்படுகிறவர்கள் விசுவாசிக்கிறவர்கள் மாத்திரம். | மெய்யாய் தன் பாவங்களையும் நிலமையையும், இரட்சிப்பையும் விரும்பும் எந்த பாவியையும் இரட்சிக்க கிறிஸ்து மிகுந்த வல்லமையும் அன்பும் உடையவராயிருக்கிறார் என்று உணர்த்தவும். |
| மனனவசனம் 27. நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்.<br>(1) பாட்டு.<br>ஏராளமான கூட்டத்தார் சூழ<br>ஓர் ஸ்திரீயும் வந்தனள்<br>போன்பர் கிறிஸ்தின் வஸ்திரம்தொட<br>ஆரோக்யம் பெற்றனள்.<br>உன் மீட்பர் வஸ்திரம் நீயும்<br>இன்றுவலாய்த் தொட்டால்<br>ஆரோக்யம் ஜீவன் பெறுவாய்<br>போன்பர் சக்தியால்.<br>(2) பாட்டு 165, பெ. கீர்.<br>சரணம்<br>பாரம் சுமந்து தவிப்பவரே—என<br>டாதென் விரைந்திருப்பவரே<br>ஆறுதல் தேறுதல் அளிக்கிறேன் என்று<br>அன்புடன் சொல்ல யான் பின்னும் தடையேது—<br>துக்கப்பட்டோரே துரிதமாய் வாரும்<br>பக்குவம் செய்வேனே—ஓ, பாவி<br>என்னிடம் வா மனதில்லையா? | கிறிஸ்துவின் அவயவங்களும் உடுப்பும் இரட்சிக்கும் வல்லமையால் நிறைந்தது என்பதை குஷ்டரோகியைத் தொட்டார், குருடனைத் தொட்டார், ஊமை செவிடன் காதில் விரலை வைத்தார் என்று விளக்கிக் காட்டவும்.<br>பாட்டை இனிமையாய்ப் பாடவும். பாட்டை வீட்டில் பாடி ஆயத்தம்செய்து, மற்றப் பாட்டுகளையும் பாடி விளக்கவும்.<br>[illegible]<br>(இன்னும் வரும்.) |

# A WORD TO MOTHERS

## தாய்மாருக்கு ஓர் செய்தி

நாம் ஆகாரைப்பற்றி சற்று கவனிப்போம். அவள் ஆபிரகாமுடைய அடிமைப்பெண். எகிப்து தேசத்தாள். சாராளுக்குப் பணிவிடை செய்துவந்தாள். ஆபிரகாமும் சாராளும் எகிப்திலிருந்து வரும்போது அவளைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாம். சாராள் தனக்குப் பிள்ளை இல்லாதிருந்ததினால் ஆபிரகாமுக்கு ஆகார் மூலமாயாவது சந்ததி இருக்கட்டும் என்று கருதி அவளை ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுத்தாள். இந்த அடிமைப்பெண்ணாகிய ஆகார் தனக்குப் பிள்ளை இருக்கிறதாகக் கண்டவுடனே தன் எஜமாட்டியாகிய சாராளை நிந்திக்கவும் அற்பமாக எண்ணவும் ஆரம்பித்தாள். சாராள் இதை அறிந்து ஆகாரைச் சற்று கடூரமாய் நடத்தினாள். இதுகாரணம்பற்றி ஆகார் ஓடிப்போனாள். இவள் தன் எஜமாட்டி அனுமதியின்றி வீட்டைவிட்டுப் போயிருக்கக்கூடாது. இவள் தன் சொந்த தேசமாகிய எகிப்திற்குப் போகலாமென்று பிரயாணப்பட்டாள். என்றாலும் கர்த்தருடைய தூதன் அவளை விடவில்லை. அவளை வழியிலே சந்தித்து அவளுக்கு ஆறுதல்சொல்லி அவளுக்குப் பின்னுக்கு வரப்போகிற ஆசீர்வாதத்தைக் காட்டி தன் வேலைக்குத் திரும்பிப்போகும்படியாக செய்தார்.

ஆகார் ஏன் ஓடும்படியாக நேர்ந்தது? இது அவளுக்கு உண்டான மேட்டிமையால்தான். அவள் தாழ்த்தப்பட்டிருக்கும்போது தன் எஜமாட்டியை மதித்து தான் உயர்த்தப்பட்டிருக்கும்போது தன் எஜமாட்டியை அவமதித்தாள். இதேபிரகாரமாக நாமும் வறுமையிலும் கஷ்டத்திலும் இருக்கும்போது கடவுளைத் தேடியும், இன்பத்திலும் செல்வத்திலும் ஐசுவரியத்திலும் இருக்கும்போது கடவுளை அசட்டைபண்ணி மறந்தும் போகிறோம்.

நம்முடைய க்ஷேமம் தேவனை மறக்கும்படியாகச் செய்கிறது, ஆனால் நம்முடைய துன்பமோ நம்மை அவரோடு நெருங்கி ஜீவிக்கும்படியாக ஏவுகிறது. நமக்குக் கஷ்டம் நேரிடும்போது சிலர் அது நம்முடைய விதி என்று சொல்லுகிறார்கள். ஆனால் தேவன் நம்மை அந்தத் துன்பத்தின்வழியாய் நடத்தி நன்மையான ஏதோ ஒன்றை வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார். நாம் செய்த குற்றத்திற்காக அந்தத் தண்டனை இருக்குமாயின் அந்தக்குற்றத்தை உணர்ந்து அறிக்கையிடுமளவும் பொறுமையோடே காத்திருந்து பிற்பாடு நம்முடைய துன்பத்திற்கு ஈடாக இன்பத்தால் முடிசூட்டுவார்.



தேவன் எப்போதும் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். கார் ஓடிப்போனாலும் அங்கேயும் ஆண்டவர் அவளைச் சந்தித்தார். ம்மைச்சுற்றிலும் சோதனைகளும் பாவங்களும் நிறைந்திருக்கின்றன. தவன் நாம் பண்ணும் பிரயாணமாகிய நம்முடைய ஜீவியத்திலே பாவத்தில் விழாதபடிக்கு சரியான வழியை நமக்குக் காண்பித்து வருகிறார். அப்படி தேவன் செய்யாவிடில் நாம் எத்தனை பாவம் செய்து எத்தனை தண்டனைக்கு ஆளாவோமோ தெரியாது. இது தேவன் நம்மை எப்போதும் கவனித்துக்கொண்டிருக்கிறதால் நமக்கு இருக்கும் சலாக்கியம்.

நீர் என்னைக் காண்கிற தேவன். நீர் என்னைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ, தைரியம் சொல்லவோ, இன்பம் அளிக்கவோ என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்.

நான் உம்மைவிட்டு அதிவேகமாக ஓடினாலும் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர். ஏன்? என்னை மறுபடியும் உம்மண்டை அழைத்துக்கொண்டுவரும்படியாக அல்லவோ. ஒரு தாயார் தொட்டிலில் தூங்கும் தன் பிள்ளையை ஏன் கவனித்துக்கொண்டிருக்கிறாள்? நடக்கப்பழகும் பிள்ளையினிடம் ஏன் நின்றுகொண்டிருக்கிறாள்? நெருப்பினிடம் போகாதபடி ஏன் தடுக்கிறாள்? தாய்மாரே, நீங்களே இதற்கு பதில் சொல்லுங்கள்.

ஒரு பையன் தன் தகப்பன் கையைப் பிடித்து நடக்கும்போது அவனுக்கு பயமே இல்லை. என்ன பயங்கரமான இடம் போனாலும் பயமே காணப்படவில்லை. ஏன்? என் தகப்பனார் என்னோடு இருக்கிறார் என்ற தைரியம் அவனுக்கு உண்டு. மேட்டிலே கஷ்டப்பட்டு ஏறினாலும் பள்ளத்திலே சுளுவு உண்டு. ஆனபடியால் நம்முடைய தகப்பனார் நம்மோடு இருக்கும்போது நமக்கு பயமில்லை. பரம ரட்சகர் நம்மோடிருந்தால் எல்லாவற்றையும் நன்மையான வழியிலே நடத்துவார். நீர் என்னைக் காண்கிற தேவன்.

ஆகாரைப்பற்றி இன்னும் சற்று தியானிப்போம். முன் ஒரு தடவை தேவன் அவளை வனாந்தரத்தில் சந்தித்து அவள் செய்த குற்றத்தை உணர்த்தி ஆபிரகாமின் வீட்டிற்கு திரும்ப அனுப்பி வைத்தார். இப்போது மறுபடியும் பதினைந்து அல்லது பதினாறு வருஷங்களுக்குப் பிற்பாடு அவளைச் சந்திக்கிறார்.

தேவதூதனால் ஆகாருக்கு வாக்களிக்கப்பட்ட குமாரன் வளர்ந்து வாலிபனானான். தேவன் சாராளுக்கும் அவளுடைய முதிர்வயதிலே ஒரு குமாரனைக் கடாட்சித்தார். இப்பொழுது சாராளுக்கும் ஆகாருக்கும் மனவருத்தங்கள் உண்டாயிற்று. ஆகாருடைய குமாரன் இஸ்மவேலுக்கும் சாராளுடைய குமாரன் ஈசாக்குக்கும் கூடி விளையாடி

ஒற்றுமையாய் இருக்கமுடியவில்லை. ஆனபடியால் சாராளுடைய விருப்பத்தினாலும் தேவ அனுமதியினாலும் ஆபிரகாம் ஆகாரையும் இஸ்மவேலையும் அனுப்பிவைத்துவிட்டான். இப்போதும் ஆகார் வனாந்தரத்திலே சுற்றித்திரிகிறாள். இவள் தன் குமாரனை சரியான வளர்ப்பிலே வளர்க்காமல் அவன் மனம்போன போக்கிலே விட்டு விட்டபடியால் இஸ்மவேல் ஈசாக்கைப் பரியாசம்பண்ண ஆரம்பித்தான். தாயுடைய கெட்ட வளர்ப்பினாலும் பிள்ளையுடைய துர்க்குணத்தினாலும் தாயும் பிள்ளையுமாக சுகத்தைவிட்டு துக்கத்திற்கும் வீட்டைவிட்டு காட்டிற்கும் செல்ல நேரிட்டது. பிரியமானவர்களே, இந்தக்காரியம் தாய்மாராகிய நமக்கு அதிக எச்சரிப்பைக் கொடுக்கிறதல்லவா?

ஆகார் வனாந்தரத்திற்குள் செல்லுகிறாள். அவள் கொண்டுபோன தண்ணீர் செலவாகிவிட்டது. பக்கத்திலே தண்ணீர் எங்கும் கிடையாது. வெயில் அகோரத்தினாலும் தாகத்தினாலும் இஸ்மவேல் படுகிற பாடு கொஞ்சமல்ல. இத்துயரத்தைப் பார்க்கமுடியாமல் ஆகார் அவனை ஒரு மரத்து நிழலில் கிடத்திவிட்டு தூரத்தில் போய் கதறி அழுகிறாள். பக்கத்தில் ஒருவரும் கிடையாது. என்றாலும் தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு, 'ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே. பிள்ளை இருக்கும் இடத்தில் தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார்' என்றான். உடனே அவளுடைய கண்கள் திறக்கப்பட்டன. ஒரு துரவைக் கண்டு தன் குமாரனுக்கு தண்ணீர் மொண்டு கொடுத்து துருத்தியிலும் நிரப்பி வைத்துக்கொண்டாள். ஆகவே இப்போதும் தேவன் ஆகாரை துன்பத்திலிருந்து மீட்டு அனுப்பினார். பின்பு அவளுக்கு தைரியம்சொல்லி, இஸ்மவேலை அதிகமாக ஆசீர்வதித்து, பெரிய ஜாதியாக்குவேன் என்று வாக்களித்து அனுப்பினார்.

நாமும் கஷ்டத்திலும் இடுக்கத்திலும் இருக்கும்போது உண்மையாய் அவரைத் தேடினால் அவர் உதவிசெய்ய வல்லவராய் இருக்கிறார். அவர், 'ஓ பரிசுத்தவான்களே, ஓ ஞானவான்களே, என்னிடத்தில் வாருங்கள்' என்று ஒருபோதும் அழைக்கிறதில்லை. ஆனால் அவர், 'ஓ தாகமாயிருக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள்' என்று விரும்பி அழைக்கிறார். அவர் கொடுக்கும் தண்ணீரைப் பானம்பண்ணினால் திரும்பத் தாகம் அடையார்கள்.

பிள்ளையின் சத்தத்தைக் கேட்டு ஆகாருக்குத் தேவன் இரங்கினார். பிள்ளைகள் நமக்கு ஆசீர்வாதமாய் இருக்கிறார்கள். ஆதலால் பிள்ளைகளைக் கர்த்தருக்கு பயப்படும் பயத்திலே வளர்ப்போமேயாயின் அதிக நன்மையாய் இருக்கும்.



தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். இதை நாம் தியானிக்கும்போது, பிள்ளை அதாவது இஸ்மவேல், சுவாமியுடைய மனம் இரங்கத்தக்கதாகக் கூப்பிட்டிருக்கவேண்டுமென்று காணப்படுகிறது. இது ஜெபமாய் இருக்கலாம். இஸ்மவேல் சத்தமாக ஜெபிக்க சக்தியற்றிருந்தாலும் தன்னுடைய இருதயத்திலாவது அல்லது மெல்லிய குரலாயாவது ஜெபித்திருக்கவேண்டும். இதை அவனுடைய பக்தியுள்ள தகப்பன் ஆபிரகாமிடமிருந்து படித்திருக்கவேண்டும்.

ஆகார் அந்தத் துரவின் தண்ணீரை மொண்டு தன் பிள்ளைக்குக் கொடுத்து தாகத்தைத் தீர்த்தாள். அதே பிரகாரமாக ஆண்டவர் நமக்கும் ஒரு துரவை கன்மலையாகிய இயேசுவண்டையில் வைத்திருக்கிறார்.

'இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்' என்று நமது அருமைரட்சகர் சமாரிய ஸ்திரீக்கு திருவாய் மலர்ந்தருளினார். இதேபிரகாரம் நம்மில் ஒவ்வொருவருக்கும் சொல்லுகிறார் என்பதற்குச் சந்தேகமில்லை.

(இன்னும் வரும்)

Grace Paul,
Rob Roy.

## STAMPS FOR LETTERS AND POST CARDS

## கடிதங்களுக்கும் தபால் கார்டுகளுக்கும் ஒட்டவேண்டிய ஸ்டாம்புகள்

## NEW RULES

## புதிய சட்டங்கள்

உங்களுடைய அயலாரையும் தயவுசெய்து எச்சரிக்கவும்

1921-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ம் தேதி முதற்கொண்டு அதன் பிற்பாடும், இந்தியாவில், அடியில்கண்ட ஸ்டாம்புகள் தபாலுக்கு ஒட்டவேண்டியவையாகும்:—

தபால் கார்டுகள் முன்போலவே ... ... ...

### கடிதங்கள்

| | |
|---|---|
| தோலா இடைக்கு மேற்படாத கடிதத்திற்கு ... | ½ அணா |
| தோலாவுக்குமேல் 1 தோலாவுக்கு உட்பட்ட கடிதத்திற்கு ... ... ... ... ... | ¾ அணா. |
| 1 தோலா இடைக்குமேல் 2½ தோலா வரைக்கும் உள்ள கடிதத்திற்கு ... ... ... ... | 1 அணா. |
| இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 2½ தோலாவுக்காவது அதன் பாகத்திற்காவது ... ... ... | 1 அணா. |

### பத்திரிகைகள்

| | |
|---|---|
| 3 தோலா இடைக்கு மேற்படாதவைகளுக்கு ... | ¼ அணா. |
| 3 தோலாவுக்கு மேற்பட்டு 20 தோலா வரைக்கும் உள்ள பத்திரிகைகளுக்கு ... ... ... | ½ அணா. |
| 20 தோலாவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலா இடைக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ ... | ½ அணா. |

### புஸ்தகங்களும் மாதிரி கட்டுகளும்

ஒவ்வொரு ஐந்து தோலா இடைக்கும் அதன் பாகத்திற்கும் ½ அணா.

### மணி ஆர்டர்கள்

அதே தேதிமுதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டபடி கமிஷன் சார்ஜ் வாங்கப்படும்.

| | |
|---|---|
| 10 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு ... ... | 2 அணா. |
| 10 ரூபாய்க்குமேல் 25 ரூபாய்வரைக்கும் ... ... | 4 அணா. |

25 ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி ரூபாய் 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய் மேற்படாவிட்டால் 2 அணாவும், சார்ஜ் செய்யப்படும்.

### வி. பீ. மூல்யமாய் அனுப்பப்பட்ட சாமான்கள்

அதே தேதிமுதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்ட விதம் வி. பீ. சாமான்களின் தொகையின்மேல், சார்ஜ்செய்யப்படும்.

| | |
|---|---|
| வி. பீ. சாமான்களின் பேரில் வசூல் செய்யவேண்டிய பணம் 10 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ... | 2 அணா |
| 10 ரூபாய்க்கு மேற்பட்டு 25 ரூபாய் வரைக்குமிருந்தால் | 4 அணா |

25 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் 2 அணாவும் சார்ஜ் செய்யப்படும்.

1 JUN 1921

# மாதர் போதினி

No. 281 ஜூன் 1921 No. 6

## MIRACLES OF FAITH IN CHINA

## சீனாவில் விசுவாசத்தால் நடந்த அற்புதங்கள்

(தொடர்ச்சி)

இங்கு கூறப்படும் சாட்சி அநேகருக்கு பிரயோஜனமாயிருக்குமென்ற நம்பிக்கையோடே எழுதப்பட்டிருக்கிறது.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் பெற்று, இன்னும் தேவனுடைய வலதுபாரிசத்தில் மகிமையாய் வீற்றிருந்து, அவ்வல்லமையைத் தமதடியாருக்கு அருளும் நமது கர்த்தராகிய இயேசுவுக்குள் வெற்றியடைவோமென்ற புதிதாக்கப்பட்ட நிச்சயம் நம்மில் உண்டாவதாக.

ஓர் மிஷனெரி வீட்டில் ஓர் இரவு, 'உண்மையான அற்புதங்களைத் தேவன் தற்காலத்தில் மிஷன் ஸ்தானங்களில் நடப்பிப்பாரா?' என்ற விஷயத்தைக் குறித்து தர்க்கமுண்டானது. அப்போது அங்குள்ள ஓர் முதல் மிஷனெரியிடம் கனம் வான் அம்மாளுடைய அனுபோகத்தைச் சொல்லி இப்புஸ்தகத்திலொன்றுங் கொடுத்தேன். பின் அன்றிரவில் இந்தப் புஸ்தகத்தின் முதலாம் அத்தியாயத்தைத் தன் கையால் அவர் எழுதிக்கொண்டிருக்கக் கண்டு, 'ஏன் அதை எழுதுகிறீர்?' என்று கேட்க, அவர் அநேக வருஷங்களாக இப்படிப்பட்ட வல்லமையை எதிர்பார்த்து வந்திருக்கிறேன். இதுவரை நாம் பேசிக்கொண்டதெல்லாவற்றிலும் மிகவும் தெளிவாய் தற்சமயம் நமது மிஷன் வேலைக்கு மிக்க அவசியமான இந்த ஒரே காரியம் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. மிஷனில் வருஷங்களாய் உழைத்தும் நாம் ஒரு பலனையும் எதிர்பாராமல் வேலைக்குப் பலன் தக்க காலத்தில் இயற்கையாய் வருமென்றெண்ணுகிறோம். மிஷன் ஸ்தானங்கள் பற்பலவகையானவையென்றும், பல வருஷங்களாய்க் கஷ்டப்படவேண்டியதென்றும் நான் அறிந்தபோதிலும், அற்புதம் நடக்கப் பெருந்தடையாயிருப்பது நமது சொந்த விசுவாசக் குறைவும்

### கடிதங்கள்

½ தோலா இடைக்கு மேற்படாத கடிதத்திற்கு ... ½ அ

½ தோலாவுக்குமேல் 1 தோலாவுக்கு உட்பட்ட கடிதத்திற்கு ... ... ... ... ¾ அணா.

1 தோலா இடைக்குமேல் 2½ தோலா வரைக்கும் உள்ள கடிதத்திற்கு ... ... ... ... 1 அணா.

இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 2½ தோலாவுக்காவது அதன் பாகத்திற்காவது ... ... ... 1 அணா.

### பத்திரிகைகள்

8 தோலா இடைக்கு மேற்படாதவைகளுக்கு ... ¼ அணா.

8 தோலாவுக்கு மேற்பட்டு 20 தோலா வரைக்கும் உள்ள பத்திரிகைகளுக்கு ... ... ... ½ அணா.

20 தோலாவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலா இடைக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ ... ½ அணா.

### புஸ்தகங்களும் மாதிரி கட்டுகளும்

ஒவ்வொரு ஐந்து தோலா இடைக்கும் அதன் பாகத்திற்கும் ½ அணா.

### மணி ஆர்டர்கள்

அதே தேதிமுதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டபடி கமிஷன் சார்ஜ் வாங்கப்படும்.

10 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு ... ... 2 அணா.

10 ரூபாய்க்குமேல் 25 ரூபாய்வரைக்கும் ... ... 4 அணா.

25 ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி ரூபாய் 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய் மேற்படாவிட்டால் 2 அணாவும், சார்ஜ் செய்யப்படும்.

### வீ. பீ. மூல்யமாய் அனுப்பப்பட்ட சாமான்கள்

அதே தேதிமுதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டவீதம் வீ. பீ. சாமான்களின் தொகையின்மேல், சார்ஜ்செய்யப்படும்.

வீ. பீ. சாமான்களின் பேரில் வசூல் செய்யவேண்டிய பணம் 10 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ... 2 அணா.

10 ரூபாய்க்கு மேற்பட்டும் 25 ரூபாய் வரைக்குமிருந்தால் 4 அணா.

25 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் 2 அணாவும் சார்ஜ் செய்யப்படும்.

C. L. S. PRESS, MADRAS—1921


# மாதர் போதினி

No. 281 ஜூன் 1921 No. 6


## MIRACLES OF FAITH IN CHINA

## சீனாவில் விசுவாசத்தால் நடந்த அற்புதங்கள்

(தொடர்ச்சி)

இங்கு கூறப்படும் சாட்சி அநேகருக்கு பிரயோஜனமாயிருக்குமென்ற நம்பிக்கையோடே எழுதப்பட்டிருக்கிறது.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் பெற்று, இன்னும் தேவனுடைய வலதுபாரிசத்தில் மகிமையாய் வீற்றிருந்து, அவ்வல்லமையைத் தமதடியாருக்கு அருளும் நமது கர்த்தராகிய இயேசுவுக்குள் வெற்றியடைவோமென்ற புதிதாக்கப்பட்ட நிச்சயம் நம்மில் உண்டாவதாக.

ஓர் மிஷனெரி வீட்டில் ஓர் இரவு, 'உண்மையான அற்புதங்களைத் தேவன் தற்காலத்தில் மிஷன் ஸ்தானங்களில் நடப்பிப்பாரா?' என்ற விஷயத்தைக் குறித்து தர்க்கமுண்டானது. அப்போது அங்குள்ள ஓர் முதல் மிஷனெரியிடம் கனம் வான் அம்மாளுடைய அனுபோகத்தைச் சொல்லி இப்புஸ்தகத்திலொன்றுங் கொடுத்தேன். பின் அன்றிரவில் இந்தப் புஸ்தகத்தின் முதலாம் அத்தியாயத்தைத் தன் கையால் அவர் எழுதிக்கொண்டிருக்கக் கண்டு, 'என் அதை எழுதுகிறீர்?' என்று கேட்க, அவர் அநேக வருஷங்களாக இப்படிப்பட்ட வல்லமையை எதிர்பார்த்து வந்திருக்கிறேன். இதுவரை நாம் பேசிக்கொண்டதெல்லாவற்றிலும் மிகவும் தெளிவாய் தற்சமயம் நமது மிஷன் வேலைக்கு மிக்க அவசியமான இந்த ஒரே காரியம் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. மிஷனில் வருஷங்களாய் உழைத்தும் நாம் ஒரு பலனையும் எதிர்பாராமல் வேலைக்குப் பலன் தக்க காலத்தில் இயற்கையாய் வருமென்றெண்ணுகிறோம். மிஷன் ஸ்தானங்கள் பற்பலவகையானவையென்றும், பல வருஷங்களாய்க் கஷ்டப்படவேண்டியதென்றும் நான் அறிந்தபோதிலும், அற்புதம் நடக்கப் பெருந்தடையாயிருப்பது நமது சொந்த விசுவாசக் குறைவும்

எதிர்பாராமையுமேயென்று நான் காண்கிறேன். நமது மிஷனைச் சேர்ந்த ஒவ்வொரு மிஷனெரியும் இதை வாங்கி வாசிக்கவேண்டியது ' என்றார்.

இந்த மிஷனெரி மறுபடியும் வேலை துவக்கியிருக்கிறார். அவர் வேலை செய்யுமிடத்தை மேல்பார்ப்பவர் ஆத்துமாக்களைக் கிட்டுவதில் புதிதும் தைரியமுமான முறைகள் கையாடப்படுவதாகக் கூறுகிறார். மிஷனெரிகளுக்காக ஜெபத்தால் மாத்திரமல்ல, உடனே மாறுதல்களுண்டாக்கத்தக்கதும், மிஷன் வேலை ஸ்தானங்களில் அற்புதங்கள் நடக்கத்தக்கதாக ஜெபிக்கும் வல்லமையுள்ள கருவிகளாக நம்மை உபயோகிக்க ஆவியானவரை ஏவத்தக்கதுமான விசுவாசத்தாலும் உதவிசெய்வோமாக. கனம் வான் துரைசானி சீனாவில் செய்த வேலையில் சம்பந்தப்பட்டவர்கள், கர்த்தராலே அந்த வேலை நடந்ததென்றும், தங்கள் கண்களுக்கு ஆச்சரியமாயிருந்ததென்றும் சாட்சிகூறுகிறார்கள். அதற்குப்பின் அமெரிக்காவில் அவர்களை அறிந்த நாங்கள் விசுவாசமுள்ள ஜெபத்திற்குப் பலனாக அதேவிதமான காரியங்களைக் கர்த்தர் இங்கும் நடப்பித்திருக்கிறாரென்றும் சாட்சிகூறுகிறோம்.

ஆசீர்வதிக்கக் காத்திருக்கிற வல்லமையுள்ள கர்த்தரிடமிருந்து உரிமைபாராட்டி வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்வதில் புது தைரியமுள்ளவர்களாகத் தக்கதாக கர்த்தருடைய சொந்தப் பிள்ளைகளை எழுப்பிவிடுவதில் இப்புஸ்தகம் பிரயோஜனப்பட்டு, இதை எழுதினவர் தன் ஆசைக்கிடமான சீனாவுக்கு, இயேசுவுக்கு மகிமையாயிருக்குமானால், தன் இருதய விருப்பப்படி மறுபடியும் போய், இன்னும் பெரிய காரியங்கள் நடப்பிக்கும்படி அவரை விசுவாசிக்க அருள் கிடைப்பதாக.

## I. அதிகாரம்

### சீனாவில் என் முதல் வேதாகம வகுப்பு

1903-ம் வருஷம் வசந்தகாலத்தில் ஸ்திரீகளுக்கென்று நான் ஒரு வேதாகம வகுப்பை முதலாவதாக நடத்தினேன். ஐந்து வருஷங்களாய் சீன பாஷையைக் கற்பதிலும், கிறிஸ்தவ ஊழியத்தைக் கற்பிப்பதிலும் செலவிட்டபின், என் சீன சகோதரிகளுக்கு தேவனுடைய கிருபையுள்ள பாக்கிய சுவிசேஷத்தை அறிவிக்கும் சமயம் கிடைத்ததால் களிகூர்ந்தேன்.

அழகிய லவோமலைகளின் மத்தியில் மறைந்துகிடந்த டங்கையான் என்ற ஓர் சிறு கிராமத்தில் சீனப்பாதிரியார் மத விசாரணை



செய்த இருபத்தைந்து பெண்களைக் கூட்டி அவர்களுக்கு என்னைப் படிப்பிக்கச் சொன்னார். பத்து நாட்களுக்குள் சத்தியத்தைப்பற்றி இரட்சிப்புக்கேற்ற அறிவுண்டாக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் சற்றாகிலும் வாசிக்கக் கற்றவராயிருக்க வேண்டுமென்றெண்ணி அவர்களுக்குள் பெரிய காரியங்களை நடப்பிக்கலாமென்று நினைத்தேன்.

தனித்தனியாய் என் வகுப்பிலுள்ள பெண்களோடு சம்பாஷித்தபோதோ என் நம்பிக்கையெல்லாம் அற்றுப்போயிற்று. ஒரு பெண் நான் தனக்கு ஏதும் கற்பிப்பது சாத்தியமல்லவென்றும், தன் இருதயமும் மனதும் வைரம்போல் கடினப்பட்டு இருண்டதென்றும் சொன்னாள். இன்னொரு பெண் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், தன் ஜீவகாலத்தில் ஒன்றும் கற்றதேயில்லையென்றும், கைக்குழந்தையோடும் மூன்று வயதுள்ள இன்னொரு பிள்ளையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டும் தான் என்ன படிக்கக்கூடுமென்று எதிர்பார்க்கலாமென்றும் சொன்னாள்.

அறுபது வயதுக்கு மேற்பட்டவள் இவளுக்குப் பின் வந்து, பேசும்போது தன் துணியால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'நீங்கள் எங்களுக்கு கற்பிக்க வந்தது எவ்வளவோ நல்ல காரியம். ஆனால் நான் வயதில் முதிர்ந்தவள், என்னால் ஒன்றும் படிக்கமுடியாது. மேலும் பதிமூன்றாம் வயதில் நான் என் மாமியார் வீட்டுக்கு வந்ததுமுதல் இரவும் பகலும் அழுது என் கண்ணும் கெட்டுப்போயிற்று (அநேக சீனப் பெண்கள் அழுதழுது நாற்பது வயதாகுமுன் குருடாகிறார்கள்), எனக்கு ஒன்றும் தெளிவாய்த் தெரியவில்லை. நான் புஸ்தகம் வாசிக்கக் கற்பதெவ்விதம்?' என்றாள்.

வகுப்பிலுள்ள யாவரும் ஏறக்குறைய இப்படியேயிருந்தார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் போனவர்களல்ல, ஒரு எழுத்துக்கும் இன்னொரு எழுத்துக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள். இளம்பிராயமுதல் அவர்களுக்கு மூளையே கிடையாதென்று போதிக்கப்பட்டதால் தங்களால் எதையும் கற்றுக்கொள்ளமுடியாதென்ற எண்ணத்தோடிருந்தார்கள். அவர்களிலொவ்வொருவருக்கும் சீனவழக்கப்படி கட்டப்பட்ட பாதங்களாகையால், அவர்கள் எதை முயன்றாலும் கூடாதபடி ஓயாத நோவினால் கவனிக்கக்கூடாதிருந்தார்கள்.

யாருக்குமில்லாத அதைரியம் எனக்குண்டாயிற்று. என்னைப்போல் அதைரியப்பட்டவரைக் காண்பதரிதாகும். இப்படிப்பட்ட பெண்களுக்கு எப்படி படிப்பிக்கக்கூடும்? அவர்கள் பாதிரியார் அனுப்பினதினால்தான் என்னிடம் வந்திருக்கிறார்கள். இவர்கள் சற்றும் அறிவின்றி, தேர்ச்சியடைய விருப்பமுதலாய் அற்றிருக்

கிறார்களே. என்ன செய்யலாம்?' என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

என்முன்னிருந்த வேலையைச் செய்யக்கூடாமல் முற்றும் சோர்படைந்தவளாய் என் அறையில் ஜெபிக்கப்போனேன். 'தேவன் பேரிலுள்ள உன் விசுவாசம் எங்கே?' என்ற கேள்வி ஓயாமல் என் மனத்தில் வந்தது.

'விசுவாசத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தமுண்டு? இதோ என் வேலை மனுஷசக்திக்குக் கூடாததாயிருக்கிறதே' என்றேன். 'மனுஷரால் இது கூடாததுதான், தேவனாலே எல்லாம் கூடும்' என்ற உத்தரவுண்டாயிற்று.

உடனே முழங்காற்படியிட்டு, என் ஆவிக்குரிய அறிவீனத்தையும் சக்தியின்மையையும் அறிக்கையிட்டு, அந்த வசனங்களின் அர்த்தத்தை உள்ளபடி தேவன் எனக்குக் காட்டும்படி ஜெபித்தேன்.

உடனே இருட்டறையில் ஒளிவீசினாற்போல் இந்த இரண்டு வாக்குத்தத்தங்களும் வந்தன. 'நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதை நான் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.' யோ. 14 13-14.

இந்தக் கிருபையுள்ள வார்த்தைகளின் முழு அர்த்தத்தையும் நான் விளங்கிக்கொண்டவுடனே, என் பாரம் நீங்கிப்போயிற்று. கேட்பதைத் தவிர நான் செய்யவேண்டிய தொன்றுமில்லாதிருந்தது. ஏனென்றால், சர்வ வல்லமையுள்ள தேவனுன என் இரட்சகரும் இந்தப் பெண்களின் மீட்பருமானவர், எங்களுக்காக மரித்தவர், நான் என்ன கேட்டாலும் கொடுப்பேன் என்றார். எப்போது எப்படிச் செய்வாரென்று எனக்குத் தெரியாவிட்டாலும் அவர் தமது வாக்கை நிறைவேற்றுவாரென்று நம்பி பின்வரும் ஜெபத்தைச் செய்தேன்.

'பரம தகப்பனே, இவர்கள் பாவத்தை இயேசுவின் நிமித்தம் மன்னித்து, பரிசுத்தாவியானவரை இவர்கள்மேல் ஊற்றி, பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் இவர்களைக் கண்டித்து உணர்த்தி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை இவர்கள் சொந்த இரட்சகராக வெளிப்படுத்தி, அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் இவர்கள் பாவக்கறையும் குற்றமும் நீங்க சுத்திகரித்து, பரிசுத்தாவியானவரால் நிரப்புவதினால் இவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பும்போது இயேசுவுக்கு சாட்சிகளாயிருக்கச் செய்யும்' என்பதே.

இந்தப் பெண்கள் அறிவீனரும் அஞ்ஞானமாகிய இருப்புச் சங்கிலியால் கட்டப்பட்டவர்களுமாயிருந்தபோதிலும், உலகத்தை நம்



மண்டை கொண்டவோ பெரிய இரட்சிப்புண்டாக்கிய கர்த்தருக்குள் மகிழ்ந்து, தமது அற்புதத்தை அவர்கள் ஒவ்வொருவருடைய இருண்ட பாவம் நிறைந்த இருதயத்திலும் நிறைவேற்றுவாரென்று அவருக்காக பொறுமையுடன் காத்திருக்கத் தீர்மானித்தேன்.

இதற்குள் பின்வரும் ஜெபத்தையும் அவர்களுக்குக் கற்பித்தேன்:

'பரம பிதாவே, என் பாவங்களை எனக்கு மன்னியும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் என்னைக் கழுவி சுத்திகரியும், பரிசுத்தாவியால் என்னை நிரப்பும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன்.'

இந்த சிறிய ஜெபத்தைப் பிழையின்றி கருத்தோடு கற்றுக்கொள்ள சிலருக்கு மூன்றுநாள் சென்றது. முதல் நாள் தேவன் என் ஜெபத்தைக் கேட்டாரென்பதற்கு யாதொரு அடையாளமுமின்றி கழிந்தது. இரண்டாம் நாளிலும் காலையில் ஒரு விசேஷமும் நடக்கவில்லை. அன்று மாலையில் நாங்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து முழங்காற்படியிட்டு இந்த சிறு ஜெபத்தைச் சொல்லும்போது, ஒரு பெண் தன் பாவங்களை அறிக்கையிட்டு அழுதாள். தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவர் தன் இருதயத்தில் வந்து வாசம்பண்ணவேண்டுமென்று கேட்டாள். சில நிமிஷங்களுள் நாங்கள் முழங்காலிலிருந்தெழுந்த போது அவள் ஒரு புது சிருஷ்டியாய் மாறினதைக் கண்டோம். பின் சில நாட்களுக்குள் ஒருவர்பின் ஒருவராய் எல்லாப் பெண்களும் இவ்வித அனுபோகமடைந்து முழு வகுப்பும் இரட்சிப்பைப் பெற்றார்கள். பரிசுத்தாவியின் வல்லமையால் அவர்கள் அற்புத மாறுதலடைந்து கிறிஸ்துவைப்பற்றிக் கற்றுக்கொள்ள அதிக ஆவலாயிருந்தார்கள். அவர்களெல்லாரையும் திருப்திசெய்ய எனக்கு நேரம் கிடைப்பதரிதாயிருந்தது. அவர்களுக்கு படிப்பிப்பதிலும், உதவிசெய்வதிலும் என் பெலனையெல்லாம் செலவழித்தேன்.

(இன்னும் வரும்)

## EXAMPLES OF PRAYER

## திருஷ்டாந்தக் கோர்வை

### ஜெபம்

1. இரண்டு ஸ்திரீகளின் ஜெபம். மூடி [illegible] கூட்டங்களுக்கு பக்தியுள்ள இரண்டு ஸ்திரீகள் ஒருமுறை போவது வழக்கம். ஒவ்வொரு கூட்டத்திலும் அவர்களைப் பார்ப்பது [illegible]

மிகச் சந்தோஷம். அவர் பிரசங்கம்பண்ணத் துவங்கும்போது அவர்கள் இருவரும் அவருக்காக ஜெபிக்க ஆரம்பிப்பார்கள். அவர்கள் தனக்காகவே ஜெபிக்கிறார்களென்பதை மூடி துரை அறிந்தபொழுது, 'நீங்கள் ஜனங்களுக்காக ஜெபிக்காமல் எனக்காக ஜெபிப்பதற்குக் காரணமென்ன?' என்று கேட்டார். அதற்கு அவர்கள், 'உமக்கு ஆவியானவரின் விசேஷித்த வல்லமையும் பூரண அபிஷேகமும் வேண்டும்' என்றார்கள். மூடி துரையின் மனதில் மிகவும் கலக்கமுண்டாயிற்று. என்னுடைய கூட்டங்களுக்கு திரளான ஜனங்கள் வந்து பலர் குணப்படுவதை இவர்கள் அறிந்திருந்தும் எனக்காக அவர்கள் ஜெபிப்பது ஏதோ கருத்திருக்கிறது என்று உணர்ந்தார். அந்த இரண்டு ஸ்திரீகளும் மூடி துரையின் வீட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். மூவரும் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ண ஆரம்பித்தார்கள். விசேஷித்த தேவ ஊழியத்திற்கென்று விசேஷித்த வகையாய் அவர் ஆவியின் அபிஷேகத்தைப் பெறவேண்டுமென்று இரண்டு ஸ்திரீகளும் வாஞ்சையோடு ஜெபித்தார்கள். மூடி துரைக்கு அதுவரையிராத பெரிய ஆத்துமதாகம் உண்டாயிற்று. அந்தத் தாகத்தைத் தீர்க்கும்படியாக பெருமூச்சுவிட்டு அழுது ஜெபம்பண்ணினார். அவர் அன்று அடைந்துகொண்ட அநுபவம் விஸ்தரிக்கமுடியாதென்று கூறியிருக்கிறார். கிறிஸ்துவின் அன்பைப்பற்றிய விசேஷித்த உணர்ச்சி அவர் மனத்தில் உண்டாயிற்று. ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதாக உணர்ந்தார். அவருடைய ஊழியத்தில் விசேஷித்த வல்லமை விளங்கி நூற்றுக்கணக்கான பேர்கள் குணப்பட ஆரம்பித்தார்கள்.

2. பிரசங்கம்பண்ணுமுன் ஜெபம். ப்ரூஸ் என்ற பக்தியுள்ள குரு குறித்த நேரத்தில் பிரசங்கமேடைக்கு வராமல் தமது உள்ளறையிலேயே இருந்துவிட்டார். சபையார் சில நிமிஷங்களாக காத்திருந்தபின் குருவானவருக்கு ஏதாவது அபாயம் நேரிட்டிருக்குமென்று பயந்து கோவில் சேவகனை அனுப்பினார்கள். அவன் குருவறையின் வாசலண்டை வந்தபோது உள்ளே இரண்டுபேர் போராடிக்கொண்டிருக்கிறதுபோல் காணப்பட்டது. நன்றாய்க் கவனித்தபோது குருவானவர் மாத்திரமே அங்கிருப்பதாகவும் அவர் தேவனோடே போராடி ஜெபித்துக்கொண்டிருப்பதாகவும் அறிந்தான். இன்று நீர் என்கூட வராவிட்டால் நான் பிரசங்கமேடைக்குப் போகமாட்டேன் என்று குரு போராடிக்கொண்டிருந்தார். கோவில் சேவகன் போனவழியே மெதுவாய்த் திரும்பிவிட்டான். சில நிமிஷங்களுக்குப்பின் குருவானவர் பீடத்தின்முன் வந்து ஆராதனையை நடத்தினார். அவருடைய முகமும் வார்த்தைகளும்



பிரசங்கத்தின் பலனும் கடவுள் அவரோடு வந்திருந்தாரென்பதற்கு அத்தாட்சியாயிருந்தது.

3. தனித்தாளுக்காக ஜெபம். அமெரிக்காவில் ஒரு பெரிய சபையில் ஆவிக்குரிய ஜீவன் குன்றிப்போயிருந்தது. பக்திமான்களான சிலர் இதைக் கவனித்தபோது மிகவும் விசனமடைந்து ஆலோசனைசெய்து ஒரு உபாயம் செய்யத் தீர்மானித்தார்கள். அச்சபையில் ஒரே மனிதனைத் தெரிந்துகொண்டு அவனுக்காக அவர்கள் யாவரும் ஜெபம்பண்ணிவந்தார்கள். சில நாட்களில் அவன் உயிரடைந்தபொழுது வேறொருவனுக்காக ஜெபம்பண்ணிவந்தார்கள். அவனும் அனலுள்ள கிறிஸ்தவனானான். இவ்விதமாய் அவர்கள் ஒரே சமயத்தில் ஒரே மனிதனுக்காக ஜெபித்துவரும் முறையைக் கையாடி வரவே அந்தச் சபை முழுவதும் உயிரடைந்து அனலுள்ளதானது.

4. போதகருக்காக ஜெபம். புதிதாக அழைக்கப்பட்டிருந்த ஒரு போதகருடைய பிரசங்கங்கள் சபையை உயிர்ப்பிக்கத்தக்க ஆவியின் வல்லமையற்றதாயிருக்கக்கண்ட சபை மூப்பர்கள் அவருக்குப் பதில் வேறொருவரை நியமிக்கும்படி விரும்பினார்கள். ஆயினும் ஒரு நல்ல யோசனை அவர்கள் மனதுக்கு வந்தது. அவர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் போதகர் ஆவியால் நிரப்பப்படவேண்டுமென்று ஊக்கமாய் ஜெபித்துவந்தார்கள். சீக்கிரத்தில் அவர்கள் ஜெபம் கேட்கப்பட்டதென்றும் போதகர் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறாரென்றும் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

5. வேலைக்குமுன் ஜெபம். ராபர்ட் காலியர் என்பவர் வாலிபராயிருந்தபொழுது தம்முடைய சகோதரனோடு சேர்ந்து கொல்லவேலை செய்துவந்தார். அதிக வருத்தமான ஒரு வேலையைச் செய்யும்படியாக ஒருநாள் நேரிட்டபொழுது, வேலையைத் துவக்குமுன் அவருடைய சகோதரன் தன்னுடைய அறைக்குள் போய் பதினைந்து நிமிஷம் அடைத்துக்கொண்டு உள்ளே இருந்து பின்பு வேலைசெய்யும்படி வந்தார். அந்நாள் வேலை ஆச்சரியப்படத்தக்கவிதமாய் யாதொரு குறைவுமின்றி முடிவுபெற்றது. அதைக் கவனித்த ராபர்ட் தன்னுடைய சகோதரனைப்பார்த்து 'ஜெபம்பண்ணும்படியாகவா நீ அந்த அறைக்குள் போனாய்?' என்று கேட்டான். 'ஜெபம்பண்ணி வேலையைத் துவக்கினபடியால்தான் அந்தக் கஷ்டமான வேலையை நன்றாய்ச் செய்துமுடித்தோம்' என்று சகோதரன் பதிலுரைத்தான்.

6. பணத்துக்காக ஜெபம். ஜ்யார்ஜ் முல்லர் என்ற பக்திமான் தம்முடைய அநாதபிள்ளைகள் பாடசாலைக்காக ஜெபத்தினால் மாத்திரம் வருஷந்தோறும் 80 லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டார்.

ஸ்பர்ஜன் ஐயர் தாம் ஸ்தாபித்த அனாத பாடசாலைக்காக ஜெபத்தின்
மூலமாய் வருஷந்தோறும் 1½ லட்சம் ரூபாய் சம்பாதித்தார்.
லண்டன் பட்டணத்துப் பிச்சைக்காரப் பிள்ளைகளைக் காப்பாற்றும்
பொருட்டாக பர்னாடோ பண்டிதர் பெருந்தொகையான பணத்தை
ஜெபத்தினால் சம்பாதித்தார். இந்த ஜெப பக்தர்கள் தங்களுக்கு
வேண்டிய பணத்தை மனிதரிடம் கேட்காமல் தேவனிடம் கேட்டு
மனிதர்மூலமாய்ப் பெற்றுக்கொண்டார்கள்.

A. William.

## H. R. H. DUKE OF CONNAUGHT'S SPEECH

## ஸ்டேட் கௌன்ஸிலையும் இந்திய சட்ட நிரூபண சபையையும் திறந்துவைக்கும்போது ராஜப்ரதிநிதியவர்கள் செய்த பிரஸங்கம்

1921-ம் ஞு பிப்ரவரி ௴ 9௳ டில்லியில் ஸ்டேட் கௌன்ஸிலை
யும் இந்திய சட்ட நிரூபண சபையையும் திறந்து வைக்கும்படி
மஹிமை தங்கிய கானாட் கோமகனை வேண்டிக்கொள்வதற்கு
முன் அடியிற்கண்ட பிரசங்கமானது சிறப்புற்றோங்கும் ராஜப்ரதி
நிதியவர்களால் செய்யப்பட்டது :—

ஸ்டேட் கௌன்ஸில், இந்திய சட்டநிரூபண சபை இவை
களின் கௌரவம் பொருந்திய மெம்பர்களே,—

இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்ட் 63-வது பிரிவை அனுசரித்து
ஒரு முக்கியமான காரியத்தை உத்தேசித்து உங்களை நான் இங்கே
வரவழைத்திருக்கிறேன். இப்போது திறக்கப்போகும் புதிய சட்ட
நிரூபண சபையானது 1917-ம் ஞு ஆகஸ்ட் மாதத்தில் மாட்சிமை
தங்கிய மஹாராஜ சக்கரவர்த்தியின் அரசாங்கத்தால் விளம்பரப்படுத்
தப்பட்ட நோக்கத்தின் பலனாகும். இந்த விளம்பரமானது பற்பல
விதமான சம்பவங்களடங்கிய தேசசரித்திரத்தில் மிகவும் முக்கியமான
தென்று கருதப்படுகிறது. அது அப்படித்தான் என்று நானும் எண்ணு
கிறேன். ஆனால் தேசசரித்திரமானது சம்பவங்களின் இடைவிடாத
ஒருவிதக் கோர்வையென்று நமக்குத் தெரியும். பிரக்ருதியில் எப்
படியோ அப்படியே மனிதர்களின் நடவடிக்கைகளிலும் காரணமில்
லாமல் ஒன்றும் ஏற்படுகிறதில்லை. சொற்பகாலத்துக்குள் எவ்வளவு
மகத்தான மாறுதல் உண்டானபோதிலும், அவைகளின் காரணமாக
வேறு சில முன்னால் இருந்திருக்கின்றனவென்று தேசசரித்திரம்
எழுதுபவர்களுக்குத் தெரியும். சாமான்ய மனிதர்களுக்கு அந்த



விஷயம் வெளிப்படையாய்த் தெரிந்திருக்கலாம், தெரியாமலுமிருக்
கலாம். இது பிரிடிஷ் இந்தியாவின் சரித்திரத்திலிருந்து தெளிவாய்
ஏற்படுகிறது. 1912-ம் வருஷத்தில் ஏற்பட்ட ஆக்டானது பழைய
ராஜாங்க முறையில் ஏற்பட்ட பெரிய மாறுதலாகும். அது ஒரு
காலத்தை முடித்து இன்னொன்றை ஆரம்பிக்கச்செய்தது. ஆயினும்,
அந்த ஆக்டில் உள்ள முக்கிய அம்சங்களுக்கு ஆதாரமாயிருந்தவை
சென்ற நூற்றாண்டிலேயே காணப்படுகின்றன. இந்த ஆக்ட் எந்த
நோக்கத்தைக்கொண்டு செய்யப்பட்டதோ அந்த நோக்கத்தைக்
கொண்டுதான் இங்கிலிஷ்காரர்கள் இந்தியாவில் நடந்துவந்திருக்
கிறார்கள். இப்படிச் சொல்வது தவறு என்று சொல்பவரும்
சிலர் இருக்கிறார்கள். பிரிடிஷ் கவர்ன்மெண்டானது சகல அதிகா
ரத்தையும் தன் கையிலேயே வைத்துக்கொள்ளவேண்டுமென்ற நோக்
கத்துடன் அரசாட்சிசெய்து வந்திருக்கிறதென்றும், ஜனங்கள் ஆட்சி
முறையில் மாறுதல் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தித்து 'அப்படிப்
பட்ட மாறுதல்களைச் செய்வதுதான் யுக்தமானது, இல்லாவிட்டால்
ராஜாங்கத்துக்குக் கெடுதிவரும்' என்று அரசாங்கத்தாருக்குத் தோற்
றும் பக்ஷத்தில் மாத்திரம் அப்படிப்பட்ட மாறுதல்களை ராஜாங்கம்
மிகவும் மெதுவாயும் மனவெறுப்புடனும் செய்துவந்திருக்கிறதே
ஒழிய வேறில்லையென்றும், அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால்
தேசசரித்திரத்தில் இதை ரூபிக்கக்கூடிய விஷயங்களொன்றுமில்லை
யென்று எனக்குத் தெரியும். பிரிடிஷ் ராஜாங்கமானது இந்தியாவில்
எத்தனையோ தவறுகளையும் குறைகளையும் உடையதாயிருந்ததென்று
தேசசரித்திரம் எழுதுகிறவர்கள் சொல்லுவார்கள்; ஆயினும், அவர்கள்
எந்த உயர்ந்த நோக்கத்துடன் ராஜ்யத்தை ஆள ஆரம்பித்தார்களோ
அந்த நோக்கத்துடனேயே மகத்தான காரியங்களைச் செய்துவந்
திருக்கிறார்களென்பதையும் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். முன்
னாட்களிலிருந்த அரசாங்கங்களில் எதுவும் இப்படிப்பட்ட வேலை
யைச் செய்யவில்லை. இந்த ராஜ்யங்களில் ஸ்வதந்த்ரமேயில்லாம
லிருந்தது. ரோம் ராஜ்யத்தைப்போல் ஏதாவது சில ராஜ்யங்
களில் ஸ்வதந்த்ரம் இருந்திருந்தாலும் அந்த ராஜ்யம் பெரிதாக ஆக
முன் அனுபவித்த ஸ்வதந்த்ரமும் போய்விட்டது. பிரதேச அரசாட்சி
யின் அமைப்பும், பலஜாதியாருக்குள் இருந்த ஸ்வதந்த்ரமும் சிற்சில
வித்தியாசங்கள் உடையவைகளாய் எங்கும் ஒரே மாதிரியாய் இருக்க
வில்லை ஆயினும், அது பிரதான ராஜாங்கத்தில் பிரஜைகளின் ஆதி
பத்யத்தை பாதிக்கவில்லை. இங்கிலாந்தில் ஸ்வராஜ்யம் நன்றாய்
நிலைபெற்றபிறகுதான் இந்தியா இங்கிலாந்துடன் சேர்ந்தது. அது
முதல், இங்கிலாந்திலுள்ள நன்மைகளையும் உரிமைகளையும் இந்தியர்

களுக்கும் கொடுக்கவேண்டுமென்பது ராஜாங்கத்தின் ஸ்திரமான நோக்கமாயிருந்துவந்திருக்கிறது.

இதை பிரத்தியேகமாய் ரூபிக்கவேண்டுமானால், எந்த பாஷைமூலமாய் இந்தியர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பது என்னும் விஷயத்தைப்பற்றி மெகாலே பிரபுவானவர் எழுதியிருக்கும் குறிப்பைப் பாருங்கள். மேற்கு தேசத்திய கருத்துக்களை இங்கிலீஷ் பாஷை தவிர வேறு எதுவும் நன்றாய் வெளிப்படுத்தாது என்பது அவர் அபிப்பிராயம். அதனால் எவ்வளவோ பிரபலமான காரியங்கள் ஏற்பட்டுவிட்டன. இங்கிலிஷ் தேசசரித்திரக்காரர்களும் இங்கிலிஷ் உபாத்தியாயர்களும் எழுதியிருந்த புஸ்தகங்களுடன் இந்தியர்களுக்கு ஏற்பட்ட பரிசயமொன்றே, மற்றெல்லாக் காரணங்களையும்விட அதிகமாக அவர்களை இங்கிலாந்திலிருப்பதுபோன்ற ராஜ்ய அமைப்பு தங்களுக்கும் வேண்டுமென்று கேட்கும்படி தூண்டியிருக்கிறது. 'ஷேக்ஸ்பியர் என்னும் கவி பேசின பாஷையைப் பேசும் நாம் ஸ்வதந்த்ரர்களாயிருக்கவேண்டும்' என்று நம் கவிகளில் ஒருவர் சொல்லியிருக்கிறாரல்லவா? இப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதில் பல சங்கடங்கள் ஏற்பட்டன. விசாலமான தேசம், பல்வேறு ஜாதிகள், அநேக நூற்றாண்டுகளாய்க் கொடுங்கோலரசின் கீழ் இருந்து வந்ததினால் ஜனங்களுக்கு ஏற்பட்ட மனோபாவம், ஆகிய இவைகளைக் கண்டால் எப்படிப்பட்ட புத்திசாலியும் பயந்துவிடுவான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இங்கிலிஷ்காரர்கள் தங்கள் தேசத்தில் ராஜீய வாழ்க்கையின் முன்னேற்றத்தின் அனுபவத்தை ஒட்டியே நடந்துவந்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் ஸ்வராஜ்யம் கிடைத்தது திடீரென்று ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியினாலல்ல; ஆனால், அநேக நூற்றாண்டுகளாக நிதானித்து முயற்சி செய்துவந்து படிப்படியாய் அடையப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் பிரிடிஷ்காரர்களின் நோக்கம் மாறியிருப்பதும் மேற்சொன்னபடியே தான். கண்டவுடனே கண்ணைப் பறிக்கக் கூடியதும் வெகுகான் நிலைக்காததுமான அமைப்பை இங்கிலிஷ்காரர்கள் ஏற்படுத்தவில்லை. படிப்படியாய் முன்னடைந்து, ஜனங்களின் முன்னேற்றத்துக்குத் தக்கவாறு அப்போதப்போது ராஜ்ய அமைப்பை மாற்றி, முன்னோர்களால் போடப்பட்ட அஸ்திபாரத்தை வைத்துக்கொண்டு, அதன்மேல் ராஜீய அமைப்பை ஏற்படுத்தினால் போதுமானதென்று இங்கிலிஷ்காரர்கள் திருப்தியடைந்திருக்கிறார்கள். ஆகையால், இங்கிலாந்தைப்போல இந்தியாவிலும் ஸ்வதந்த்ரமானது க்ரமமாய்த் தலைமுறை தலைமுறையாய்த்தான் விருத்தியாகி வருகிறதென்று சொல்லலாம்.



இந்தியாவில் இங்கிலிஷ் ராஜாங்க அமைப்பின் முன்னேற்றத்தைப்பற்றிய சரித்திரத்தைக் கவனித்தால், அதில் சில படிகள் இருப்பது தெளிவாய்க் காணப்படும். முதல் படியின் முடிவு 1861-ம் வருஷத்து ஆக்டுடன் என்று சொல்லலாம். இந்தக் காலத்தில் இங்கிலிஷ் ராஜாங்கமானது தன் ராஜ்யத்தை விசாலித்து அதைப் பலப்படுத்துவதிலேயே புத்தியைச் செலுத்திற்று. மொகலாய ராஜ்யம் அழிந்துபோனவுடன் ஏற்பட்ட குழப்பத்தை அடக்கி, பொலீஸ் ஜயில் இவைகளில் சீர்திருத்தங்கள், குற்றங்களைப்பற்றிய சட்டம், நியாயஸ்தலங்கள், ஸிவில் ஸர்விஸ் ஆகிய இவைகளை ஏற்படுத்துவது முதலிய முக்கியமான சீர்திருத்தங்கள் அப்போதுதான் செய்யப்பட்டன.

ராஜாங்கம் முக்கியமாய்ச் செய்ததென்னவென்றால், ராஜ்யம் நடத்துவதற்கு வேண்டிய கருவிகளை உண்டாக்கி அவைகளைப் பலப்படுத்தினதே. மூன்று பிரத்தியேகமான ராஜதானிகள் ஒரே பொதுவான அமைப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இடையிலுள்ள அநேக இடங்களில் இங்கிலிஷ் அதிகாரத்தைப் பரவச்செய்தார்கள். சட்டநிரூபணம் செய்யவும் ராஜ்யநிர்வாகம் செய்யவும் கவர்னர் ஜெனராலுக்குள்ள அதிகாரமானது எல்லா மாகாணங்களிலும் எல்லா பிரஜைகளின் விஷயத்திலும் செலுத்தப்பட்டது. ஆயினும், அந்தந்த இடத்திலுள்ள தேவையைக் கண்டுபிடிக்கும்பொருட்டு அங்கங்கே மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியாவை ஆளும் விஷயத்தில் இந்தியர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்னும் நோக்கமானது முதல் படிக்கு முடிவாயிருந்த ஆக்டில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட ஸபைகள் கவர்ன்மென்டின் சட்டநிரூபணக் கமிட்டியாகத்தான் இருந்தன. ஆயினும், பொது ஜனங்களைக் கேட்டுத்தான் ஒரு காரியம் செய்யவேணும் என்ற உரிமையும், நிர்வாஹகர்கள் செய்யும் காரியங்களுக்கு அவர்களே ஜவாப்தாரிகள் என்ற விஷயமும் அதில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சட்ட நிரூபணம் செய்யும் விஷயத்தில் இந்தியர்களையும் சேர்த்துக்கொண்டார்கள்.

இரண்டாவது படியானது 1892-ம் வருஷத்து ஆக்டுடன் முடிந்தது. இதற்கிடையிலிருந்த காலத்தில் பலவிதமாய் தேசம் முன்னேறிற்று. ஸர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன; ஸெகண்டரி படிப்பு மிகவும் விருத்தியடைந்தது. பெரிய மாகாணங்களில் முனிஸிபாலிடிகளும் ஜில்லா போர்டுகளும் ஏற்படுத்தப்பட்டன.

முக்கியமான சில இந்தியர்கள் இன்னும் முன்னுக்குப்போக வேண்டுமென்றார்கள்; இவர்கள் கேட்பது நியாயந்தான் என்பது 1892-ம் வருஷத்து ஆக்டினால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த ஆக்டை அனுஸரித்து, சபைகளில் கேள்விகள் கேட்கவும் வரவு செலவு கணக்கைப்பற்றி விவாதம் செய்யவும் மெம்பர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டது. இந்த விஷயம் சம்பந்தப்பட்டவரையில், மெம்பர்களின் கடமையானது சட்ட நிரூபணம், ஆலோசனை சொல்லுதல் இவை மாத்திரமல்ல, அதற்கு அதிகமாகவும் இருந்ததென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், இவைகளெல்லாவற்றையும் விட மிக முக்கியமான மாறுதல் என்னவென்றால், மெம்பர்களைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்பதே. உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களை ராஜாங்கத்தாரே நியமித்துவிடுகிறார்கள் என்பது வாஸ்தவம் தான்; ஆயினும், இப்படிப்பட்ட நியமனத்தைப்பற்றி ஆக்ஷேபனையொன்றும் இல்லாமல் எல்லோரும் அதை ஒப்புக்கொண்டுவிட்டபடியால், உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களில் அநேகர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது நிச்சயமாயிற்று. 1861-ம் வருஷத்து ஆக்டில், இந்திய சட்ட சபைகளில் இந்தியர்கள் அவசியம் இருக்கவேண்டியதென்று கண்டிருந்தது. 1892-ம் வருஷத்து ஆக்டிலோ, அப்படிப்பட்ட சபைகளுக்கு மெம்பர்களாக ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளையனுப்பலாம் என்ற உரிமை கொடுக்கப்பட்டது.

மூன்றாவது படியைப்பற்றிப் பேசும்போது மார்லி, மின்டோ பிரபுக்களின் ஞாபகம் வரும். 1892-ம் வருஷத்து ஆக்டின்படி செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் அனுபவத்தில் பிரயோஜனமுள்ளவையாய்க் காணப்பட்டன. உத்யோகஸ்தரல்லாதவர்களின் தலைவர்களை பொதுஜன காரிய நிர்வாகத்தில் சேர்த்துக்கொண்டதனால் ஸ்வபாவமாகவும் நியாயமாகவும் ஜனங்களுக்கு தேவையாயிருந்த காரியங்களைச் செய்துகொடுப்பதற்கும் ராஜ்யபாரண விஷயமாய் அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கும் இடம் உண்டாயிற்று. 1892-ம் வருஷத்து ஆக்டைச் செய்வதற்குக் காரணமாயிருந்த விஷயங்கள் இன்னுமிருந்தன; ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த யுத்தத்தைப்போன்ற வெளிதேச வியவஹாரங்களும் கூடிக்கொண்டன. முக்கியமான வகுப்பினர் தங்களுடைய நிலைமையை உணர்ந்து, தங்களுடைய சாமர்த்தியங்களையும் அறிந்து, இங்கிலீஷ்காரர்களுக்கு சமமான உரிமைகள் தங்களுக்கும் வேண்டுமென்று கேட்கத் தலைப்பட்டார்கள். சுருக்கமாய், இந்தியா தன்னையே தான் அறிய ஆரம்பித்தது.

ராஜாங்கமானது மேற்சொல்லிய மாறுதல்களை அனுசரித்திருக்கும்பொருட்டு, மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் நல்ல எண்ணத்துடன் தைரியமாய் ஏற்படுத்தப்பட்டன. சட்ட சபைகள் விசாலிக்கப்பட்டன; பிரதேச சபைகளில் உத்தியோகஸ்தர் தொகை மதிப்புக்கு மேற்பட்டார்; மெம்பர்களைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்பது சட்ட



சம்மதமாக்கப்பட்டது. இவைகளெல்லாவற்றையும்விட முக்கியமானது சபைகள் செய்யவேண்டிய வேலைகளில் உண்டாக்கப்பட்ட மாறுதல்கள். வரவு செலவு கணக்கைப்பற்றி விஸ்தாரமாய் விவாதம் செய்யவும், அதைப்பற்றித் தீர்மானங்கள் செய்யவும், அதில் ஒத்து வராவிட்டால் இரண்டு கட்சிகளாய்ப் பிரியவும் சபைகளுக்கு அதிகாரம் உண்டாயிற்று. வரவு செலவு கணக்கைப்பற்றி மாத்திரமன்றி, முக்கியமான இதர விஷயங்களைப்பற்றியும் இப்படிச் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டது. இப்படிச் செய்வதனால், இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, முன்னேற்றம் வேண்டாமென்று சொல்பவர்களெல்லாரும் ஒன்று சேருவார்கள் என்றும் வேறு மாறுதல்கள் செய்யவேண்டிய அவசரம் இன்னும் அநேக வருஷங்களுக்கு ஏற்படாதென்றும் மேற்சொல்லிய சீர்திருத்தங்களை ஏற்படுத்தினவர்கள் எண்ணினார்கள்.

இப்படி அவர்கள் எண்ணியது நிறைவேறவில்லை. இது சகஜம் தான் என்பது நம் அனுபவத்தினால் நமக்குத் தெரியும். சீர்திருத்தங்களால் ஏற்படுத்தப்பட்ட சமநிலையானது தற்கால சாந்தியாகவே இருந்தது. இந்த சீர்திருத்தங்களைச் செய்வதற்குக் காரணமாயிருந்த விஷயங்கள் இன்னும் பலப்பட்டு அதிகரித்துவந்தன. படித்த இந்தியர்கள் தங்களை ராஜ்ய நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று வருஷாவருஷம் அதிகமாய்க் கேட்டுக்கொண்டு வந்தார்கள். மின்டோ-மார்லி சீர்திருத்தத்தால் ஏற்பட்ட அமைப்பு இதற்கு இடம் கொடுக்கவில்லை. ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்வதற்கும் கவர்ன்மென்டாரை சில காரியங்களைச் செய்யும்படி தூண்டுவதற்கும் மாத்திரம் இந்த சீர்திருத்தங்கள் இடம் கொடுத்ததேயொழிய பொதுஜன விஷய நிர்வாகத்தில் ஜனங்களுக்கு ஒருவித உத்தரவாதமும் (பொறுப்பும்) ஏற்படுத்தவில்லை. முடிவு செய்யும் அதிகாரம் ராஜாங்கத்தினுடையதாய் இருந்தபடியால் ராஜாங்கத்தார் செய்யும் காரியங்களில் குற்றம் குறை கண்டுபிடிப்பதைத் தவிர வேறொரு அதிகாரமும் சபைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே யதேச்சாதிகாரமானது மிகவும் குறைக்கப்பட்டிருந்தாலும் அது முற்றிலும் ஒழிந்துபோகவில்லை. மேற்கு தேசத்திய ராஜ்ய முறைகளை அதனுடன் கலக்கச் செய்த பிரயத்தனங்கள் தற்கால சாந்தியாகமட்டுமே இருந்தன.

இப்படிப்பட்ட நிலைமையில் 1916–17-ம் வருஷங்களில் நம் அரசாட்சி இருந்தது. ஆகவே நம் நோக்கத்தை மாற்றவேண்டுமென்று தீர்மானித்தோம். மின்டோ-மார்லி சீர்திருத்தங்களைக் கொண்டு இனி முன்னேறமுடியாது. அதை எவ்வளவு விருத்தி

செய்யமுடியுமோ அவ்வளவும் செய்து அதனால் அடையவேண்டிய பலனையும் அடைந்தாகிவிட்டது. இன்னும் அதினால் செய்யக்கூடிய மாறுதல் ஒன்றே ஒன்றுதான் உண்டு. அதாவது, ஜனங்கள் இஷ்டப் பிரகாரம் மாற்றமுடியாத ஒரு நிர்வாக சபையார் செய்யும் சட்ட நிருபணம், தேசநிர்வாகம் ஆகிய இவைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளின் இஷ்டப்படி செய்யப்பட்டு, தேச நிர்வாகத்தின் பொறுப்பை அந்த நிர்வாக சபை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்பதே; ஆனால் அந்த உத்தரவாதத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி காரியங்களைச் செய்வதற்குவேண்டிய உபகரணங்களை சம்பாதிப்பதற்கு அதற்கு அதிகாரம் இருக்காது. ஆகவே கடைசியாய் முடிவுக்கு வந்த தீர்மானம் 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் மஹாராஜ சக்ரவர்த்தியின் ராஜாங்கமானது வெளிப்படுத்தின விளம்பரத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தில் நம் ராஜாங்கமும் ஒத்திருக்கிறது. பொறுப்பரசாட்சியைக் கிரமமாய் அடையும்பொருட்டுப் படிப்படியாக ஸ்வராஜ்ய முறைகளை விருத்தி செய்வதுதான் இந்தியாவில் இங்கிலிஷ் அரசாட்சியின் நோக்கம் என்பதாக அந்த விளம்பரத்தில் சொல்லியிருக்கிறது. ராஜாங்க நிர்வாக விஷயத்தில் இந்தியர்களை மேன்மேலும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பதே பிரிடிஷ் ராஜாங்கத்தின் நோக்கமாயிருந்து வந்திருக்கிறது. இந்த விஷயத்தில் 1917-ம் வருஷத்து விளம்பரம் 1861-ம் வருஷத்து ஆக்டின் தொடர்ச்சிதான். இந்நோக்கமானது பிரிடிஷ் அரசாட்சி ஆரம்பித்தது முதல் இருந்துவந்தபோதிலும், 1917-ம் வருஷத்து விளம்பரத்தில் வெளிப்படையான மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது, யதேச்சாதிகாரம் முதன்முதல் இப்போதுதான் ஒழிக்கப்பட்டது என்பதே. இதற்கு முந்தின சீர்திருத்தங்களில் இதைக் கொஞ்சம் கொஞ்சம் வைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்கிலிஷ் ராஜாங்கமானது நன்மை செய்யக்கூடிய யதேச்சாதிகாரம் என்பது சுத்தமாய் விடப்பட்டது. அதற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட அரசாட்சியானது, இங்கிலிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் இந்தியா நாளடைவில் பூர்ணமான ஸ்வராஜ்யம் அடைவதற்கான வழிகளில் அதைச் செலுத்தி நடத்துவதையே தன் விதியாகக்கொண்டிருக்கிறது. இதை நிறைவேற்றவேண்டி, இனிவரும் காலத்தில் மேற்பார்வை செய்யும் அதிகாரமும் ஜனங்கள் தவறிப்போனால் அதில் தலையிட்டு அதை மாற்றும் அதிகாரமும் மட்டும் ராஜாங்கம் தன்னிடம் வைத்துக்கொள்ளும். தாங்கள் செய்த பிரதிக்ஞைகளைப் பூர்த்திசெய்வதற்குக் கூடியசீக்கிரம் கவர்ன்மெண்டார் ஆரம்பிப்



பார்கள். புதிய நோக்கமானது எப்படி வந்ததென்பதைப்பற்றியும் அதன்பிரகாரம் எப்படி 1919-ம் வருஷத்து ஆக்ட் ஏற்பட்டதென்பதைப்பற்றியும் நான் விவரமாய்ச் சொல்லவேண்டியதில்லை. அவைகளெல்லாம் ராஜாங்க கடிதங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளை 1916-ம் வருஷம் மேமாதம் முதல் வெளியிட்டுவந்திருக்கிறோம்.

சட்ட ஸம்மதமான சீர்திருத்தத்தைப்பற்றிய விஷயத்தை நான் முதலில் எடுத்துக்கொண்டேன். அந்த வருஷம் முழுவதும் 1917-ம் வருஷத்து முதல் பாதியிலும், இங்கிலிஷ்காரர் இந்தியாவை ஆளுவதின் நோக்கத்தையும் அதன்படி படிப்படியாய்ச் செய்யவேண்டிய மாறுதல்களையும் வெளியிடும்படிக்கு, அப்படிப்பட்ட காரியங்கள் மஹாராஜ சக்கரவர்த்தியின் ராஜாங்கத்தால்தான் திருப்திகரமாய்ச் செய்யப்படுமென்று தெரிந்து, அந்த ராஜாங்கத்தைக் கேட்டுக்கொண்டு வந்தேன். 1917-ம் ௵ ஆகஸ்ட் ௴ விளம்பரம் பிரசுரித்து, அதை யனுசரித்துச் செய்யவேண்டிய காரியங்களை என்னுடன் ஆலோசித்து மஹாராஜ சக்கரவர்த்தியின் ராஜாங்கத்துக்கு சிபார்சு செய்யும்பொருட்டு என் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்டேட் ஸெக்ரெடரியானவர் அதே வருஷம் நவம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு வந்தார். அவர் மட்டும் அப்படி வராமலிருந்தால் இவ்விஷயத்தைப் பற்றி இன்னும் கூட கடிதப்போக்கு வரத்துத்தான் நடந்துகொண்டிருக்கும். நாங்களிருவரும் இவ்விஷயத்தில் ஏகசித்தத்துடன் ஒத்து வேலை செய்தோம். அபிப்பிராய பேதங்கள் இங்குமங்கும் ஏற்பட்டிருக்கும். எந்தக் காரியத்தில்தான் அப்படியிராது? எங்களுடைய பிரேரிரணைகளும் அவைகளுக்குக் காரணங்களும் ராஜீய அமைப்பு சீர்திருத்தங்களைப்பற்றிய ரிபோர்ட்டில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லோரும் படித்துக் குறைகூறினார்கள். பார்லிமெண்டும் அவைகளை சில விஷயங்களில் மாற்றியிருக்கின்றது. ஆயினும் இரட்டைப் பொறுப்பு ராஜ்யம் என்று சொல்லப்படும் ஏற்பாடே 1919-ம் வருஷத்து ஆக்டின் ஆதாரம்.

எங்களுடைய ஏற்பாட்டைப்பற்றிப் புகழவோ இகழவோ நம் ஸந்ததிகள் தான் செய்யவேண்டும். அவர்கள் என்ன சொல்வார்களென்று எனக்குத் தெரியாது. ஆனால் சில விஷயங்களை நான் சொல்லலாம். 1917-ம் ௵ ஆகஸ்ட் மாதத்து விளம்பரத்தில் வெளியிடப்பட்ட நோக்கத்தைப் பூர்ணமாய் நிறைவேற்றவேண்டுமென்ற உண்மையான எண்ணத்துடன் செய்யப்பட்ட ஏற்பாடு இது. அப்போது செய்த பிரதிக்ஞையைக் குறைத்துவிடவோ ரத்துசெய்யவோ இங்கிலாந்திலாவது இங்கேயாவது எவ்வித பிரயத்தனமும் செய்யப்

படவில்லை. இந்திய ஜனசமூகத்தின் அபிப்பிராயத்தை நாங்கள் கேட்கவில்லை யென்றும் குற்றம் சாட்டக் கூடாது. நாங்கள் செய்த காரியங்களெல்லாம் பகிரங்கமானவை. இந்திய ராஜீய அமைப்புச் சீர்திருத்தத்தைப்பற்றிய ரிபோர்ட்டில் அடங்கிய சமாச்சாரத்தை ஜனங்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் தெரியப்படுத்தினோம். அதன்மேல் வந்த கண்டனங்களை ஸ்டேட் ஸெக்ரெடரிக்கு அனுப்பி அவைகளையும் பிரசுரம் செய்தோம். ஜாயின்ட் கமிட்டியில் சகல வகுப்பினரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கொடுப்பதற்கு வேண்டிய ஸௌகரியங்களை ஏற்படுத்தினோம். ஒவ்வொரு அபிப்பிராயம் முதலியதும் சரியாய் நிறுத்து யோசனைசெய்யப்பட்டது. நாங்கள் எடுத்த வேலையை ஒழுங்காய்ச் செய்துமுடிப்பதற்கு பிரயோஜனப்படக்கூடிய சகல உபாயங்களையும் நாங்கள் அனுஷ்டித்து வந்தோம். நாங்கள் கொடுத்த ராஜீய அமைப்பை இங்கிலாந்து இந்தியா இந்த இரண்டு தேசங்களுக்கும் யோக்கியமாய்ச் செய்வதற்கு எங்களால் கூடியவரையிலும் பிரயத்தனப்பட்டோம்.

இந்தியாவின் பொருட்டு எவ்வளவோ கவலைகாட்டி வந்திருக்கிற மஹாராஜ சக்கரவர்த்தியானவர் நாங்கள் நான்கு வருஷமாய்க் கஷ்டப்பட்டுச் செய்த காரியத்தை ஏற்றுக்கொண்டு, புதிய இந்திய சபைகளைத் திறந்து வைக்கும்படி மஹிமைதங்கிய கானாட்டுக் கோமகனை அனுப்பியிருக்கிறார். இந்தியா அவருக்குப் புதிதல்ல. அவர் இதற்குமுந்தி சுமார் ஐந்து வருஷகாலம் இந்தியாவில் இருந்திருக்கிறார். இந்திய சட்ட சபையில் அவரே ஒரு மெம்பராகவும் இருந்திருக்கிறார். இந்தியர்களை அவருக்குத் தெரியும் இந்தியாவைப்பற்றின விஷயங்களில் அவருக்கிருக்கும் அக்கறை அபாரமானது. நாம் அவரை, மஹாராஜ சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக மாத்திரமன்றி, இந்தியாவின் பழைய உண்மையான மித்திரனாகவும் வரவேற்கிறோம். இப்போது இந்திய ஸ்டேட் கௌன்ஸிலையும் சட்ட சபையையும் திறந்துவைக்கும்படி வெகு சந்தோஷத்துடன் நான் அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.


# மாதர் போதினி

No. 282 ஜூலை 1921 No. 7


## MIRACLES OF FAITH IN CHINA

## சீனாவில் விசுவாசத்தால் நடந்த அற்புதங்கள்

(தொடர்ச்சி)

இதற்குப்பின் சீனாவில் பத்து வருஷம் வேலை செய்தேன். வருஷந்தோறும் ஐந்தாறு வகுப்புகள் நடத்திவந்தேன். யோ. $14^{13,14}$ லிலுள்ள வாக்குத்தத்தங்களை உரித்தாக்கிக்கொண்டு விசுவாசமுள்ள ஜெபத்திற்குப் பலனாக தேவன் கிரியை நடப்பிப்பாரென்று நம்பி எப்போதும் நடந்துகொண்டேன். இக்காலங்களில் நான் நடத்தின வகுப்புகள் எல்லாவற்றிலும் குணப்படாமற்போன ஒருவரும் கிடையாது.

நான் வேலைசெய்த ஒரு கிராமத்தில், சீனபாஷை பேசத்தெரிந்த ஒரு வெள்ளைக்கார அம்மாளுண்டாமே என்ற ஆச்சரியத்தோடு என்னைப் பார்க்க ஓர் பெண் வந்தாள். நான் ஜெபம் கற்றுக்கொடுப்பதைக் கேட்டுக்கொண்டிருந்து பின் தானும் அந்த ஜெபத்தைக் கற்றுக்கொள்ளலாமாவென்று கேட்டாள். 'உனக்கு ஒரு இரட்சகர் வேண்டுமா? அவரை ஏற்றுக்கொள்ள உனக்கு விருப்பமா?' என்று கேட்டேன். ஆம், விருப்பம்தானென்று சொல்லி என் வகுப்பில் சேர்ந்துகொண்டாள். அன்று மாலையிலும் என் வகுப்பில் வந்து உட்கார்ந்தாள். முழங்காற்படியிட்டு ஜெபிப்போமாக என்று சொன்னபோது, இந்தப் பெண்ணும் முழங்காற்படியிட்டு, தேம்பித் தேம்பி அழுது தன் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக்காகக் கெஞ்சி, கர்த்தர் தன் இருதயத்தை சுத்திகரித்து இரட்சிக்கக் கெஞ்சினாள்.

அன்று சாயங்காலம் யோ. $14^{13-14}$ லிலுள்ள வாக்குத்தத்தமான சுதந்தரத்தைப்பற்றிச் சொல்லி, யாராவது ஜெபிக்கக் கேட்கவேண்டிய விஷயமுண்டாவென்று கேட்டேன். உடனே Mrs. Wang என்ற இந்தப் பெண் எழுந்து நின்று, 'கர்த்தராகிய இயேசு என் புருஷனை இரட்சிப்பாரா?' என்றாள். அவர் சர்வவல்லமையுள்ள

தேவன் என்றேன். அதற்கு அவள் 'என் புருஷன் எப்படிப்பட்டவனென்று உங்களுக்குத் தெரியாது. அவன் ஓர் பலத்த குடிகாரன். நான் அவனைக் கலியாணஞ் செய்துகொண்டதுமுதல் இதுவரை அவன் குடியாமல் வீட்டுக்கு வந்த நாள் கிடையாது. எனக்கு இப்போது வயது 45. நான் என் மாமி வீட்டுக்குப் போனபோது 14 வயதுக்குக் கீழ்ப்பட்டவள். என் புருஷன் குடியில் பணத்தை அழிப்பதால் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் மாரிகாலத்தில் போதுமான கம்பளி உடுப்பு கிடையாது. எங்களுக்கு சாப்பாட்டுக்கும் அதிக கஷ்டமாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு மனுஷனைக்கூட இயேசுவானவர் இரட்சிப்பாரா?' என்றாள்.

'ஆம், அவர் இழந்துபோனதைத்தேடவும் இரட்சிக்கவுமே வந்தார்' என்றேன். பின் இதை நீ விசுவாசிக்கிறாயாவென்று கேட்டபோது, அவள் கண்ணீர்விட்டழுது, 'ஆம், விசுவாசிக்கிறேன். ஆனால் நான் படியாதவள், எனக்கு ஜெபிக்கத் தெரியாது, நீங்கள் எனக்காக ஜெபிப்பீர்களா?' என்றாள். இதைப்பற்றி நான் வகுப்பாருக்குச் சொல்லி, ஒவ்வொருவரும் தினந்தோறும் இந்த மனிதன் குணப்படும்வரை ஜெபிப்பதாகத் தீர்மானித்தோம். இவ்விதம் இரண்டு வாரம் ஜெபித்தபின் மற்ற இடங்களிலுள்ள வேலைக்கு நான் திரும்பிப்போக நேரிட்டது.

ஒரு வருஷத்துக்குப் பின் நான் திரும்பி அந்த இடத்துக்கு வந்தபோது Mrs. Wang என்ற அந்தப் பெண் முதலில் ஓடிவந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டு தன் புருஷன் குணப்பட்டதைப் பின்வருமாறு சொன்னாள்:

'ஒரு வருஷத்திற்குமுன், என் இரட்சகரைப்பற்றி உங்கள் வகுப்பில் கற்றுக்கொண்டபின், நான் வீட்டுக்குப்போய் கிறிஸ்தவளாகிவிட்டேனென்று என் புருஷனுக்குச் சொன்னேன். அவர் கோபங்கொண்டு மூர்க்கமாய் என்னை அடித்து, நான் ஒருமாதகாலம் படுக்கைவிட்டு எழும்பக்கூடாமல் இருந்தேன். அக்காலத்தில் தினந்தோறும் என்னைத் திட்டி சாபம்போட்டுக்கொண்டே வந்தார். என் சிறு பையன்தான் எனக்காக சாப்பாடு சமைத்து என்னைப் பராமரித்தான். எனக்கு சுகமான பின்பும் ஆறுமாதங்களாய் துன்பப்படுத்தி வந்தார், அக்காலங்களிலெல்லாம் அவருக்காக ஓயாமல் ஜெபித்துக்கொண்டே வந்தேன். அறியாமல் அவர் அப்படிச் செய்ததால் அவரை மன்னிக்கும்படி தேவனிடத்தில் கேட்டேன்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அவர் பக்கத்திலிருந்த கடையிலிருந்து குடிவெறியின்றி பொழுதோடே வீட்டுக்கு வந்தார். நான்



அவரை அறிந்ததுமுதல் குடிவெறியின்றி அவர் வீடு வந்தது அன்றுதான். நான் அதிசயத்தோடே, 'உங்களுக்கு என்ன?' என்றேன்.

'அது எனக்குத் தெரியாமல் உன்னையே கேட்க வந்தேன். எனக்குப் பைத்தியம்பிடித்துவிட்டதோ?' என்றார்.

'ஏன்? என்ன நேரிட்டது?' என்றேன். 'பெரிய காரியம் நடந்தது. இன்று கடையில் என் வேலையை முடித்துவிட்டு சாராயக்கடைக்குப்போய் வாசலில் காலெடுத்து வைக்குமுன் எனக்குள்ளிருந்து "உள்ளே போகாதே, வீட்டுக்குப் போ; உள்ளேபோகாதே, வீட்டுக்குப் போ" என்ற உரத்தசத்தங் கேட்டது. நான் திடுக்கிட்டதால் என் பை தவறி விழுந்து காசெல்லாம் தரையில் சிதறிவிட்டன. யாரோ பையன்கள் கேலிபண்ணுகிறார்களென்று எண்ணி அமர்ந்திருக்கப் பார்த்தேன். தெருவுக்குப் போய் முற்றமெல்லாம் யாரும் பையன்களுண்டோவென்று தேடிப் பார்த்தேன். சுற்றுமுற்றும் தேடியும் யாருமில்லை. சாராயக்கடையில் அநேகரிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் கேட்டது. மறுபடியும் அங்குமிங்கும் சுற்றிப்பார்த்தேன். நான் மிகவும் கலங்கி, நான் ஓர் மூடனென்றெண்ணினேன். மறுபடியும் வாசலில் கால்வைக்கப் போனபோது அதே சத்தம் முன்னிலும் உரத்ததாயும் தெளிவாயும் "உள்ளே போகாதே, வீட்டுக்குப்போ; உள்ளே போகாதே, வீட்டுக்குப் போ" என்று கேட்டது. நான் அதிகமாய் பயப்படுகிறேன். எனக்குப் பைத்தியம் பிடிக்கப்போகிறதோ, பிடித்துவிட்டதோ? எனக்கு என்னவென்று நினைக்கிறாய்?' என்றார்.

'ஓ, அதென்னவென்று எனக்குத் தெரியும். அது கர்த்தராகிய இயேசுதான். அவர் பரமபிதாவின் குமாரன். உன்னை இரட்சிக்க அவர் சிலுவையில் மரித்தார். நீ சாராயக்கடைக்குள் போய் குடித்து கெட்டுப்போவது அவருக்குப் பிரியமில்லை. உன்னிடத்தில் பேசினது அவர் பரிசுத்தாவியின் சப்தமே' என்றேன். அவர் அதிசயத்தோடு, இயேசுவே அவருடைய இரட்சகரென்று நான் திரும்பத் திரும்பச் சொன்னதை அதிக கவனமாய்க் கேட்டார்.

கடைசியில், 'நீ கற்றிருப்பது சாத்தானுடைய கொள்கையோ?' என்றார்.

'சாத்தானுடையதல்ல, இயேசுவினுடையது' என்றேன்.

'அப்படியானால் இதைப்பற்றி முன்னமே ஏன் சொல்லவில்லை? முன் தெரியாமல் செய்தேன். எனக்கு விளங்கவில்லை. என் ஜீவகாலமெல்லாம் இனி ஒருபோதும் குடிக்கமாட்டேன்' என்றார்.

அப்படியே அவர் ஒருபோதும் குடிக்கவில்லை. அவர் மெய்யாய்க் குணப்பட்டார். அவர் சபையில் சேர்ந்து, தன் குடும்ப

முழுவதும் சபையில் சேர வஷி, தன் பிள்ளைகளை கிறிஸ்தவ பாடசாலைக்கு அனுப்பினுர். அவர் மனைவி அவர் குணப்படுதலுக்குப் பின் நாலு வருஷம் உயிரோடிருந்து, இயேசுவிலும் அவர் இரட்சிக்கும் வல்லமையிலும் களிகூர்ந்து ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவளாய் மரித்தாள். இந்தப் புஸ்தகம் எழுதப்படும் காலத்திலும் அவள் புருஷன் உயிரோடிருக்கிறுர்.

## THE WAY OF LIFE

## ஜீவ வழி

உலகத்திலே அநேக வழிகளுண்டு. வழிகளென்றுல் மார்க்கமென்றர்த்தமாம். சர்வ மார்க்கங்களும் ஒரே இடத்திற்கு குறிக்கப்பட்டதென லகுவாகப் புகல்வர் அநேகர். யாவரேனும் ஒருவர் நின்ற இடத்தில் நின்றபடியே, எல்லா மார்க்கங்களும் ஒரே இடத்தில்தான் முடியுமென்பது அடாது. நம்மில் அநேகர், கொஞ்ச நேர பயணமாகிய ஓர் ஊருக்கு பற்பல கோணமார்க்கமாக வகித்திரும்புவதை முன்னிட்டோ, எல்லா மார்க்கங்களும் ஓரிடத்திற்கென்றியம்புவது? சில சமயம் நாகப்பட்டணத்திற்கென்று நான்கு வழிகளுண்டாயிருந்தால், நாமதேயமும் நான்காயிராமல், நான்கு மார்க்கத்திற்கும் 'நாகப்பட்டணத்திற்கு' என்று போர்ட் (Board) போடப்பட்டிருக்குமென்பது திண்ணம். இந்த மார்க்கங்களிலே நடக்கும் எந்தப் பிரயாணிகளைக் கேட்டாலும், நாகப்பட்டணம் போகிறேமென்பார்களேயொழிய வேறே ஒரு நாமத்தையும் உச்சரிக்க இடமிராது. அப்படியே எந்நகரிலும் நன்னகரென விளங்கும் பொன்னகரொன்றுண்டென யாமறிவோம். இந்நகரமோ முடிவிலாததும், துன்பமுந் துக்கமும் சேராததும், பசியுந் தாகமும் உண்டாகாததும், அற்பத்தில் மறைந்துபோகுஞ் சிற்றின்பத்தையல்ல, நித்திய பேரின்பத்தைத் தரக்கூடியதெனவும் நமக்குத் தெரியவே தெரியும். ஆனுலும், இந்நகரத்தை ஒருவருங் காணக்கூடாமல் எல்லோருங் கெட்டுப்போக வேண்டியவர்களாயிருக்குஞ் சமயம் அதாவது உலகத்தாரெல்லாரும், தங்கள் தங்கள் துர்ச்சிந்தனைகளினுலும், வார்த்தைகளினுலும், கிரியைகளினுலும் தங்களை உண்டாக்கினவரைவிட்டு விலகி தங்கள் சொந்த வழிகளிலே நடந்து வீணிலே அழிந்துபோகவேண்டியவர்களாயிருந்த அச்சமயத்திலே, நன்மைச்சொருபியாகிய பொன்னுட்டரசன், தமக்குள் பொங்கி வழிந்த அன்பினுல், தமது செல்வத்தை செல்வமென்றும் பாராமல்



161316

செலவழித்து மண்ணுட்டார் யாவரும் பொன்னுட்டை யடையும் பொருட்டு, கோணலான வழியையல்ல, ஆனல் நேர்வழியை உண்டு பண்ணுவித்திருக்கிறுர். இதுவே கிறிஸ்து யேசுவென்னுந் திருவழி: பொன்னுட்டுக்குப் போவார் எவரும் போற்றிப் பேசும் வழி: மண்ணுட்டாருக்கென்றமைக்கப்பட்ட மாருத கருணைவழி. இவ்வழியைத் தப்பினுல் பொன்னுட்டுக்கு வேறே எது வழி? மண்ணுடாகிய இவ்வுலகத்திலே எத்திசை எக்கோணத்திலிருந்தென்றுலுஞ் சரி, பொன்னுட்டுக்குப் பிரயாணஞ்செய்பவர் பகரும் வழி கிறிஸ்து யேசுவெனும் ஒரே ஒரு வழியையல்லால் வேறெவ்வழியைப் புகல்வர்? அந்தரத்தோர் பாடிய வழியிது, அருள் வழி. நந்தர்கள் பணிந்தேற்றிய வழியிது, நல்வழி. பந்தபாசத்தை யறுத்து வீடு சேர்ப்பதற்கு, வந்த வழி. சிந்தைக்கினிய வழியிது, மேலான வழி. அகத்தையுடையார் அடைவதற்கு, அரிதான வழி. எந்த நாளிலும் அந்தகாரப்படா வழி, அற்புத வழி. பாவத்தையறுத்துச் சாபத்தைத் தொலைத்த வழி, ஆபத்தற்ற வழி. கள்ளருங் கொள்ளைக்காரரும், செல்லொண்ணு வழி. சத்தியந்தரும் வழியிது, நித்தியவழி. தெளிந்த வழியிது, தேனிலும் இனிய வழி. தூசிலா வழியிது, மாதுர்ய வழி. சிற்றின்பஞ் சேராவழி யிது, சிறந்த வழி. உள்ளத்தில் உண்மையை அமைக்கும் வழியிது, ஒரே வழி. பல கிளைவழி இணைக்கப்படாமல், கோணலும் வளைவுமற்று, பள்ளமுமேடுமற்று, கல்லுமுள் காடுமற்று, தானே தானுக நிற்கும் வழியிது, நேர்வழி. நித்திய ஜீவனைத்தரும் வழியிதுவே, தேவவழி. தங்கள் தங்கள் இச்சைக்கேற்றபடி நடக்க, மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் (நீதி. 14 : 12). ஆண்டவராகிய கர்த்தரால் மாத்திரம் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு (சங். 68 : 20). வழியுஞ் சத்தியமும் ஜீவனுமாயுள்ள கிறிஸ்து யேசுவினுலேயல்லாமல் ஒருவரும் தேவனைத் தரிசிக்கலாகாது (யோவா. 14 : 6). கிறிஸ்து யேசுவெனும் ஜீவவழியைக் கண்டவர்களோ, பொன்னுலகாதிபதியைக் கண்டவர்கள்தான் (யோவா. 14 : 9). ஆனுலும் அநேகர் கண்டும் காணுதவர்களாய், கேட்டும் கேளாதவர்களாய் இருப்பார்கள் (ஏசா. 6 : 9). அவர்கள் இந்நாள்மட்டும் மனம் நொறுங்குண்டதுமில்லை, அவர்கள் பயப்படுகிறதுமில்லை (எரே. 44 : 10). அவர்களுக்கு மாறுதல்கள் நேரிடாததினுல் தேவனுக்கு பயப்படாமற் போகிறுர்கள் (சங். 55 : 19). அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை (சங். 78 : 39). கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது. அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை (எரே. 6 : 10). வெறித்தவனைப்போல அலைந்து தடுமாடு

கிறார்கள். அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது (சங். 107 : 27). மித்திரியே! நாம் இந்தக்கூட்டத்திலே ஒருபோதுஞ் சேரப்படாது. ஏனென்றால் அறியாமற் செய்தவர்கள் அடிக்குப் பாத்திரராயிருந்தபோதிலும், சில அடிகள்தான் அடிக்கப்படும். அறிந்தும் அறியாதார்போல் நடந்துகொள்பவருக்கோ அநேக அடிகள் அடிக்கப்படும் (லூக். 12 : 47). தேவன் நீதியுள்ள நியாயாதிபதி, அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன் (சங். 7 : 11). நம்முடைய தேவன் வருவார், மௌனமாயிரார் (சங். 50 : 3). கொஞ்சகாலத்திலே (அதாவது நினையாத நேரத்திலே) அவருடைய கோபம் பற்றியெரியும். அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள் (சங். 2 : 12). ஆதலால், உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள் எனக் கனிவாய் விளம்பின கடவுளை நமது மெய்யான விசுவாசக்கண்ணினால் தேடி ஜீவவழியிலே ஓடி ஜெயமெனுங் கரங்களால் அவரைப் பிடித்துக்கொள்ளப் போதுமான பலத்தையும் நல்ல உற்சாகத்தையுந் தந்தாதரித்தருள நமது மீட்பர் கிறிஸ்து யேசுவின் மூலமாக ஜீவனுள்ள தேவனை மன்றாடுவோமாக.

Y. M. Solomon.

## TEMPERANCE

## மதுவிலக்கின் மகிமையான 9 கட்டளைகள்

1. மது அருந்தினால் ரோட்டில் தள்ளாடித் தள்ளாடி நடந்து வரும்படி நேரிடும். உன்னைப் பார்த்து அநேகர் நகைப்பார்கள், அநேகர் பரிதபிப்பார்கள். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

2. மது அருந்தினால் நீ தரித்திரனாவாய். உன் வீட்டில் சாப்பாடு செய்யப் போதுமான பணமிராது. குளிருக்குப் போர்த்திக்கொள்ள போர்வையிராது. ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

3. மது அருந்தினால் உன் ஆயுசு நாள் சுருங்கி, உன் மரணநாள் கிட்டிவிடும். மயக்க வஸ்துக்களால் நீ மதிமயங்கி அலைவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

4. மது அருந்தினால் வாதுகள், சண்டைகள் செய்து, தூஷணங்கள் பேசி, கோர்ட்டுக்கும் கச்சேரிக்கும் அலைந்து, கொடிய ஜெயிலில் அடைபடுவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.



5. மது அருந்தினால் நீ உன் மக்களுக்குப் பகைஞனும் உன் மனைவிக்குத் துரோகியுமாவாய். அவர்கள் உன்னைத் தங்கள் மனதில் அவமதிப்பார்கள். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

6. மது அருந்தினால் உன் வேலை ஸ்தலத்தில் உடன் ஊழியரால் இகழ்ச்சியாய் எண்ணப்படுவாய். உன்னில் காணப்படும் குறைகள் குடிவெறியால் உண்டானது என்று சொல்வார்கள். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

7. மது அருந்தினால் நீ கடன்காரனாவாய்; கடன் கொடுத்தவனைக் கண்டால் நீ பயந்து ஒளித்துக்கொள்ள நேரிடும். அவனுக்கு நீ அடிமையாவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

8. மது அருந்தினால் மண்டைகள் உடைந்து, மறதிகள் நேர்ந்து, மடியிலுள்ள காசுகள் மறைந்து, மனக்கிலேச மடைந்து மயங்குவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

9. மது அருந்தினால் மங்கா குடிகாரனெனப் பேரெடுத்து, குடும்பத்திற்கு சிறுமையுண்டாக்குவாய். வீட்டிலும், நாட்டிலும், வெளியிலும், ஊரிலும் குடிகாரன் என அழைக்கப்படுவாய். ஆகையால் மதுவை நீ விரும்பாதே.

## DRINK, THE VENOMOUS SERPENT

## குடிவெறியென்னும் வலுசர்ப்பம்

ஒரு தேசத்தில் ஒரு ராஜகுமாரன் இருந்தான். அவன் தன் அருமையான சிநேகிதனைத் தேடிக்கொண்டுபோகையில், வழியில் ஒரு வலுசர்ப்பம் வாசஞ்செய்கிற இடத்தில் நிற்கவேண்டியதாயிற்று. அவ்வலுசர்ப்பம் பார்வைக்குப் பயங்கரமாயும், முதலையின் பற்களையுடையதாயும், நாசியில் அக்கினியின் புகை குபுகுபென்று எழும்ப வாயை ஆ வென்று திறந்துகொண்டும், பாதங்களில் கழுகுகளின் நகங்களையொத்த நகங்களையுடையதாயும், இன்னும் தேகம் புள்ளி புள்ளியாய் பயங்கர தோற்றமுடையதாயுமிருந்து கொண்டு, அவ்வழியே செல்லும் மனிதரை எடுத்து வெடுக்கென்று விழுங்கிக்கொண்டுமிருந்தது. அச்சமயம் அரசகுமாரன் அங்கு சென்றான். உடனே வலுசர்ப்பம் அவனை விழுங்கும்படி வாயைத் திறந்து பயங்கர சத்தமிட்டுக்கொண்டு அவனை நோக்கி வந்தது. உடனே அரசகுமாரன் பயந்து நடுங்கினானென்றாலும் தைரியங்கொண்டு தன் கையிலுள்ள ஈட்டியை அதின் தொண்டைக்குள்

நட்டமாய்க் குத்தி கிழித்துவிட்டு, தான் வெளியே குதித்துவிட்டான். அப்போது வலுசர்ப்பம் வாயை மூடமுடியாமல் பட்ட அவஸ்தை சொல்லமுடியாது. அது எவ்வளவு அதிகமாய் வாயை மூட பிரயாசப்பட்டதோ அவ்வளவுக்கு ஈட்டி பலமாய்க் குத்தி வேதனைப்படுத்தினது. அந்த வேதனையின் அகோரத்தால் அந்த வலுசர்ப்பம் மாண்டுபோனது. அப்போது அங்கே, 'அதின் பற்களைப் பிடுங்கி விதைத்துப்போடு' என்ற ஓர் சத்தம் கேட்டது. உடனே அவன் அப்படியே விதைத்தான். விதைத்தவுடன் அதிலிருந்து அநேக இராட்சதர் எழும்பினார்கள். பின்னும், 'ஒரு கல்லையெடுத்து அவர்கள் மத்தியில் போடு' என்ற ஓர் சத்தம் உண்டானது. அப்படியே அவன் அவர்கள் மத்தியில் ஒரு கல்லைப்போடவே அவர்களெல்லாரும் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டு மாண்டார்கள். உடனே அங்கிருந்து ஐந்து வீரர் எழும்பினார்கள். அவர்கள் ஒரு அரமனை கட்டி அதில் அந்த ராஜகுமாரனை வைத்து வாழ்த்தி, தங்களுக்கு அவனை ராஜாவாக்கினார்கள். அவன் அவர்களுக்கு ராஜாவாகி உலகம் முழுவதிற்கும் நன்மை செய்துவந்தானாம். இது ஒரு நல்ல கதை. இதின் பொருள் நமக்கு அதிக நன்மையை விளைவிக்காமற் போகாது. ஆகையால் இக்கதையிலுள்ள சில குறிப்பான பதங்களுக்குப் பொருள் பின்வருமாறு:

(1) வலுசர்ப்பம். குடிவெறி என்னும் பேய். இது எத்தனையோ மனுஷரையும், பெண்களையும், வாலிபரையும், பிள்ளைகளையும் நாசப்படுத்துகிறது. அதை ஜெயிப்பது மகா கடினம்.

(2) ராஜகுமாரன். மதுவிலக்குக் கூட்டங்களை ஏற்படுத்தி அதிலுள்ள சிறு வீரர்களை உற்சாகப்படுத்தி வரும் மனிதரையும், மதுபானங்களுக்கு விரோதமாய் கதைகளையும் பாட்டுகளையும் போதனைகளையும் எழுதியனுப்பும் சிநேகிதரையும் குறிக்கும். இவர்களுக்கு ஞானம், தைரியம், சன்மார்க்க பெலம், விடாமுயற்சி, வரம் முதலியவை அதிக அவசியம் வேண்டியது.

(3) பற்கள். கள்ளுக்கடைகளும், சாராயக்கடைகளும், மதுஷாப்புகளும்.

(4) ஐந்து வீரர்கள். குடிவெறியை எதிர்த்து ஜெயிப்பதால் மீதியாகும் பணங்கள், கட்டடங்கள், மனுஷ சத்து, காலங்கள், ரங்கள் என்பவைகளாம்.

உலகத்திலுள்ள எல்லாவகைப் பாவங்களிலும் குடிவெறியென்னும் பாவம் மனுஷருக்கு சரீர தண்டனையையும், ஆத்தும தண்டனையையும் வருவிக்கக் கூடியதாயிருக்கிறது. இந்தப் பரிதாபத்தைப்



பார்த்து, மதுவின்மேல் வெறுப்புள்ள சிநேகிதர் எல்லோரும் இப்பாவம் உலகத்தில் பரம்பாவண்ணம் பிரயத்தனம் செய்வோமாக. கடவுளும் இதற்கு உதவிசெய்வாராக.

## A SUMMER SCHOOL

## நீலகிரியைச் சேர்ந்த கல்லட்டியில் நடந்த ஸ்திரீகளின் ஞானோதய வித்தியாசாலை

Mrs. Moorhouse அம்மாளும், Miss Ling அம்மாளுமே இப்பள்ளிக்கூடத்தை இவ்விடத்தில் நடத்த ஏற்பாடு செய்தவர்கள். அவர்களைக் கர்த்தர் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

இக்கூட்டம் மார்ச் மாதம் 28-ம் தேதி திங்கள் சாயந்திரம் ஆரம்பித்து, வெள்ளி காலை 9 மணிக்கு முடிவுபெற்றது. கூட்டங்களின் அருமையை முதலில் உணராதவர்கள், பின்னால் உணர்ந்து, அதின் இன்பத்தைத் தங்கள் வாயினால் சாட்சியிட்டதினால் அறிகிறோம். இன்னும் அதிகமாய்ப் படித்து அறிவடையவேண்டுமென்னும் ஆவலுள்ளவர்களுக்கு இப்பள்ளிக்கூடத்தினால் மிகுந்த பிரயோஜனமுண்டு என்று தெளிவாய்ச் சொல்லக்கூடும்.

28-ம் தேதி திங்கள் சாயந்திரம் ஆயத்த ஜெபக்கூட்டம் நடந்தது. 'அருள் ஏராளமாய்ப் பெய்யும்' என்னும் பாடலைப் பாடி ஆரம்பித்தபின், ஒருவர் ஜெபம்பண்ண, 'எலியாவின் தேவன்' என்கிற வார்த்தையின்பேரில் வெகு அருமையாய் Miss Grover அம்மாள் பேசினார்கள். 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்' என்று நாம் நம்மைக்குறித்துச் சொல்லக்கூடுமா?

செவ்வாய் காலை 9 மணிக்கு கூடிவந்திருந்த சுமார் 90 பெண்களையும் 6 வகுப்புகளாய்ப் பிரித்து அப்போஸ்தலர் 1—17 அதிகாரங்களிலிருந்தெடுக்கப்பட்ட (1) விசுவாசம், (2). ஜெபம், (3) பரிசுத்தாவி என்னும் பொருட்களின்மேல் 6 உபாத்திச்சிமார் பாடம் நடத்தினார்கள். ஒவ்வொரு நாட் காலையிலும் வகுப்பு ஆரம்பிக்குமுன் அந்த 6 பேரும் கூடி ஆண்டவருடைய சமுகம் காத்திருந்து பரிசுத்தாவியானவரின் ஏவுதலுக்குத் தங்களை முழுவதுமாய்ப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்டதும், கூடிவந்திருந்த அநேக தாய்மாரும் தனித்தனியாய் தேவனோடு சம்பாஷித்து வேண்டிய ஆசீர்வாதங்களுக்காக அவரிடம் மன்றாடி வந்ததுமே, இக்கூட்டத்தின் ஜெயத்துக்குக் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லலாம்.

பகல் 11 மணிக்கு இந்து ஸ்திரீகளுக்கு கடவுள், பாவம், தலைவிதி, மறுஜன்மம், இரட்சிப்பு, வேதம் இவைகளைப்பற்றி எப்படிப் பேசி அவர்களுடைய தப்பிதமான எண்ணங்களை நிராகரிக்க வேண்டுமென்பதைப்பற்றி, ‘இந்து ஸ்திரீகளும் கிறிஸ்தவ சுவிசேஷமும்’ என்னும் புஸ்தகத்தைக்கொண்டு படிப்பிக்கப்பட்டது. இதில் எல்லாரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லி தர்க்கிக்க இடங்கிடைத்த விஷயமானது ஆத்தும ஆதாயம் செய்யும் ஆசையை யாவருக்கும் மூட்டிவிட்டது. இதுவும் தெய்வ கிருபையே.

மேலும் 3 மணிக்கு ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் தலைவனுக்குத் துணைவியானவள், மனைவியாக, இனத்தாளாக, அயலகத்தாளாக, தாயாக எப்படி மாதிரி காண்பிக்கவேண்டுமென்று ஆலோசனைகள் சொன்னதும் பயனற்றதாய்ப் போகவில்லையென்பது அவர்கள் ஊருக்குப் போகும் வழியில் பேசிக்கொண்டுபோன பேச்சினால் தெரிந்தது.

ஒருநாள் ஒரு ஜெபக்கூட்டம் எப்படி நடத்தப்பட்டதென்றால், ஒவ்வொருவரும் தன் தனக்குத் தேவையான நன்மைகளை ஆண்டவரிடம் கேட்க நேரம் போதாதபடியால், தேவாவியானவரின் ஆலோசனையின்பிரகாரம், அவரவர் தங்கள் விண்ணப்பங்களையும் மன்றாட்டுகளையும் எழுதிக்கொடுத்துவிட, அவைகளை ஜெப வித்தானியா போல் ஒருவர் வாசிக்க, மற்றவர்கள் யாவரும் ஒருமனப்பட்டு முழங்காலில் நின்று, மிகவும் ஊக்கத்தோடு, ‘நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே’ என்று பதில் சொல்லவும் இருந்தது. இவ்வித பரிந்துமன்றாடும் ஜெபம் மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டுவருமென்பதற்கு ஐயமில்லை.

அப்பால் சாயந்திரம் 5 மணிக்கு ஒவ்வொருநாளும் ஆவிக்குரிய கூட்டம் ‘எலியாவின் செய்தி,’ ‘எலியாவின் வேலை,’ ‘எலியாவின் ஆவி’ என்னும் மூன்று பொருளின்மேல் மூன்று நாளும் கனம் Grover அம்மாள் நடத்தினார்கள். இவைகளிலிருந்து பேசப்பட்ட பொருள் மிகவும் சிறப்புப் பொருந்தியது. எப்படியெனில்: இருமனம் ஆகாது. எலியாவின் தேவன் தெய்வமானால் அவரைப் பின்பற்றி நன்மைபெறுவது இஷ்டமா? அல்லது பெருமை, தன்னயம், கோபம் முதலிய நம் இருதயத்தில் நாம் விரும்பி வைத்திருக்கும் விக்கிரகங்கள் தெய்வமானால் அந்தப் பாகாலைப் பின்பற்றி அழிந்துபோவது இஷ்டமா என்றும் (1 ராஜா. 18 : 21), எலியா தன் ஊழியத்தில் சோர்ந்துபோன சமயங்களில் கர்த்தர் அவனைப் பெலப்படுத்தினவண்ணம் (ஏசா. 40 : 29) எலியாவின் தேவன் பெலப்படுத்துகிறவர் என்றும் (1 ராஜா. 19 : 1-15), ஆத்தும ஆதாயம் செய்யும் இரட்டிப்



பான ஆவியின் வரம் பெற்ற எலியாவின் ஆவியும் பலமும் உடையவர்களாய் நாமும் அந்த ரக்ஷண்ய சேனாபதிமுன் நடக்கவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசப்பட்டது. (லூக். 1 : 17.)

இவைகளால் மனமாறுதல் அடைந்தவர்களின் தொகை அதிகம். மொத்தத்தில் இக்கூட்டங்களின் போதனையைக் கேட்டவர்களில் அநேகர் பெந்தெகோஸ்தே நாளில் இருதயத்தில் குத்தப்பட்டு, நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டு மனமாறுதல் அடைந்தவண்ணம், தங்கள் மனமாறுதலைத் தங்கள் கிரியைகளின் மூலமாய்க் காட்டி, கூட்டத்துக்கு வந்தவர்கள் தாங்களே தெரிந்துகொள்ளும்படி எழுதித் தொங்கவைத்திருந்த சில நல்ல தீர்மானங்களைக் கிறிஸ்துவுக்கென்று செய்ய உறுதிபண்ணிப்போயிருக்கிறார்கள். கர்த்தர்தாமே அவர்களைப் பெலப்படுத்துவாராக.

செவ்வாய், புதன், வியாழன் இம்மூன்று நாட்களிலும் மேற்சொன்ன மணிக் கிரமப்படி கூட்டங்கள் நடத்தேறியபின், கடைசியாக வெள்ளி காலை 8 மணிக்கு ஒரு ஸ்தோத்திர ஆராதனை வைத்து கூட்டத்தை முடிக்கத் தீர்மானித்திருந்தது. இதற்கிசைவாக யாத். 15 : 1-21 முடிய வாசித்து நமது ஆண்டவரை ஸ்தோத்திரிக்க வேண்டிய வகைகளைப் படித்தோம். அதாவது, வாசிக்கப்பட்ட பாகத்தில், ‘நான் கர்த்தரை அறியேன்’, ‘நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை’ என்று கெர்ச்சித்த சிங்கமாகிய பார்வோனுடன் தேவமனிதனாகிய மோசே போராடி தேவபுத்திரரை விடுவித்து பெரிய சமுத்திரத்தையும் கடந்துவந்தபின் தெய்வவல்லமையை உணர்ந்து, மோசே, இஸ்ரவேலர், மிரியாம், மற்ற ஸ்திரீகள் எல்லாரும் ஏகமாய்ச் சேர்ந்து ஜெயப்பாட்டுப் பாடினதுபோல, இங்கே கூடிவந்திருக்கும் நாமும் சுவாமி நமக்குச் செய்திருக்கும் கிருபைகளை உணர்ந்து ஜெயப்பாட்டுப் பாடவேண்டியதவசியம் என்றும், நம்மை முச்சத்துருக்களின் கையினின்றும் விடுவித்து மாம்சத்துக்கும் ஆவிக்குமுரிய போராட்டத்தில் நாம் ஜெயம்பெற்று நம்மில் பெலமாய் ஆண்டுகொண்டிருந்த குதிரைவீரன் போன்ற வெகுநாள் பாவங்கள், பெரும் பாதகங்கள், நிவிர்த்தியாக்கமுடியாது என்று நாம் எண்ணி வைத்திருந்த அவிசுவாசங்கள், சந்தேகங்களை சமுத்திரத்துக்குள் தள்ளி, அவைகளைக் கல்லைப்போல் ஆழ்த்தி, இனித் தேடிப் பார்த்தாலும் கிடையாமற்போகும்படி பாவமன்னிப்புக் கொடுத்து, நாமும் இச்சமயம் அவரை ஸ்தோத்திரிக்கக் கிருபை கொடுத்த ஆண்டவருக்கு நாம் நமது இருதயமாகிய வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணி (யாத். 15 : 2) நமது பிதாக்களின் தேவனை நமது இனவயதின் அதிபதியாக எண்ணி, அவரை உயர்த்தி அவருக்கு ஸ்தோத்திரப்

பாட்டுப் பாடவேண்டுமென்று ஆவியானவரால் போதிக்கப்பட்டது. அதோடு இப்படி இவ்வுலகில் அவரைத் துதிக்கிற அவரால் மீட்கப் பட்ட பிள்ளைகள் வெளி. 15: 3-ல் சொல்லியபடி மறுமையிலும் மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடும் சிலாக்கியம் பெறுவோம் என்கிற நிச்சயமும் பெற்று முந்தின நாள் செய்த ஜெப வித்தானியாபோல் யாவரும் தாங்கள் பெற்ற நன்மைகளுக்காக அவரைப் போற்றும்படி ஒரு ஸ்தோத்திர வித்தானியாவையும் எழுதி, ஒருவர் வாசிக்க, மற்றவர்கள் 'உம்மைத் துதிக்கிறோம்' என்று துதிக்கவே, எல்லாரும் ஏகமாய் எழும்பி நின்று, 'எல்லாருக்கும் மா உன்னத' என்னும் பாடலால் அந்த மேலோக ராஜனை வாழ்த்தி, இவ்விதமாய் ஸ்தோத்திர ஜெபத்துடன் கூட்டத்தை முடித்தோம். இக்கூட்டங்களில் மிகவும் சிரத்தையாய் உதவி புரிந்த தேவதாசர்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. அவருக்கே எல்லா கனமும் மகிமையும் உண்டாவதாக. 'எங்களுக்கல்ல கர்த்தாவே, எங்களுக்கல்ல . . . உமது நாமத்துக்கே மகிமை வரப் பண்ணும்.'

அங்கிருந்த 4 நாட்களும், கால அட்டவணையின் பிரகாரமே செலவழிக்கப்பட்டன. ஒவ்வொரு நாளிலும் 4 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

கால அட்டவணை :—

| | | | |
|---|---|---|---|
| காலை | 6. 30—7. 30 | வரை | அமைதியான நேரம். (வேதம் வாசித்தல்.) |
| ,, | 9—10. 30 | ,, | முதல் கூட்டம். (அப்போஸ்தலர் நடபடிகளின் பேரில்.) |
| ,, | 11—12 | ,, | இரண்டாம் கூட்டம். |
| பகல் | 12. 30 | ... | பகல் சாப்பாடு. |
| ,, | 1. 30—2. 30 | வரை | அமைதியான நேரம். |
| மாலை | 3—4 | ,, | மூன்றாம் கூட்டம். |
| ,, | 4. 15 | ... | காப்பி. |
| ,, | 4. 30—5. 15 | வரை | உலாவப் போகுதல். |
| ,, | 5. 30—6. 30 | ,, | நான்காம் கூட்டம். |
| ,, | 7. 30—8 | ,, | இராச்சாப்பாடு. |

முதல் கூட்டத்தில் நடந்தவை :—ஆறு வகுப்பாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியான இடத்தில் நடத்தப்பட்டது. அதில் அப்போஸ்தலர் 1-17 அதிகாரங்களிலும் வரும் விசுவாசம், ஜெபம், பரிசுத்தாவி என்னும் பொருட்களின்மீது ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஒவ்



வொரு வகுப்பிலுள்ளவர்களும், தாங்களே மேற்கண்டவைகளைப் பற்றி ஆயத்தம் செய்துகொண்டுபோக அந்தந்த வகுப்புகளில் அதைப் பற்றி போதனைகள் செய்யப்பட்டது.

இக்கூட்டங்களில் அநேக நல்ல போதனைகளைப் படித்துக் கொண்டதோடு, வேத ஆராய்ச்சி செய்யும் விதமும் கற்றுக்கொள்ள ஏதுவாக இருந்தது.

இரண்டாவது கூட்டம் :—இதில் கனம் கிரோவர் அம்மாளவர்கள் இயற்றின 'கிறிஸ்து சுவிசேஷமும், இந்து ஸ்திரீகளின் அபிப்பிராயங்களும்' என்னும் சிறு புஸ்தகம் வாசிக்கப்பட்டு, அதன்பேரில் பலருடைய தாற்பரியங்களும் கொண்டுவரப்பட்டது. அநேக சந்தேகங்கள் நிவிர்த்தியாயின; அநேக புது காரியங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கூட்டங்களை கனம் P. கிரோவர் அம்மாளும், கனம் ஆல்பர்ட் அம்மாளும், முறையே மாறி மாறி நடத்தினார்கள்.

அப்புஸ்தகத்தின் சுருக்கமாவது :—

1. கடவுளைக் குறித்த போதனை
2. பாவத்தைக் குறித்த ,,
3. கர்மத்தைக் குறித்த ,,
4. மறுஜென்மத்தைக் குறித்த ,,
5. இரட்சிப்பைக் குறித்த ,,
6. வேதத்தைக் குறித்த ,, என்பவைகளே.

மாலை 3 மணிக்கு நடத்தப்பட்ட மூன்றாவது கூட்டம் :—

இதை கனம் ஆல்பர்ட் அம்மாளவர்களே நடத்தினார்கள். இதில் தாய்மார் அல்லது மனைவிகள் கவனித்து நடக்கவேண்டிய விஷயத்தைப்பற்றிய போதனைகள் செய்யப்பட்டன. அவற்றின் சுருக்கமாவது :—

I. நன்மனையாளின் இலட்சணங்கள்.
   (a) அவளுக்கிருக்கவேண்டிய குணம்.
   (b) இனத்தாளாக அவளுக்கிருக்கவேண்டியது அல்லது இனத்தாளாக அவள் நடக்கவேண்டிய விதம்.
   (c) அயலகத்தாளாக அவள் நடக்கவேண்டிய விதம்.

ல்ல தாயாக அவள் செய்யவேண்டிய காரியங்கள்.
   தாய் = இராஜாத்தி (ஆள்பவள்).
   பிள்ளைகள் = பிரஜைகள் (குடிஜனங்கள்).

தாயின் பொறுப்பு :—

(1) தன்னையே காத்துக்கொள்ளல். (யோ. 17 : 19.)
(2) பிள்ளைகளுக்காக ஜெபிக்க ஏவப்படல்.
(3) பிள்ளைகளுக்காக ஞானபொக்கிஷம் சேர்த்து வைத்தல். (2 கொரி. 12 : 14.)

சேர்த்துவைக்கவேண்டிய ஞானபொக்கிஷங்கள் :—

1. கீழ்ப்படிதல்.
2. மனத்தாழ்மை அல்லது மரியாதை.
3. உண்மைபேசல்.
4. அன்பு. (ஏழைகள்மீது பரிதாபம்.)
   (மிருகங்களை வதைப்பது தகாதென்று காட்டல்.)
5. தேவபயம்.
6. வேதவாக்கியம் கற்பித்தல்.
7. வேண்டிய அவசியத்தை இயேசுவினிடம் கேட்கப் பழக்குதல்.
8. தீமையான காரியங்களை விட்டுவிடல்.
   (குற்றத்திற்கு சிட்சை.)
9. சிறு பிரசங்கிகளாக்குதல். (தாங்கள் படித்த சிறு வாக்கியங்களை மற்ற பிள்ளைகளுக்கு கற்பிக்கப் பழக்குதல்.)

இவ்விதமான பொக்கிஷங்களை சேர்த்துவைத்தால் பரலோகத்திலும் பொக்கிஷம் உண்டாயிருக்கும்.

மாலை 5–30 மணிக்கு நடத்தப்பட்ட ஆவியின் கூட்டம் :—

இதை கனம் P. கிரோவர் அம்மாளவர்களே நடத்தினார்கள். எலியா தீர்க்கதரிசியின் சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் சில பொருட்களின்மீது போதனைகள் செய்யப்பட்டன :

1. எலியாவின் தேவன்.
2. எலியாவின் செய்கை அல்லது வார்த்தை.
3. எலியாவின் ஊழியம்.
4. எலியாவின் ஆவியும் பலமும்.

சொல்லப்பட்ட போதனைகள் அதிக எழுப்புதலாகவும் ஆத்துமாவுக்குப் பிரயோஜனமாகவும் இருந்தது.

புதன்கிழமை சாயங்கிரம் 3 மணிக் கூட்டத்திற்குப் பதிலாக கல்லட்டி ஆலயத்தில் ஜெப லித்தானியா வாசிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்கு அவசியமான விண்ணப்பங்களை, சரீரத்திற்கடுத்ததும் ஆத்துமாவுக்கடுத்ததுமானவைகளை புஸ்தகத்தில் எழுதிவைக்க,



அவைகளை கனம் ஆல்பர்ட் அம்மாளவர்கள் தேவ சமுகத்தில் வாசித்தார்கள். ஒவ்வொரு விண்ணப்பத்தின் முடிவிலும் 'நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே' என்று மறுமொழி சொல்லப்பட்டது.

கர்த்தரிடத்தில் கேட்டு பெற்றுக்கொண்ட நன்மைகளையும், கூட்டத்தில் அடைந்த நன்மைகளையும், இன்னமும் ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் செய்திருக்கும் இகபர நன்மைகளையும் நினைத்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதும் அவசியமாகையால் அதற்காக கல்லட்டியை விட்டுப் புறப்படும் நாளாகிய ஏப்ரல் மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை காலைநேரம் தெரிந்துகொள்ளப்பட்டது. அங்கு வந்திருந்த யாவரும் தாங்கள் ஸ்தோத்திரிக்கவேண்டிய காரியங்களை முன்போல் புஸ்தகத்தில் எழுதிவைத்த ஸ்தோத்திர ஜெபங்களை கனம் ஆல்பர்ட் அம்மாள் தேவசமுகத்தில் வாசிக்க, ஒவ்வொரு முடிவிலும் 'உம்மைத் துதிக்கிறோம்' என்று சொல்லப்பட்டது.

இப்படியாக அந்த கடைசி ஜெபநேரத்தை ஸ்தோத்திரத்துடன் முடிக்கவும், மாதத்தின் முதல் நாளை ஸ்தோத்திரத்துடன் துடங்கவும் கிருபை செய்த ஆண்டவருக்கு சகல மேன்மையும், துதியும், புகழும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக.

## CHRIST FOR ALL

## கிறிஸ்து எல்லாவிதமான மனுஷர்களுக்காகவும் வந்தார்

இராகம், ஆரபி. ஏகதாளம்.

1. உலகமனைத்தையு முருவா யுண்டுசெய்த வும்பரனே
உந்தன்மறை விரித்துரைக்க ஒருவார்த்தை யானோனே
உலகிலுள்ளோர் பவந்தொலைக்கப் பரன்மடியைத் துறந்தோனே
உகந்துயூதக் குலத்தெழுந்து திருவடிவா யுதித்தோனே.

2. பெருஞ்சுடராய்ப் பேதைகட்குப் பெரும்பாதை காட்டிவைத்தாய்
பெரும்வாரிச் சுனையாகி பெருகி இதயமமைந்தாய்
பேறிலா ளானவர்க்கு பெருங்கலையு மாகிவிட்டாய்
பெரும்பாவம் புரிந்தோர்க்குப் பேழையாகித் துலங்கிகின்றாய்.

3. ஏழையர்க்கு ஏணியாகி யொருசிலுவையில் மரித்தாய்
ஏதுமில்லா வவதிகளை யுன்கரத்தி லெழுதிவைத்தாய்
எவரெவருன் சரணடைகில் என்றென்றுங் காத்தருள்வாய்
என்றுமுன் கண்மணிபோல் ஏற்று வரவணைப்பாய்.

4. ஆடானாய் ஆயனானாய் ஆடுகளைத் தேடலானாய்
ஆதிமனுடனை யுருவா யமைத்த பராபரனானாய்
ஆதம்வினை தீர்ப்பதற்கா யவனுருவா யமைந்துவந்தாய்
ஆசையுட னடிபணிவோர்க் கதிசய துணையுமானாய்.

5. கானகத்தின் ராஜசிங்கம் யூதகுலந் தனிலுதித்தாய்
காப்பதற்குப் பக்தர்தனை பசாசுசிங்கம் தலைசிதைத்தாய்
கரைகடந்துன் கற்பனையை மீறின தோட்டஞ்சென்றாய்
கவலையுற்றுத் துயரடைந்து கடும்வினையை யகலவைத்தாய்.

6. பூங்காவனம் தனில்விளைந்த பொல்லாத பாவத்தாலே
புறம்பாகப் போகலுற்ற மனுடர்களைப் பரந்தனிலே
பாங்காகக் கூட்டிவைக்க எருசலேம் பதியதிலே
புறம்பாகக் குருசதிலே சிறுமையாகத் தியாகமானாய்.

7. பவமதிலே மாண்டவர்க்கு பரிவான மீட்பானாய்
பரிசுத்தம் வேண்டுவோர்க்கு பரிகார ஜெயமானாய்
புவனமதில் பலபாவம் புரிந்தவர்க்காய் பலியானாய்
பற்றிப் பிடித்தவர்க்கு பக்தியாகி மோட்சமானாய்.

8. தாழ்வான புவிக்கிறங்கி தாழ்ந்தோரை மேலேற்றலானாய்
தரித்திர மடைந்தோரை தாங்குதற்கு ஏழையானாய்
திறமாக உயிரோ டெழுந்ததினால் சாவைவென்றாய்
திரும்பவுஞ் ஜெயமாக பரமேறி நீதியானாய்.

9. சத்தானாய் வித்தானாய் சகல சம்பூரணமானாய்
சித்தானாய் சொத்தானாய் சொர்ண மாலையுமானாய்
சித்தமானாய் சீரான முத்திவழி தானானாய்
சித்திரமுஞ் சிலையுமா யென்முன்பு நிற்கலானாய்.

10. விசுவாசந் தனைப்பிடித்து வேண்டிநின்றால் வந்துநிற்பாய்
விளக்கொளியாஞ் சுவிசேஷம் வீசும்வகை காட்டிவைப்பாய்
வேதநாயக னுன்மேல் கவிசாற்ற எற்றிவைத்தாய்
விதவிதமா யுன்கருணை விளம்பிடவுன் னருள்தருவாய்.

V. D. Kailasam.

மாதர் போதினி

No. 283. ஆகஸ்டு 1921 No. 8

## A SUMMER SCHOOL

## ஸ்திரீகளின் ஞானதேர்ச்சிக் கூட்டம்

தேவானுக்கிரகத்தினால் திருநெல்வேலி ஜில்லா நல்லூர் சர்க்கிளைச் சேர்ந்த ஸ்திரீகளுக்கு நல்லூரில் ஜூன் மீ 20-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை வேதாப்பியாச ஞானதேர்ச்சிக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கென்று தூத்துக்குடியிலிருந்து மிஸ் ஹொர்ரிங் அம்மாளவர்களும், பாளையங்கோட்டை தயாஸ்தலத்து மிஸ் மாரிஸ் அம்மாளவர்களும், மிஸிஸ் டேவிட் தாய் அம்மாளும், பி. ஏ. படிக்கிற அவர்கள் குமாரத்தி மேரி டேவிட் அம்மாளும் திங்கள் சாயரக்ஷை நல்லூர் பங்களாவிற்கு வந்து சேர்ந்தனர். அதுபோலவே நல்லூர் சர்க்கிளைச் சேர்ந்த ஆஜாமிகளின் மனைவிகளும் சபைகளிலுள்ள சமுசாரிகளான சகோதரிகளும் ஆத்துமபோதக வாஞ்சையுள்ளவர்களாய் 10 அல்லது 15 மைல் தூரமுள்ள சுற்றுப்பட்டிகளிலிருந்தும் கூடிவந்தனர். உள்ளூர் சகோதரிகளையும் சேர்த்து 100-க்கு அதிகமானவர்கள் கூட்டத்தின் அங்கத்தினரானார்கள். சபாநாயகர்க்கே மகிமை.

திங்கள் இரவு 7 மணிக்கு ஜனங்களை நல்வரவேற்று ஆயத்தக் கூட்டம் வைத்து ஜெபித்து மனோன்மணி தேவதாஸ் அம்மாளவர்கள் 1 பேதுரு 2: 4-12 வரை வாசித்து, அதில் 4-ம் வசனத்தில் 'ஜீவனுள்ள அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்கள்' என்பதின்பேரில்,

I. நாம் எப்படி அவரிடம் சேரலாம் என்றும், இந்துக்களைப் போல் பலி முதலிய சடங்காசாரங்களோடா, அல்லது குடம், சாம்பிராணி, தேங்காய், பழத்தோடா, அல்லது ஆசாரி, பூசாரி, பேயாடி மூலமாயா, அல்லது நாள், சமயம் பார்த்தா? அல்ல அல்ல, எந்த சமயத்திலும் நொறுங்குண்டு பணிந்த இருதயத்தோடே தேவனிடத்தில் சேரவேண்டியது. இந்தக் கூட்டம் நமக்குக் கிடைத்த பெரிய சலாக்கியம்' என்று உணர்வோமாக என்றும்,

II. நாம் எதற்காக அவரிடம் சேரவேண்டுமென்றும் சமயோசிதமாக ஆறு காரியங்களைக் குறித்துப் பேசினார்கள்.

1. இளைப்பாறவும் கற்றுக்கொள்ளவும் மத். 11 : 28.
2. திருப்தியடையவும் (தாகம் தீர்க்கவும்) யோவா. 7 : 37.
3. ஐக்கியமாக (தங்கியிருக்க) யோவா. 1 : 39.
4. உதவிக்காக (சமய சகாயத்திற்காக) எபி. 4: 16.
5. ஊழியம் செய்ய மாற். 1: 17.
6. ஆசீர்வாதம்பெற (நாமும் நம்பிள்ளைகளும்) மாற். 10: 13-16.

நாம் மேற்காட்டிய எல்லாக் காரியங்களுக்காகவும் இயேசுவினிடம் வந்து ஜெபத்தின் மூலமாய் எல்லா நன்மைகளையும், ஆலோசனைகளையும், சுகத்தையும் அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏனெனில், அவர் வல்லமையுள்ளவரும் அன்புள்ளவரும் கிருபைமிகுத்தவருமாய் இருக்கிறார். அவரிடத்தில் நம்பிக்கை வைக்கிறவர்கள் ஒருக்காலும் வெட்கப்பட்டுப்போவதில்லை. ஆகையால் நாம் தைரியமாய் அவருடைய கிருபாசனத்தண்டை சேரக்கடவோம் என்று சகோதரிகளுக்கு உற்சாகமும் எழுப்புதலுமுண்டாகப் பேசினார்கள். மிஸிஸ் டேவிட் அம்மாள் ஜெபம் செய்து, தலத்து குருபத்தினி மனோன்மணி தேவதாஸ் அம்மாள் ஆசீர்வாதம் சொல்ல, ஆராதனை முடிந்தது.

மறுநாள் காலை 8½ மணிக்கு ஜெபக்கூட்டம்.

10 மணிக்கு கூடிவந்திருந்த சகோதரிகளை நாலு வகுப்புகளாகப் பிரித்து வேதத்திலுள்ள ஸ்திரீகளை மாதிரியாக வைத்து ஸ்திரீகளின் நிலைமையைக் குறித்து முதலாம் நாளில்—பாவிகளான ஸ்திரீகள் (திரு) ஏவாள், யேசபேல், ரெபேக்காள் இவர்கள் தங்களை மாத்திரமல்ல மற்றவர்களையும் கெடுத்தார்களென்றும், மகதலேனாமரியாள், சமாரிய ஸ்திரீ, பாவியான ஸ்திரீ முதலானவர்கள் பாவ உணர்வடைந்து மனமாறியபோது மற்றவர்களை எப்படி நல்வழியில் நடத்தக்கூடியவர்களானார்களென்றும்,

இரண்டாம் நாளில் 10 மணிக்கு—சன்மார்க்கமுள்ள ஸ்திரீகளில் பிரிசில்லாள், சிறைப்பட்ட பெண், தீர்க்கதரிசியாகிய அன்னாள், புத்தியுள்ள தெபோராள், பக்தியுள்ள ஐனிக்கேயாள், லேமுவேலின் தாயும் சபைக்கும் தேசத்திற்கும் குடும்பத்திற்கும் பிள்ளைகளுக்கும் நல்வழிகாட்டிகளாய்ப் போதித்து புத்திசொன்னவர்களென்றும்,

மூன்றாம் நாளில் 10 மணிக்கு—ஸ்திரீகள் பரோபகார சிந்தையுள்ளவர்களாயிருந்ததினால் ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் ஆதரவாயும் குருபக்தர்களாயுமிருந்து கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்பவர்களாயிருந்தார்களென்றும், (திரு) சாரிபாத் கைம்பெண், ராகாப், சூனே



மியாள், மார்த்தாள், லீதியாள், தொற்காள், பார்வோனின் குமாரத்தி இவர்கள் கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்த ஸ்திரீகளென்றும், தன் ஜனத்தை இரட்சித்த எஸ்தர் ராணியைக்குறித்தும் பேசி, இவர்களைப் போல நாமும் தேவநாம மகிமைக்கும் பிறருக்கும் நன்மையுண்டாகவும் நம்முடைய பொருட்களையும் காலங்களையும் செலவிட்டு நல்லுபகாரிகளாயும் ஊழியர்களாயும் விளங்குவது நமது கடமை என்றும் வற்புறுத்திப் பேசப்பட்டது.

மதியம் 3 மணிக்கு ஸ்திரீகளுக்கு உதவியாக வைத்தியபோதனையும், கர்ப்பஸ்திரீகளுக்கு அவசியமான சிகிச்சையும், பிரசவகாலங்களில் கவனித்து நடக்கவேண்டிய விஷயங்களும், பிள்ளைகளைப் பரிபாலிக்கவேண்டியதில் நீக்கவேண்டிய துர்ப்பழக்க வழக்கங்களும், அனுகூலமான அனுஷ்டானங்களும் மிஸிஸ் டேவிட் அம்மாளவர்களால் அனுபோகமுறையாய் சொல்லப்பட்டது. பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் சுதந்தரம். அவர்களை கர்த்தருக்கென்று வளர்ப்பது நமது கடமை.

மாலை 6½ மணிக்கு மிஸ் ஹெர்ரிங் அம்மாளவர்கள் பரி. கன்னிமரியம்மாளின் பெற்றோரைப்பற்றியும்; அவர்கள் அழைக்கப்பட்டதுபோல கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார், ஆயத்தமா என்றும், மறுநாள் பரி. கன்னிமரியம்மாளுக்கு துன்பமும் மகிழ்ச்சியுமுண்டாயிருந்ததென்றும் விவரித்து, அவரால் அழைக்கப்பட்டவர்களுக்கும் துன்பமும் மகிழ்ச்சியுமிருக்கிறது, ஆகையால் நாம் எல்லாவற்றிற்கும் நம்மை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டுமென்றும் விளங்கச் சொன்னார்கள்.

மறுநாள் புதன்கிழமை காலை 8½ மணிக்கு கனம் எஸ். எம். தேவதாஸ் ஐயரவர்கள் பரி. நற்கருணை பரிமாறினார்கள். 62 பெண்கள் நற்கருணை பெற்றார்கள். 'இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே.' லூக். 7 : 47-ல் பிரசங்கித்தார்கள்.

அன்று இரவு 8 மணி முதல் 9¾ வரை மனோன்மணி தேவதாஸ் அம்மாளவர்களால் 10 கன்னியாஸ்திரீகளைப் பற்றிய உவமையின் பேரில் பஜனைப் பிரசங்கம் நடத்தப்பட்டது. சங். வேதநாயக சாஸ்திரியாரின் பாடலைப் பாடி விஸ்தரித்துப்பேசினார்கள்.

அந்த மூன்று நாட்களிலும் அடுத்த ஊர்களிலிருந்து வந்தவர்களுக்கு சாப்பாடு முதலானவை ஒழுங்காக நடத்தப்பட்டது. எல்லாரும் சந்தோஷமாய்க் கூடிவந்து ஐக்கியமாக ஜெபிக்கவும், ஞானோபதேசம் கற்றுக்கொள்ளவும், கர்த்தருடைய பந்தியில் சேர்ந்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவும் ஏதுகரமான இந்த ஞானதேர்ச்சிக்கூட்டம் எல்லா இடங்களிலும் நடந்தேறுவதி

ஞல் மாதர்களின் இருள் மருள் நீங்கவும், மாதுவித்திலுதித்த தேவ மைந்தனின் திரு அருள் எங்கும் பொங்கி மங்காமகிமைக்கு நம் மெல்லாரையும் பங்காளராக்கி ஆனந்திக்கச் செய்யவும் அமலன் அருள்புரிவாராக.

D. E. M.

## CHRIST AS A SACRIFICE FOR SIN

## கிறிஸ்து பாவத்தைப்போக்கும் பலியானது

இராகம், நீசங்கராபரணம். இந்துஸ்தான் நடை, சதுஸ்ர ஏகதாளம்.

பல்லவி

மயங்காதே, ஒருபோதும் தியங்காதே, கிறிஸ்தேசு
தாரணி யவதரித்தாரே!
கலங்காதே, உனக்காகத் தியாகபலி யாகத்
தத்தஞ்செய் தெழுந்திருந்தாரே!

1. பாவச்சுமை கனமாகத் தேக்கி கொண்டு
கலங்கித் தவிப்பவரே!
பாவப்பாரம் நீங்கப் பரிகாரம் இங்காயம்
நேரே நோக்குவீரே.

2. மெழுகு அக்கினிக்குமுன் திடனற்றுப் போமாப்போல்
தியங்கித் திரிகுவரே!
மெத்தஆவலாய் நித்தமும் அழைக்கின்ற யேசுசத்தம்
ஆசையுடன் கேளீரோ?

3. தாமரைஇலைத் தண்ணீர் தடுமாறும் போலுள்ளம்
தத்தளிக் கின்றவரே!
தராதலமீதினி யேசுவின் சார்பல்லால் வேறுகதி
யொன்று மில்லையே.

4. கவலைகள், துன்பங்கள், கஷ்டங்கள், நோய்கள்,
தரித்திரங்கொண் டலைவோரே!
கருணைகா னேசு காத்து வுனக்காக
ஏக்கங்கொண் டிருக்கிறாரே.

5. காற்றி லகப்பட்ட கப்பலைப்போல் பாவக்
கேட்டி லகப்பட்டோரே!
காத்து ரட்சிக்க யேசுதன் கரத்தைநீட்டிப்
பார்த்து நிற்கின்றாரே.



6. சேற்றினி லுழல்கின்ற பன்றியைப்போல் பாவப்
பற்றி லகப்பட்டோரே!
சேர்த்துக் கைதூக்கும் அன்பனேசுவின் செயல்
ஆத்திரமா யேற்பீரே.

7. முன்பி னொன்றையும் நினையாம லுன்நேசர்
பாரிசஞ் சேர்ந்திடுவீர்!
முந்தின வுந்தன் நிர்ப்பந்தந் தான்தீர்க்க
வுதிரம்மிகச் சிந்தினாரே.

8. கண், கரம், கால், நினைவால் பலகோடிப்
பாவம் புரிந்தோரே!
கருத்துட னேசு கவலையா யழைக்கிறார்
தாமதமேன் புவியோரே!

9. வர்மம், கொலை, பகை, மாங்கிஷ யிச்சையில்
மார்க்கங்கெட் டலைகின்றோரே!
வஞ்சகம், காமம், களவு, பலபாவம்
விட்டு ரட்சிப்படைவீரே.

10. பாசம் மேலிட்டுப் பரலோகம் விட்டுப்
பாவியுனைத் தேடினாரே!
பட்சமாய் வேதநாயகன் தேவவுரை
சாற்றியறைந்தான் பாரே!

V. D. Kailasam.

## LIFE OF LATE Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

## கனம் அருளம்மாள் ஞானதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

இவர்களுடைய நற்குண நற்கிரியைகளுக்காக குடும்பத்தார்களு இவர்களை அடுத்துப் பழகின ஊரிலுள்ளவர்களும் இவர்களா சகாயம் பெற்றவர்களும் வியந்து புகழ்ந்தாலும், இவர்கள் அதை பெருமையாய் எண்ணிக்கொள்வதுமில்லை அதை மற்றவரிட சொல்லிக்காண்பிப்பதுமில்லை என்பது வியக்கத்தக்கதே. ஏனெனில் கர்த்தர் நமக்குச் செய்யும் உபகாரங்களுக்காக நாம் என்னத்தை

செலுத்தப்போகிறோம் என்பதே. இன்னம் இவர்களின் கடைசிப்
பிரசவத்தில் 40 நாள் ஜன்னிகண்டு புலப்பமும் காய்ச்சலும் அதிக
மாகி மிகுந்த வருத்தமான நிலைமையிலிருந்தபோது வீட்டார் முழு
வதும் கலக்கத்தால் நிறைந்திருந்தார்கள். டாக்டர்களும் வந்து வைத்தி
யம் செய்தார்கள். ஆனால், இந்துக்களான சில ஸ்திரீகளும் வந்து
பார்த்துக் கண்ணீர்விட்டு மனவருத்தப்பட்டு, 'ஐயோ! பிள்ளைகுட்டிக்
காரியாச்சுதே. இது மருந்துக்கெல்லாம கேளாது. ஒரு சின்னக்
காரியம் செய்தால் பிழைத்துக்கொள்வார்களே' என்று இந்த அம்மா
ளின் தாயாரைக் கூப்பிட்டு, 'எங்களிடத்தில் 8 அணா கொடுத்தால்
நாங்கள் அந்தப் பேய்க்கு கோழிக்குஞ்சு, தேங்காய், பழம், சூடம், சாம்
பிராணி வாங்கி படைத்துவிடுகிறோம், நீங்கள் ஒன்றும் செய்யவேண்
டாம், உடனே சுகம் வந்துவிடும். என் வீட்டிலேயும் சுப்பம்மாள்
வீட்டிலேயும் முன் இப்படித்தானிருந்தது, படைப்பு போட்டதும்
சுகம்தான். நீங்கள் நம்புங்கள். இந்த அம்மாளின் உயிருக்கு வந்தது
கோழிக்குஞ்சோடே போகட்டும்' என்று வற்புறுத்தி அலட்டினார்
களாம். அப்போது இந்த அம்மாளுடைய தாயாரும் பக்தியில் சிறந்த
வர்களாதலால் அந்த ஸ்திரீகளைத் தடுத்து, 'என் பிள்ளைபோனாலும்
பேய்க்குக் கொடுக்கவேமாட்டேன். இப்போ என் மகள் இறந்தால்
பரலோக சுதந்தரவாளி ஆகிவிடுவாள். பேய்க்குக் கொடுத்தால் என்
மகளை நரகத்துக்கு அனுப்பி நித்தியவேதனைக்கு ஆளாக்கிவிடுவேனே.
அவள் பிழைப்பது கர்த்தருக்குச் சித்தமானால் சுகம் கொடுப்பார்,
இல்லாவிட்டாலும் அவர் சித்தம் என் பாக்கியம் என்பேன். வந்தவர்
கள் பேசி சந்தடிசெய்யாமல் பார்த்துவிட்டுப் போங்கள்' என்றார்
களாம். அதற்கு அந்த ஸ்திரீகள் 'இந்த அம்மாளுக்குக் கல்நெஞ்சோ!
மகள் உயிரைவிடவா மார்க்கமும் வேதமும் பெரிதாகிவிட்டது!
பிள்ளைகுட்டிகள் பரிதாபம்கூட இல்லையே' என்று முறுமுறுத்துப்
பேசிச் சினங்கொண்டு போய்விட்டார்களாம். ஆனால் அவர்கள்
பர்த்தாவாகிய சங். நோவா ஞானதிக்கசாஸ்திரியாரவர்கள் கண்ணீர்
விட்டு குடும்பத்தோடே ஒருமித்துச் செய்த ஜெபம் இயேசுவின்
பாதம் சென்று இவர்களுக்குப் பூரணசுகம் வந்ததாகச் சொல்லுவார்
கள். இவர்கள் விசுவாசம் எவ்வளவு பலமானது! 'விசுவாசமுள்ள
ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்' என்பது மெய்யல்லவா? இதை
வாசிக்கும் சகோதர சகோதரிகளே! உங்கள் குடும்பத்தில் வியாதி
காலங்களில் இப்படிப்பட்ட சோதனை எண்ணம் உண்டாகுமானால்,
அஞ்சாமல் ஜெபம்செய்து விசுவாசத்தோடே உங்கள் பரமபிதாவை
நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள். அந்தரங்கத்தில் பார்க்கிற தேவன்
உங்களுக்கு வெளியரங்கமான பலன், சுகம், ஜெயம், தைரியம் தந்து



காப்பாற்றுவார்; உலகத்தாரின் மதிகேட்டுக்கு செவிகொடாதபடி
இது உங்களை ஏவக்கடவது. சங்கீதம் 46 வாசித்துப்பார். அது
உன்னை தைரியப்படுத்தும்.

'பிசாசு வந்து சோதித்தால்
மேலே நோக்கிப்பார் நீ
வல்ல தேவ னண்டினால்
வந்து சேருவார்.'

இந்த அம்மாளுடைய குடும்பத்திலுள்ள இன்னுமொரு வழக்க
மென்னவென்றால், வியாதிப்பட்டால் சுகமானபின் கோவிலுக்குப்
போய் காணிக்கை செலுத்தித்தான் பிற்பாடு மற்ற இடங்களுக்குப்
போவார்கள். வீட்டிலே பிள்ளைகளுக்கு வியாதி, பிரசவத்தில்
வருத்தமிருக்கிறதென்றால் உடனே தேவாலயத்துக்கு ஓடி ஜெபித்
துப் பொருத்தனைசெய்துகொண்டு வருவார்கள். அப்படியே சுக
மானவுடனே தாமதமில்லாமல் ஆலயத்தில் போய் காணிக்கை
செலுத்தவும் தவறமாட்டார்கள்.

புது வஸ்திரங்கள் வாங்கினால், அதை முதலாவது உடுத்திக்கொள்
ளும்போது ஜெபம்செய்து கோவிலுக்குப் போய் பிறகு வழக்கமாக
உபயோகிப்பார்கள். கர்த்தர் கொடுக்கும் நன்மைகளை நன்றியறித
லோடே அனுபவிக்கப் பழக்குவார்கள்.

இதை எழுதுகிற நானும் அவ்விதம் பழக்குவிக்கப்பட்ட அவர்கள்
ஏழு குமாரத்திகளில் ஒன்றாயிருக்கக் கிடைத்த சலாக்கியம் தேவ
கிருபையே. பெற்றோர்கள் கிறிஸ்தவர்களாயிருப்பதும் அதிலும்
பக்தி புத்தியில் சிறந்தவர்களாயிருப்பதும் அருமையிலும் அருமையே.
இவர்கள் எங்களைப் பாவதண்டனையிலும் கர்த்தருக்குப் பயப்படும்
பயத்திலும் வளர்த்தார்கள் என்பதை நன்றியறிதலோடு நினைவு
கூருகிறோம்.

சில தாய்மார் புருஷன்மேல் அல்லது மற்றவர்கள் மேலிருக்கும்
கோபத்தைப் பிள்ளைகள்மேல் சாட்டி அவர்களை வைது மூர்க்கத்
தனமாய் அடித்துத் தள்ளி அலைக்கழித்து துன்பப்படுத்துவார்கள்.
காரணமின்றி வார்த்தைகொடுத்தும் பிள்ளைகளைக் கோபப்படுத்துவார்
கள். சிலர் காரணமிருப்பினும் பிள்ளைக்கு இளக்காரம்கொடுத்து
செல்வமாய் வளர்த்துச் சீரழியவிடுவார்கள். 'அழ அழச் சொல்
பவர்கள் அருமைபெறச் சொல்வார்கள், சிரிக்கச் சிரிக்கச் சொல்
பவர்கள் சீரழியச் சொல்வார்கள்' என்று என் தாய் எனக்குப் பல
முறை சொல்வதுண்டு என்பார்கள்.

இப்படி அவர்கள் பிள்ளைகளை பக்தியிலும் புத்தியிலும் தேறும்படி
வளர்த்து 'தேவபக்தியே இந்த ஜீவனுக்கும் இனிவரும் ஜீவனுக்கும்

பிரயோஜனமற்றது' என்று போதித்து வந்தார்கள். தாய்மாரே, பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் சுதந்தரம். அவர்களை அவருக்கென்று வளர்ப்பது நமது முக்கிய கடமை. அவர் நமக்கு கூலியைக் கொடுப்பார். யாத். 2 : 9 பார்க்க.

மேலும் இந்த உலகத்திலிருந்து நாம் மோட்ச சுதந்தரவாளிகளாகப் போகும்போது நம்மோடேகூடக் கொண்டுபோகக்கூடியது நமது அருமைப் பிள்ளைகளேயன்றி வேறொன்றும் கூடவராது. 'நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்' (ஏசா. 8 : 18) என்று தேவசமுகத்தில் மகிழ்ச்சியுடன் சேரலாம். பக்தியில் வளர்க்காவிட்டால் பிள்ளைகளை நரகத்துக்கு நாமே அனுப்புகிற காரணர்களாவோம் என்பதை நாம் மனதில் வைத்துப் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும் அன்பிலும் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய் தேவனுக்கென்று வளர்க்க அவருடைய ஆவியின் அருளைத் தேடிக்கொள்வோமாக. மேலும் சிறுபிள்ளைகளுக்குரிய தேவதூதர்கள் தினந்தோறும் அவரவர்களுடைய காரியாதிகளை நமது பரமபிதாவின் சமுகத்தில் அறிவிக்கும் பணிவிடை ஆவிகளாய் நமது நடுவில் உலாவுகிறார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. (மத். 18 : 10.)

சாமுவேலும் தீமோத்தேயுவும் பக்தியிலே வளர்க்கப்பட்டதால் பிற்பாடு அவர்கள் பெரியமனுஷராய் சபைகளிலே தலைமையானவர்களாய் எண்ணப்பட்டார்களே. இராஜாக்களை, குருமாரை அபிஷேகிக்கும் சலாக்கியமும் கிடைத்ததே. 'என்னை கனம்பண்ணுகிறவர்களை நானும் கனம்பண்ணுவேன்' என்கிறார்.

இப்படியாக இவர்கள் புத்திர பௌத்திர சந்தானங்களைக் கண்டுகளித்து கர்த்தருக்கு மகிமையாக ஜீவித்துவருங்காலத்தில், இயேசு நேசித்த லாசருவுக்கும் வியாதிவந்தது என்றாற்போல, இந்த பக்தியுள்ள குடும்பத்தின் தலைவரும் தேவனுக்கு மகிமையாயுழைத்து தமது பிதாக்களின் ஊழியத்தைச் சோர்வின்றி நடப்பித்தவரும் இந்த அம்மாளின் நேசபர்த்தாவுமாகிய சங். நோவா ஞானதிக்கசாஸ்திரியாரவர்களுக்குப் பலவீனமும் அன்னதுவேஷமுமாகி வியாதிப்படுக்கையிலிருந்தார்கள். அவர்கள் 72 பிராயமுள்ளவர்களாயிருப்பினும் மனோபலமும் திடகாத்திரமுமுள்ளவர்கள். இவர்கள் கண்ணொளி மங்கவுமில்லை, காது மந்தமாகவுமில்லை, தந்தங்கள் விழுந்து முகம் விகாரப்படவுமில்லை. சவுலரசனைப்போல தோளுயர்ந்து சிவந்தமேனியுடன் அழகுவாய்ந்தவர்களாய் இருந்தார்கள். சாகுந்தனிலும் அறிவு குன்றாமல் தன் சாவைக்குறித்து மற்றவர்களுக்கும் அறிவித்து, 'பூலோகத்தார் போகும் வழியே போகிறேன்,



மன்னவர்கள் செத்தார்கள்
மந்திரிகள் மாண்டார்கள்
முன்னிருந்தோரெல்லாரும் முடிந்தார்கள்'

என்று தைரியமாயுரைத்துப் பிள்ளைகளுக்குக் கடிதமெழுதி, 'ஆண்டவரே, உமதடியேனை இப்போது சமாதானத்தோடே போகவிடுகிறீர்' என்று முடித்திருந்தார்கள்.

பிள்ளைகள், 'ஐயாவுக்கு ஏதோ தெரியவில்லை!' என்று தாமசமின்றி வந்துசேர்ந்தார்கள். அப்படியே தன் பிள்ளைகள், சகோதரன் பிள்ளைகள், குடும்பத்தார் எல்லாரும் சூழ்ந்து நிற்க, அவரவர்க்கேற்ற ஆசீர்வசனங்கள் கூறி, தன் அருமையான நேசமுள்ள மனைவியைப் பார்த்து : 'நீ ஒண்டியாய் இந்த வீட்டுக்கு வந்தாய், கர்த்தர் உன்னை ஆசீர்வதித்துப் பெரிய வீட்டுக்காரியாக்கினார், கர்த்தருக்கு நன்றியறிதல் செலுத்தி மனமகிழ்ச்சியாயிரு. நான் கர்த்தருடைய சமுகம் போகிறேன்' என்று சொல்ல, உடனே இவர்கள் தன் பர்த்தாவைப் பார்த்து : 'மன மகிழ்ச்சியாய்ப் போங்கள்' என்று பதிலுரைத்து, 'என் மூச்சொடுங்கும் அந்த கடையிக்கட்டிலும் நீர் எனக்காக இறந்த ரூபாகக் காண்பியும், அப்போ நான் உம்மையே பார்த்துக் கண்ணோக்கி நெஞ்சிலே அணைத்துக்கொண்டு காத்துத் தூங்கட்டும் இயேசுவே' என்ற பிரார்த்தனைக் கவியைச் சொல்ல, அவர்கள் கேட்டுக்கொண்டே யிருந்தாற்போல அந்த ஆத்துமா சந்தோஷமாக இயேசுவின் சமுகம் சென்று நித்திய பேரின்பமடைந்தது.

1902-ம் வருஷம் டிசம்பர் மாதம் 2-ம் தேதி பகல் 4 மணிக்கு குடும்பங்களுக்கும் சபைக்கும் பெரிய துயரமான நாளாக இருந்தது. இந்த அம்மாளுக்கு 62-ம் வயதில் தன் நேச கணவனை இழக்க நேரிட்டதால் அதிக துயரத்துக்குள்ளானார்கள். அவர்கள் மக்கள், மருமக்கள்மாரும் கூடிவந்திருந்து அங்கலாய்த்துத் தேறுதல் சொன்னார்கள். சங். நோவா ஞானதிக்கசாஸ்திரியாரவர்கள் சடலம், மிகுந்த மரியாதையாய் சபையின் சகல ஜனங்களும் ஐயர்மாரும் புடைசூழ்ந்துநிற்க, அவர்கள் பிதா சங். வேதநாயக சாஸ்திரியாரவர்களின் கல்லறைக்கருகில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று க்ஷேமிக்கப்பட்டது.

## THE LATE REV. P. B. RAGAVIAH, B.A.

## சென்னை காலேஜ் சர்ச் போதகராகிய காலம் சென்ற கனம் பி. பீ. ராகவையா ஐயரவர்கள்

கனம் பி. பீ. ராகவய்யா போதகர் சென்னை கிறிஸ்டியன் காலே
ஜில் (The Madras Christian College) பி. ஏ. பரீட்சையில்
தேறி தேவனுடைய ஊழியத்திற்கென்று தன்னை 1895-ம் வருஷத்
தில் ஒப்புக்கொடுத்தார். இவர் உயர்குலத்திலிருந்து கிறிஸ்துமார்க்
கத்தில் அமைந்தவர். இவர் வளர்ந்த இடம் காஞ்சிபுரம். இவரது
பேச்சிலும், போதகத்திலும், ஊழியத்திலும் காணப்பட்டவைகள்
உண்மை, பொறுமை, தாழ்மை, இரக்கம், அன்பு, சாந்தம் என்
பவைகள்தான். ஆகையால் தென்னிந்தியாவில் உழைத்துவந்திருக்
கிற போதகர்களில் இவர் அதிக சிரேஷ்டமானவரென்றே சொல்ல
வேண்டும். இவரில் காணப்பட்ட சுயவெறுப்பை வியந்துகொள்
ளாதவரில்லை. போதித்தபடி சாதித்துக்காட்டி மற்றவர்களுக்குப்
பிரயோஜனமுண்டாக ஜீவித்துவந்தவர். ஊழியமென்றால் எல்லா
ஊழியமும், எல்லா மனுஷருடைய ஊழியமும் ஊழியமாகா.
கனம் ராகவய்யருடைய ஜீவியத்தில் விளங்கின்ற மூன்று
முக்கியமான விஷயங்களை மட்டும் எடுத்துரைத்துப் போதனை யடை
வோமாக.

முதலாவது, சுயவெறுப்பு. போதகருக்கு அழகு சுயவெறுப்பு
என்பதை நன்றாயுணர்ந்து ஜீவித்துவந்தார். இக்குணமில்லாவிடில்
தேவனுக்கு ஊழியம் யார் சரியாய்ச் செய்யக்கூடும்? தம் சபைக்
குட்பட்டவர்களுக்கு நன்மை செய்வதற்கு தன் நேரத்தையும்,
பணத்தையும், சௌக்கியத்தையும் அதிகமாய்த் தத்தஞ்செய்த குரு.
தன் ஆட்டைத் தேடுகிறதற்கு மத்தியான வெயிலென்றாலும், இரா
வென்றாலும் பார்க்கமாட்டார். எப்படியாவது நடந்து தன் சபையின்
மெம்பரை சந்திக்கப்போவார். அவர் உடுப்பு சாதாரணமான உடுப்பு.
சில வேளைகளில் அவரைக் கவனித்தால், தலையெல்லாம் தூசி
தும்புபடிந்தவராயும் அழுக்குவஸ்திரம் தரித்தவராயும் காணப்படுவார்.
ஏன்? சபையார் தங்கள் கடமையை உணராததினாலேதான். முதலா
வது தேவ ஊழியத்தைக் கைபிடித்தபோது மிஷனில் அவருக்கு
ரூ. 100 கொடுத்தார்கள். படிப்படியாய் சுயபரிபாலன சபையான
போதோ அவர் சம்பளம் ஓர் சம்பளமென்றல்ல, 50 ரூ. கொடுத்தா
லும் வாங்கிக்கொள்வார், 40 ரூ. கொடுத்தாலும் வாங்கிக்கொள்வார்.
ஒருதரம் 30 ரூபாயும், இன்னொருதரம் 15 ரூபாயும், மற்றொரு



தரம் 40 ரூபாயும் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளக்கூடிய பொறுமை
யுள்ள போதகர். தம் சம்பளத்தைக் கூட்டுகிறதற்குத் தந்திரமான
முறைகளை உபயோகித்து சபையிலுள்ள சிலரைப் பகைத்தும், சிலரை
இகழ்ந்தும், சிலரைப் புகழ்ந்தும் பணஆதாயஞ் செய்தவரல்ல. வர
வேண்டிய பணம் எப்படிப்போனாலும் கவலைப்படுகிறவரே யல்ல.
வீட்டுக்கு யார் வந்தாலும் ஆகாரம் கொடாமல் அனுப்பினவரே
அல்ல. யாரையும் உபசரிக்கிறதற்கு முந்திக்கொள்வார். யாருக்கும்
உதவிபுரிகிறதற்கு ஆயத்தமுள்ளவராய் இருப்பார்.

இரண்டாவது, தாழ்மை. அவரில் காணப்பட்ட தாழ்மை மாய
மான தாழ்மை யல்ல, தம்மை மறந்த தாழ்மை: யாரும் மதிக்கும்படி
யான சுத்தமான பக்தியினாலுண்டான தாழ்மை. தன் படிப்பை
மறந்து யாரோடும் அதிக அன்பாய்ப் பேசி ஆதாயப்படுத்துவார்.
தான் பிறந்த உயர்குலத்தை எண்ணாத ஓர் நல்ல குரு. எவ்வளவு தாழ்
வான குலத்தினரையும் தம் சொந்த குலத்தினரென்றே நினைத்தவர்.
அவரிடத்தில் பெருமை என்ற ஆகாத குணம் காணப்பட்டதே
இல்லை. பிரசங்கங்கள் ஆழ்ந்த கருத்துள்ளவைகளாய் தெளிவான
நடையிலிருக்கும். பிரசங்கத்தைப்பற்றி பெரும் நினைவு நினைத்து
சபையின் மெம்பர்களை அசட்டைசெய்து ஊழியத்தை அலட்
சியஞ்செய்து சபையிலே குழப்பங்களையும் பிரிவினைகளையும்
உண்டுபண்ணும் போதகர்களைப்போலல்ல. சபையின் மெம்பர்க
ளுக்கு ஏற்றபிரகாரம் அவரவருக்குள் அமைந்திருக்கும் நற்குணத்
துக்குத் தக்கதாக சபையிலே ஓர் நல்ல வேலை கொடுத்து உற்சாகப்
படுத்துகிறவர்.

மூன்றாவது, அன்பு. மனுஷர்கள்பேரில், சபையின் அங்கத்தவர்
கள்பேரில் அதிகமான அன்பு மிகுந்தவர். அவரைப் பார்த்தால்
போதும், பரவசமடையலாம். தம்முடைய எல்லாவிதமான கட
பாடிக்கைகளிலும் இரட்சகருடைய அளவற்ற அன்பை விளக்கிக்
காட்டுவதோடு தம் அருமை இரட்சகர்பேரில் பழுதற்ற அன்பு
வைக்கிறதற்கு மறவாதவரென்று அவர் ஜீவியம் காட்டும். கிறிஸ்து
வை அறியாத கோடிக்கணக்கான புறமதஸ்தர்களுக்குக் கிறிஸ்துவை
தெருக்களினின்று கூறி அறிவிக்கச் சோர்படைகிறதில்லை. அநேகம்
போதகர்களுக்கு தெருவில் நின்று இரட்சிப்பின் செய்தியைச்
சொல்லுகிறதற்கு வெட்கம். எவ்வளவு பெரிய மனுஷனாய், எவ்வளவு
கனம்பெற்ற போதகராய் இருக்கிறோம், தெருவில் நின்று பிரசங்கித்
தால் யார் என்னசொல்லமாட்டார்களென்று கிஞ்சித்தேனும் நினைத்
தவரல்ல. சமயம் வாய்க்கும்போதெல்லாம் கிறிஸ்துவைப் புறமதஸ்
தர்களுக்கு அஞ்சாமல் அறிவிப்பார். சமயம் வாய்த்தாலும் வாய்க்கா

விட்டாலும், கேட்டாலும் கேட்காவிட்டாலும் எப்படியாவது கிறிஸ்து
அறிவிக்கப்படவேணுமென்கிற பொறுப்பை நன்றாய் உணர்ந்த தேவ
ஊழியன். அவரில் கிறிஸ்துமார்க்கத்தைப் பார்க்கலாம், கிறிஸ்தவ
குணங்களைப் பார்க்கலாம், கிறிஸ்துவைப் பார்க்கலாம். போதகன்
மாரும் கிறிஸ்தவர்களும் அவரைப்போலிருப்பார்களானால் கிறிஸ்து
எவ்வளவாய் மகிமைப்படுவார்! கிறிஸ்து மார்க்கம் எவ்வளவாய்ப்
பரம்பும்! இக்காலங்களில் அவரைப்போல் உத்தமபோதகர்கள்தான்
அவசியம். சுயபரிபாலனம் சபையில் நுழைந்து அநேக கேடுகளைச்
செய்துவிட்டது. மிஷனெரிமாரை அவமதித்து அவர்கள் செய்
திருக்கும் நன்மைகளை நன்குமதிக்காமல் நன்றியற்றதனமாய்ப் பேசு
வது வழக்கமாகி வரும் இக்காலத்தில் மிஷனெரிமார்களுடைய
நன்மைகளையும் அவர்களுடைய நற்குணங்களையும் நன்றாய் மதித்து
வந்தவர். இவர் மரித்தது கிறிஸ்தவ சபைகளுக்குப் பெரும் நஷ்ட
மென்றே சொல்லவேணும். தேவன் இப்பேர்ப்பட்ட பக்தியுள்ள
போதகர்களை எழுப்புவாராக.

V. D. Kailasam.

## THE WONDERFUL SAVINGS BANK

## அதிசய நிதி சேர்க்குமிடம்

உலகத்திலே அநேக நிதிசேர்க்குமிடங்கள் (Savings Banks)
உண்டென யாவரும் அறிவோம். ஆனால் சதா நிலைத்திருக்கும்படியான
நிகரற்ற நிதிசேர்க்குமிடம் ஒன்றே ஒன்றுண்டு. அது பலவிடங்களி
லிராமல், பல தேசத்தாருக்காகவும், உலகத்திலுள்ள ஒவ்வொரு மனுஷ
ருக்கென்றும் உன்னதத்திலே வெகு விநோதமாய் கட்டப்பட்டிருக்
கிறது. இந்த நிதிசேர்க்குமிடத்திலே சேர்த்துவைக்க எல்லோருக்கும்
மனதுண்டு, என்றாலும் உண்மையும் உணர்வுமுள்ள மறு ஜென்மி
கள் சிலரேயன்றி வேறெவரும் சேர்த்துவைப்பதற்கு இடம் பெறார்.
உலகத்திலே கள்ளர்கள் புகுந்து கொள்ளையாடுவதைப்போல,
கொள்ளை கொள்பவர் அங்கில்லை; நம்மை மோசம்போக்கும் நாச
தேசத்தின் மக்கள் அங்கே அணுகவொண்ணாது. அந்த நிதிசேர்க்கு
மிடத்திலே, இமைக்கொட்டுமுன் மறைந்துபோகக்கூடிய அதாவது
இம்மைக்குரிய பொருட்களையல்ல, ஆனால் என்றென்றைக்கும்
முடிவிலாத காலமாய் நிலைத்திருக்கும்படியான அதாவது மறுமைக்
குதவும் பொக்கிஷங்களை மாத்திரமே சேர்த்துவைக்க இடம்பெறு
வோம். என்றாலும், அந்த நிதிசேர்க்குமிடத்தின் அதிபதி மகா இரக்க



முள்ளவர், பேரன்பர், பெருஞ் சீமான். இவருக்கிணையானவர் இவ்
வுலகமெங்கினுமில்லை, விண்ணுலகத்திலும் காண்பதரிது. ஆகவே,
நாம் அவருடைய சேர்க்குமிடத்திற் சேர்த்துவைப்பது மறு
மைக்கானவைகளானாலும், அவைகளுக்கு வட்டியாக, நன்மையான
இவ்வுலகப் பொருட்களையெல்லாம், நமக்களிக்குஞ் சித்தமுள்ளவர்
(லூக்கா 12 : 31). இவ்விதமாகப் பெற்று அநுபவிப்போரிடத்தில்
எவராவது சற்று விசாரிப்பாராகில், அவர்கள் அந்தப் புண்ணியரைக்
குனிந்து பணிந்து புகழ்ந்து வாழ்த்தும் வார்த்தையும், தங்களைத்தாம்
மறந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கும் கேர்த்தியும், கேட்போர் அல்லது
காண்போரின் உள்ளத்தைக் கவர்ந்து ஒரே ஒரு நொடிப்பொழுதாயி
னும் கள்ளமற்றிருக்கச் செய்யுமென்பதற்கையமா! இம் மகா கரு
ணையாளர், நாம் எவ்விடத்திலிருந்தாவது கொடுக்கும் அற்ப சொற்ப
தொகையைக்கூட ஆவலாய் தாமே பெற்றுக்கொண்டுபோய், தமது
பொக்கிஷவீட்டிலே நமக்கென்று பதனப்படுத்திவைக்கும் ஒப்பற்ற
குணவர். ஆ, மித்திரியே! இந்த பரமதயாளுவின் சேர்க்குமிடத்திலே,
இந்த நாள் வரையில் நாம் சேகரித்துவைத்தது எவ்வளவோ? என்ன
இவர் நேசம்!! நமது சொந்த நன்மைக்காக, ஏதோ கொஞ்சம்
பொக்கிஷத்தை, இந்தத் தீனதயாளுவினிடத்தில் சேர்த்துவைப்போ
மாகில், இவருக்குண்டாகும் ஆனந்தமென்ன! நமக்காக இக்கருணா
நிதி எடுத்துக்கொள்ளுங் கவலைகளைப் புகலவசமா? மெய்யாகவே
நமது தாயுந்தகப்பனும் கைவிட்டாலும் இவர் நம்மைக் கைவிடார்.
தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களை மரணத்தி
னின்று விடுவிக்கவும், பஞ்சத்திலே அவர்களை உயிரோடே காக்கவும்
கர்த்தருடைய கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது என்
றோதிய பக்தனின் வார்த்தை முக்காலத்திலும் பொய்க்குமா?
(சங். 34:18,19.) உண்மையாகவே, நம்முடைய பொக்கிஷம் எங்கே
யிருக்கிறதோ அங்கே நமது இருதயமுமிருக்கும் (மத். 6 : 21). ஆகை
யால், இந்த நன்மைச் சொரூபியினிடம் நமது இருதயம் நிலைத்திருக்
கும்பொருட்டு, இவருடைய சேர்க்குமிடத்தில், நம்முடைய பொக்
கிஷமாகிய வேததியானம், ஜெபம் முதலியவைகளைச் சேர்த்து
வையாமற் போவோமானால், மெய்யாகவே கெட்டுப்போவோம்
அல்லவா? 'என் வார்த்தைகளைக் கேட்டு அதின்படி செய்கிறவன்
கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ளவனுக்கொப்பா
யிருக்கிறான்' என்றோதிய ஜெகஜோதியாகிய இயேசுநாயகனும்,
'பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்'
என்று நமக்கு நற்புத்தி பகரவில்லையா? (மத். 6 : 20.). இவருடைய
கட்டளையைக் கைக்கொள்ளாரெவரும் எந்த நன்மையைப் பெற்றுக்

கொள்ளப் போகிறார்? 'உள்ளவன் எவனே அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனே அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்' (மத்.13: 12) என்பதின் கருத்தென்ன?

உள்ளவன் என்பது, குமாரனையுடையவன் என்றர்த்தமாம்; இல்லாதவன் என்பது, குமாரனில்லாதவன் என்றர்த்தம். குமாரனையுடையவருக்கோ, நன்மையானவைகளெல்லாம் கொடுக்கப்படும்; கிறிஸ்துயேசுவே எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருப்பார். குமாரன் இல்லாதவர்களோ ஜீவனில்லாதவர்கள். ஜீவனில்லாதவர்களுக்கென்னகொடுத் தென்னபலன்? 'மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?' (மாற். 8: 36.) இது சாதாரணமாக காமுணர்ந்த விஷயந்தானே. மறுமையிலே நாம் அடையவேண்டிய பாக்கியங்களுக்கு, இவ்வுலக பாக்கியங்களை, ஒப்பு உவமையுமாகவுங்கூட வைக்க இயலாதாகையால், தேவனாலருளப்பட்ட நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இவைகளினுதவியைக்கொண்டு கல்வி, கனம், தனம் இவைகளை சேர்த்துக்கொள்வதே நலமென்றெண்ணாமல் குணம், கொடை, பக்தி இவைகளைத் தேடிப்பிடித்துக் கொள்வதே உசிதம். இவைகளுண்டானால் நமக்கு பரலோகத்திலும் மிகுந்த பொக்கிஷமுண்டாயிருக்கும். ஆகையால் கல்வி, கனம், தனம் இவைகளை மாத்திரமல்ல, விசேஷமாக குணம் கொடை, பக்தி இம்மூன்றையும் அதிகமதிகமாய்ச் சேர்த்துவைக்க, மனம், சித்தம், வல்லமையைத் தந்தருள தேவாதி தேவனை, மீட்பர் கிறிஸ்துயேசுவின் மூலமாக அனுதினமும் வேண்டிக்கொள்ளுவோமாக.

## WORLD'S NEWS

## உலக வர்த்தமானங்கள்

ருஷியாவின் நிலைமை. ருஷியாவில் தற்காலத்தில் அதிக கடின பஞ்சமுண்டாகி யிருப்பதால் ஜனங்கள் ஆயிரக்கணக்காக அநுதினமும் மாண்டுபோகிறார்கள். ஏராளமான பேர், பேதியினாலும், விஷஜுரத்தினாலும், கொள்ளைநோயினாலும் கஷ்டப்பட்டு யாதொரு மருந்து உதவியின்றி மடிகிறார்கள். இவ்வளவு துன்பங்களுக்கும் காரணம் ருஷிய ஜனங்கள் துணிந்து நடத்தின அக்கிரமக் கிரியைகள்தான். முப்பதுலட்சம் பேர் இப்பேர்ப்பட்ட துன்பத்தினால் ஆகாரக்குறைவுபட்டு வருந்துகிறார்களாம்.

ஓர் குருட்டுப் பையன். கல்கத்தாவில் குருடர்களுக்கென்று வைத்திருக்கும் பள்ளிக்கூடத்தில் படித்த ஓர் பையன் 1919-ம் வருஷத்தில் மெற்றிக்குலேஷன் பரீட்சையில் தேறி இந்த வருஷம்



F. A. பரீட்சையில் ஓர் பாகம் பாஸாகி யிருக்கிறது, அதிக வியந்து கொள்ளப்படத்தக்கதே.

பஞ்சம ஜாதியார். சென்னையில் திராவிட மகாஜன சங்கம் கூடி ஆதி திராவிடர்களாகிய இச்சாதியாரை இனிமேல் பறையர்களென்றும் பஞ்சமர்களென்றும் கூப்பிடுவது சரியல்ல, ஆனால் அவர்களை ஆதி திராவிடரென அழைக்கவேண்டுமென்று கவர்ன்மென்று சட்ட நிர்ணயசபைக்கு மனுசெய்திருக்கிறார்களாம். எல்லாரும் கிறிஸ்துவின் ஜாதிகளானால் மேன்மை வரும் என்பதை நினையாதார் பலகோடி இந்தியாவிலிருப்பது அதிசயந்தான்.

ரங்கூன் ரெயில்வே விபத்து. ரங்கூனிலிருந்து மாண்டேலேக்குப் பிரயாணஞ் செய்த டிரெயின் இன்னொர் 'சாமான்கள் கொண்டுசென்ற டிரெயினில் மோதினதால் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளில் 60 பேர் மாண்டுபோனார்களாம். அநேகம் பேருக்கு காயமாம். காயம்பட்டவர்களை ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை செய்கிறார்கள்.

புசல் காற்று. கல்கத்தாவில் பெரும் புசலெழும்பி அநேகம் மரங்களைச் சாய்த்து தள்ளிவிட்டது. ரோட்டுகளில் ஜலமதிகம்.

ரெயில்வே கொள்ளை. பிரான்ஸ் தலைநகரி பாரீஸ் பட்டணத்திலிருந்து மார்சேயில்ஸுக்குப் போன டிரெயினை கொள்ளைக்காரர்கள் நிறுத்திப் பிரயாணிகளுடைய பொருள்களை அபகரித்துக் கொண்டார்கள். இரண்டு யுத்தவீரர்கள் எதிர்த்து சண்டை செய்யும் போது கொள்ளைக்காரர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் ஒரு ஆங்கிலவீரன் உயிர்துறந்தானாம்.

பெண்களுக்கு உயர்தரக்கல்வி. பெண்களுக்கு உயர்ந்த கல்வி கொடுக்கவேண்டுமென்று அநேகம் ஏற்பாடுகள் கவர்ன்மென்றார் செய்துவருகிறார்கள். இரண்டு கலாசாலைகள் சென்னையில் ஏற்பாடாகி அநேக வருஷங்கள் நல்ல பலன் கிடைத்திருக்கின்றன.

## STAMPS FOR LETTERS AND POST CARDS

## கடிதங்களுக்கும் தபால் கார்டுகளுக்கும் ஒட்டவேண்டிய ஸ்டாம்புகள்

## NEW RULES

## புதிய சட்டங்கள்

உங்களுடைய அயலாரையும் தயவுசெய்து எச்சரிக்கவும்

1921-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ம் தேதி முதற்கொண்டும் அதன் பிற்பாடும், இந்தியாவில், அடியில்கூறிய ஸ்டாம்புகள் தபாலுக்கு ஒட்டவேண்டியவையாகும் :—

ல் கார்டுகள் முன்போலவே ... ... ... ½ அணா.

### கடிதங்கள்

$\frac{1}{2}$ தோலா இடைக்கு மேற்படாத கடிதத்திற்கு ... $\frac{1}{2}$ அணா.

$\frac{1}{2}$ தோலாவுக்குமேல் 1 தோலாவுக்கு உட்பட்ட கடிதத்திற்கு ... ... ... ... ... $\frac{3}{4}$ அணா.

1 தோலா இடைக்குமேல் $2\frac{1}{2}$ தோலா வரைக்கும் உள்ள கடிதத்திற்கு ... ... ... ... 1 அணா.

இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவுக்காவது அதன் பாகத்திற்காவது ... ... ... 1 அணா.

### பத்திரிகைகள்

8 தோலா இடைக்கு மேற்படாதவைகளுக்கு ... $\frac{1}{4}$ அணா.

8 தோலாவுக்கு மேற்பட்டு 20 தோலா வரைக்கும் உள்ள பத்திரிகைகளுக்கு ... ... ... $\frac{1}{2}$ அணா.

20 தோலாவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலா இடைக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ ... $\frac{1}{2}$ அணா.

### புஸ்தகங்களும் மாதிரி கட்டுகளும்

ஒவ்வொரு ஐந்து தோலா இடைக்கும் அதன் பாகத்திற்கும் $\frac{1}{2}$ அணா.

### மணி ஆர்டர்கள்

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டபடி கமிஷன் சார்ஜ் வாங்கப்படும்.

10 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு ... ... 2 அணா.

10 ரூபாய்க்குமேல் 25 ரூபாய்வரைக்கும் ... ... 4 அணா.

25 ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி ரூபாய் 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய் மேற்படாவிட்டால் 2 அணாவும், சார்ஜ் செய்யப்படும்.

### வீ. பீ. மூல்யமாய் அனுப்பப்பட்ட சாமான்கள்

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்ட வீதம் வீ. பீ. சாமான்களின் தொகையின்மேல், சார்ஜ்செய்யப்படும்.

வீ. பீ. சாமான்களின் பேரில் வசூல் செய்யவேண்டிய பணம் 10 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ... 2 அணா.

10 ரூபாய்க்கு மேற்பட்டும் 25 ரூபாய் வரைக்குமிருந்தால் 4 அணா.

25 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் 2 அணாவும் சார்ஜ் செய்யப்படும்.

C. L. S. PRESS, MADRAS—1921


# மாதர் போதினி

No. 284 செப்டெம்பர் 1921 No. 9


## THE KING AND THE PALACE OF FLESH

## மாமிச மாளிகையும் அதின் அரசனும்

விதவிதமாகவும் விநோதமாகவுங் கட்டப்பட்டுள்ள மாளிகைகள் பல உண்டு என்றாலும் மாமிச மாளிகையைப்போல் சிறப்புடையது இப்பிரபஞ்சத்தில் இல்லை. இம்மாட்சிமையான மாளிகையிலே மந்திரி பிரதானிகள் புடைசூழ வாழ்ந்துவரும் பிரபுவுக்கு 'இருதயம்' என நாமம் சூட்டப்பட்டிருக்கிறது. இவருடைய கண்ணுக்கு மணியைப்போன்ற அமைச்சன் 'நினைவு' என்பவரே. சில சமயம் இவர் 'எண்ணம்' என்றழைக்கப்படுவதுமுண்டு. நினைவென்னும் இந்த மந்திரி, இருதயமெனும் தனதரசனுடைய இஷ்டத்திற்கு நஷ்டம் உண்டாக இடங்கொடுப்பதைப்பார்க்கிலும் தனதாவியைத் தியாகஞ்செய்வதே நலம் என விரதம்பூண்டவர். இவருடைய உள்ளான உபாய தந்திரங்களை உணர்ந்து ஓதக்கூடியவர் ஒருவர் இத்தாரணியில் இல்லை. இவர் 'கண்', 'செவி' என்னும் இரண்டு போர்ச்சேவகரை விசேஷமாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். இவ்விருவரும் இருதயமெனும் தங்கள் அரசனுக்கு உலகத்திலுள்ள சகலத்தையும் காண்பிக்கவும் தெரிவிக்கவும் மா பிரயோஜனமுள்ளவர்களானாலும் இவர்கள் அப்படிச் செய்யாமல், தங்கள் மன்னனாகிய இருதயம் என்பவருக்குப் பிரியம் எவைகளோ அவைகளை மாத்திரம் அறிவித்து, மற்றவைகளைக் கண்டும் காணாதவர்கள்போலவும், கேட்டும் கேளாதவர்கள்போலவும் இருந்துவிடுவது என்ன விபரீதம்! வேளாவேளையில் இருதயம் என்னும் மன்னனுக்கு ஆகாத ஏதாவதொன்றை கண் அல்லது செவி என்னுஞ் சேவகர்கள் காண்பித்து அல்லது தெரிவித்து விடுவார்களாயின் அவர் ஆருத்துயரத்தில் அழுந்திக் கிடப்பதுமுண்டு. ஆஹா! இவ்வித காலங்களில்தான், இருதயமென்னும் மகிபனைத் தேற்ற எண்ணம் என்னும் மந்திரி எடுத்துக்கொள்ளும் பிரயாசங்களைக் காணலாம். இருதயமெனும் பிரபு தமக்

குச் சித்தமானதை எண்ணம் எனும் தமது மந்திரியின்மூலமாகவே
முடித்துக்கொள்வதுண்மையானாலும், ஏதோ இடறி பிடிபடுங்காலை
யில் என்னை யறியாமலே இது தீர்ந்தது எனப் பகருவது எண்ணம்
எனும் மந்திரியின் இயல்பு. எண்ணம் என்பவர் தனது அண்ணல்
இருதயம் என்பவரின் சித்தத்தை நிறைவேற்ற எழும்போதே, கண்,
செவி, வாய், மூக்கு, நாவு, கை, கால் என்பவர்களும் மற்று
முள்ள ஊழியர் யாவரும் தங்களுக்கு என்ன கட்டளை விதிக்கப்
படுமோவென எதிர்பார்த்த வண்ணமாக நிற்பார்களாயின் இவரு
டைய பெருமையை எவரால் சொல்லிமுடியும்!

எண்ணம் என்பவரின் உத்தரவின்றி ஒருவரும் ஒன்றையுஞ்
செய்யார்களென்பது சரியே, ஆனால் ஏதோ அபூர்வமாய் தவறிவிடு
வதுமுண்டு. இக்காலங்களில் அற்ப செயல்களே ஒழிய வேறொன்
றும் நிறைவேறாது. சில சமயங்களில் பயம் என்பவர் எதிர்படுவா
ரானால், தான் விரும்பாத ஒன்றை மற்றவர்கள் செய்வதற்கு இடங்
கொடுத்து சற்று ஒதுங்கி நிற்கும் குணம் இந்த எண்ணம் எனும்
மந்திரிக்குண்டு. எண்ணம் எனும் இந்த மந்திரி எல்லாருக்கும் வேலை
கொடுக்க மறந்தாலும் நாவு எனும் விசேஷித்த தூதனை ஒருபோதும்
மறப்பதில்லை. நாவெனுந் தூதனுக்கு நிகரான தந்திரசாலி ஒருவரை
மாமிச மாளிகையிற் தேடினுங் காண்பதரிது. இந்த தூதன் வேளைக்
கொரு வேஷமெடுத்து அநேகரை மோசம் போக்குவதிலேயே
தன் நாட்களைக் கழித்து விடுவதுமுண்டு. விசேஷமாக மற்றவர்
களுக்கு நேரிடும் பெருமையற்ற காரியங்களை எடுத்துப் பேசி,
பரிதபிப்பவன்போல் நடித்து, உள்ளத்திலே பெரும்பகையை வைத்
திருப்பவன் இவன். சில சமயம் நினைவென்னும் மந்திரி எழுந்து
நின்று கோபமெனும் சேனைத்தலைவனைக் கூப்பிட்டு போர்க்களத்
திற்கு அனுப்பும்போது, எல்லாருக்கும் முன்னே எதிரியின் படைக்
குள் பாய்ந்துபோய், வார்த்தையெனுங் கூரிய அம்புகளால் அநேகரை
வதைப்பவன் நாவென்னும் போர்ச்சேவகனே. நாவென்னுந் தூத
னால் கெட்டுப்போனவர்கள் அநேகம் பேர். இவருடைய கூரிய
அம்பாகிய வார்த்தையாற் புண்பட்டவர்கள் பிழைப்பதரிது. பொறா
மையெனுஞ் சேனைத்தலைவனால், மாமிச மாளிகையின் போர்ச்சேவ
கர்கள் நடத்தப்படும்போதோ, நாவென்னுஞ் சேவகன், உணர்வு,
அச்சம், நாணம் என்பவைகளை முற்றிலும் விட்டு, தன்னைத்தான்
மறந்தவனாக, முரட்டுமொழி, வஞ்சகச்சொல், நியாயக்கேடு என
வழங்கப்பட்ட அக்கினியாஸ்திரங்களை சரமாரியாகப் பெய்வார். கண்,
செவி, கை, கால் என்னும் போர்வீரர்களும் மற்றுமுள்ள பராக்கிரம
சாலிகளும் அநேக காரியங்களை நடப்பித்துவந்தாலும் நாவென்பவரைப்



போன்ற வல்லவர்களன்று. நிற்க, 'புருவம்' எனப் பெயர்பூண்ட
ஓர் போர்ச்சேவகனுமுண்டு; இவனையேநு எண்ணுவதற்கு எம்மாத்திர
மென்றே சொல்லவேண்டும். ஆனாலும் இவன் பெருமையெனுஞ்
சேனைத்தலைவனால் நடத்தப்படும்போது, தனது வளைந்த உடலை
மேலும் மேலும் வளையவும் குறுங்கவுஞ் செய்து, தனக்கு எதிர்
நோக்குபவர் எத்தகைய சிறப்பும் செல்வமு முடையாரானாலும்,
சற்றேனும் எண்ணமற் அவர்கள் பதறும்படியாய், அலட்சியமெனும்
அம்பை எய்வது இவனுக்கு மகா கஷ்டமானதன்று.
மெய்யாகவே போர்ச்சேவகர்களை உற்சாகப்படுத்துவதில்
பெருமையெனுஞ் சேனைத்தலைவனைப்போல் வேறொருவருங் கிடை
யாது. இச்சேனைத்தலைவன் ஒவ்வொரு போர்வீரர்களுக்குமுள்ள
அழகு, ஆண்மை, கல்வி, செல்வம் இவைகளை, இருப்பதற்கு எண்
மடங்கதிகமாய் எடுத்துக் காட்டி, அவரவர்கள் தங்களைத் தாங்களே
எண்ணுவதற்கதிகமாக எண்ணி இறுமாப்படையச் செய்யும் வல்
லமையுடையவரென்பதினால் மாத்திரமே இவர் மகா சுத்தவீரன்
ஏனக் காணப்படாதிருப்பாரோ? மேட்டிமையான கண் வணங்கா
கழுத்து, கேளாச் செவி, மதியாத் தலை (தலை = அறிவு) இன்னும்
இப்படிப்பட்ட பட்டங்களை போர்ச்சேவகர்கள் பெறுவது பெருமை
யெனுஞ் சேனைத்தலைவரின் புண்ணியத்தினாலல்லவா? ஆனாலும்
மித்திரியே! நமது மாமிச மாளிகையின் போர்ச்சேவகர்கள், அன்பு,
அருள், அடக்கம், ஒழுக்கம், வாய்மை என இனிய பெயர்வகித்த
சேனைத்தலைவர்களால் ஆளப்படவேண்டும். இவர்களுடைய குணங்
கள் மாறாதிருக்க சுத்த இருதயம் எனும் அரசனையே முடி சூட்ட
வேண்டும். இந்த நல் வேந்தனை நமது மாமிச மாளிகைக்குள்
அரசுபுரியச்செய்வது வல்லதேவன்தம்மாலானதேயல்லால் நம்மா
லாவது வேறெவராலாவது கூடியதன்றே. ஆகவே எல்லாம் படைத்
துப் பின் பொல்லார் யாவரும் வானடைய தம்மைத்தாமே சிலுவை
யின் மரணத்திற் கொப்புக்கொடுத்து மூன்றும் நாள் மரணத்தை
ஜெயித்து உயிர்த்து பரமேறி தமது பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து
நமக்காக வேண்டுதல் செய்யும் கருணைக்கடவுள், நமது இயேசு
ரட்சகரின் திருத்தாளைத் துதித்தேற்றுவோமாக.

Solomon.

## LIFE OF LATE
## Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

# கனம் அருளம்மாள் ஞானதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

தன் கணவன் இறந்த அன்று அவர்கள் ஏகபுத்திரனாகிய வேதானந்தம் தேவசகாயம் என்பவருக்கு பிதாக்கள் ஊழிய வரிசையில் நியமுகம்செய்து சாஸ்திரியார் பட்டமும் சூட்டி, அவர்களுடைய பிதாக்களைப்போல இந்த வேதானந்த சாஸ்திரியாரும் ஞானச்சதுர்ப் பிரசங்கசாலையில் பிரசங்கிக்கவும் சபையின் நடுவே ஊழியம் செய்யவும் குருமார் பிரபுக்கள் சபையாரும் ஒருமித்து அங்கிகாரம் செய்தனர். தந்தையின் ஊழியம் செய்ய ஏகமைந்தன் அருகானதும் அந்த அம்மாளுக்குத் துன்பத்தில் ஜோதி தோன்றினதுபோலாயிற்று. இவர்கள் தன் பத்தாவை இழந்து துயரசாகரத்தில் மூழ்கியிருந்த போதிலும் நம்பிக்கையற்றவர்களைப்போலல்ல, ஏனெனில் அதற்கடுத்த ஓய்வுநாளில் தன் பிள்ளைகளைப் பார்த்து, 'இன்று எல்லாரும் கோவிலுக்குப் போங்கள்; நம்முடைய சுமைதாங்கி கர்த்தர் தான்; அவரிடத்தில் போனால்தான் நமது கவலை நீங்கும், துக்கம் மாறும்; ஆதலின் தேவனிடத்தில் போய் ஜெபித்து வாருங்கள்' என்று சொல்லி அனுப்பினார்கள். அப்படியே வீட்டிலுள்ள எல்லாரும் கோவிலுக்குப் போய் வந்தார்கள். தஞ்சை குருவாகிய கனம் பினேக் ஐயரவர்கள் சங். நோவா ஞானதிக்க சாஸ்திரியாரவர்கள் மரணத்தைக் குறித்து 'என் ஆலயத்தின் அலங்காரமானவர், கோவிலுக்கும் சபைக்கும் பெரிய ஆசீர்வாதமானவரை இழந்துபோய்விட்டோம்' என்று அனுதாபப்பட்டாராம். ஏனெனில், அவர்கள் கவிப்பிரசங்க சாஸ்திரியார் எனப் பேர்பற்று பிரசங்க சாதுரியமுள்ளவர்களாய் இருந்தார்கள். இவர்கள் பின்னடியாருக்கு உலகப் பிரகாரமான சொத்து சுதந்தரங்கள் சேர்த்து மீதி வைக்காவிடினும் கர்த்தரே இவர்கள் பங்கும் சுதந்தரமுமாயிருந்து அன்றாடக போஷிப்புகள் அன்ன வஸ்திரம் குறைவுபடாது நடத்திவந்தார். இவர்கள் தம்பி சங். எலியா தேவசிகாமணி சாஸ்திரியாரவர்களும் தன் அண்ணியாரவர்களை மிக கண்ணியமாய் நடத்திவந்தார்கள். பொதுவாக ஊர் ஜனங்களும் குடும்பத்தார்களும் இவர்கள் சொல்லை மதித்து மரியாதையாய் நடத்திவந்தார்கள்.



இவர்கள் துன்பகாலத்திலும் பாட்டு, பிரசங்கம், குடும்ப ஜெப
முறை தவறாமல் நடத்திவருவார்கள். இந்த அம்மாள் எல்லா வெள்
ளிக்கிழமையிலும் உபவாசமாக இருந்து தபசு. காலங்களில் ஜெபத்
தில் தரித்திருந்து 3 மணிக்குமேல் ஆகாரம் சாப்பிடுவார்கள். தேவ
நற்கருணை சேரும்போதும் உபவாசமாயிருந்து ஸ்நானம் செய்து
சுத்த வஸ்திரம் தரித்து சேருவார்கள். எப்போதும் சுத்தமாயிருக்க
விரும்புவார்கள். 'மனம்போல வாழ்வு' என்றாற்போல, இவர்கள்
தன் நேச பத்தாவை இழந்துபோனாலும் என்றும் மாறாத இரட்சகரைப்
பற்றிக்கொண்டதினால் தாழ்ச்சியின்றி குறைபாடின்றி எல்லாம்
ஒழுங்காய் நடத்தும்படி அவர்களின் ஏகபுத்திரனும் அவர் மனைவி
யும் கரிசனையாயிருந்தார்கள். அன்றியும் அவர்கள் பெண்மக்களில்
தகுதியுள்ளவர்களும், சகோதரி மக்களில் எஸ்தர் கொர்நெலியுஸ்
அம்மாளும், இவர்கள் மகள் Mrs. பால் அப்பாசாமி சொரணம் அம்
மாளும் மாதாந்தர பண உதவி செய்துவந்தார்கள். பிள்ளைகளும் மற்ற
வர்களும் அனுப்பும் வஸ்திரங்களுக்காகவும் பண உதவிகளுக்காகவும்
நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்து அவர்களுக்காக ஜெபித்து, தனக்கு
கிடைத்ததில் ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்து சந்தோ
ஷப்படுவார்கள். எந்த நன்மைகளிலும் ஏழைகளின் தருமத்தை
மறக்கவேமாட்டார்கள். ஏனெனில், ஏழைகளுக்குக் கொடுக்கிறவன்
கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்.

ஆண்டவர் கடைசி நியாயத்தீர்ப்புநாளில் பத்துக்கற்பனைகளின்
படி நடந்தாயா என்னாமல் 'பசியாயிருந்தேன், எனக்கு சாப்பாடு
கொடுத்தீர்களில்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்க
ளில்லை; நிர்வாணமாய் இருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்க
ளில்லை; வியாதியாயும் காவலில் அடைபட்டுமிருந்தேன், என்னைப்
பார்க்க வந்தீர்களில்லை' என்று குறைகூறாதபடி, காலம் இருக்கும்
போதே நாம் தேவனுக்கும் பிறருக்கும் செய்யவேண்டிய கடமை
களைச் செய்ய தவறாதிருப்போமாக. ஏனெனில், 'கிரியை இல்லாத
விசுவாசம் செத்ததாயிருக்கிறது'; அன்றியும் 'கிரியை செய்யக்
கூடாத இராக்காலம் வருமே', அதற்கு முன்னதாக நாம் செய்ய
வேண்டிய நன்மையான காரியங்களைச் செய்யவேண்டும்.

அந்தியகாலம் இவர்களுக்கு என்பது வயதானபோது பலவீன
மாகி கோவிலுக்கு நடந்துபோகக் கூடாமல் தள்ளாண்மையாயிற்று.
அப்போ கோவில் முடிந்து வரும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளைப்
பார்த்து, 'இன்றைக்கு யார் பிரசங்கம், என்ன வாக்கியத்தில், பிரசங்
கத்தில் என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டது' என்று விவரமாய்க்
கேட்பார்கள். அதினால் பிள்ளைகள் யாவரும் பிரசங்கத்தைக் கவன

மாய்க் கேட்டு அம்மாச்சிக்கு வந்து சொல்ல முந்திக்கொள்வது வழக்கம். சிலவேளை 'நான் பாவி, கோவிலுக்கு வரக்கூடாமலிருக்கிறேனே' என்பார்கள். பிற்பாடு இருமுறை மரணத்திற்கேதுவான வியாதிப்பட்டார்கள். தேவகற்கருணை வீட்டிலேயே குடும்பத்துடன் சேர்ந்தார்கள். பிள்ளைகளும் கூடிவந்து அவரவர்க்கேற்ற ஆசீர்வாதங்கள் போடப்பெற்றார்கள். அப்போதவர்கள் 'கர்த்தர் இப்போது என்னை அழைக்கவில்லை, உங்களுக்கும் இன்னும் சலிக்கவில்லை, ஆகையால் இன்னம் காலம் செல்லும்போலிருக்கிறது' என்றார்கள். அந்தப்படியே தேவகிருபையினால் சுகப்பட்டு நடமாடித்திரிந்து பேத்திமார் கலியாணங்களையும் கண்டு களிக்க கிருபைபெற்றார்கள். பிற்பாடு வரவரத் தளர்ச்சியாகி படுக்கையில் இரண்டுமாதங்களாய் இருக்க நேரிட்டாலும், வாசிக்கக்கூடாமல் இருந்த காலத்தில் கர்த்தருடைய ஜெபத்தையும் ஞான உலா, ஜெபமாலை, பராபரன் மாலை முதலியவைகளில் தான் பாராயணம்பண்ணியிருந்த கவிகளை ஞாபகத்தோடே சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

'உயிரிருக்கும் மட்டும் ஒருபோது முன்னை
அயராமல் போற்ற எனக்காசை பராபரனே'

என்று சாஸ்திரியார் பாடியதுபோல, மரணநாள் மட்டும் ஜெபத்தியானமாக இருந்தார்கள். தன் நல் மரணத்திற்காக தான் ஜெபிப்பதல்லாமல் மற்றவர்களையும் தனக்காக ஜெபிக்கவேண்டும் என்று தன்னைக் காண வரும் ஒவ்வொருவரிடமும் கேட்டுக்கொள்வார்கள். 'கர்த்தருடைய நேரமும் வேளையும் வரக் காத்திருக்கிறேன்' என்பார்கள்.

யாராவது அவர்களைக் காணப்போனால் அவர்களை அன்போடு பார்த்து அருமையாய் விசாரித்து, 'கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடே நடவுங்கள், அவரைவிட்டு விலகாதேயுங்கள், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்' என்பார்கள். இதுவே ஒரு நல்ல பிரசங்கம்போலிருந்தது. தன் படுக்கையிலிருந்த காலமெல்லாம் இதே வார்த்தைகளைப் பெரியோர் சிறியோர் யாராயினும் தன்னைப் பார்க்க வந்த யாவருக்கும் சொல்லி ஆசீர்வதித்தார்கள். அதைக் கேட்ட யாவருடைய இருதயத்திலும் அந்த சத்தம் தொனித்துக்கொண்டே நினைவுகூரப்படுகிறது. அதின்படி நடந்துகொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். Rev. டக்கர் வசவடியான் ஐயர் தஞ்சைக்கு வந்து அவர்களை முதல் விசையாகப் பார்த்தபோது சங். விசுவாச ஐயரவர்களுக்கு பதிலாக வந்த ஐயரவர்கள் என்று சொல்லக்கேட்டு 'சங். விசுவாச ஐயரவர்கள் இருந்ததுபோல சபையில் சமாதானமாக எல்லாரையும்



அனுசரித்து அன்பாயிருக்கவேண்டும்' என்று அவருக்குச் சொன்னார்கள்.

பின்னும் 'கர்த்தர் என்னை அழைக்கத் தாமதமாகிறதே' என்றும், 'நான் அவருடைய சித்தத்திற்குக் காத்திருக்கிறேன், அவர் சித்தம் நமது பாக்கியம்' என்றும் பலமுறையும் சொல்லுவார்கள். கர்த்தரை ஸ்தோத்திரிப்பதிலும் ஜெபிப்பதிலுமே தன் நாட்களைப் பின்னிட்டார்கள்.

'தேவனுக்குப் பிரியமானவனென்று, தான் எடுத்துக்கொள்ளப்படுமுன்னமே சாட்சிபெற்றான்' (எபி. 11 : 5) என்றதுபோல இவர்களைக் குறித்தும் சாட்சிபகரக் கூடியதாயிருந்தது.

## THE SPIRIT OF GOD IN US

## 'தம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர்'

யாக். 4 : 5

தேவனுடைய பிள்ளைகளுக்கிருக்கும் ஒரு பெரிய சலாக்கியத்தை இவ்வசனத்தில் பார்க்கிறோம். அதாவது : 'விசுவாசி ஒவ்வொருவன் இருதயத்திலும் ஆவியானவர் வாசம்பண்ணுகிறார்' என்பதே. இதை தேவனுடைய பிள்ளைகள் உணர்ந்தார்களானால் கிறிஸ்தவ ஜீவியம் எவ்வளவு வல்லமையுள்ளதாயிருக்கும்!

தற்காலத்தில் அடிக்கடி கிறிஸ்தவர்கள்: 'ஆண்டவரே உம்முடைய ஆவியானவர் எங்களில் வாசம்பண்ணுவாராக!' என்று ஜெபிக்கிறதைக் காணலாம். விசுவாசியின் உள்ளத்தில் அவர் வாசம்பண்ணுகிறார் என்கிற சத்தியம் தெளிவாய் கிறிஸ்தவர்களுக்கு விளங்காததே இப்படிப்பட்ட தப்பிதமான ஜெபங்களுக்குக் காரணம். இதை நினையாமலும், ஜீவியத்தின் ஒவ்வொரு சிறு காரியத்தையும் ஆவியின் ஆளுகைக்கு ஒப்புக்கொடாமலுமிருக்கும்போது, ஆவியானவருக்காக ஜெபிப்பதில் பிரயோஜனமில்லை என்பது தெளிவாயிருக்கிறது. ஆவியானவர் நமக்கு அதிகமாய் வேண்டுமானால், நாம் நம்மை அதிகமாய் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நாம் நிரப்பப்படவில்லையென்றால் தடை அவரிடத்திலல்ல, நம்மிடத்திலேயே. அவர் நமக்குள்ளிருந்து நம்மை முற்றிலும் ஆட்கொள்ள வாஞ்சையுள்ளவராய்த் தவிக்கிறார். அவர் தம்முடைய வல்லமையான கிரியையை நம்மில் நடப்பிக்கவேண்டுமானால் நாம் கவனிக்கவேண்டிய சில குறிப்புகள் உண்டு.

**1-வது. ஆவியானவர் உனக்குள் இருக்கிறார் என்பதை விசுவாசித்து தேவனை ஸ்தோத்திரி.**

நீ தேவனுடைய பிள்ளை என்பதைப்பற்றி உனக்கு நிச்சயம் உண்டானால், உன்னில் எவ்வளவு பெலவீனமும் பாவமும் இருந்தாலும் ஆவியானவர் உனக்குள் இருக்கிறார் என்று நம்பு. கொரிந்து சபையைக் குறித்து அப்போஸ்தலன் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். 1 கொரி. 3: 1-4. அவர்கள்: 'மாம்சத்துக்குரியவர்கள்', 'குழந்தைகள்'; 'பெலனில்லாதவர்கள்', 'மனுஷ மார்க்கமாய் நடக்கிறவர்கள்' என்று இவ்வாறாகப் பேசுகிறார். 'பொறாமையும் பேதகங்களும் உங்களுக்குள்ளிருக்கிறது' என்றும் சொல்லுகிறார். ஆனாலும் இதே சபையாரைப் பார்த்துத்தான் அதே அதிகாரம் 16-ம் வாக்கியத்தில்: 'தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்று அறியாதிருக்கிறீர்களா?' என்கிறார். ரோ. 8: 9ல் 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல' என்று வாசிக்கிறோம். நீ அவருடையவனா? அப்படியானால் கிறிஸ்துவின் ஆவி உனக்குள் இருக்கிறார் என்று நம்பு. எபேசியர் 1: 13, 14 பார். 'நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டீர்கள்' என்று சொல்லுகிறார். 'அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்' என்று 2 கொரி. 1: 22ல் காணலாம். நீ இயேசுவை உன் இரட்சகராக விசுவாசித்திருக்கிறாயா? அப்படியானால் உன் இருதயத்தில் ஆவியானவர் இருக்கிறார் என்று நம்பு.

'அவர் இருக்கிறது எனக்குத் தெரியவில்லையே' என்று சொல்லுகிறாயோ? ஆவியானவர் உனக்குள் இருக்கிறதை உணர்ச்சியினால் அறியலாம் என்று நினைக்காதே. தேவன் மனுஷ சரீரமெடுத்து உலகத்தில் வாசம்பண்ணினபோது அவரை தேவன் என்று யாராகிலும் சொல்லக்கூடியதாயிருந்ததா? இல்லையே. அப்படியானால் பாவிகளாகிய நமக்குள் ஆவியானவர் வாசம்பண்ணுகிறதை நாம் உணரலாம் என்று நினைப்பதுகூடுமா? காணப்படாதவைகளை நம்புகிறதே விசுவாசம். 'நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.' ஆகையால் நீ ஒன்றும் உணராதிருந்தாலும் இதை நம்பு. உன் மனதில் இந்தச் சத்தியம் நன்றாய்ப்படத்தக்கதாக அடிக்கடி 'ஆவியானவர் எனக்குள்ளிருக்கிறார்' என்று திருப்பித் திருப்பிச் சொல். இயேசுவானவர் உலகத்துக்கு வந்தது அவருடைய அன்பினால்தான். நமக்காக மரித்தது அதிலும் அதிக அன்புதான். ஆவியானவர் மூலமாய் கிறிஸ்து நமக்குள் வாசம்பண்ணுகிறது ஆச்சரியத்திலும் ஆச்சரிய அன்பே. இதை உணர்ந்து, பணிந்து நின்று ஸ்தோத்



திரம் செலுத்து. உன் வேலையிலிருந்து இரண்டு நிமிஷம் கிடைத்தாலும் இதை நினைத்து உன்னைத் தாழ்த்தி தேவனைத் துதி.

**2-வது. ஆவியானவருடைய ஆளுகைக்கு உன்னை முற்றிலும் ஒப்புவி.**

ஆவியானவர் உன்னில் கிறிஸ்துவின் சமுகமாக இருக்கிறார். உன்னுடைய எண்ணம் சிந்தனை முழுவதையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தி வைத்துக்கொள்ளுவார்—நீ மாத்திரம் உன்னை அவருக்குக் கையளித்துவிடு, அவர் உன்னில் பரிசுத்த ஜீவியத்தை உண்டாக்குவார். கிறிஸ்து உன்னில் வாசமாயிருக்கிறதினால் அவருடைய ஜீவியம் உன் ஜீவியமாகும்படி செய்வார்—நீ மட்டும் உன்னை அவருக்கு ஒப்புக்கொடு. அவருடைய நோக்கத்தை உன் நோக்கமாக்கு. 'தேவனே, ஆவியானவர் எனக்குள் வல்லமையாய்க் கிரியை செய்கிறதினால் கிறிஸ்து என்னில் வாசமாயிருக்கவும் நான் அன்பிலே வேரூன்றி நிலைபெறவும் செய்யும்' என்று ஓயாமல் காலையிலும் மாலையிலும் ஜெபி. இவ்விதமாய் நீ உன்னை அதிகமாய் ஆவியானவருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுப்பாயாகில் அதிகமதிகமாய் கிறிஸ்துவின் சமுகத்தில் ஜீவிப்பாய். ஆவியானவர் நம்மை ஆளும்படி வாஞ்சிக்கிறார். நம்மை நாடோறும் நிமிஷந்தோறும் அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

**3-வது. உனக்குள் இருக்கிற ஆவியானவருக்குக் கீழ்ப்படி.**

கொஞ்சத்தில் உண்மையாயிரு. அப்பொழுது அநேகத்தை உனக்குக் கொடுப்பார். உனக்குள் ஆவியானவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து பயபக்தியாய் நட. எந்தச் சிறுவிஷயத்திலும் அவரைத் துக்கப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிரு. அவருடைய சகல தூண்டுதலுக்கும் உடனே கீழ்ப்படி. இந்த விஷயத்தில் நாம் கவனமாயிருக்கிறதில்லை. நமக்குள்ளிருக்கும் ஆவியைக்குறித்து நாம் கவலைத்தாழ்ச்சியாயிருக்கும்போது ஆவியின் நிறைவை, ஆவியின் அபிஷேகத்தை, எப்படி நமக்குத் தருவார்? தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் சரீரம் தேவாவியின் ஆலயமாயிருக்கிறதே; உங்கள் சரீரத்தின் பழக்கவழக்கங்களில் ஆவியானவரைத் துக்கப்படுத்துகிற காரியங்கள் இல்லையா? உங்கள் நேரத்தைச் செலவழிக்கிற விதத்தில், உங்கள் பணத்தைச் செலவழிக்கிற விதத்தில், உங்கள் குடும்ப ஜீவியத்தில், நீங்கள் தேவனுக்குக் கொடுக்கவேண்டிய காணிக்கை விஷயத்தில், உங்கள் அடுத்த வீட்டுக்காரரோடு நடந்துகொள்ளுகிற விதத்தில்—ஆவியானவரைத் துக்கப்படுத்துகிற காரியங்கள் இல்லையா? அவர் அவைகளைக் காட்டும்படி பணிந்த சிந்தையோடு கேளுங்கள். ஆவியானவர் நம்மில் பலமாய்க் கிரியை செய்யாததற்குக் காரணம் நமக்குள்

வாசம்பண்ணுகிற ஆவியானவருக்கு நாம் கீழ்ப்படியாததே. மனமறிய அவருக்குப் பிரியமில்லாத சிநேகிதரை நமக்குச் சிநேகிதராக்குகிறோம். மனம் உள்ளே வாதித்தாலும், வெளியாக நியாயம் பேசிக்கொண்டு, ஆத்தும ஜீவியத்தைக் குளிரப்பண்ணும் காரியங்களில் நேரத்தைச் செலவிடுகிறோம். இனியாவது கீழ்ப்படிவோமாக. ஆவியானவர் நமக்குள்ளேயிருந்து நம்மை முற்றிலும் ஆளும்படி வாஞ்சைகொண்டவராகத் தவித்து ஏங்கி நிற்கிறார். அவரைத் தடங்கல் செய்யாதிருப்போமாக.

4-வது. ஆவியானவர் உள்ளேயிருந்து செய்யும் கிரியை என்னவென்று அறிந்துகொள்.

ஆவியானவருடைய வேலை இரண்டு. அசுத்தம், பெருமை, கோபம், பொறாமை முதலியவைகள் எழும்புகிற நமது மாம்சத்தை அடக்கிக்கொள்ளுவது ஒன்று. இயேசுவை நமது இருதயத்தில் இருக்கிறவராக நமக்குக் காண்பிப்பது இன்னொன்று. 'நான் உங்களில் இருக்கிறதை நீங்கள் அந்நாளிலே அறிவீர்கள்' என்றார் (யோவா. 14 : 20). நம்மை ஆவியின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்க, ஒப்புக்கொடுக்க, இவ்விரண்டும் நம்மிடத்தில் அதிகமாய் விளங்கும் ஒவ்வொருநாளும் நமக்குத் தெரிந்த சகல விஷயங்களிலும் அவரே நம்மை நடத்தும்படி இடங்கொடுக்கும்போது, நமக்கு வரும் சகல சோதனைகளிலும் வெற்றிபெறுவோம்; இயேசுவின் பிரசன்னத்தால் திருப்தியாக்கப்படுவோம். சாகும்வரையும் மாம்சம் நமக்குள்தான் இருக்கும். ஆனால் அதிலும் வல்லமையுள்ள ஆவியானவர் அதை நிமிஷந்தோறும் காலுக்குள் வைத்துக்கொள்வார். நாம் அதைக் குறித்து நினைக்கவேண்டியதில்லை. நமது மாம்ச பெலத்தையும், சோதனைகளின் வல்லமையையும் நினைத்து நினைத்து சோர்ந்துபோக வேண்டியதில்லை. இயேசுவை நமக்குள் இருக்கிறவராக அறிந்து, அவரை அதிகமாய் நோக்கிப்பார்த்து, அவரை வஸ்திரம்போல் அணிந்துகொள்ளும்போது, மாம்சத்தின் வல்லமைக்கு இடமிராது. ஆவியானவரை நமது சோதனைகளையும், 'நான்' என்று எழும்பும் மாம்சத்தையும் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, நாம் இயேசுவைப் பார்த்துக்கொண்டிருப்போமானால், அவரை அதிகமாய்த் தியானிப்போமானால், அவரோடு அதிகமாகப் பழகுவோமானால்—சோதனைகள் பயங்கரமாகத் தோன்றமாட்டாது. நம்முடைய சொந்த ஒன்றுமில்லாமையை உணருகிற நாம், வல்லமையுள்ள நேசராகிய அவர்மீது சார்ந்துகொண்டே இருப்போமானால் அவர் சகலத்தையும் பார்த்துக்கொள்ளுவார். இப்படி எப்போதும் இயேசுவில் சார்ந்து நிற்க மறந்துபோகிறேனே என்று சொல்லுகிறவர்கள் உண்டா?



அப்படிப்பட்டவர்கள் செய்யத்தக்கதைச் சொல்லுகிறேன். முதலாவது நீ செய்கிற சகல விஷயத்தையும் ஆவியானவர் முன்பாக நிறுத்தி, அவருக்குப் பிரியமில்லாததை உனக்குக் காட்டும்படி கேள். கீழ்ப்படிய பிரியமுள்ளவனாய் அவர் சமுகத்தில் நில். அவர் காட்டுகிறபடி செய். இப்படி கீழ்ப்படிந்தவுடனே இனி அவர்தாமே இயேசுவின் சமுகத்தை நிமிஷந்தோறும் உனக்கு நினைப்பூட்டும்படி தேவனிடத்தில் கேள். நிச்சயமாகவே அவர் செய்வார். விசுவாசத்தோடே இதையும் அவர்தாமே செய்யும்படி கெஞ்சு. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

5-வது. ஆவியானவருக்கு நேரங்கொடு.

நாடோறும் அதிகாலையில் ஆவியானவர் உன்னைத்தொட்டு, உன்னை நொறுக்கி, உன்னில் வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கும்படி நேரம் கொடு. ஒரு கல்தச்சனிடத்தில் கரடுமுரடான ஒருகல்லைக் கொடுத்து, அதில் அலங்காரமான ஒரு உருவை வெட்டும்படி சொல்லி அவனுக்குமாத்திரம் நேரம் கொடுத்தால், அவன் அதைத் தன் காலின்கீழ் போட்டு அதின் சகல கரடுமுரடையும் நீக்கி தன் மனதின்படி வெட்டிவிடுவானல்லவா? உனக்குள் ஆவியானவர் மூலமாய் பிரசன்னமாயிருக்கிற இயேசுவுக்கு நேரங்கொடு. நாடோறும் அவர் காலின்கீழ் பணிந்து விழுந்துகிட. அவர் உன்னைச் சோதிக்கவும், உன்னோடு பேசவும், உன்னை மறுரூபமாக்கவும், அவர் சமுகத்தில் அமைதியாய் நேரம் செலவழி. காலையில் மாத்திரமல்ல மாலையிலும், பகலில் மாத்திரமல்ல இரவில் உனக்கு நித்திரை வாராமல் உன் படுக்கையில் கிடக்கும்போதும் ஆவியானவர் உன்னில் தமது கிரியையை நிறைவேற்றி, தேவனுடைய சகல நன்மையுள்ள சித்தத்திற்கும் ஏற்க உன்னைச் சீர்பொருந்தப்பண்ண அவரை நோக்கிக் கெஞ்சு. அப்பொழுது உன்னில் ராஜாவாக வீற்றிருக்கும் இயேசுவின் சிங்காசனத்தின் கீழ் இருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் மற்றவர்களுக்குப் பாய்ந்துகொண்டேயிருக்கும். (யோவா. 7 : 39; வெளி. 22 : 1.)

அவர் உன்னைப் பிடித்திருக்கிறார். நீ மாத்திரம் பொறுமையோடு அவருக்குக் காத்திருப்பாயானால் தமது சித்தத்தை உன்னில் நிறைவேற்றுவார். நாடோறும் அவர் பாதத்தில் விழு—அதுதான் உன் கடமை; நாடோறும் அவர் உன்னை நொறுக்கும்படி கேள்—அதுதான் உன் வேலை; இயேசுவின் பாதத்தருகே—அதுதான் உன் இடம். உன்னைப்பற்றி உனக்கு இருக்கும் வாஞ்சையைவிட அவருக்கு அதிக வாஞ்சையுண்டு. அதற்காகவே உனக்குள்ளிருக்கிறார். அவர் நினைத்ததை நிறைவேற்றவே செய்வார். வல்லமை

யுள்ள, அன்புள்ள அவர் கரத்தில் உன்னைத் தாராளமாய் வைத்துவிடு. 'என் ஆத்துமாவே தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.'

## PRAISE THE LORD FOR HE IS GOOD

## 'கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது'

இது கர்த்தாவுக்கு மகா பிரியமான ஒரு கீதம். பழைய ஏற்பாட்டில் பல இடங்களிலும், விசேஷமாய் சங்கீத புஸ்தகத்திலும் இது பலமுறை வருகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய விசேஷித்த பண்டிகை நாட்களில் இந்த ஒரே வாசகத்தையே 'மாறி மாறி'ப்பாடுவார்கள். இந்தப் பல்லவியைப் பாடும்போதெல்லாம் பரிசுத்த தேவன் அதைக்கேட்டு மகா மகிழ்ச்சியடைந்து தமது ஜனத்தை ஆசீர்வதித்திருக்கிறார். ஒரே பாட்டை பலமுறை ஒரே நேரத்தில் பாடக்கேட்பது நமக்குப் பிரியமாயிருக்கிறதில்லையே. கர்த்தாவுக்கு இந்தப் பாட்டின்மேல் மகா பிரீதியிருப்பதற்குக் காரணமென்ன? இதை ஓயாமல் பாடக்கேட்பது அவருக்குப் பிரியமாயிருப்பானேன்?

முதலாவது: இது கர்த்தாவுடைய இருதயத்துக்கு ஏற்றவனென்றழைக்கப்பட்ட தாவீது ராஜா, தன் அனுபவத்திலிருந்து, கர்த்தாவின் மேல் பாடின பாட்டு. தெய்வபக்தனே, நீ உன் ஆண்டவர் பேரில் உள்ள அன்பால் பொங்கிச்செய்யும் ஒவ்வொரு அற்பக் காரியமும் அவருக்கு மகா அருமையாயிருக்கிறது. இங்கிலாந்தில் கூப்பர் என்ற ஒரு பக்திமான் இருந்தார். அவர் இறந்தபின் நூறு வருஷங்களாக கிறிஸ்து சபை அவர் கட்டிய அருமையான பாடல்களைக் கொண்டு கர்த்தரைத் துதித்து வந்திருக்கிறது. சுவிசேஷ கீதத்திலிருந்து நாம் பாடுகிற 'பூலோகத்தாரெல்லாருக்கும் ஓர் ஜீவ ஊற்றுண்டே', 'பாவிகேள் உன் ஆண்டவர்' (சுவி. கீ. 7, 49) என்ற பாட்டுகள் அவர் இயற்றியவைகளே.

இரண்டாவது: 'கர்த்தர் நல்லவர்' என்ற வாசகம் அவரைப் பற்றிய சரியான விஸ்தரிப்பாயிருக்கிறது. 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்பது அதற்குச் சரியான புதிய ஏற்பாட்டு வாசகம். கர்த்தாவுடைய இருதயத்துக்கு ஏற்றவன் 'கர்த்தர் நல்லவர்' என்று பாடினான். கர்த்தராகிய கிறிஸ்துவின் இருதயத்தில் சாய்ந்திருந்தவன் 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்று எழுதினான். அதுவு



மன்றி, 'அவர் கிருபை என்றுமுள்ளது' என்பதில் உத்தம மனிதனின் விஸ்தரிப்பு அடங்கியிருக்கிறது. மனிதன் தேவகிருபைக்காகக் கெஞ்சவேண்டிய தரித்திரனும், நிர்ப்பந்தனும், நீசனுமாயிருக்கிறான். தேவகிருபை இல்லாவிடில் மகா பெரிய பரிசுத்தவானும் பிசாசின் மகனேயல்லாமல் மனிதனல்ல. கர்த்தர் 'கிருபையின் ஐசுவரியம்' உள்ளவர். தரித்திரனுங்க நிமிஷந்தோறும் கிருபையைப் பெற்று, கிருபையில் நிலை நின்று, கிருபையின் நன்மைகளால் திர்ப்தியடைந்து, கர்த்தாவைத் துதிக்கக்கூடியவனே தேவ பார்வையில் உத்தம மனிதன். இவ்விதமாய் கர்த்தாவையும் மனிதனையும் பற்றி மகா சிறந்த இலட்சணங்களடங்கிய இந்த வாசகம் ஆண்டவருக்கு அதிகப்பிரியமாயிருப்பது ஆச்சரியமல்லவே!

மூன்றாவது: பழைய பாட்டை புதிய இருதயங்கள் பரிசுத்த ஆவியானவரால் அனல் மூட்டப்பட்டுப் பாடும்போது, கர்த்தாவுக்கு மகா பிரீதியாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. மகா அருமையான பாட்டுகளும் தமிழ் நாட்டு சபைகளில் யாதொரு பயபக்தியுமின்றிப் பாடப்படுகிறது. கர்த்தாவே, எதுவரைக்கும் இவ்வித 'வீணை' ஆராதனைகளால் நீர் வாதிக்கப்படுவீர்! பரிசுத்த அலங்காரத்தோடும் பரிசுத்த பயபக்தியோடும் உம்மை நாங்கள் தொழுதுகொள்ளும் காலம் எப்போ வரும்! கிறிஸ்தவ ஆராதனைகளில் காணப்படுகிற பயபக்தியின்மை மகா பயங்கரமாயிருக்கிறது. அஞ்ஞானி எத்தனை பயபக்தியுடன் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிகிறான். பரிசுத்த தூதரே, நீங்கள் எத்தனை வணக்கமாய் நின்று சேவிக்கிறீர்கள்! மகிமையடைந்த பக்தர் சிங்காசனத்தின்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து தொழுதுகொள்ளுகிறார்கள். நரகத்தின் மகனான பாவியோ, ஆராதனை நேரத்தில் உல்லாசமாய்ப் பேசிச் சிரித்து, கர்த்தரைப் பரீட்சை பார்க்கிறான். இங்கே பணிந்து ஆராதிக்கக்கூடாதபடி வணங்காக் கழுத்துள்ளவன் பரலோகத்தில் சாஷ்டாங்கமாய் விழுவானோ? கர்த்தாவுடைய சன்னிதியில் பயபக்தியில்லாதிருப்பது எத்தனை பாதகமும் மோசமுமான காரியம் என்பதை ஆண்டவரே உணர்த்துவாராக! கிறிஸ்தவனே, நீ ஆலயத்தில் நடந்துகொள்ளுகிற விதமாய் உன் மேலதிகாரிமுன் அல்லது உன்னுடைய உலக ராஜாமுன் நடந்துகொள்வாயா? நசல்கொண்ட ஆடுகளைப் பலியாகச் செலுத்தின யூதரைப் பார்த்து, ஆண்டவர், 'அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ' என்று கேட்கிறார். (மல். 1: 8.) ஆராதனையில் அவபக்தியாயிருப்பவர்களையும் பார்த்து அவர் இதே விதமாய்க் கேட்கிறார். பாடினாலும் ஜெபித்தாலும் உள்ளத்தில்

உண்மையைக் காண அவர் விரும்புகிறார். 'நான் பாடும்போது என் உதடுகளும் நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்' என்று உண்மையாய்ச் சொல்லக்கூடியவர்களே கர்த்தாவுக்குப் பிரியமானவர்கள். அப்படிப்பட்டவர்கள் பாடும் கீதமும் அவருக்கு மகா அருமையே!

இவ்விதமாய் உத்தம தேவப்பிரியரால் கர்த்தாவுடைய சிறந்த இலட்சணங்களை அமைத்துக் கட்டப்பட்டு பயபக்தியாய் ஆராதிப்பவர்களால் முழு இருதயத்தோடும் பாடப்படுகிற பாட்டுகள், அவைகள் ஓயாமல் ஆயிரம் தரம் திருப்பிப் பாடப்பட்டபோதிலும், கர்த்தாவுக்கு மகா அருமையாயிருக்கிறதென்று பார்க்கிறோம். இம்முகாந்தரத்தினாலேதான் 'சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல்' நித்தியகாலமாய்ப் பாடப்படும் பாட்டு கர்த்தாவுக்கு ஒருக்காலும் வெறுப்பாகவேமாட்டாது. மனுப்புத்திரரே, பூலோகத்தின் ஆராதனையைப் பரலோகத்தின் ஆராதனைக்கு ஒப்பாக்க நாம் முயலுவோமாக!

இந்தச் சிறுகீதம் பழைய ஏற்பாட்டில் பல விசேஷித்த சமயங்களில் பாடப்பட்டிருக்கிறது. அவைகள் ஒவ்வொன்றும் நமக்கு நல்ல போதனை அடங்கியதாயிருக்கிறது.

முதலாவது: உடன்படிக்கைப் பெட்டியை தாவீது ராஜா மகா ஆடம்பரத்தோடு எருசலேமுக்குக் கொண்டுவந்தபோது இந்தக் கீதத்தைப் பாடினார். (1 நா. 16: 7, 41.) உடன்படிக்கைப் பெட்டி தேவ சமூகத்துக்கு அடையாளமாயிருந்தது. அது பெலிஸ்தரால் பிடிப்பட்டபோது, 'மகிமை இஸ்ரவேலைவிட்டு விலகிப்போயிற்று.' (1 சா. 4: 22.) திரும்ப அது இஸ்ரவேலின் தலைநகரிக்குக் கொண்டுவரப்பட்ட நாள் மெய்யாய் மனமகிழ்ச்சியின் நாளே. அன்று 'தாவீது தன் முழுபலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்.' அன்று அந்த பக்தனால் இந்தப் பாட்டு இயற்றப்பட்டு முதல் முதல் பூமியில் பாடப்பட்டது. கிறிஸ்தவனே, உன் இரட்சகர் உன் இருதயத்தில் முதல் முதல் வந்த உன் மீட்பின் நாள் இவ்வித பாக்கிய நாளாய் உனக்கு இருக்கவில்லையா? ஏதேனில் இழந்த தேவசமூகம் அன்று உன் இருதயத்தில் திரும்ப வந்தது. பாவமன்னிப்பை திட்டமான ஒரு அனுபவமாக திட்டமான ஒரு நாளில் பெற்ற கிறிஸ்தவனே, நீ அந்த நாளில் ஆனந்த மகிழ்ச்சியடைந்து, இந்தப் பாட்டைப்போலொத்த ஒரு பாட்டினால் உன் ஆண்டவரைத் துதிக்கவில்லையா?

(இன்னும் வரும்.)



## STAMPS FOR LETTERS AND POST CARDS

## கடிதங்களுக்கும் தபால் கார்டுகளுக்கும் ஒட்டவேண்டிய ஸ்டாம்புகள்

### NEW RULES

### புதிய சட்டங்கள்

**உங்களுடைய அயலாரையும் தயவுசெய்து எச்சரிக்கவும்**

1921-ம் வருஷம் எப்ரல் மாதம் 18-ம் தேதி முதற்கொண்டும் அதன் பிற்பாடும், இந்தியாவில், அடியில்கூறிய ஸ்டாம்புகள் தபாலுக்கு ஒட்டவேண்டியவையாகும்:—

| | |
|---|---|
| தபால் கார்டுகள் முன்போலவே ... ... ... | $\frac{1}{4}$ அணா. |

**கடிதங்கள்**

| | |
|---|---|
| $\frac{1}{2}$ தோலா இடைக்கு மேற்படாத கடிதத்திற்கு ... | $\frac{1}{2}$ அணா. |
| $\frac{1}{2}$ தோலாவுக்குமேல் 1 தோலாவுக்கு உட்பட்ட கடிதத்திற்கு ... ... ... ... ... | $\frac{3}{4}$ அணா. |
| 1 தோலா இடைக்குமேல் $2\frac{1}{2}$ தோலா வரைக்கும் உள்ள கடிதத்திற்கு ... ... ... ... | 1 அணா. |
| இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவுக்காவது அதன் பாகத்திற்காவது ... ... ... | 1 அணா. |

**பத்திரிகைகள்**

| | |
|---|---|
| 8 தோலா இடைக்கு மேற்படாதவைகளுக்கு ... | $\frac{1}{4}$ அணா. |
| 8 தோலாவுக்கு மேற்பட்டு 20 தோலா வரைக்கும் உள்ள பத்திரிகைகளுக்கு ... ... ... | $\frac{1}{2}$ அணா. |
| 20 தோலாவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலா இடைக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ ... | $\frac{1}{2}$ அணா. |

**புஸ்தகங்களும் மாதிரி கட்டுகளும்**

| | |
|---|---|
| ஒவ்வொரு ஐந்துதோலா இடைக்கும் அதன் பாகத்திற்கும். | $\frac{1}{2}$ அணா. |

## மணி ஆர்டர்கள்

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டபடி கமிஷன் சார்ஜ் வாங்கப்படும்.

10 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு ... ... 2 அணா.

10 ரூபாய்க்குமேல் 25 ரூபாய்வரைக்கும் ... ... 4 அணா.

25 ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி ரூபாய் 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய் மேற்படாவிட்டால் 2 அணாவும், சார்ஜ் செய்யப்படும்.

## வீ. பீ. மூலியமாய் அனுப்பப்பட்ட சாமான்கள்

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்ட வீதம் வீ. பீ. சாமான்களின் தொகையின்மேல், சார்ஜ்செய்யப்படும்.

வீ. பீ. சாமான்களின் பேரில் வசூல் செய்யவேண்டிய பணம் 10 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ... 2 அணா.

10 ரூபாய்க்கு மேற்பட்டும் 25 ரூபாய் வரைக்குமிருந்தால் 4 அணா.

25 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் 2 அணாவும் சார்ஜ் செய்யப்படும்.


# மாதர் போதினி

No. 285 அக்டோபர் 1921 No. 10


## MIRACLES OF FAITH IN CHINA

## சீனாவில் விசுவாசத்தால் நடந்த அற்புதங்கள்

(தொடர்ச்சி)

1903-4-ம் வருஷத்து மாரிகாலத்தில் சேவு (Chefoo) என்ற இடத்திலிருந்து ஜெர்மன் துறைமுகமாகிய ற்சிங் ற்றுவ் (Tsing Tau) என்ற இடத்துக்கு மாற்றப்பட்டு, அதைச் சுற்றிலுமுள்ள 15 சபை சம்பந்தமான பெண்களுக்குள் வேலைசெய்ய நியமிக்கப் பட்டேன். அதாவது வேதாகம ஸ்திரீகளையும் பெண் பாடசாலைகளையும் சபை ஸ்திரீகளையும் மேற்பார்க்கும் வேலைதான்.

இந்த வேலை துவங்கினவுடன், பற்பல வேலை ஸ்தானங்களில் ஆத்தும நன்மை யுண்டாகும்படி போதகர்மாருக்கும் மூப்பருக்கும் ஓர் கான்வான்ஸ் (Conference) வந்தது. அதில் ஸ்திரீகளுக்குள் விசேஷித்த ஆத்தும கிளர்ச்சி யுண்டானதற்குக் காரணமாக நான் உபயோகித்த முறைகளைப்பற்றிச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள்.

'முறைகளை நான் விசேஷித்துக்கொள்ளாமல் பரிசுத்தாவியின் வல்லமையே பிரதானமென்று கொள்ளுகிறேன்' என்றேன்.

அப்போது 'தங்களுக்கு அப்படிப்பட்ட வல்லமை இல்லை' என்றார்கள்.

'என்னோடு சேர்ந்து ஒருமித்து ஒரு சர்க்கிள் கூட்டமாக தினந்தோறும் நமக்காகவும் பின் மற்றவர்களுக்காகவும் ஜெபிக்கப் பிரியமா?' என்றேன்.

எட்டுப்பேர் சந்தோஷமாய் வந்துசேர்ந்தார்கள்.

எங்கள் முறை குறிப்பானதாகவும் சுலபமாகவுமிருந்தது.

எங்கள் ஜெபமாவது :—'பரமபிதாவே, என் பாவங்களை எனக்கு மன்னியும். பரிசுத்தாவியானவரை என் இருதயத்திற்குள் அனுப்பி அவைகளை எனக்குக் காட்டும். இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் அவைகள் அற என்னைச் சுத்திகரித்து என்னை உமது ஆவியால் நிரப்பும்.' இப்படி ஒவ்வொருவரும் ஆறுமாதமாய் ஜெபித்தோம்.

டிங்லீமை என்ற குருவானவர் எங்கள் சர்க்கிளைச் சேர்ந்தவர். இவருக்கு ஐந்து சைமோ சபைகளில் வேலை. தனக்குக் கீழிருந்த சீனக் கிறிஸ்தவர்களுக்கு ஆவியில் எழுப்புதலுண்டாகும்படி நடக்கும் ஓர் நாலுநாள் கான்வரன்சுக்கு (Conference) நான் வரும்படி எழுதினார். அப்படியே நான் கான்வரன்ஸ் துவங்கும் முதல்நாள் காலை 10 மணிக்கு யுவன்டிஸ்வாஸ் என்ற சிறு கிராமத்தில் போய்ச் சேர்ந்தேன். 'மனுஷன் ஒன்று நினைக்க தேவன் வேறுவிதமாய் நடத்துகிறார்' என்றபடி மனுஷர் செய்திருந்த ஏற்பாடுகளெல்லாம் வியர்த்தமாகும்படி சாத்தான் அன்று கிரியை செய்துவிட்டான்.

அங்குள்ள ஓர் ஐசுவரியவான் அன்றுதான் செத்துப்போனபடியால், அத்தேசத்தார் அந்தஸ்துக்குத் தக்கபடி பல நாட்களாக அல்லது வாரங்களாக மரணசடங்குகள் நடத்துவார்களாகையால், கான்வரன்ஸ் நடக்கப்போகும் நாட்களெல்லாம் இச்சடங்குகள் நடக்கும் காலமாயிருக்க லபித்தது. நான் தெருவழியே போகையில், அந்த செத்துப்போனவன் ஆவிக்கு மறுமையில் அவசியமென்று அவர்கள் எண்ணினவைகளான கடிதத்தால் செய்த நாணயங்களும், பசுக்களும், குதிரைகளும், நாற்காலிகளும், அடிமைகளும் குவியல் குவியலாய்ச் சமாதியில் எரிக்கும்படி கொண்டுபோனார்கள். கூட்டங் கூட்டமாய் ஜனங்கள் சேர்ந்து கெட்ட ஆவிகளைத் துரத்தும்படி ஆகாயத்தில் ரதங்களை விட்டார்கள். எங்கே பார்த்தாலும் ஜனங்கள் இவ்விஷயத்தில் அதிக முஸ்திப்பாயிருந்தார்கள். யாவருக்கும் ஓர் விசேஷகாலமாய்த் தோன்றிற்று. வைதீக சம்பந்தமில்லாத நாடகசாலைகளிலுங்கூட சவச்சடங்கு சம்பந்தமான ஆராதனைகளும் மதவணக்கமும் நடந்தேறின. கோவில் நாடகச்சாலையில் அநேகரைக் கூலிகொடுத்து வருவித்து, அங்கு நடக்குங் காரியங்களை இலவசமாய் எவரும் பார்க்க இடங் கிடைத்ததால் அயல் கிராமங்களிலிருந்தும் ஏராளமான ஜனக்கூட்டம் வந்திருந்தது. உபந்நியாசங் கேட்டறியாத இந்த ஜனங்கள் நூற்றுக்கணக்காய் கான்வரன்ஸ் கூடாரத்திற்குள் புகுந்து, கூச்சலிட்டுப் பேசிக்கொண்டும், அவர்கள் குழந்தைகள் அழுதுகொண்டும் நாய்கள் குரைத்துக்கொண்டு மிருந்ததால், கிறிஸ்தவர்கள் கூடியிருந்த இடத்துக்குள் வராமல் கயிற்றால் மறித்திருந்தபோதிலும், அதிக சந்தடியால், பாடின பாட்டுக்களின் இராகமாவது ஒரு வார்த்தையாவது கேட்கமுடியாதிருந்தது. இவ்விதமாய் அடக்கக்கூடாத சப்தமும் குழப்பமும் டிங் பாதிரியாருக்கு துக்கத்தையும் சோர்வையுமுண்டாக்கின.

அன்று சாயங்காலக் கூட்டம் முடிந்தவுடன், சபைத்தலைவரும் உத்தியோகஸ்தரும் சேர்ந்துவந்து, இப்படிப்பட்ட தகாத காலக்கைக்



தெரிந்துகொண்டதற்காக கோபத்துடன் டிங் பாதிரியாரைக் கடிந்து பேசி, 'இப்படிப்பட்ட கான்வரன்சுக்காக பணமும் நேரமும் செலவிடப்படுவதேன்? நாங்கள் மறுநாள் காலையில் இவ்விடம்விட்டுப் போய்விடுவோம்' என்றார்கள்.

டிங் குருவானவர் சீனக்கிறிஸ்தவர் பண உதவியைக்கொண்டு தேவன்பேரில் விசுவாசமாய் எந்தக் காரியத்தையும் முன்னின்று செய்பவர். தான் பண உதவி எதிர்பார்த்தவர்கள் இவ்விதம் பேசினார்கள். அவருடைய குறைவான சம்பளம் இப்போது நேரிட்ட செலவுக்கு வந்தெட்டாதபடி மிக்க சொற்பமாயிருந்தது. ஆகையால் சோர்வடைந்தவராய் என்னிடம் வந்து காரியத்தைச் சொன்னார். அதற்கு நான் 'காரியத்தை நன்றாய் விளங்கிக்கொண்டேன். இப்படிப்பட்ட சமயத்தில் எல்லாவற்றையும் சரிப்படுத்துகிறவர் ஒருவர்தான். அவரே விழுதலை ஜெயமாய் மாற்றக்கூடியவர். அவர் கர்த்தரே. இக்காரியத்தை சரிப்படுத்தும்படி அவரைக் கேட்போம்' என்றேன்.

டிங் குருவானவருடைய தகப்பனும் பாட்டனும் கிறிஸ்தவர்கள். அவரும் கிறிஸ்தவ கிராமத்தில் வளர்ந்தவர். அவர் தன் இரட்சகரை நேசித்தவர். ஜெப மனுஷன். என்றாலும், விசுவாசிக்கிறவர்களிடத்தில் தேவனுடைய வல்லமை மட்டற்றதென்றதை யறிந்து கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கத் தெரியாதவர்.

நாங்கள் இருவரும் சேர்ந்து சில நிமிஷங்களாய் முழங்காலூன்றி ஜெபித்தோம். ஆனால் எங்களிருவர் மனமும் கிறிஸ்துவுக்குள் ஒன்றித்திருக்கவில்லை. நான் அவருக்குச் சொல்ல எனக்கு ஒரு வழிகாட்டவேண்டுமென்று ஜெபித்தார். அதாவது தன் சொந்த கஷ்டத்தை ஜெயமாக்க ஒரு வழிகாட்டக் கேட்டார். பின் நான் ஏதோ ஒன்று சொல்வேனென்று காத்திருந்தார். நானோ கிறிஸ்துவே ஜெபத்தைக் கேட்டு அவருடைய வாக்குத்தத்தப் பிரகாரம் வழிநடத்துவாரென்று காத்திருந்தேன் (யோ. 14 : 13, 14). ஒரு மணி நேரமாக இருவரும் உட்கார்ந்திருந்தோம். சாப்பாட்டு நேரம் கடந்துபோகிறதென்று என் சீன வேலைக்காரனுக்குக் கோபமாயிருந்தது.

கடைசியில் டிங் குருவானவர் எழுந்து நின்றார். பெண்ணாயிருந்தும் சீன வழக்கப்படி நானும் எழுந்து நின்றேன். அரைமணி நேரம் நின்றோம். பின் சீன வழக்கத்தை மீறி என்னோடு போஜனம் பண்ணக் கேட்டேன். அதற்கு மாட்டேனென்று சொல்லி கோபதாபத்தோடு என்னைவிட்டு கதவைப் படீரென்று சாத்தி வெளியே போய்விட்டார்.

(போகும்போது என்ன சொல்லிக்கொண்டு போனேன் என்று பின் சொன்னார். அதாவது, ‘ஒரு பெண்ணை ஏதாவது கேட்டால் இப்படித்தான். ஒரு பெண்ணுக்கு என்ன தெரியும்?’)

அன்று சாயங்காலம் அவர் நடத்தின கூட்டத்தில் அவரைக் கண்டேன். கூட்டத்துக்கு வந்தவர்களெல்லாரும் கிறிஸ்தவப் பெண்களும் ஆண்களுமானதால் எல்லாம் அமைதியாயும் ஒழுங்காயுமிருந்தது. இரவில் அசுத்த ஆவி இருக்குமென்று பயந்து குணப்படாதசீனர் அக்கூட்டத்துக்குப் போகவில்லை.

நாங்கள் ஜெபித்துப்பாடி வேதம் வாசித்தபின், டிங் குருவானவர் பிரசங்க வாக்கியம் சொல்ல எழுந்தார். அப்பொழுது பரிசுத்தாவியானவர் என்னை ஏவினபடியால் நான் எழுந்து அவரவர் தனி ஜெபஞ் செய்ய ஐந்து நிமிஷங் கொடுக்கும்படி கேட்டு, பின்வரும் ஜெபத்தை எல்லாரும் அவரவர் சொல்லட்டுமென்றேன். அதாவது: ‘பரமபிதாவே, என் பாவங்களை எனக்கு மன்னியும். பரிசுத்தாவியானவரை என் இருதயத்தில் அனுப்பி அவைகளை எனக்குக் காட்டும். அவைகள் நீங்க விலையேறப்பெற்ற இரத்தத்தால் என்னைக் கழுவி, உம்முடைய ஆவியால் என்னை நிரப்பும்’ என்பதே.

நான் சொன்னபடி செய்ய மனமில்லாவிட்டாலும் நான் கேட்டபடி செய்ய டிங் குருவானவர் ஒருவாறு சம்மதித்து நான் கேட்டுக்கொண்டபடி ‘நாம் யாவரும் சேர்ந்து முழங்கால்படியிட்டு இந்த ஜெபத்தைச் சொல்லுவோம்’ என்றார்.

அப்பொழுது ஓர் அதிசயச் செயல் நேரிட்டது. பரிசுத்தாவியானவர் திடீரென்று மிக்க வல்லமையோடு கூட்டத்தார் மேல் வந்தார். அவர்கள் முழங்கால் தரையில் ஊன்றுமுன் எல்லாரும் ஏகோபித்து, தாங்கள் செய்த பாவங்களுக்காகவும், செய்யத்தக்கதை செய்யாமல் விட்டுவிட்டதால் நேர்ந்த பாவங்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளின் ஆத்தும ஜீவியத்தைப்பற்றி அசட்டையாயிருந்ததற்காகவும், ஒருவரையொருவர் நேசிக்காததற்காகவும், தேவனை நேசியாததற்காகவும், சண்டையிட்டதற்காகவும், பொருளாசைக்காகவும், பகைக்காகவும், ஓய்வுநாளை மீறினதற்காகவும் தேம்பித் தேம்பி அழுது பாவ அறிக்கை செய்தார்கள்.

அன்று சாயங்காலம் டிங்குருவானவரிடம்போய் பணங்கொடுக்க மாட்டோமென்றவர்கள் தாங்கள் பொருளாசைக்காரராயிருந்ததை தேவன் மன்னிக்கும்படி கேட்டார்கள். தாங்கள் பணங்கொடுக்கப் பயந்துகொண்டே குருவானவரிடம் கூட்டம் நன்றாய் நடக்கவில்லை என்ற சாக்குப்போக்குச் சொன்னதாக அறிக்கையிட்டார்கள். சில



நிமிஷங்களுக்குள் எல்லாக் கஷ்டமும் நீங்கிவிட்டது. மெய்யாகவே தேவன் எல்லாக் கஷ்டத்தையும் ஜெயமாக மாற்றினார்.

அரைமணி நேரத்துக்குமேல் எல்லாரும் பாவ அறிக்கை செய்தார்கள். பின் எல்லாரும் எழுந்து நின்று ‘இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டே’ என்ற பாட்டை நாலு தடவை பாடினோம்.

அப்போது பாடினதையும் அந்தக் காட்சியையும் கண்ணீர் வடிந்துகொண்டு மேலே பார்த்துக்கொண்டு, பரம ஒளி வீசின முகங்களையும் நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். இதற்குப்பின் மறுபடியும் பாவ அறிக்கைகளும், சாட்சிகளும், ஜெபமும், ஓயாத் துதியும் இரண்டு மணி நேரமாய் நடந்தன.

டிங் குருவானவர் தான் ஆயத்தஞ்செய்துவந்த பிரசங்கத்தைச் செய்யத் திரும்பத் திரும்ப எத்தனித்தும் கூடாமற்போயிற்று. கடைசியில் கூட்டம் முடியுஞ் சமயத்தில் அவர் ஜனங்களை அமர்த்தி அவர் என்னைச் சந்தித்துப் பேசினதைப்பற்றிச் சொன்னார். தன் விசுவாசக் குறையை அறிக்கையிட்டிருந்தார். என்னிடம் திரும்பி தான் காட்டின முரட்டுக்குணத்தை மன்னிக்கும்படி கேட்டார். பின் ஜனங்களை நோக்கி, தன் குருட்டுவழியில் அவர்களை நடத்தும்படி பார்த்ததை மன்னிக்கச் சொன்னார். மறுபடியும் அவர், ‘மிஸ் வான் அம்மாளே, இங்கிருக்கும் என் சகோதரர் சகோதரிகளே, தேவனுடைய ஊழியத்தில், ஜெபமும் விசுவாசமும் தவிர வேறெந்த முறையும் கையாடமாட்டேனென்று நான் வாக்குபண்ணுகிறதற்கு நீங்கள் சாட்சிகள். இன்று இரவில் ஜெபத்துக்கு உத்தரவாக தேவனுடைய வல்லமையான சக்தியைக் கண்டு களிகூருகிறேன்’ என்றார்.

கான்வரன்ஸ் நடந்த மீதியான நாட்களிலும் பரிசுத்தாவியானவரே எல்லாவற்றையும் நடத்தினார். முன்போலவே கூட்டங் கூட்டமாய் நாடகசாலையிலுள்ள ஜனங்கள் வந்தபோதிலும் ஆராதனை முடியும் வரை எல்லாரும் அமைதியாய் நின்றும் உட்கார்ந்தும் போனார்கள். பிரசங்கித்தவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் யாவரும் தெளிவாய் தூரத்தில் மூலையில் உட்கார்ந்திருந்த பெண்கள் முதற்கொண்டு கேட்கக்கூடியதாயிருந்தது.

கான்வரன்ஸ் மூலமாய் தேவனுடைய தயவுள்ள சித்தம் பூர்வமாய் நிறைவேறிற்று. தூரத்திலிருந்து வந்திருந்த சீனக் கிறிஸ்தவர்களும் தலைவரும் தங்கள் இருதயங்களும் சிந்தைகளும் தேவனுடைய கிருபையாலும் வல்லமையாலும் நிறைந்தவர்களாய் வீடுகளுக்குத் திரும்பினார்கள். ஜெபத்திற்குக் கிடைத்த பேருத்தரவை எங்கும் அறிவித்து இவ்விதக் கூட்டங்கள் நடத்த வேண்டிக்கொண்டார்கள். டிங் குரு

வானவரும் நானும் எங்கள் தேகசக்தியாலானமட்டும் உதவிசெய்தோம். ஏழு மாதங்களாக கான்வரன்ஸ் கூட்டங்கள் ஏராளமாய் நடந்தேறின. இடைக்கிடையே வீடு வந்து புதிய ஆயத்தஞ்செய்ய சிறு சமயமாத்திரமிருந்தது. யூவன்ஸ்வாய் என்றவிடத்தில் நடந்த பிரகாரமே ஒவ்வொரு இடத்திலும் நடந்த கான்வரன்ஸில் ஆவியானவர் வல்லமையோடும் ஆசீர்வாதத்தோடும் ஊற்றப்பட்டார்.

சுவிசேஷகனாக ஊழியந் துவக்கின டிங்லைமை குருவானவர் ஷான்றங் மாகாணத்தை சுற்றிப்பார்க்கும் வேலையை ஒப்புக்கொண்டார். அவர் போனவிடமெல்லாம் தமது ஊழியக்காரன் விசுவாசத்தால் தேவன் வல்லமை வெளிப்பட்டது. பின் Y. M. C. A. காரர் சீனாவெங்குமுள்ள பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும், சர்வகலாசாலைகளையும் சந்திக்க அனுப்பினார்கள். தேவன் அவரை அதிசயமான வல்லமையாய் உபயோகித்தபடியால் சீன அப்போஸ்தலனென்றும் சீனாவின் மூடி என்றும் அழைக்கப்படுகிறார்.

## ‘GOD IS AND HE IS JUST’

## ‘தேவன் இருக்கிறார்; அவர் நீதிபரர்’

தேவன் இல்லையென்று மதிகேடன் தன் இருதயத்துக்குள் சொல்லிக்கொள்ளுகிறான்; ஆனால் மதியுள்ளோர் எல்லாரும் தேவன் இருக்கிறார் என்று ஒப்புக்கொள்ளாமல் தீராது. தேவன் இருக்கிறார் என்று ஒப்புக்கொள்வதும் கவைக்குதவாது, அச்சத்தியத்தை வற்புறுத்திப் பிரசங்கிப்பதும் கவைக்குதவாது. விசுவாசப் பிரமாணத்தை தண்ணீர்பட்ட பாடமாய் ஒப்புவிப்பது குழந்தைப் பிராயத்துக்கு ஏற்றதாயினும் கிறிஸ்தவ வாலியப்பிராயத்துக்கு ஏற்றதல்ல. நாம் என்னாளுங் குழந்தைகளல்ல; ஆகாயம் என்ற ஒரு பொருள் இருக்கிறது என்பதை ஒருகாலத்தில் நம்பின நாம், இப்போது அது இருக்கிறதென்பதை நிச்சயமாய் அறிந்திருக்கிறதுபோல, தேவன் இருக்கிறார் என்ற சத்தியத்தை அதிலும் அதிக நிச்சயமாய் அறிந்திருக்கவேண்டாமோ? தேவன் இருக்கிறார் என்ற வெறும் அறிவும் போதாது; தாயார் வீட்டிலிருக்கிறார்களென்று அறிந்துந் தாறுமாறாய் நடக்கிற பிள்ளைகளுக்கு தாயார் வீட்டிலிருக்கிறார்களென்ற வெறும் அறிவினால் சபலமென்ன? அதுபோலவே தேவன் இருக்கிறார் என்று அறிந்தும் தாறுமாறாக நடக்கிறவர்களுக்கு அந்த வெறும் அறிவினால் பயன் யாதும் இல்லை. தேவன்



இருக்கிறார் என்னும் உயிருள்ள அறிவு வந்துவிட்டால் ஜீவியம் அதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டவேண்டாமோ? முன்னே முகத்துக்குமுன் ஒரு பேச்சும் முதுகுக்குப் பின் வேறொரு பேச்சும் பேசியவர்களும், ஆட்பார்த்து அடுத்த தோட்டத்துக்குள் நுழைந்தவர்களும், பொதுப்பணம் ஒருவர் பணமும் அல்ல என்றாற்போல் அதைக் கண்டபடி செலவழித்தவர்களும், எஜமான் பார்க்க ஓடி ஓடி ஊழியஞ்செய்து எஜமான் மறைந்தவுடன் படுத்துத் தூங்கியவர்களும் இப்போது உள்ளதை உள்ளபடி பேசி, பிறர் சொத்தைத் தங்கள் சொத்தாக மதித்து, ஊழியத்திலும் உண்மையுள்ளவர்களாக விளங்குவார்களல்லவா? தேவன் இருக்கிறார் என்ற உயிருள்ள அறிவு மாதர்களுக்கு வந்துவிட்டால் அவர்களால் உலகத்துக்கு விளையும் நன்மையை யாரால் கணிக்கமுடியும்? இந்த அறிவு இல்லாமல், கிறிஸ்தவர்கள் என்ற பேர் வைத்திருக்கிறதில் சபலமில்லை; ஜெபிக்கிறதும் பிரசங்கிக்கிறதும் வீணும் விருதாவுமாகும். தேவன் இருக்கிறார் என்ற சத்தியத்தைக் கண்டறிந்த மாதர்கள் பாக்கியவதிகள்.

தேவன் நீதிபரர் என்ற சத்தியமும் விசுவாசப் பிரமாணமாயிராமல் உயிருள்ள அறிவாதல்வேண்டும். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பது சத்தியமே; அவர் அன்புள்ள பிதாவாயினும் பிள்ளைகளுக்குச் செல்லங்கொடுத்து அவர்களைச் சீரழியச் செய்கிற தகப்பனைப் போன்றவரல்ல. அவருக்குப் பட்சபாதம் என்பது கிஞ்சித்தேனுங் கிடையாது; அவருக்கு தமது மனதுக்குகந்த தாசனாகிய தாவீதென்றாலுஞ் சரி, கீழ்ப்படியாமைகாட்டிய சவுலென்றாலுஞ் சரி, பேதமே இல்லை; அவரவர் நடக்கைக்குத் தக்கபடி அளந்து அவரவர் மடியில் கொட்டிவிடுவார். அவர் அன்பின் சொரூபியாய் மனுஷாவதாரமெடுத்தது தமது நீதிக்குத் திருப்தி செய்யவே. தேவன் அன்புள்ளவர், ஆதலால் தண்டனைக்குத் தப்பிக்கொள்ளலாமென்று பாவத்தில் நிலைத்திருக்கிறவர்கள் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள். அரசன் அன்று கேட்பான் என்றதுபோல் பாவிகள் அப்போதப்போது தண்டிக்கப்படுகிறதுமுண்டு; தெய்வம் நின்று கேட்கும் என்றதுபோல் காலஞ்சென்று தண்டிக்கப்படுகிறதுமுண்டு; எப்படியும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படாத பாவிகள் தண்டனைக்குட்படுவார்கள் என்பது நிச்சயம். தேவன் நீதிபரர் என்ற சத்தியமாகிய அறிவு உயிருள்ள அறிவாக மாதர்களுக்கு வந்துவிடுமானால் அவர்கள் உலக இரட்சகராகிய இயேசுவுக்குள் சரண் புகுந்து தண்டனைக்குத் தப்பிக்கொள்வதல்லாமல், சிலுவைக் கொடி பிடித்து பிறருக்கு தேவனுடைய அன்பைமாத்திரமல்ல அவருடைய

நீதியையுங்காட்டி அவர்களை இயேசுவண்டை நடத்தும் வழிகாட்டிகளுமாவார்கள். இப்படிப்பட்டவர்கள் இங்கிருந்தாலுஞ் சரி, பரலோகத்துக்குப் போனாலுஞ் சரி, எல்லாம் ஒன்றே; கிறிஸ்து அவர்களுக்கு ஜீவன், சாவு அவர்களுக்கு ஆதாயம். பூலோகத்திலிருக்கையில் அவர்கள் தேவன் நீதிபரர் என்பதைத் தங்கள் நடக்கையால் காட்டுவார்கள். ஒருதலை வழக்கில் ஒருநாளுஞ் சம்பந்தப்படாமல், பட்சபாதமின்றி, சிநேகிதர்களென்றுஞ் சத்துருக்களென்றும் பாராமல், நீதியாய் நியாயந் தீர்ப்பார்கள்; ஏனென்றால், நியாயந் தீர்க்க வேண்டியபோது தாங்கள் தேவனுடைய நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கிறதாகத் தங்களைப் பாவித்துக்கொள்வார்கள். பாவத்தைத் தம்மவர்களில் கண்டாலுஞ் சரி, பிறரில் கண்டாலுஞ் சரி, அவர்கள் பார்வையில் பாவம் பாவமாதலால் பாவத்தைக் கண்டித்துணர்த்துவார்கள்; தங்களுக்கு அருமையானவர்களில் காணப்படும் கறைகளை மேற்பூச்சுப் பூசி அவைகளை மறைத்துவைக்கும் அருவருப்பான வழக்கம் அவர்களுக்கிராது. சிறு பிள்ளைகளுக்கும், நீசர்களுக்குங் கூட நீதிசெய்வது அவர்கள் இயற்கையாகிவிடும். பூலோகத்தில் நீதியாய் நியாயந் தீர்க்கக்கூடாதவர்கள் இனி நியாயாதிபதிகளாகி உலகத்தை நியாயந் தீர்ப்பதெப்படி?

'**தேவன் இருக்கிறார்**', '**அவர் நீதிபரர்**' என்ற இவ்விரு சத்தியங்களையும் நாம் நமக்கு நேர்ந்த உபத்திரவங்களின் மூலமாய்க் கண்டறிந்தோம்; ஆதலால் நாம் நமது உபத்திரவங்களைக் குறித்து மேன்மைபாராட்டுகிறோம். உபத்திரவப்படுகிறவர்களுக்குப் பயன்படுமாறு நாம் எழுதியிருக்கும் '**முள்வேலிக்குள் பரதீசு**' என்னும் புஸ்தகத்தை உபத்திரவங்களின் மத்தியிலிருக்கிற மாதர் வாசிப்பார்களானால் பயனடைவார்கள். ஜூன், ஜூலை மாதங்களில் கொடிய நோயால் பீடிக்கப்பட்டுப் பாயும் படுக்கையுமாயிருந்த நாம் இப்போது படுக்கையைவிட்டு உலாவித்திரிகையில் நமது கால்களில் வீக்கங் கண்டபடியால் நம்மைப் பரமவீட்டுக் கழைக்க முதல் மணி அடித்தாயிற்றென்று நமது டாக்டர் சொன்னபடியால் இரண்டாம் மணியடிக்குமுன் நமது சகோதரிகளுக்குச் செய்யக்கூடிய ஊழியத்தைச் செய்யவேண்டுமென்கிற நோக்கமாய் இதை எழுதியிருக்கிறோம். தேவன்தாமே இதிலடங்கியிருக்குஞ் சத்தியங்கள் சகோதரிகளுக்குப் பயன்படச் செய்தருள்வாராக.

Y. G. Bonnell, P. B., L. Th.



# A GOOD WIFE EXTOLLED

## நன்மனையாளின் இலக்ஷணங்கள்

இராகம்: உசேனி. ரூபகதாளம்.

### பல்லவி

நல்மனையாள் லக்ஷணம்—நவில்கிறேன் தோழிகாள்!

### அநுபல்லவி

பல்லாயிரம் பெண்கள் — உல்லாசமாகவே
சல்லாபமாடினால் — சொல்லாமல் காணலாம். (நல்)

### சரணங்கள்

1. ஞானம் பிறந்திடுமே — அவள் வாயைத் திறந்தால்;
வானம் மழைத்தானம் — தானைச் செய்யுமாப்போல்
தானம் ஏழைகட்கு — தப்பாமல் தான்செய்வாள். (நல்)

2. காலை துயிலெழுவாள் — அதிகாலை இருட்டில்;
வேலை விஷயத்தில் — பம்பரம்போ லாடி,
மாலை மனைக்கேகி — மற்றோர்பின் தூங்குவாள். (நல்)

3. இல்லாததொன்றிராது — அவளிருக்கும் வீட்டில்;
எல்லாருக்கும் ஏற்ற — போஜனம் வட்டித்து,
எல்லாக் காலத்துக்கும் — ஏற்ற ஆடை ஈவாள். (நல்)

4. கல்விக் களஞ்சியமாம் — அவள் கற்றோர்முன் னின்றால்;
கல்வியற்றோர் முன்னே — கருணைக் கடலாம்;
செல்வி, சிறாரோடு — கொஞ்சிக் குலாவுவாள். (நல்)

5. புருஷன் சொல் கடவாள் — அவன் நன்மையே செய்வாள்;
புருஷன் நம்புவாள் — புகழ்ந்து பேசுவான்;
புருஷர் மத்தியில் — பேர்பெற்று வாழுவான். (நல்)

6. பிள்ளைகளும் எழும்பி — அவளை வாழ்த்துவர்;
பிள்ளைகள் முன்னவள் — பாக்கியவதியாம்;
பிள்ளைகள் தாயைப்போல் — ஆவார்கள் நிச்சயம். (நல்)

7. முகமலர்ச்சிகொண்டு — விருந்தோம்பி வாழுவாள்;
முகத்தில் தெரியும் — அகத்தின் அழகு,
ஜெகத்தில் அவளின் — அழகுக்கா ரிணை? (நல்)

Y. G. Bonnell, P. B., L. Th.

## GIVEN A NAME WHICH IS ABOVE EVERY NAME (Phil. 2: 9)

## எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினூர் (பிலி. 2: 11)

நாமம் என்பது பெயர். உலகிற் பிறந்த பேர் ஒவ்வொருவருக்கும் ஓர் நாமமுண்டு. ஆனாலும் எல்லாருடைய நாமங்களும் இன்பமானவைகளல்ல. சன்மார்க்கந்தவறி நடக்கும் பிள்ளையின் நாமம் பெற்ற தாய்க்குப் பிரியமானதன்று. ஆகவே, அவரவர்களின் நாமம் அவரவர்களிடம் பொருந்திய நற்குண நற்செய்கைகளால் மாறாத் புகழ்ச்சியையும், துர்க்குண துற்செய்கைகளால் மங்காத இகழ்ச்சியையும் பெற்று வருகிறது. துன்மார்க்கமுள்ள பிதாவின் நாமத்தை மைந்தன் எடுத்தோதினபோதிலும், தன் பிதா புரிந்த திருவற்ற செயல்களை புறம்வராமல் தடுத்தடக்க முயல்வதே, உலகின் இயல்பு. ஆனால் கிறிஸ்து யேசுவின் திருநாமத்தை ஓதுவதுமாத்திரமல்ல, அவர் செய்த சகல காரியங்களையும் உலகமறிய உரைப்பதுவே நமக்கு உத்தமமும் நமக்கு தேவன் அளித்த கட்டளையுமாயிருக்குமென்றால், கர்த்தராகிய கிறிஸ்து யேசுவின் திருநாமம், எல்லாவற்றிற்கு மேலான நாமம் என்பதற்கு ஐயமென்ன? மெய்யாகவே ஆதியிலே தேவனோடிருந்த நாமம் இந்த நாமம் (யோவா. 1 : 1); அனைத்தையும் சிருஷ்டித்த நாமம் (கொலோ. 1 : 16); அநேகர் எதிர்பார்த்த நாமம் (லூக். 2 : 25); அவனியிற் தோன்றுமுன் தன்முன் போக யோவானை யாட்கொண்ட நாமம் (லூக். 1 : 15); தேவதூதனால் கன்னிமரியாளுக்கு தெரிவிக்கப்பட்ட நாமம், இதுவே யேசுவெனும் திருநாமம் (லூக். 1 : 31); கன்னியின் கற்பத்திடையுள்ளபோதே தோத்திரிக்கப்பட்ட தூய நாமம் (லூக். 1 : 42); கானகத்திடையமர்ந்த கோனார் கலங்க தேவகணந் தோன்றி கூறியறிவித்த நாமம் (லூக். 2 : 10); கற்றுணர்ந்த வல்லோர் மூவர் ஆவலுற்று தேடி ஓடின நாமம் (மத். 2 : 2); ஏரோதரசனையும் எருசலேம் ஜனங்களையும் கலங்கவைத்த நாமம், கிறிஸ்துவெனுந் திருநாமம் (மத். 2, 3, 4).

ஈராறு வயதில் எருசலேம் தேவாலயம் சென்ற நாமம், அங்கு எதிர்பாராத விதமாகப் பேசி போதகர்களையும் மற்றுமுள்ள யாவரையும் பிரமிக்கச் செய்த நாமம் (லூக். 2 : 47); யூதேயா தேசத்தின் பாலைவனத்தில் 40 நாள் தங்கி உபவாசிக்க சென்ற நாமம், அங்குள்ள அலகையின் தீயசோதனைகளை வென்றுநின்ற நாமம் (மத். 4 : 1-11); காற்றையும் கடலையும் அடக்க கடுஞ்வஞ் செய்யாது ஓர் வார்த்தை



யால் அதட்டி அமைதலுண்டாக்கின நாமம், மா ஆச்சரியமான நாமம்
(மத். 8 : 26, 27); கலிலேயா கடலை கட்டாந்தரையெனக் கொண்டு
அதின்மேல் நடந்து சென்ற நாமம் (மாற். 6 : 48); ஐந்து அப்பங்
களையும் இரண்டு மீன்களையுங் கொண்டு 5000 பேர்களுக்கு உண
வளித்த அதி உன்னத நாமம் (மாற். 6 : 42); 'தேவனுடையதை தேவ
னுக்கும் இராயனுடையதை இராயனுக்கும் கொடுங்கள்' எனப்
போதித்த போதனைக்கிசைய, மற்றவர்களின் பொருளை வழிமறித்
துப் பறிக்காமலும், இதர மனிதர்களிடமிருந்தெடுக்காமலும், ஓர்
மீனின் வயிற்றினின்றெடுத்து தமக்கும் தமது சீஷர்களுக்கும் வரி
செலுத்தின வல்ல நாமம்; பிசாசுகள் கீழ்ப்படிந்தடங்கு நாமம்
(லூக். 10 : 17); பிரேதக்குழியில் வைத்த உடலுக்கு நாலு நாளைக்
குப்பின் உயிர் அளித்த நாமம் (லூக். 11 : 43, 44); தமக்குமுன்
ஒருவரும், தமக்குப்பின் எவரும் பேசியிராததும், பேசக்கூடாதது
மான ஞானத்தைப் பேசிய பெரிய நாமம் (மாற். 1 : 37); உலகோர்
யாவரும் வியக்க, பொறாமை கொண்ட யூதர்கள் பகைக்க, பலத்த
கிரியைகளை நடப்பித்த நல்ல நாமம் (மாற். 6 : 2); இரட்சிக்கப்
படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கட்டளை
யிடப்பட்ட நாமம், இயேசுவெனும் நாமம், இதுவே எல்லாவற்றிற்கும்
மேலான நாமம் (அப். 4 : 12); பாவத்தைப் போக்க வந்த நாமம்,
இந்த நாமத்தையல்லால் வேறெந்த நாமம்? மா பரிசுத்த நாமம்!
குற்றஞ் சாட்டக்கூடாத நாமம், என்றென்றுமுள்ள இயேசுவெனுந்
திருநாமம் ஒன்றே (யோவா. 8 : 46).

மிகப் படித்தோர் புகழும் மேலான நாமம்; இகத்தோரை விண்
புகுக்க இறங்கி வந்த நாமம். எல்லாரும் போற்றுதற் கிசைந்த
நாமம்; ஈனர், எளியர் என இனம்பிரித் தெடுக்கா நாமம். பகைவர்
கள் சூழ நடுநின்ற நாமம்; பங்கப்பட்டழியாது ஓங்கி உயர்ந்த நாமம்.
ஆகாதவரை யடக்கி ஆட்கொண்ட நாமம்; அல்லும் பகலாய் அவர்கள்
வாயில் நின்ற நாமம். நல் மனத்தார்க்கு நலங்காட்டு நாமம்; நம்பின
பேர்களை ஈடேற்று நாமம். அவிசுவாசிகளும் அலட்சியஞ் செய்யா
நாமம்; அடியவர்களால் அர்ச்சிக்கப்பட்ட நாமம். துற்புத்திகளை
யடித்து ஓட்டும் நாமம்; நற்புத்திகளையெடுத்து காட்டும் நாமம். உள்
ளத்தினின்று வழிகாட்டு நாமம்; கள்ள மனத்தாரை மிகவாட்டு
நாமம். பள்ளத்தை மலையுயரந் தூக்கு நாமம்; மலையை பள்ளத்திற்கு
மாழமாக்கு நாமம். எக்குலத்தாரையும் பிணைக்கும் இன்ப நாமம்;
ஏகமாய்க் கூடி துதித்தேற்று நாமம். வேஷக்காரர்களை வெளிவிடுக்
கும் நாமம்; தூஷணிப்போரைக் குணப்படுத்தும் நாமம். வஞ்சனை
யுள்ளோரை யுள்ளுள் வதைக்கு நாமம்; மிஞ்சின நெஞ்சரை

கெஞ்சலைக்கு நாமம். நிந்தனை செய்தாலும் நடுநீங்கா நாமம்; பலவந்தனை செய்தாலும் மறுதலிக்கா நாமம். எக்காலத்திலும் இடுக்கணுண்ட நாமம்; என்றாலும் அதிவலிமை கொண்ட நாமம். பாவமெலாம் போக்கும் பரிசுத்த நாமம்; பாவத்தினின்று பாதுகாக்கும் நாமம். எல்லாவற்றிற்கும் எல்லாமான நாமம், மற்றெல்லா நாமத்திற்கும் உயர்வான நாமம், இயேசுவெனுந் திருநாமம் ஒன்றே.

இந்த நாமமே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமுமானது (1 கொரி. 1 : 30); பூலோகத்தாரே நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள் (சங். 95 : 9); அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள், அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள், அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள் (சங். 105 : 1–3); அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து நாளுக்குநாள் அவருடைய இரட்சிப்பை சுவிசேஷமாய் அறிவியுங்கள் (சங். 96 : 2); அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள், அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள் (சங். 111 : 7); கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார் (சங். 115 : 13); நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரை துதியுங்கள் (சங். 136 : 23); கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார், மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார் (சங். 138 : 6); அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் (சங். 96 : 13); அவருடைய நாமத்தைப் பற்றிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். பற்றிக்கொள்ளுவோமாக, விடாதிருப்போமாக. ஆமென்.

Y. M. Solomon.

## PRAISE THE LORD FOR HE IS GOOD

## 'கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது'

(தொடர்ச்சி)

**இரண்டாவது:** சாலொமோன் தேவாலயத்தைக் கட்டி அதைப் பிரதிஷ்டை பண்ணின நாளில் இந்தக் கீதம் பாடப்பட்டது. 'கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று ஸ்தோத்திரிக்கையில் . . . கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை



நிரப்பிற்று.' (2 நா. 5 : 13, 14.) மீட்கப்பட்ட கிறிஸ்தவனின் சரீரமும் ஆத்துமாவும் தேவனுடைய ஆலயமாயிருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு முக்கிய இலட்சணங்கள் ஆலயத்திற்கு உண்டு. முதலாவது, ஆலயம் மனிதன் கர்த்தருக்கு பலி செலுத்தும் இடம். இரண்டாவது, கர்த்தர் தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தும் இடமே ஆலயம். கிறிஸ்தவனே, உன்னையே முதலாவது சமூலமாக கர்த்தருக்கு பலியாகச் செலுத்தி, இரண்டாவது இதைப் போலொத்த ஒரு பாட்டைக்கொண்டு ஸ்தோத்திர பலியிடத் துவக்கு. உன் இருதயமாகிய ஆலயமும் அப்போது தேவாவியானவரால் நிரப்பப்படும்.

**மூன்றாவது:** ஒரு கொடிய யுத்தத்தை ஆரம்பிக்கையில் இந்த கீதத்தை 'ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய்' பாடும்படி யோசபாத் ராஜா பாடகரை நிறுத்தினான். அப்போது கர்த்தர் பெரிய ஜெயத்தைக் கட்டளையிட்டார். மிகுதியான கொள்ளைப் பொருளும் கிடைத்தது. (2 நா. 20 : 20–26.) அதைரியம் தோல்விக்கு பலத்த ஒரு காரணம். தைரியமோ ஜெயம் வருவிக்கும். தைரியத்திற்கும் ஜெயத்திற்கும் காரணர் கர்த்தரே. பாவத்தை ஜெயிக்க விரும்புகிற கிறிஸ்தவன் எப்போதும் கிறிஸ்துவோடிருக்க வேண்டும். சோதனை ஆரம்பிக்கையிலேயே அவன் தன்னோடிருந்து தனக்கு ஜெயங்கொடுக்கிற ஆண்டவரைத் தன் இருதயத்தில் துதிக்கவேண்டும். சோதனை நேரத்தில் கீதம் பாடப்படித்தவன் பாக்கியவான்.

**நான்காவது:** பாபிலோனின் அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த யூதர்கள் தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடுகையில் இந்தக் கீதத்தைப் பாடினார்கள். அப்பொழுது முதியோர் 'மகா சத்தமிட்டு அழுதார்கள்', இளைஞர் 'மகா கெம்பீரமாய் ஆர்ப்பரித்தார்கள்'. ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டபின்பு திரும்பவும் பாவ அடிமைத்தனத்திற்குட்பட்டு பின்வாங்கிப்போன கிறிஸ்தவனே, நீ கர்த்தரிடத்திற்குத் திரும்பிவா. அவர் நல்லவர் என்று காண்பாய். நீ திரும்பவும் கிருபைபெறலாம். உன் முகத்துக்கு இரட்சிப்பும் உன் தேவனுமாயிருக்கிறவரை நீ இன்னமும் துதிக்கலாம்.

**ஐந்தாவது:** நமது அருமை இரட்சகர் பஸ்காவை ஆசரித்தபின் கெத்செமனே தோட்டத்திற்குப் புறப்படுமுன் பலமுறை இந்தக் கீதம் வருகிற 118-ம் சங்கீதத்தைப் பாடினார். நமது ஆண்டவர் இரத்தவேர்வை சிந்தவும் சிலுவையைச் சகிக்கவும் புறப்படுகையில் 'கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது' என்று பாடினார். துன்பகாலத்திற்கு ஏற்ற பாட்டும் இதுதான். மகா உபத்திரவத்தின்

மத்தியில் 'கர்த்தர் நல்லவர்' என்று பாடுகிறவன்தான் அவரை உத்தமமாய் மகிமைப்படுத்துகிறான். நமது அருமை எஜமான் காட்டிப்போன இந்த மாதிரியை, உத்தம தேவனுடைய பிள்ளைகளே, நீங்களும் கையாடி வருவீர்களாக!

ஆறாவது: இஸ்ரவேலர் இதுவரைக்கும் இந்தக் கீதத்தைப் பாடினது போதாது. இன்னமும் இதைக் கேட்க கர்த்தருக்கு மகா பிரியம். மனுஷனில்லாமல் அவாந்தர வெளியாய்க் கிடக்கிற யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும் இன்னும் 'கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தம் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.' (எரே. 33: 10, 11.) இன்னமும் கொஞ்சக் காலத்திற்குள் இது நிறைவேறும்.

ஏழாவது: ஒரு தேவபக்தன் ஒரு சங்கீதத்தின் ஒவ்வொரு வாக்கியத்திலும் இந்த வாசகத்தை அமைத்துப் பாடியிருக்கிறதை நினைப்போமாக. (136-ம் சங்கீதம்.) கர்த்தராகிய தேவனின் மாட்சிமை மேன்மையையும், அவர் தன் ஜாதியாருக்குச் செய்த நன்மைகளையும் எடுத்தெழுதி 'கர்த்தர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது' என்று பாடுகிறான். நீயும் இப்படிச் செய்து பார். கர்த்தரின் மகத்துவத்தைப்பற்றி நீ அனுபவத்தால் அறிந்தவைகளையும் அவர் உனக்குச் செய்திருக்கும் சகல கிருபைகளையும் ஒவ்வொன்றாய் எழுதி, ஒவ்வொன்றின் பக்கத்திலும் 'அவர் கிருபை என்றுமுள்ளது' என்றும் எழுதி வைத்துக்கொள். அடிக்கடி அதை எடுத்து வாசித்துப் பார். நீ மெய்யாய் கர்த்தரில் மகிழ்வாய், அவர் வழிகளில் உற்சாகம்கொள்வாய் என்பதற்குச் சந்தேகமில்லை.

## NOTICE

## நோட்டீஸ்

இந்த வருஷத் துவக்கத்தில் நடந்தமாதிரி ஞானோதய வித்தியாசாலை (Summer School) கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற வருஷம் ஜனுவரி மாதம் 13-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை என்னூரில் நடந்தேறும். அதை டோனாவூரிலுள்ள கனம் கார்மைக்கல் அம்மாளவர்கள் (Miss Carmichael) நடத்துவார்களென்று எதிர்பார்க்கிறோம். நாலு நாட்களுக்கும் சாப்பாட்டு செலவு ஆளொன்றுக்கு 3 ரூபாயாகும். இதைப்பற்றி திட்டமாய் நவம்பர் மாதப் பத்திரிகையில் விளம்பரம் செய்வோம்.

P. Grover, C.E.Z.M.



## STAMPS FOR LETTERS AND POST CARDS

## கடிதங்களுக்கும் தபால் கார்டுகளுக்கும் ஒட்டவேண்டிய ஸ்டாம்புகள்

### NEW RULES

### புதிய சட்டங்கள்

**உங்களுடைய அயலாரையும் தயவுசெய்து எச்சரிக்கவும்**

1921-ம் வருஷம் எப்ரல் மாதம் 18-ம் தேதி முதற்கொண்டும் அதன் பிற்பாடும், இந்தியாவில், அடியில்கூறிய ஸ்டாம்புகள் தபாலுக்கு ஒட்டவேண்டியவையாகும்:—

| | |
|---|---|
| தபால் கார்டுகள் முன்போலவே ... ... .. | $\frac{1}{4}$ அணா. |

**கடிதங்கள்**

| | |
|---|---|
| $\frac{1}{2}$ தோலா இடைக்கு மேற்படாத கடிதத்திற்கு ... ... | $\frac{1}{2}$ அணா. |
| $\frac{1}{2}$ தோலாவுக்குமேல் 1 தோலாவுக்கு உட்பட்ட கடிதத்திற்கு ... ... ... ... ... ... | $\frac{3}{4}$ அணா. |
| 1 தோலா இடைக்குமேல் $2\frac{1}{2}$ தோலா வரைக்கும் உள்ள கடிதத்திற்கு ... ... ... ... ... | 1 அணா. |
| இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவுக்காவது அதன் பாகத்திற்காவது ... ... ... ... | 1 அணா. |

**பத்திரிகைகள்**

| | |
|---|---|
| 8 தோலா இடைக்கு மேற்படாதவைகளுக்கு ... .. | $\frac{1}{4}$ அணா. |
| 8 தோலாவுக்கு மேற்பட்டு 20 தோலா வரைக்கும் உள்ள பத்திரிகைகளுக்கு ... ... ... ... | $\frac{1}{2}$ அணா. |
| 20 தோலாவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலா இடைக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ ... | $\frac{1}{2}$ அணா. |

**புஸ்தகங்களும் மாதிரி கட்டுகளும்**

| | |
|---|---|
| ஒவ்வொரு ஐந்துதோலா இடைக்கும் அதன் பாகத்திற்கும். | $\frac{1}{2}$ அணா. |

**மணி ஆர்டர்கள்**

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்டபடி கமிஷன் சார்ஜ் வாங்கப்படும்.

| | |
|---|---|
| 10 ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு ... ... | 2 அணா. |
| 10 ரூபாய்க்குமேல் 25 ரூபாய்வரைக்கும் ... ... | 4 அணா. |

25 ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி ரூபாய் 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய் மேற்படாவிட்டால் 2 அணாவும், சார்ஜ் செய்யப்படும்.

**வீ. பீ. மூல்யமாய் அனுப்பப்பட்ட சாமான்கள்**

அதே தேதி முதற்கொண்டும், அதன் பிற்பாடும், அடியிற்கண்ட வீதம் வீ. பீ. சாமான்களின் தொகையின்மேல், சார்ஜ்செய்யப்படும்.

வீ. பீ. சாமான்களின் பேரில் வசூல் செய்யவேண்டிய
பணம் 10 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் ... 2 அணா
10 ரூபாய்க்கு மேற்பட்டும் 25 ரூபாய் வரைக்குமிருந்தால் 4 அணா
25 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு.—ஒவ்வொரு 25 ரூபாய் தொகைக்கு 4 அணாவும், மீதி 10 ரூபாய்க்கு மேற்பட்டால் 4 அணாவும், 10 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் 2 அணாவும் சார்ஜ் செய்யப்படும்.

## DEPARTMENT OF AGRICULTURE, MADRAS

## சென்னை கார்போரேஷன்

## சாக்கடை தொட்டிகளிலிருந்து வெளிப்படுத்தும் வண்டலைப்பற்றிய ஓர் துண்டு பத்திரிகை

பயிர் சாகுபடியில் ஊக்கம் அதிகரிக்கவே செயற்கை எருவின் கிராக்கி அதிகமாகிக்கொண்டிருக்கிறது. நிலத்தின் மாசூலை அதிகரிக்க செய்யவேண்டுமென்னும் அவாவினால் குடியானவர்கள் கைக்கெட்டிய தூரத்தில் விலை சரசமாயும், ரொம்பவும் குணங்கொடுக்கக்கூடியதுமான எருக்களை புரக்கணித்துவிட்டு விலையுயர்ந்த எருவுக்கு ஆசைப்படுவது சகஜம்.

திருஷ்டாந்தமாக, கார்போரேஷன் சாக்கடை தொட்டிகளிலிருந்து வெளிப்படுத்தும் வண்டல் எருவானது தற்காலம் பிரயோசனப்படுத்தாமல் வீணாக்கப்படுகிறது. அதில் 1000ல் 3 பாகம் தழைச்சத்து அல்லது நைட்ரோஜனும் (Nitrogen), சுமார் 5 பாகம் தான்ய சத்து அல்லது பிரகாசதமும் (Phosphoric acid), அடங்கியிருக்கிறது. மாட்டு தொழு எருவின் சிலாக்கிய குணம் இதிலும் அனேகமாய் பொருந்தியிருக்கிறது. தோட்டப் பயிர்களுக்கு இந்த எருவை உபயோகப்படுத்தினால் ரொம்பவும் லாபமடையக்கூடும்.

இந்த வண்டல் எருவானது தற்காலம் அடியில் குறிப்பிட்டிருக்கும் எரு கிடங்கில் வண்டி ஒன்றுக்கு 8 அணா வீதம் விலைக்கு அகப்படும்.

சென்னப்பட்டணத்தை சுற்றிலுமுள்ள குடியானவர்கள் இதை வாங்கி உபயோகிப்பதனால் லாப மடையலாம்.

1. நேப்பியர் பார்க்.
2. ஐஸ் அவுஸ் ரோட்டு.
3. புதுப்பேட்டு (லாங்கார்டன்).
4. வேப்பேரி.
5. ராயபுரம்.
6. மெரினா கடற்கரையின் தெற்கு கோடி.
7. தொண்டையார்பேட்டை கொண்டிதோப்பு முதலியன.
8. சட்ட காலேஜ்.

C. L. S. PRESS, MADRAS—1921

# மாதர் போதினி

No. 286 நவம்பர் 1921 No. 11

## IS IT POSSIBLE WITH GOD?

## தேவனால் கூடுமோ?

சங். 78 : 19

**பழைய ஏற்பாட்டின் கண்டிப்பு:** இஸ்ரவேலர் ஒரு பெரிய பாவத்தைச் செய்யவில்லை. தேவனால் கூடுமோ என்று மாத்திரம் கேட்டார்கள். தேவன் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படச் செய்துவிட்டார். வனாந்தரத்தில் 'அவர் அப்பத்தையும் கொடுக்கக் கூடுமோ?' என்றார்கள். 'கர்த்தர் அதைக் கேட்டுக் கோபங்கொண்டார்.' அவர்களுக்கு இச்சித்தத்தைக் கொடுத்தார். ஆனால் 'அவர்களில் கொழுத்தவர்களைச் சங்கரித்தார்'. அவர்கள் ஆத்துமாக்களில் இளைப்பை அனுப்பினார். தேவனால் கூடுமோ என்பதில் அடங்கிய பாவமென்ன? 'தேவனை விசுவாசியாமலும் அவருடைய இரட்சிப்பை நம்பாமலும்' போனதே. (21 வா.) கர்த்தருடைய பார்வையில் எல்லாப் பாவங்களிலும் மகா கொடியபாவம் அவிசுவாசமே. ஏன் ஈராயிரம் வருஷங்களாக யூதர் இவ்வுலகத்தின் குப்பையாக எண்ணப்படுகிறார்கள்? அவிசுவாசத்தினாலேயே! தேவனை விசுவாசியாமலும் அவருடைய இரட்சிப்பை நம்பாமலுமிருக்கிற கிறிஸ்து சபையே, நீ நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே! 'சர்வ வல்லமையுள்ள தேவனை விசுவாசிக்கிறேன்' என்று சொல்லியும், உன்னைப் பரிசுத்தனாக்கக்கூடிய தேவவல்லமையைச் சந்தேகிக்கிறதென்ன? நீ அழியாதபடி, தேவனை விசுவாசி, அவருடைய இரட்சிப்பை நம்பு.

**புதிய ஏற்பாட்டின் தயாளம்:** அருமை இரட்சகர், தாம் உயிர்த்தெழுந்த நாள் சாயந்தரத்தில் தமது சீஷர் இருவரைச் சந்தித்தார். மூன்று வருஷமாக அவர்கள் அவரால் போதிக்கப்பட்டவர்கள்தான். ஆயினும் தம்மைப்பற்றியும் தாம் முடித்த இரட்சிப்பைப்பற்றியும் மகா

பெரிய அவிசுவாசத்தை அவர்களில் கண்டார். அவர்களும் தேவனை விசுவாசிக்கவில்லை, அவருடைய இரட்சிப்பை நம்பவில்லை. இரட்சகர் அவர்களைப் பார்த்து, 'தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே'. என்கிறார். (லூக். 24: 25.) அருமை எஜமான் அவர்களுடைய அவிசுவாசத்தை இன்னமும் சகிக்கிறார். அவிசுவாசிகளான அவர்களுடன் வழிநடந்து போகிறார். 'வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.' (27 வா.) அதினால் அவர்களுடைய 'மந்த இருதயம்' கொழுந்துவிட்டெரிந்தது. விசுவாச அக்கினியை இரட்சகர் அவர்களில் மூட்டிவிட்டார். அவர்கள் கண்களைத் திறந்தார். அவர்கள் 'அவரை அறிந்தார்கள்' (31 வா.) 'இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும்' அறியாமலும் விசுவாசியாமலுமிருக்கிற மந்த ஆத்துமாவே, இயேசு உன்னையும் தம்முடன் உலாவ வரும்படி கூப்பிடுகிறார். ஒரு வேதாகமத்தை மாத்திரம் கையில் எடுத்துக்கொண்டு காட்டுக்குத் தனிமையாய்ப் போ. அங்கே உன் மீட்பர் உன்னையும் போதிப்பார், உனக்கும் தம்மை வெளிப்படுத்துவார். உன் மந்த இருதயம் அனலாகிவிடும். உன் அவிசுவாசமாகிய பாவம் மகா பெரியது. அதை நிவிர்த்திக்கும்படி அவர் உன்னிடம் கேட்பது மகா அற்பம்—'யேசுவோடு தனியே'! இந்த அற்பத்தையும் செய்யத்தவறி ஆண்டவரை விட்டுவிடாதே. அவர் என் உன்னைக் கைவிடவேண்டும்?

**அவிசுவாசத்தின் புத்தியீனம்:** 'அவர் கன்மலையை அடித்ததினால் தண்ணீர் புறப்பட்டு நதிகளாய்ப் புரண்டுவந்தது; அவர் அப்பத்தையும் கொடுக்கக்கூடுமோ?' (சங். 78 : 20) என்று இஸ்ரவேலர் சொன்னார்கள். அற்பவிசுவாசி இன்றைக்கு என்ன சொல்லுகிறான்? 'ஆண்டவர் என்னை நீதிமானாக்கினார்; என்னைப் பரிசுத்தவானாக்கவும் அவரால் கூடுமோ?' என்கிறான். புருஷனை அறியாத கன்னிகை ஒரு குமாரனைப் பெறுவது எப்படி என்று கேட்டதற்கு தேவதூதன் உத்தரவாக: 'தேவனால் கூடாதது ஒன்றுமில்லை' என்றான். ஏழை ஆத்துமாவே, தேவவல்லமையைச் சந்தேகிக்காதே. 'உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடும்' என்று குஷ்டரோகியைப் போலாகிலும் சொல்லேன்! 'நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. தேவன் நம்மை...பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.' (1 தெச. 4: 3, 7.) தேவசித்தம் தெளிவாயிருக்கிறது அதைச் சந்தேகிக்கவேண்டியதில்லை. வல்லமையையும் சந்தேகிக்



காதே. அது புத்தியீனம். தண்ணீருக்கு அற்புதம் செய்த ஆண்டவர், ஆகாரத்துக்கு அற்புதம் செய்யக்கூடாதாம்! கன்மலையைப் பிளந்த ஆண்டவர், காடைகளை வரச்செய்யக்கூடாதாம்! என்ன புத்தியீனம்! கன்மலையைப் பிளந்தாற்போல தமது திருக்குமாரனின் திருவிலாவைப் பிளந்து அதிலிருந்து சர்வலோகத்தின் பாவங்களையும் போக்கக்கூடிய இரத்தம் நிறைந்த ஜீவநதியைப் புரண்டோடச் செய்த ஆண்டவர், தமது சர்வவல்லமையால் உன்னைக் காக்கக்கூடாதா? 'விசுவாசிக்கிறேன், ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்க உதவிசெய்யும்' என்று தாமதமின்றி உடனே கெஞ்சு. 'என்னை என்றும் சுத்தனாய், உம்மால் வைக்கக்கூடுமே' என்று நீயும் உன் ஜீவகாலமெல்லாம் நம்பிப் பாடு.

**விசுவாசியின் விருந்து:** தேவனால் கூடுமோ? ஆம், அருமை இரட்சகரால் வனாந்தரத்தில் விருந்து செய்யக்கூடும். வனாந்தரத்தில்தான் அவர் அற்புதமாய் ஐயாயிரம்பேரைப் போஷித்தார். பெலவீன விசுவாசியே, உனக்குள்ள கொஞ்சத்தைக்கொண்டு தனிமையான இடத்தில் போய் இயேசுவைச் சந்தி. அவருடைய வல்லமையைச் சந்தேகித்துக்கொண்டு பாவத்தில் நிலைத்திராதே. விசுவாசியே, நீ விசுவாசியாயிரு; விசுவாசியைப்போல பேசு. தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் என் பாவங்களைச் சுமந்துதீர்க்கும்படி எனக்காக அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்றெல்லாவற்றையும், விசேஷமாய் அவருடைய பரிசுத்தத்தையும் எனக்கு அருளாதிருப்பது எப்படி? என்று சொல்லு. (ரோ. 8 : 32.) அவிசுவாசிக்கும் விசுவாசிக்கும் எவ்வளவு வித்தியாசம்! என்னை அவர் பரிசுத்தமாக்கக்கூடுமோ என்று அவிசுவாசி சொல்லுகிறான். என்னை அவர் பரிசுத்தமாக்காதிருப்பதெப்படி என்று விசுவாசி சொல்லுகிறான். அவிசுவாசியே, வந்துபார். கிறிஸ்துவானவர் இன்றைக்கும் வனாந்தரத்தில் விருந்து செய்கிறார்; சத்துருக்களுக்குமுன் பந்தியை ஆயத்தம் செய்கிறார். சத்துருக்களின் திரள் சோதனையின் மத்தியில் அவரும் நீயும் நித்திய விருந்து கொண்டாடலாம். உன் எஜமான் வனாந்தரத்தில் 'அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்; எல்லாரும் புசித்து திருப்தியடைந்தார்கள்.' (யோ. 6 : 11.) உனக்கும் அவர் அப்படிக் கொடாதிருப்பதெப்படி? அவரைத் தேடி நீயும் தனிமையாய்ப் போ. எவ்வளவாக நீ அவருடன் வனாந்தரத்தில் விருந்துண்கிறாயோ, அவ்வளவாக உன் இருதய விருந்து ஓய்வில்லாதிருக்கும். உன்னுடன் விருந்துண்கிறவராய் அவர் உன் இருதயத்தில் உன் ஜீவகாலமெல்லாம் வீற்றிருப்பார். அப்பொழுது, திடீரென ஒருநாளில் இந்த வனாந்தர விருந்துசாலையி

லிருந்து ஆட்டுக்குட்டியானவருடன் முகமுகமாய் நித்திய விருந்துண்ணும்படி ஒரு க்ஷணப்பொழுதில் மகிமையின் விருந்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்படுவாய். அதுவரைக்கும் அவரை விசுவாசி; அவருடைய இரட்சிப்பை நம்பு.

‘ அவர்கள் அவருடைய வார்த்தைகளை

—விசுவாசித்து...பாடினார்கள்.
—விசுவாசியாமல்...முறுமுறுத்தார்கள்.’

சங். 106: 12, 24.

## THE SHORTCOMINGS OF THE FAITHFUL

## விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவம்

‘ நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள்ளிராது.’ (1 யோ. 1 : 8.)

‘தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.’ (1 யோ. 3 : 9.)

வெளித்தோற்றத்தின்படி இந்த இரண்டு வாக்கியங்களும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாய்த் தோன்றலாம். ஆயினும் அவைகள் விரோதமானவைகளல்ல. இரண்டும் சத்தியமே. அவைகளில் ஒன்றைமாத்திரம் பிடித்துக்கொண்டு பிடிவாதம் சாதிப்பது சத்தியத்திற்குத் துரோகம். ஒன்றுக்கொன்று விரோதமாய்த் தோன்றுகிற இந்த இரண்டு சத்தியங்களையும் பரிசுத்த யோவான் தமது முதலாம் நிருபத்தில் அருமையாய் ஐக்கியப்படுத்தியிருக்கிறார். அவை இரண்டும் பொருந்துகிறபோதுதான் விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவத்தைக் குறித்த தேவசத்தியம் விளங்கும். கிறிஸ்தவனே, முதல் வாக்கியத்தை மாத்திரம் பிடித்துக்கொண்டு, பாவத்தின்மேல் பாவம் செய்கிறதற்குப் போக்குச்சொல்லாதே. மனச்சாட்சி அறியச்செய்த பாவத்திற்குப் போக்குச்சொல்லுகிறவன் இன்னமும் குணப்படாதவன் என்பது நிச்சயம். பரிசுத்த யோவான், விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவத்தைக் குறித்து, தமது முதலாம் நிருபத்தில் எழுதுகிறவைகளை இங்கே சுருக்கமாய் எடுத்தெழுதுகிறோம். அவைகளைப் பூராவாய் அறிய விரும்புகிறவர்கள் பரிசுத்த ஆவியானவருடைய பாதத்திலிருந்து அந்த நிருபம் முழுவதையும் படிப்பீர்களாக!



### முதலாவது : விசுவாசியில் காணப்படுகிற பாவம்

1-வது : நாம் குணப்படுமுன் செய்த சகல பாவங்களையும் அடிக்கடி நினைக்கவேண்டும். ‘நாம் பாவம் செய்யவில்லை என்போமானால் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்.’ (1 : 10.) நான் ஒருக்காலும் பாவஞ்செய்யவில்லை என்று நம்மில் யார் சொல்லுவோம்? ஆனால் நாம் அடிக்கடி ‘முன் செய்த பாவங்களறச் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து’ விடுகிறோம். (2 பே. 1 : 9.) நாம் ஒருக்காலும் பாவஞ்செய்யாதவர்கள் போல மற்றவர்களைப்பற்றிக் கடினமாய்த் தீர்ப்புச்செய்கிறோம். நம்மில் பாவம் செய்யாதவர்கள் தீர்ப்புச்செய்யட்டும். மற்றவர்களை ‘கர்த்தர் வருமளவும் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும்’ தீர்ப்புச் செய்யாதிருப்போமாக. கர்த்தர் கிருபையாய் மன்னித்த கடந்த காலத்தின் பாவங்களை நினைத்து நம்மைத் தாழ்த்துவோமாக!

2-வது : விசுவாசிகளானபின் செய்கிற சகல பாவத்துக்கும் காரணமாயிருக்கிற பாவப்பிரமாணமாகிய மாம்சம் ஜீவநாளெல்லாம் விசுவாசிகளில் இருக்கும். ‘நமக்குப் பாவம் இல்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்.’ (1 : 8.) பாவம் செய்வதைப்பற்றி இந்த வாக்கியம் சொல்லாமல், பாவத்துக்கு இழுக்கிற மாம்சம் நம்மில் இருக்கிறதென்று மாத்திரம் சொல்லுகிறது. பாவம் செய்வதற்குப் போக்காக அல்ல, பாவஞ்செய்யாதிருக்க எச்சரிப்பாக இந்த வாக்கியம் எழுதப்பட்டது. வெட்டாந்தரைக்குள் புல்லின்வேர் மறைந்துகிடப்பதுபோல, விசுவாசிக்குள் பாவவேர் இருக்கிறது. வேர் இருப்பது இயற்கை. பாவவேர் என்னில் இல்லையென்று சொல்லுகிறவன் வஞ்சிக்கப்பட்டவன். ஆனால் பாவவேருக்குத் தண்ணீர் பாய்த்து, பாவகிரியையை முளைக்கச்செய்வது குற்றம். ஆகையால் விசுவாசியே, நீ பெற்ற தேவகிருபையை இழந்துபோகாதபடிக்கும், உன்னிலுள்ள கசப்பான பாவவேர் முளைத்தெழும்பி கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. (எபி. 12: 15.)

3-வது : ஓயாமல் கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படவேண்டிய அறியாமையின் பாவம். (7 வா.) செய்யத்தக்கவைகளில் எத்தனையோ காரியங்களை விசுவாசி செய்யாமல் விடுவதுண்டு. தேவனை முழு இருதயத்தோடும், பிறனை தன்னைப்போலவும் நேசிப்பதில் எந்நாளும் குறைவுண்டு. கவலைத்தாழ்ச்சியினால் அல்லது பாவமான பதஷ்டத்தினால் ஒருவேளை விசுவாசி வார்த்தையினாலாவது செய்கையினாலாவது குற்றஞ்செய்துவிட்டு, பின்பு தான்

செய்தது குற்றமென்று அறியலாம். நிர்நிமித்தமாய்ப் பலர் விசு
வாசியின் நடக்கையால் இடறலடைந்திருக்கலாம். அறிவுக்குறை
வினால் தற்காலத்தில் செய்யும் பலகாரியங்கள், பிற்காலத்தில் அதிக
அறிவடையும்போது பாவமாகத் தோன்றலாம். ஒளியில் அதாவது
கர்த்தருடைய சமுகத்தில் எப்போதும் நடந்துவருகிற விசுவாசியி
னிடத்தில் காணப்படுகிற இவ்வித அறியாமையின் பாவங்களை,
கிறிஸ்துவின் இரத்தம் ஓயாமல் சுத்திகரித்துக்கொண்டிருக்கிறது.
(1 : 7.) இவைகளை அவன் தினந்தோறும் அறிக்கையிட்டு மன்னிப்
புக்காகக் கெஞ்சவேண்டும். (1 : 9.) விசுவாசிகளிடத்தில் காணப்
படுகிற இம்மூவகைப் பாவங்களையும் முதலாம் அதிகாரத்தில் அப்
போஸ்தலன் எடுத்துக்காட்டிக்கொண்டு, அவர்களிடத்தில் காணப்
படவேண்டிய பரிசுத்தத்தின் அளவை மற்ற அதிகாரங்களில் காட்டு
கிறார்.

(இன்னும் வரும்.)

## Dr. HENRY WILSON

## டாக்டர் ஹென்றி வில்சன்

தெய்வ சுகமானது எனக்குள் ஒரு புதிய மனுஷன் வந்து
குடிக்கொள்வதுபோலிருக்கிறது. அது எனக்குள்ளே வருகிறதும்
உள்ளே வசிக்கிறதுமான ஒரு புதிய ஆளே அன்றி வேறல்ல.
பழைய மனுஷனுக்குள் புதிய மனுஷன் புகுந்து பழையதை
புதியதாக்குகிறதைப் பார்க்கிறேன். வேத எழுத்துக்கள் பொரு
ளாக மாறுகிறது. 'கிறிஸ்து உன்னில் மகிமையின் நம்பிக்கையா
யிருக்கிறார்' என்கிற திவ்விய வசனம் யதார்த்தமாய் மாம்சமாகவும்
இரத்தமாகவும் எலும்பாகவும் மாறுகிறது. 'விசுவாசத்தினால் கிறிஸ்து
என்னில் வாசஞ்செய்கிறார்' என்கிற அருமையான வாசகமானது
வேத புஸ்தகத்தின் ஏட்டிலிருந்து மனிதனுடைய இருதயத்துக்குள்
ளும் நரம்பு எலும்புகளுக்குள்ளும் பாய்ந்து சென்று அவைகளைப்
பலப்படுத்துகிறது. ஜீவ அப்பம், ஜீவத்தண்ணீர் முதலியவைகளைப்
பற்றி நமது இரட்சகர் சொன்னவைகளெல்லாம் ஆவியின் சம்பந்த
மாய்மட்டுமல்ல; சரீர சம்பந்தமாயு மிருக்கிறது. சுருக்கிச் சொல்ல
வேண்டுமானால் கர்த்தருடைய வார்த்தை இங்கிலீஷ், பிரென்ச்,
ஜெர்மனிய பாஷைகளில் புதிதாய் மொழி பெயர்க்கப்படாமல்
ஆவிக்குரிய ஆகாரமாகவும் மூளைக்குரிய உணவாகவும் சுகத்துக்குரிய
இரத்தமாகவும் சுகாதாரமாகவும் மாறுகிறது. நமக்குள் அற்புதமாய்



வாசஞ்செய்யும் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தினால் தேவ சுகமானது
புரண்டு ஓடும் ஜீவ நதியைப்போல நமக்குள் பிரவாகித்து ஓடி நம்மை
எப்போதும் செழிப்பாக்கிப் பூரிக்கச் செய்கிறது. வார்த்தைகள்
பிரத்தியட்ச அனுபவமும், எண்ணங்கள் பொருளாகவும், கருத்துகள்
பிராணாதாரமாகவும் மாறுகிறது. இரத்தத்தால் நிறைந்த ஒரு ஊற்
றுண்டு என்பது புதிதும் ஜீவனுமான விதமாய் நிகழ்காலத்துக்குரிய
சத்தியமாகுகிறது. எப்படி எசேக்கியாத் தீர்க்கதரிசனத்தில் கண்ட
நதியானது பாய்ந்த இடமெல்லாம் சகலத்தையும் செழிப்பித்து உயி
ருண்டாக்கி அசையச் செய்ததோ, அப்படியே நமக்குள்ளே இருக்
கப்பட்ட உயிர்ப்பிக்கும் ஆவியாகிய நதியும் நம்மை நித்தமும் செழிப்
பாக்கி திடப்படுத்திப் பலப்படுத்துகிறதாயிருக்கிறது. கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவின் சரீரத்திலிருந்து இடைவிடாமல் நமக்குள்
பாய்ந்துகொண்டிருக்கும் ஜீவனானது நம்முடைய தினசரி ஜீவிய
சமுத்திரத்தில் பாயும் நீரோட்டமாயிருக்கிறது. இந்த உயிர்ப்பிக்கும்
ஜீவனானது வெகு அமைதலாய் நம்முடைய சரீரத்தையும் நமக்குள்
மறைந்திருந்து வேலைசெய்யும் மற்றும் ஜீவக்கருவிகளையும் பலப்
படுத்துகிறது. நம்முடைய முழு ஜீவியத்திலும் ஒரு புதிய அனு
பவத்தை உண்டாக்குகிறது. இங்கிலாந்து தேசமானது அதைச் சுற்
றிலுமிருக்கிற உஷ்ண நீரோட்டத்தால் பசுமையும் செழிப்புமாயிருக்
கிறது. ஆனாலோ அதைப்போன்ற உத்திராட்டத்திலிருக்கும் மற்ற
தேசங்கள் அவ்விதமான நீரோட்டமில்லாமையால் குளிரால் வறண்டு
போயிருக்கின்றன. அவ்விதமாகவே இந்த ஆவியின் ஆற்றில் மூழ்கின
ஆத்துமாவும் சரீரமும் எப்பொழுதும் பச்சையும் பசுமையும் பல
முள்ளதுமாயிருக்கும். அப்படி முழுகாத மற்ற ஆத்துமாக்களோ
குளிர்ந்து வறண்டு முதிர்ந்துபோய்விடும்.

கடந்த 21 வருஷமாய் இவ்வித அற்புத தேவசுகத்தை நான் பெற்
றனுபவித்து வருகிறேன். ஆத்துமாவிலும் ஆவியிலும் ஏற்கனவே
தங்கியிருக்கும் கிறிஸ்துவின் ஜீவன் என் சரீரத்தில் இடைவிடாமல்
பாய்ந்து ஓடுகிறதைப் பார்க்கிறேன். அதே ஜீவன் சாவுக்கினமான
பாண்டத்தை நிரப்பி உயிர்ப்பிக்கிறது. அது மெய்யான ஜீவனுள்ள
வகையாய் மாமிசத்தில் வெளிப்பட்ட ஜீவனே. மனுஷ சரீரம்
கிறிஸ்துவின் மாம்சத்தோடு இணைக்கப்பட்டிருப்பதால் பரிசுத்த
முள்ளதும் சுகமுள்ளதும் பலமுள்ளதும் ஊழியத்திற்கு வேண்டிய
சகலத்தையும் செய்யத்தக்க சக்தியுள்ளதுமாயிருக்கிறது. நம்முடைய
மனுஷீகத்துக்குரிய பாகம் தெய்வீகத்தைப்போல மகிமையுள்ளதா
யிருக்கிறது. ஜடப்பொருள் மெய்ப்பொருளாகுகிறது. ஏனென்றால்
மெய்யான தேவன் அதில் சஞ்சரிக்கிறார். நம்முடைய ஆவிமட்டு

மல்ல சரீரமும் தேவத்தன்மையில் பங்கு பெறுவதால் சடப்பொருள் திவ்வியபொருளாகுகிறது. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (2 பேதுரு 1 : 4.) நித்தியஜீவனைப் பெற்றிருப்பதால் சடப்பொருள் நித்தியத்துக் குரியதாகுகிறது. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். சடப்பொருள் மகிமைக்குரியதாகுகிறது. எனென்றால் மகிமையான கர்த்தர் அங்கே வசித்து எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே நம் முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத் துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்தும் அனுபோகத்தை ருசிக்கச் செய் கிறார். இவ்விதமாய் நாம் தேவ சுகத்தை அறிந்துகொண்டால் சரீ ரத்துக்கு அது ஜெயத்தைக் கொடுக்கும் ஜீவியமாக இருக்கும்.

## CHRIST MY REFUGE

## கிறிஸ்து என் அடைக்கலம்

('என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்' என்ற இராகப்படி பாடலாம்.)

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி

உந்தன் பாதாரவிந்தம் அடைந்தேன்
சொந்தம் பாராட்டுந் தேவே.

அனுபல்லவி

எந்தன் பாவம்போக்க வுந்தன் திருரத்தம்
சிந்தினதா லென்னை யென்றுங்காக்க நியாயம்.

1. தங்க லோகம் விட்டாய் தமியருக்காய்
சங்கை யெல்லாந் துறந்தாய்
அங்கம் வதைபடத் தீயர்கையி விட்டாய்
துங்கனே என்துயர் தீர்க்க வல்லவனாய்.

2. நிந்தை யெல்லாம் சகித்தாய் ஈடேற்றம்
தந்து காக்க வந்தாய்
சிந்தை நொந்துமிகத் தேடிவந்தே னய்யா
பந்தங் குலைக்க வேறொருவரில்லை யைசையா.



3. தேகத்தில் பாடு பட்டாய் கொடும்
நோக வைங்காயங் கொண்டாய்
சாகத் தீர்ப்புப்பெற்ற பாவியென் பேரிலே
தாகமாகத் தேடி வந்தினாலேயே.

4. பரிசுத்த மென்னி லில்லை யாதொரு
பரிசுத்த செய்கை யில்லை
பரிசுத்த வித்தாய் முளைத்த பராபரா
பரிவாக வுந்தன் பரிசுத்தந்தா கோவா.

5. திக்கற்ற பாவி ஐயா எளியேன்
எக்குற்றஞ் செய்தோன் மெய்யாய்
சக்தியற்ற பெருஞ் சண்டாளப் பாவிதான்
தக்க வுதவிசெய்யத் தகுந்த சமயமையா.

6. ஆவி ஆத்மா சரீரம் ஆஸ்தியும்
மேவி உமது பாதம்
பாவி படைக்கிறேன் சொந்தக் காணிக்கையாக
தாவியே யுன்னன்பால் தாங்கி யேற்றுக்கொள்ளும்.

7. என்னைக் கண்ணோக்கு மய்யா அடியேன்
உன்னைக் கண்ணோக்கினேன் துய்யா
அன்னைதந்தை சுற்றம் பெந்துஜனம் நீயே
இன்னமென் ரோகத்துக் கேற்ற பரிகாரிநீ.

8. வேதத்தையும் தந்தாய் புவியர்க்கு
விதவித நன்மை ஈந்தாய்
இதயத்தி லானந்த பாக்கியமுந் தந்தாய்
வேதநாயகன் கவிபாடிடவுஞ் செய்தாய்.

V. D. K.

## THREE KINDS OF WOMEN

## மூவகை ஸ்திரீகள்

பணம், பணம் என்னும் தொனி நமது இரு காதுகளும் செவிடு படத் தொனித்துக்கொண்டிக்கிறதறிவோம். வீட்டிலும் வெளி யிலும், கனவிலும் நினைவிலும் சிலருக்குப் பண ஏக்கமே பேரேக்கம். 'பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்', 'பணமில்லாதார்

நடைப்பிணமாவர்', 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை', 'தங்கச் சாவி எந்தப் பூட்டையுந் திறக்கும்', 'இலக்ஷப்பிரபு', 'கோடீஸ்வரன்'—இவைபோன்ற வழக்கச் சொற்களையும், பணக்காரர் சர்வ வல்லமை படைத்தவர்கள்போல் போற்றப்பட்டு, சாகாவரம் பெற்றவர்கள்போல் பேசப்படுவதையும் கவனிக்குங்கால், நமது நாட்டில் பணத்துக்குரிய மதிப்பு இவ்வளவென்பது தெரியவரும். ஸ்திரீகள் பணவிஷயமாய் நடந்துகொள்ளும் நடபடிகளைக்கொண்டு அவர்களை **உலோபி**, **ஊதாரி**, உதாரி என்ற மூவகுப்பினராகப் பிரிக்கலாம்.

I. **உலோபி.** பணத்தின்மேலுள்ள பேராசையை உலோபத்துவம் எனவும், பணத்தின்மேல் பேராவலுடையவளை **உலோபி** எனவும் அழைப்போம். வைக்கோல் போர்மேல் படுத்திருந்த நாய் தானுந் தின்னாமல், வைக்கோல் தின்ன வந்த பசுவையுந் துரத்தின கதைபோல், உலோபி பணத்தில் புரளுவதன்றி அதைத் தானனுபவியாள், பிறருக்குங் காற்காசுமீயாள். இவள் எந்தக் காலத்திலாவது வாய்க்கு இதமான உணவு விலாப்புடைக்கத் தின்றதுண்டானால் அது பிறர் வீட்டில்தான். இவள் எப்போதாவது நல்ல வஸ்திரந் தரித்ததுண்டானால் அது வண்ணான் தப்பிதத்தினால்தான். எச்சிக்கையினால் காகத்தை ஓட்டமாட்டாள். செப்புக்காசை வெள்ளி நாணயமாக்கி, ரூபாயைத் தங்கக் காசாக்கி, பாங்கில்போட்டும், கடும் வட்டிக்குக் கொடுத்தும் பணத்தைப் பெருக்குவாள். இந்த உலகத்துப் பணம் மறு உலகத்தில் செல்லாது என்பதை மறந்தவள்போல் விருத்தாப்பிய தசையில் பணத்தைச் சேர்ப்பதொன்றே அவள் நோக்கமாகவிருக்கும். பரம லோகத்தில் பணஞ்சேர்த்து வைக்கும் முறை அவளுக்குத் தெரியாது. தம்படிக்கு உயிரிழக்கப் பார்த்த ஈயாப்பத்தன் கதைபோல் தம்படிக்கும் நாக்கைப் பிடுங்கப் பார்ப்பாள். இயேசு இப்படிப் பட்டவளைப் பார்த்து, 'ஒருத்திக்குத் திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவளுக்கு ஜீவனல்ல' என்றும், 'உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா' என்றும் சொல்லுவார். ஆதலால் உலோபத்துவம் இயேசுவின் சீஷிக்குரிய இலக்ஷணமல்ல.

II. **ஊதாரி.** வரவுக்குமிஞ்சப் பணத்தைச் செலவிடுதல் ஊதாரித்தனம் அல்லது ஆராதூரித்தனம் என்றழைக்கப்படும்; ஆலோசியாது பணத்தை வாரி இறைப்பவள் ஊதாரி அல்லது ஆராதூரி என்ற பெயர் படைப்பாள். இவளுக்குப் பணம் ஓர் பெரிய காரியமல்ல. புசிப்பதும், குடிப்பதும், மகிழ்வதுமேயல்லாமல் சூரியனுக்குக் கீழே வேறொரு நன்மையும் இல்லையென்றாற்போல் நடப்பாள்.



இவள் வீட்டில் கறிவகைகளுக்குக் கணக்கிராது; நெய்யும் பாலும் தண்ணீர் படும் பாடுதான். 'கடன்பட்டும் குமருகரையேற்று' என்று சொல்லிக்கொண்டே வட்டிக்குப் பணம் வாங்கிக் கலியாணத்தைச் சிறப்பிக்கவென்று டம்பாச்சாரத்தில் இறங்கிவிடுவாள்; வட்டி கொடுத்தாலும் வாங்கின கடன் கொடாள். இவளும் இவள் வீட்டாரும் தங்கள் நிலைமைக்கு மேற்பட்ட ஆடை ஆபரணங்கள் தரித்து, பிரபுக்கள் குலத்தைச் சேர்ந்தவர்கள்போல் காணப்படுவார்கள். உலோபியைத் தன் காலிலொட்டின தூசிக்குச் சமமாகப் பாவித்து, உலோபி என்ற பேர் படைப்பதிலும் உயிரிழப்பது வாசி என்பாள். பானையில் பதக்கு உண்டானால் உலையில் முக்குருணி வேகும். கையில் கால் நூறு கிடைத்தால் அவள் உள்ளத்தில் ஒரு கோடி நினைவு உதிக்கும். கடவுள் மேல் முழு நம்பிக்கையுடையவள்போல் நடித்து, நாளைத்தினத்தைக் குறித்துக் கவலைப்படலாகாது என்பாள். இவள் அந்தியகாலம் இவளுக்கே கசப்பாயிருக்கும். கடன் தீர்க்க வழிவகையற்று, மூச்சுக்கு முன்னூறு பொய் பேசி, பிறர் பணத்தில் கைவைத்து, கடைசியில் மனம் நொந்து, நம்பிக்கையற்றவளாக மரிப்பாள். இவள் பேர் எல்லாருடைய நாவிலும் பழிச்சொல்லாகவிருக்கும். உலோபிக்காக ஒருவேளை நாம் பரிந்துபேசத் துணியலாம்; ஆனால் ஊதாரிக்காக நம்மிடத்தில் நல்வாக்கு ஒன்றுகூட இல்லை. ஏனென்றால், உலோபி தன் ஜீவ காலத்தில் யாருக்காவது நன்மை செய்தவளல்லவென்றாலும் தீமை செய்தவளுமல்ல; மேலும் தன் மரணத்துக்குப் பின் பிறரைத் திரவியசம்பன்னராக்குகிறாள். ஆனால், ஊதாரியோ சில பெருவயிற்றுச் சோம்பேறிகளையும், உயிரோடே உடலைச் சாப்பிடும் இச்சகர்களையும் சிறிதுகாலம் போஷித்தபோதிலும் ஊரைக்கொள்ளையிடுவதன்றி, தன் புருஷனையும், மக்கள் மனுஷரையும் படுகுழியில் இறக்குவாள். இப்படிப்பட்ட வெட்கமற்ற ஆராதூரியை நோக்கி கர்த்தருடைய சத்தியவேதம், 'இவையெல்லாவற்றின் நிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி' என்று சொல்லுகிறது.

III. **உதாரி.** வறுமையிலிருப்போர்க்கு இரங்கிக் கொடுக்கும் தருமகுணம் உதாரத்துவம் என்று அழைக்கப்படும்; தருமசிந்தை கொண்டு பிறருக்கு ஈகிறவள் உதாரி என்னுஞ் சிறந்த பேர் படைப்பாள். பணத்தைக் கையாடும் விஷயத்தில் உதாரி நடுநிலைமையுடையவளென்று சொல்லலாம்; இவள் உலோபியைப்போல் தன் வாயைக் கட்டி, வயிற்றை ஒடுக்கவுமாட்டாள்; அல்லது ஆராதூரியைப்போல உண்பதையும் உடுப்பதையுந் தவிர வேறே சந்தோஷ

மில்லை யென்றாற்போல நடக்கவுமாட்டாள். எறும்பும் தேனீயும் இவளுடைய உபாத்திமார் கூட்டத்தைச் சேர்ந்தவைகளானபடியால், சோம்பலைத் தவிர்த்துப் பொருளீட்டியபோதிலும் உலோபியைப் போல அது ஜீவன் என்று எண்ணமாட்டாள். இவள் பசியென்று வந்தோர்க்கு இல்லையென்று சொல்லமாட்டாளாயினும், ஊதாரியைப்போலிராமல் துணிக்குத் தக்கதாகச் சட்டை வெட்டுவாள். உலோபிக்குரிய தன்னயமும் இவளுக்குக் கிடையாது; ஊதாரியைப்போல் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் புத்தி இவள் கனவிலும் வராது. கருணை இவள் கண்ணிலும், அநுதாபம் இவள் முகத்திலும், இரக்கம் இவள் இருதயத்திலும் ஜொலித்து விளங்க, தன்னாலியன்றதை எவர்க்கும், எக்காலத்தும், பிரதியுபகாரம் விரும்பாமல் செய்வாள். இரக்கத்தோடுகூட நீதியுமுடையவளாகையால் தன்னையும், கணவன், மக்கள், பெற்றோரையும் மறவாள். விருந்தினர் வந்தவிடத்து முகமலர்ச்சியோடு அவர்களை உபசரிப்பாள். இவள் நன்மைசெய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசுவின் சிஷியாகையால், ஒன்றுஞ் சேதமாய்ப் போகாதபடி மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவைத்து, தான் மாளும்போது தன்னை நித்தியமான வீடுகளில் ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி அநீதியான உலகப்பொருளால் தனக்குச் சிநேகிதரைச் சம்பாதிப்பாள். இவளும் இவள் குடும்பத்தாரும் பிரதிதினமும் முழங்காற்படியிட்டு 'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்' என்று பிரார்த்திப்பார்கள்.

இதை வாசிக்குஞ் சகோதரிகளே, மேற்கூறிய மூன்று வகுப்புகளில் உங்கள் படம் எந்த வகுப்பில் காணப்படுகிறது? 'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது' என்பதையும், தங்களைத் தேவபத்தர் எனச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் முதலாய் 'அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்' என்பதையும் அறியீர்களா? பணவிஷயத்தில்தான் உங்கள் கிறிஸ்தவ ஜீவியம் முதலாவது விளங்கவேண்டும். ஆதலால் 'போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்' என்று அறிந்து, பணவிஷயத்தில் பிறருக்கு மாதிரிகளாயிருக்க தேவன் உங்களுக்கு அருள் புரிவாராக.

Y. G. Bonnell, P.B.



## WHAT IS LOVE!

## அன்பாவ தென்ன!

அன்பு என்பதென்ன? யாருமறியாத ஒன்றோ! உலகில் அன்பிலாரொருவருண்டோ? அன்பு எங்கும், யாவரிடத்திலும் இருந்தேயிருக்க, அன்பு, அன்பு என்பானேன்? பெற்ற தாய்க்குப் பிள்ளையின்மேல் அன்பில்லையோ? புருஷன் மனைவியின்மேல் அன்பாயில்லையோ? தந்தை தாய்மீது மைந்தருக்கன்பில்லையோ? உற்றார் உறவினர்க்குள் அன்பு திருநடனஞ் செய்யுதில்லையோ? குரு சீடன்மீதும், சீடன் குருவிடத்தும் அன்பாயிருக்கவில்லையோ? பெரியோர் சிறியோர்மீதும், சிறியோர் பெரியோரிடத்திலும் அன்பு கூருகிறதில்லையோ? கற்றவர் கல்லார்மீதும், கல்லார் கற்றவர்மீதும் கொள்ளும் அன்பு அன்பல்லவோ? உள்ளவர் இல்லார்மீதும், இல்லார் உள்ளவர்மீதுங் கொள்ளும் அன்புக்கு அளவு கிடையாதே! அன்பு சகல நாட்டிலும் மலிந்து வீதி வீதியாய் சுற்றித்திரிகையில், அன்பைக் காணாதார்போல், அன்பு, அன்பு என்பதேனோ! என்பு தோல் போர்த்த உடம்பின் 'இச்சை' யெல்லாம் 'அன்பு' எனும் நாமத்தைத் சூடிக்கொள தைரியங்கொண்டதாலல்லோ? உலகக் கடமையெல்லாம் 'அன்பு' எனும் கனத்தப் பெயரை கைப்பற்றிக் கொண்டதென்ன துணிவு! பெருமையெல்லாம் 'அன்பு' எனும் நாமத்தை தரித்துத் திரிவது சரியோ? அன்புக்கு நெடுந்தூரமானவையெல்லாம் 'அன்பு' எனும் பெயரைப் பெற்றுக்கொண்டது மா ஆச்சரியமே. உலகத்தில் 'அன்பு' எனப் பேரெடுத்தவைகளை வேறு பெயரிட்டழைத்தல் நலம். உலக அன்பு குறித்தமட்டுந்தான் செல்லும். மட்டுக்குமேலேக உலக அன்பிற்கு வலிமை யிராது. பொறுமையாகிய பெருங்கடலைக் கடக்கவும், பெருமையாகிய பெருங்கிரியையைத் தகர்க்கவும், கோபமாகிய குன்றுகளை அடியோடு பெயர்த்துப்போடவும், இன்னும் இவைகளுக்கு சம்பந்தமான சகலத்தையும் க்ஷணத்தில் சின்னாபின்னப்படுத்திப்போடுந் திறலுடைய 'அன்பை', பொறுமையினால் அடியுண்டதும், பெருமையினால் சீர்கெட்டதும், கோபத்தினால் குன்றிப்போனதும், மற்றுமுள்ளவைகளால் நிமைப்பொழுதில் கலங்கிப்போகவுங்கூடிய உலக அன்போடு ஒப்பிடப்போமோ? இக்காலத்தில் விசேஷமாக 'இச்சை' என்பது உலகத்தில் 'அன்பு' எனும் மாறுவேடம் பூண்டுத்திரிவதால் 'அன்பை' 'தேவ அன்பு' என்று பெயரிட்டழைப்போமாக. (இது, பொய்

வேதங்களுண்டென உணர்த்தும்பொருட்டு 'சத்திய வேதம்' என்றழைக்கப்படுவதற்கொக்கும். மூச்சுபேச்சற்ற தேவர்களுண்டென்று விக்கிரகத் தொழும்பர் அறிந்துகொள்ளும்பொருட்டு, ஜீவனுள்ள தேவனென்றழையப்படுவதற்குச் சரியாகும்.) தேவ அன்பு எல்லையற்றதும் எவராலும் எடுத்தோதப்படாததுமாயிருக்கிறது. தேவஅன்பை உணர்ந்தோத ஒருவர் உண்டென்றால், அவர் தேவனுடைய அளவையும் அழகையுங் கூறுவது அசாத்யமென்கலாமோ? தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை, அப்படியானால் அவரன்பை யறிய ஒருவருண்டோ? ஒப்பும் உவமையுமிலாத தேவன் ஒருவர் உண்டென நாமறிந்திருக்கும்வாறே, இவ்வளவு அவ்வளவு என்று பொய்யை யுரைக்கத் துணியாமல், அன்பு தேவனாகவே யிருக்கிறது அல்லது தேவன் அன்பாகவே யிருக்கிறாரெனப் பகருவோமாக. (இதை வாசிக்கும் சகோதர சகோதரியே, அன்பு ஒரு தேவன், ஞானம் ஒரு தேவன், அறிவு ஒரு தேவன் என்றருத்தப்படுத்தாமல், இவைகளெல்லாம் அவர் ஒருவருக்கே உரிய மகிமைகளாதலால், தேவன் என்று சொல்லப்பட்டதெனக் கொள்க.) அறிவுக்கெட்டாத அன்பு! இந்த அன்பை கண்டறிந்தவர் யார்? விசுவாசியைவிட அவிசுவாசியே அதிகமாயறிந்திருக்கவேண்டும். பக்தர்களைக் காட்டிலும் பக்தியற்றவர்களே உணர்ந்திருக்கவேண்டும். ஆனாலும் இவர்களால் அறிந்துகொள்ளக்கூடாது. இவர்களோ காணாக் கண்களும், கேளாச் செவிகளும், உணராத் தலையும், உருகா நெஞ்சமுமுள்ளவர்கள். இவர்கள், தங்கள் அற்ப குற்றங்களை ஒருமுறை மன்னிப்பதைப்போல் இரண்டு மூன்று முறை மன்னித்துவிடும் மனிதனை போற்றக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால் பிரதி நிமிஷமும் தங்களின் பெரும்பாவ குற்றங்களை முன்னிட்டு தண்டியாது, பேரன்பினால் பொறுமையாயிருக்குங் கடவுளைப் போற்ற வகையறியார்.

எவராவது அற்ப உதவிபுரிந்தால், அவர்கள் முகத்துக்கெதிரில் ஏதோ நன்றியுள்ளவர்களைப்போல் நடிக்க கற்றிருந்தாலும், அந்த உதவி கிடைக்க கிருபை செய்தவரும் வேறெல்லா உதவியையும் புரிந்து வருகிறவருமாகிய தேவனுக்கு நன்றிசெலுத்த இவர்களுக்குத் தெளிவிராது. நிலையற்ற மனிதனுக்கு அஞ்சி தொண்டுபுரிந்து வரும் இவர்கள் ஆதியந்தமில்லாத கடவுளுக்கஞ்சாமற்றிரியும்ரகசியமென்னமோ! மண்ணிற் புதைத்துப்போடுஞ் சரீரத்தை சவுக்காரங்கொண்டு கழுவவும் ஆடை ஆபரணங்கொண்டு அலங்கரிக்கவும் அவா பூண்ட இவர்கள், மடியாத ஆத்துமா அடையவேண்டிய வாழ்வை நினையாதலவு மாயமேதோ! இவர்களையும் போஷித்துக் காத்து மனந்திரும்புவார்களாவென [illegible]



ஆ, மகா ஆச்சரியமான அன்பு, தேவ அன்பு! எண்ணுவதற்கு மனுஷன் எம்மாத்திரம்! அப்படியிருக்க, மனுஷக்கூட்டத்தின் மேல் நிலையாய் நின்ற அன்பு, ஓ, இதென்ன அன்பு! மண்ணான மனுஷனை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டு மன்பு, இதல்லோ தேவன்பு! 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை யடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்' என்பதை ஓதும் யாவரும், இவ்வளவாய் என்பதை எவ்வளவு என வினவி, அளவிறந்தது என விடைபகர்ந்துகொள்வதற்கு மேலென் செய்வர். மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனை மாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்த தேவஅன்பை மனுஷ அறிவினால் அறியப்போமோ? கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். அவரிடத்தில் பாவமில்லை; அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை. பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். குமாரனாகிய திராக்ஷ செடியில் நிலைத்திருக்கும் கொடிகளாகிய விசுவாசிகள் அன்பாகிய மிகுந்த கனிகளைக் கொடுப்பார்கள். குமாரனை உடையவனிடத்திலிருந்து அன்பாகிய ஜீவ ஊற்றுகள் ஓடும், அன்பை வெளிப்படுத்தின கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அடைந்து கொள்ளுகிறதினால்மாத்திரமே அன்புள்ளவர்களாயிருப்போம். பாவமில்லாதவரே அன்புடையார், மற்றவர் யாரோ. பாவமில்லாதவரைப் பற்றும் மெய்ப்பற்றினால்மாத்திரமே பரிசுத்தமாக்கப்படுவோம். பாவமிலா அவதாரமாகிய நமது இயேசுபகவானைவிட பாவத்தைப் பரிகரிக்கக்கூடியவரார்? இவரைப் பின்பற்றும் மெய்விசுவாசிகள் தவிர மற்றவர், தங்களை அன்புடையாரென்றழைத்துக்கொள்வதை மறுத்து வேறெந்த பெயரையாவது வைத்துக்கொள்வார்களாயின் தங்கள் பாவத்தை குறைத்துக்கொள்வதாகும். கிறிஸ்துவை விசுவாசிக்கும் மெய் விசுவாசிகளெல்லாம் தங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியந்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையுங் கூட்டி வழங்காதிருப்பாரோ? மெய்யாகவே இயேசுகிறிஸ்துவை அறியும் அறிவு விசுவாசி

களை வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும். ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே கர்த்தரின் கற்பனை. அன்பானது பிறருக்கு பொல்லாங்கு செய்யாது நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாம். அதாவது கிறிஸ்துயேசுவை விசுவாசிப்பதின் அடையாளம் அவர் இட்ட கட்டளைகளைக் கைக்கொள்ளுவதே, மற்றவை வீண்பிதற்றும். அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; தேவனை அறியாதவர்களிடத்திலும் தேவனுக்கு வெகுதூரமானவர்களிடத்திலும் அன்பெனும் ஆவியின் கனியைத் தேடுவதைவிட, முட்செடியில் அத்திக்கனியை அறுக்க முயல்வது சுலபமல்லோ? அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்; அன்பிலாதவன் தேவனை யறியான். நமது அன்பு மாயமற்றதாயிருக்கும்படி வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூர பாவமில்லா திரு அவதாரநாதன் கிறிஸ்துயேசு சுவாமியின் பரிசுத்த தாளைப் பணிந்து ஏற்றுவோமாக.

Y. Solomon.

C. L. S. PRESS, MADRAS—1921

# மாதர் போதினி

No. 287 டிசம்பர் 1921 No. 12

## CHRISTMAS GREETING

## கிறிஸ்து ஜனன வாழ்த்து

கிறிஸ்து ஜனன வாழ்த்தலின் அர்த்தமென்ன? இக்காலத்தில் கிறிஸ்மஸ் கார்டுகள் அனுப்புவதும், 'I wish you a Happy Christmas' 'நான் உனக்கு சந்தோஷமான கிறிஸ்மஸ் வந்தனஞ் சொல்லுகிறேன் என்பதும் சாதாரண வழக்கம். பெரும்பாலர் இப்படிச் செய்வதுண்டு. ஆனால் உண்மையான இருதயத்தோடு கிறிஸ்மஸ் சந்தோஷத்தை உணர்ந்து பிறரும் அதை உணரவேண்டுமென்ற வாஞ்சையோடு அனுப்புவோர் சிலரே.

சந்தோஷகரமான கிறிஸ்மஸ், தாழ்மையுள்ளவர்களாயும், அன்புள்ளவர்களாயும் சமாதானத்தை நாடுகிறவர்களாயும், பாவம் நீங்கப் பெற்றவர்களாயும், தேவமகிமைக்கென்று ஜீவிக்கிறவர்களுக்கே உரியது. இவ்வித ஜீவியத்தை மனுஷருக்கு இலவசமாய்க் கொடுக்கவே கிறிஸ்து உலகத்தில் வந்து பிறந்தார். கிறிஸ்துவைக் கண்டுகொண்டவர்களுக்கு இந்த சிலாக்கியம் கிடைக்கும். இதை யாவரும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற வாஞ்சையோடு கிறிஸ்மஸ் வாழ்த்து அனுப்பவேண்டியது.

மாதர்போதினியை வாசிக்கும் யாவரும் இந்த ஜீவியத்தை அடையவேண்டுமென்ற அவாவுடன், பின்வரும் கிறிஸ்மஸ் வாழ்த்தை மாதர்போதினி அனுப்புகிறாள்.

'பூமியின்மேல் சமாதானம்', 'சமாதானப் பிரபு', 'Peace on earth', 'The Prince of Peace' இவை இரண்டும் வேதவாழ்த்து, கிறிஸ்மஸ் வாழ்த்து. இவற்றில் கிறிஸ்மஸ் சந்தோஷம் முற்றிலும் அடங்கியிருக்கிறது. சமாதானம் என்பது அவ்வளவு விசேஷித்ததா? அதெப்படி யென்று பார்ப்போம். சமாதானப் பிரபு இரண்டு முக்கியமான சமாதானத்தை பூமியில் உண்டாக்க வந்தார். அதாவது

தேவனோடு சமாதானமும் மனுஷரோடு சமாதானமுமே. நம்மில் பாவமிருக்குமட்டும் நமக்கு தேவனோடு சமாதானமில்லை. நமது பாவங்களை நீக்கும்படி இயேசுக்கிறிஸ்து வந்தார். இயேசு என்றால் நமது பாவங்களை நீக்கி நம்மை ரட்சிக்கிறவர் என்றர்த்தம்.

சமாதானக் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மனுஷரோடும் சமாதானமிருக்கும். ஒருவர் குற்றங்களை யொருவர் மன்னிப்பதால் சமாதானமும் அப்படிச் செய்யாவிடில் பகையுமிருக்கும். சமாதானக் கர்த்தர் வாசம் பண்ணினாலன்றி பிறர் செய்த குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னித்து சமாதானத்தைக் காக்கமுடியாது.

தேவனோடுள்ள சமாதானத்தையும் மனுஷரோடுள்ள சமாதானத்தையும் கெடுக்கிறவன் பிசாசு. அவன் கிரியைகளை அழிக்கவே மனுஷகுமாரன் வெளிப்பட்டார். சமாதானக் கேடுண்டுபண்ண சாத்தான் விழிப்பாயிருக்கிறான். அவன் வலையிலகப்பட்டவர்களுக்கு கிறிஸ்மஸ் சந்தோஷங் கிடையாது.

கிறிஸ்மஸ் சந்தோஷங் கிடைக்க தேவனோடும் மனுஷரோடும் ஒப்புரவாவோமாக.

## TRUE VICTORY

## மெய்யான ஜெயம்

மெய்யான ஜெயம் எதுவென சமர்த்தனான சாத்தானுக்குக் கூடத் தெரியவில்லை. பாவிகளை இரட்சிக்க ஜீவனைக் கொடுக்க வேண்டுமென்று பரத்தைவிட்டு இகத்துக்கு வந்து மனுஷனாக அவதரித்த கிறிஸ்து சிலுவையில் உயிர்துறந்தமாத்திரத்தில் சாத்தானும் அவன் சீஷர்களும் ‘ஜெயம் ஜெயம்’ என ஆரவாரித்தார்கள். ‘எல்லாம் முடிந்தது’ என்று இயேசு சொன்ன சத்தம் அவர்கள் காதுகளில் தொனிக்கவில்லையாக்கும்! இயேசு மரித்தபோது தேவதூதர் பேரிகை முழக்கினதும், பாவிகள் ஆநந்தக் கண்ணீர் சொரிந்ததும், பிதா பூரித்ததும் அவர்களுக்குத் தெரியாதாக்கும்! வெற்றிக் கொடி உயர்த்தப்பட்டது சிலுவை மரத்திலல்லவா? இயேசுவை மரிக்காதபடி சாத்தான் செய்திருப்பானானால் அதுவே அவனுக்கு ஜெயமாகும். இந்த ஞானம் அவனுக்கு இல்லாமற்போனது ஆச்சரியம்! பரத்திலிருந்து துரத்தப்பட்டு வெகுகாலமானபடியால் முன் அறிந்திருந்த அரிய காரியங்களை மறந்துபோனானாக்கும்! அவனும் யூதாஸ்காரியோத்து முதலிய அக்காலத்து அவன் ஊழியர்



களும் இயேசுகிறிஸ்து தமது ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு உதவி செய்தவர்களே தவிர வேறல்லர். அவனுடைய தற்கால ஊழியர்களுக்கும் எது ஜெயமெனத் தெரியாது. பெரியோரை மதியாமல் பேசிவிட்டால், அதிகாரிகளுக்கு விரோதமாய் பத்திரிகைகளுக்கு எழுதிவிட்டால், கள்ள வழக்குகளில் தலையிட்டுக் கெலித்துக்கொண்டால், சன்மார்க்கன்மேல் பழிசாற்றி தங்கள் துன்மார்க்கத்தை மறைத்துவிட்டால், தங்களால் உபத்திரவப்படுத்தப்பட்டவன் அதைச் சகிக்காதவனாகி பெரியோரிடத்தில் முறையிட்டுக்கொள்ளுங்காலத்தில் தற்செயலாய் மரித்துப் போனால் ‘ஜெயம் ஜெயம்’ என ஆநந்திப்பது பரிதாபத்திலும் பரிதாபம்! இவர்கள் உழைப்பெல்லாம் இவர்கள் விஷயமாய்ப் பாழுக்கிறைத்த நீர்போலாயினும், அதுவே தேவனுடைய பிள்ளைகளைக் குறுக்கு வழியாய் மோக்ஷத்துக்கனுப்ப உதவுகிறது.

தனக்கு அபகாரஞ்செய்த அண்ணன்மாருக்கு யோசேப்பு அன்று உபகாரஞ்செய்ததல்லவா மெய்யான ஜெயம்? எலிசா தன்னைப் பிடிக்கவந்த சீரிய இராணுவ வீரர் தன் கையில் அகப்பட்டுக்கொண்டபோது அவர்களுக்கு விருந்துசெய்து அனுப்பியதல்லவா ஜெயம்? ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைத் திருப்பிக்காட்டுவதும், தீமையைத் தீமையினால் வெல்லாமல் நன்மையினால் வெல்லுவதும் அல்லவா மெய்யான ஜெயம்? தங்கையைக் கன்னத்தில் அறைந்தவன் ஜெயவீரனா, அல்லது தன்னை அடித்த அண்ணனுக்கு முத்தமிட்டவள் ஜெயவீரியா? சிறு ராட்சியமாகிய பெல்ஜியத்தை வல்லமைபொருந்திய ஜெர்மனி அழித்தது ஜெயமா, அல்லது ஜெர்மனியைத் தோற்கடித்த நேசக்கூட்டத்தார் ஜெர்மனியை அழியாதுவிட்டது மெய்யான ஜெயமா? மலபார் மாப்பிள்ளை ஜாதியார் தங்களைக் காத்துக்கொள்ளக்கூடா இந்துக்களைச் சித்திரவதை செய்து கொன்றது மெய்யான ஜெயமாகுமா?

1908-ஆம் வருஷம் மேமாதம் 5-ந்தேதி நமக்குக் கிடைத்த ஜெப கடிதம் (Prayer Circular) என்ற பத்திரிகையின் தலைப்பிலிருந்த ஜெயம் (Victory) என்னும் பேர்படைத்த வாசகத்தினால் நமக்குக் கிடைத்த நன்மைக்கோர் அளவில்லை. அது மாதர்போதினி வாசிப்போருக்குப் பயன்படலாமென்றெண்ணி அதைத் தமிழ்ப் படுத்தி இங்கு எழுதியிருக்கிறோம்.

### ஜெயம்

‘கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்’ (II. கொரிந்தியர் 2[14]).

1. நீ மறக்கப்படும்போழுது அல்லது அசட்டை செய்யப்படும்போழுது, அல்லது வேண்டுமென்று அவமதிக்கப்படும்போழுது, நீ அந்த அவமானத்தில், அல்லது மறக்கப்பட்டதில் மேன்மைபாராட்டி, உன் உள்ளத்தில் புன்னகை கொள்வாயானால்—அதுவே ஜெயம்.

2. நீ செய்யும் நன்மை தீமையாகப் பேசப்படும்போழுது, உன் விருப்பங்களுக்கு மாறாகச் செய்யப்படும்போழுது, உன் உவப்பும் வெறுப்பும் பங்கப்படுத்தப்படும்போழுது, உன் ஆலோசனை புறக்கணிக்கப்படும்போழுது, உன் அபிப்பிராயங்கள் ஆகடியம் பண்ணப்படும்போழுது, நீ அவைகளையெல்லாம் சாந்தத்தோடும் அன்போடுகூடிய அமைதியோடும் ஏற்றுக்கொள்வாயானால்—அதுவே ஜெயம்.

3. எந்தப் போஜனமென்றாலுஞ் சரி, எந்த உடுப்பென்றாலுஞ் சரி, எந்தத் தேச சுவாத்தியமென்றாலும் சரி, யார் மத்தியில் குடியிருக்க நேரிட்டாலுஞ் சரி, எந்த ஏகாந்தமென்றாலுஞ் சரி அவைகள் உன் விஷயமாய்க் கடவுள் சித்தமென்றெண்ணி நீ மனத்திருப்தியாயிருக்கும்போழுது—அதுவே ஜெயம்.

4. நீ உன் சொந்த நற்கிரியைகளைப் பிரசித்தஞ்செய்ய, அல்லது பிறரால் புகழப்பட ஆசைப்படாதிருக்கும்போழுது, நீ அறியப்படாதிருக்க மெய்யாய் ஆவல் கொள்ளும்போழுது—அதுவே ஜெயம்.

மாதர்போதினி வாசிக்கும் மாதர்களே, நீங்கள் மெய்யான ஜெயம் எதுவென்று அறிவது போதாது; நீங்கள் மெய்யான ஜெயவீரர்களாய் விளங்கி, உங்கள் மக்களையும் ஜெயவீரர்களாக்க முயல வேண்டும். தேவன் ஒருவர் இருக்கிறதுபோலவே சாத்தான் என்னும் ஒருவன் இருக்கிறான்; தேவனுக்குத் தொண்டூழியஞ் செய்ய தேவதூதர்கள் என்னும் நல்ல ஆவிகள் இருக்கிறதுபோலவே சாத்தானுக்குத் தொண்டூழியஞ்செய்யப் பொல்லாத ஆவிகள் உண்டு; தேவனுக்கு அடங்கிநடக்கும் மனுஷர் இருக்கிறதுபோலவே சாத்தானுக்கு அடிமைப்பட்டிருக்கும் மனுஷர் ஏராளமாய் இருக்கிறார்கள். பொய் சொல்லவும், திருடவும், கீழ்ப்படியாதிருக்கவும், தூஷணம் பேசவும், வேறு பல அக்கிரமங்களை நடப்பிக்கவும் உங்களைத் தூண்டிவிடுகிறவர்கள் இவர்களே. ஆதலால், நீங்கள் பசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, சத்தியம், நீதி, சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம், விசுவாசம், இரட்சணியம், தேவவசனம் என்னும் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள். இயேசுவினுடைய சிலுவைக்கொடியின்கீழ் நின்று சாத்தானோடு நீங்கள் போர் புரிவீர்களானால் வெற்றி சிறந்த எதற்குமஞ்சா சுத்தவீரர்களாவீர்கள். பொய் என்பது உங்கள் நாவிலும், களவு என்பது உங்கள் கரத்திலும், அசுத்த நினைவுகள் உங்கள் மனதிலும் காணப்படா.



Y. G. Bonnell, P. B.

## SUMMER SCHOOL AT ENNORE FOR WOMEN

## சுவிசேஷப் படைமுயற்சி ஊழியருக்கென்று என்னூரில் ஞானோதய வித்தியாசாலை

சுவிசேஷ ஊழியஞ் செய்ய வாஞ்சையுள்ளவர்களையும், இதற்கு முன் ஊழியஞ் செய்துகொண்டு வந்திருப்பவர்களையும் ஒன்றாய்க் கூட்டி ஐக்கியப்படுத்தி, பிரத்தியேகமான இடத்தில் ஒன்றாய்ச் சேர்த்து, பலவித தொழில் தொல்லைகளை மறந்து வேத வசனத்தாலும், ஜெபத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், ஒன்றுசேர்ந்த சம்பாஷணைகளாலும், ஆவிக்குரிய பிரசங்கங்களாலும், சுற்றிலுமுள்ள கிராம ஹிந்துக்களைச் சந்தித்துக் கிறிஸ்துவைப்பற்றி சாட்சிசொல்லிப் பேசுவதாலும், ஆவியில் எழுப்புதலும் புதுப்பெலனும் ஜீவனும் நிறைவாய் அடையச்செய்வதனால், திரும்பித் தங்கள் ஸ்தானத்திற்கு வரும்போது பலனுள்ள வல்லமையான ஊழியஞ்செய்ய சக்தி கிடைக்குமென்ற நம்பிக்கையோடே இவ்வித ஞானோதய வித்தியாசாலை சென்னைக்கருகிலிருக்கும் என்னூரில் 1922-ம் வருஷம் ஜனுவரி மாதம் 6-ம் தேதி முதல் 9-ம் தேதிவரை நடக்கும். இதற்கு சுவிசேஷ ஊழியஞ் செய்வதில் கருத்துள்ள எல்லாப் பெண்களும் வரலாம்.

Bible Circle வேத ஆராய்ச்சிக்கூட்டங்களில் 4 ஸ்திரிகளின் சரித்திரங்களைப் படிக்கப்போகிறோம். (1) ரூத், (2) எஸ்தர், (3) கன்னிமரியாள், (4) பெத்தானியா ஊராளாகிய மரியாள். இதற்கு ஆயத்தமாக (1) ரூத்தின் சரித்திரம், (2) எஸ்தரின் சரித்திரம், (3) பரி. மத்தேயு. 1. 18–2. 23; பரி. லூக்கா. 1. 26–56; 2. 1–52; 8. 19–21; பரி. யோவான். 2. 1-11; 19. 25–27; அப். 1. 14. (4) பரி. லூக்கா. 10. 38–42; பரி. யோவான். 11. 1–12. 9; என்னும் பாடங்களைப் படித்து வரவேண்டும்.

டோனூரில் இருக்கும் Miss Carmichael சாயந்தரக் கூட்டங்களை நடப்பிப்பார்கள்.

சென்னைக்கும் என்னூருக்கும் ரெயில் செலவு Central Station இல் இருந்து $2\frac{1}{4}$ அணா மாத்திரம் தான்.—Time of Train 8-20 A.M.

சென்னையிலிருந்து மாத்திரமல்ல, செங்கற்பட்டு ஜில்லா, தஞ்சை, திருச்சி, மதுரை, மானாமதுரை, வேலூர் இன்னும் மற்ற தமிழ் நாடுகளிலுமிருந்து பெண்கள் யாரானாலும் வரலாம். கூட்டங்களில் பேசப்படும் பாஷை தமிழ்தான். Bible Circle இல் மாத்திரம் ஓர் தெலுங்கு பாகமிருக்கும்.

இதை நினைத்து ஆயத்த ஜெபஞ் செய்யும்படி ஏற்கனவே அறிவிக்கிறோம்.

4 நாட்களுக்கும் சாப்பாடு மற்ற செலவுக்காக ஒவ்வொருவரும் 3 ரூபாய், முதல் நாளில் செலுத்தவேண்டும். ஒவ்வொருவரும் டம்லர், படுக்கை, வேதப் புஸ்தகம், நோட் புஸ்தகமும் இவைகளைக் கொண்டுவர வேண்டும்.

இதற்கு வரப் பிரியமானவர்கள் தங்கள் பெயரையும் மேல் விலாசத்தையும் சென்னை வேப்பேரியில் C. E. Z. M. House, Miss Barker அவர்களுக்கு எழுதி டிசெம்பர் மாதம் 25-ம் தேதிக்கு முன் தெரிவிக்கவேண்டியது.

P. GROVER.

## LIFE OF LATE Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

## கனம் அருளம்மாள் ஞானாதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

இந்த அம்மாள் முதிர் வயதினால் தளர்ச்சியடைந்து பலயீனமாயிருந்தபோதிலும் தெய்வ பக்தியோடே கூடிய பொறுமையினாலும் சமாதானத்தினாலும் அவர்கள் முகம் களை பொருந்தியதாயிருந்தது என்பதைக் கவனித்தவர்கள் ஆச்சரியத்தோடே சொல்லக்கூடியதாயிருந்தது 'அகத்தினழகு முகத்தில் தெரியும்.'

அக்காலத்தில் அவர்களை அடிக்கடி கவனிக்கும்படியாக அவர்களுடைய இரண்டாவது மகள் அருள்மணி அம்மாள் கூடவேயிருந்தார்கள். அவர்களை 'அம்மணி, அம்மணி' என்று தன் உதவிக்காகக் கூப்பிடுவார்கள். பக்கத்து வீட்டிலிருக்கும் 5-வது குமாரத்தி ஞானசாஸ்திரம் அம்மாளும் சமையத்திற்கேற்ற உதவிகள் செய்து தாயை அடிக்கடி கவனித்துக்கொள்வார்கள். மறுமகளும் மற்றும் பிள்ளை



களும் அவர்களுக்கு வேண்டிய ஊழியம் செய்தார்கள். இப்படி இவர்கள் தன் மரணத்துக்கு எதிர் நோக்கியிருக்கும்போது இவர்கள் கொழுந்தனார் சங். எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் மனைவியும் தன் தங்கையுமான பாக்கியத்தம்மாள் பக்கவாத வியாதியால் இறந்து போகவே இவர்கள் அதிக துக்கப்பட்டு எனக்கு இளையாளாகிய நீ எனக்கு முந்திக்கொண்டாயே என்று அழுது எனக்கு இளைய பிள்ளை எனக்கு முந்திப்போய்விட்டது என்று சொல்லி, நீ போ உனக்குப் பின் நானும் வருவேன் என்றார்கள். பிறகு தன் காலமும் சமீபித்ததென்றுணர்ந்து எல்லாருக்கும் வழியனுப்பிக்கொள்ள நினைத்துப் பேர் போராகத் தான் சொல்லவேண்டியதைச் சொல்லி அனுப்பிக்கொண்டார்கள். கடைசியாக கர்த்தருடைய பாடுகளை தியானிக்கும் கடைசியான பரிசுத்தவாரம் இந்த பக்தியுள்ள அம்மாளுக்கும் கடைசி வாரமாக இருந்தது.

குருத்தோலை ஞாயிறு எல்லாரும் கோவிலுக்குப் போய்த் திரும்பி வந்து வழக்கம்போல அவர்களைக் கண்டு பராபரனுக்கு ஸ்தோத்திரம் என்றபோது அவர்கள் கண் மேல் நோக்காகவேயிருந்து தோத்திரம் தோத்திரம் என்று சொல்லி கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லி சுவாமி கிருபையாயிரும் என்று சொல்லி நெற்றியில் சிலுவைவரைய கையெடுத்தும் கூடவில்லை இயேசுவே இரட்சியும் என்றார்கள். அதிலிருந்து பேச்சு அமர்ந்தது. திங்கள் பகல் சங். வேதநாயக ஐயர் அதாவது தன் கொழுந்தன் சங். எலியா தேவசிகாமணி சாஸ்திரியாரவர்கள் குமாரன் மரண ஆயத்த ஜெபங்கள் செய்து தன் மகன் வேதானந்த சாஸ்திரியாரும் வீட்டாரும் 'கிருபை கூரும் ஐயனே' என்ற பாட்டை உருக்கமாய்ப் பாடிக் கண்ணீரோடே ஜெபம்செய்து கொண்டிருக்கும்போதே அவர்கள் ஆத்துமா பரவசம் அடைந்து தான் வாஞ்சித்து நேசித்துப் பூஜித்துக் காத்திருந்த இரட்சகரின் சமூகம் சென்று மகிழ்வடைந்தது. 1920-ம் வருஷம் மார்ச்சுமீ 29-ம் தேதி, திங்கள் பகல் 1 மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

அவர்கள் 128ம் சங்கீதத்தில் சொல்லியிருக்கிறபடி கர்த்தருக்குப் பயந்து நடந்ததினால் அதிலுள்ள அவருடைய ஆசீர்வாதத்துக்குப் பங்குள்ளவர்களாய் தனக்கு ஐந்தாம் தலைமுறைப் பிள்ளைகளையும் கண்டு களித்து சமாதானமாய்ப் பாக்கியமான நித்திரையடைந்தார்கள். உடனே அங்குள்ள பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் இன ஜனங்கள் சபைகள் ஐயர்மார் கூடி அங்கலாய்த்துப் பிரேத அலங்காரம் செய்து அவர்கள் தம்பி மகன் தானியேல் பிள்ளை வாங்கி அனுப்பின ஜரிகை வஸ்திரத்தையுடுத்தி கட்டிலில் வளர்த்திட கண் கண்டோர்

சகியாவண்ணம் பரலோக தூதரின் அழகு முகத்தில் இலங்கினதாம். அதன் பின்னர் அவர்கள் ஜீவியத்திலுள்ள மூன்மாதிரிகளை கொழுந்தன் மறுமகன் சாமுவேல் ஐயர் கூடிவந்தோருக்குப் படிப்பினையாக உரைத்து ஜெபம்செய்ய, சங். டக்கர் இயேசுவடியான் ஐயரவர்களும் E. வேதநாயகம் ஐயரவர்களும் குமாரன் வேதானந்த சாஸ்திரியாரும் சபையிலுள்ள பெரியோர் சிறியார் யாவரும் பாடலோடே ஆலயத்துக்குக் கொண்டுபோய், பின்னர் சகல கிறிஸ்தவ மரியாதையுடன் அவர்கள் சடலம் அவர்கள் எஜமான் குடும்பக் கல்லறையில் பிரேத க்ஷேமம் செய்தார்கள்.

இயேசு வரும் வரைக்கும் அங்கே இளைப்பாறுகிறார்கள் 'உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு அவன் முடிவு சமாதானம்' சங். 37. 37.

'அவர்கள் மரித்தும் இன்னும் பேசுகிறார்கள். எபி. 11: 4. 'ஞானவான்கள் ஆகாய மண்டலத்திலுள்ள ஒளியைப்போலவும் அநேகரை நீதிக்குள்ளாக்கினவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள். தானி. 12: 3.

இதை வாசிக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதரரும் தாய்மார்களும் குடும்பத்தார்களும் இந்த அம்மாளில் காணப்பட்ட தேவ பக்தியும், ஜெப சிந்தையும், விசுவாசமும், நல் பொறுமையும், பரோபகார சிந்தையும், அன்பும், ஐக்கியமும் நம் ஒவ்வொருவருக்கும் நல் மாதிரியாக முன் வைத்து ஜீவித்துப் பிள்ளைகளுக்கு நல் வழிகாட்டிகளாக நடந்து வருவோமாகில் மெய்யாகவே இவர்களைப்போல இம்மையிலேயே சமாதான சந்தோஷத்தையும் மறுமையில் பரிபூரண பாக்கியத்தையும் பெற்று பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் நித்திய ஜீவகிரீடத்தை அடைந்து நமது பிள்ளைகளையும் நல்ல பங்குக்கு ஆதாயமாக்கிக்கொள்ளுவோம்.

இப்படியே நாமும் இகபர ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்க இத்தேவதாபக்தியுள்ள அருள் ஞானதிக்கம்மாளின் ஜீவியம் நமக்கு நல்மாதிரியாயிருக்கவும் நாமும் மற்றவர்களுக்கு நல் வழிகாட்டிகளாய மெய்க் கிறிஸ்தவ ஜீவியம் செய்து முடிவுபரியந்தம் நிலைத்திருந்து ஜீவகிரீடம் பெற்று வாழ தேவனுடைய கிருபையும் பரிசுத்தாவியின் ஒத்தாசையும் நம்மெல்லாருக்கும் கிடைப்பதாக. ஆமென்.

E. மனோன்மணி தேவதாஸ்.



# THE WHOLE ARMOUR OF GOD

## தேவனுடைய சர்வாயுத வர்க்கம்

(எபேசியர் $6^{10-18}$)

இராகம்: ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

### பல்லவி

சர்வாயுதந்தரி, சாத்தான் சேனைகள்
சர்வத்தையுஞ் சங்கரி தேவ பலத்தால்.

### அநுபல்லவி

சர்வவல்ல ஏசு உனக்குச் சேனாதிபதி
கிர்பாகடாக்ஷத்தால் வெற்றிசிறக்கலாம், தைரியம்விடாதே
சிலுவைக் கொடிக்கீழ்— (சர்)

### சரணங்கள்

1. மாம்சம், ரத்தத்தோடல்ல—உனின் போராட்டம்;—துரைத்
தனங்களோடு—அதிகாரங்கள்,
சாந்தனையும் உனக்கு—இப்பிரபஞ்ச—லோகாதிபதிகளும்,
வானமண்டலத்து பொல்லாவிகளின் சேனைகள்
காணக்கூடாக் கணக் கற்றபேர்களோடு போருண்டு
ஆதலால் எப்போதும் செபித்து— (சர்)

2. சத்தியம் என்னுங் கச்சை—அரையில்கட்டு,—நீதிமார்க்
கவசமும்—தரித்துக்கொண்டு,
சுத்த சுவிசேஷமாம்–ஆயத்தம் என்னும்–பாதரட்சை தொடுத்து,
விசுவாசம்என்னுங் கேடகம் பிடித்துக்கொண்டு,
இரட்சணியம்என்னுந் தலைச்சீராபோட்டு, தேவவசனமாம்
பட்டயம் எடுத்து— (சர்)

3. பொய்யும் ஒரு பெரும் பேய்,—களவுமேபேய்,—கீழ்ப்படி
யாமையும் பேய்,—பெருமையும் பேய்,
செய்யுந் தீமைகளும் பேய்,—தூஷணமும் பேய்,—தீ
நினைவுகளும் பேய்,
வீட்டிலும் பேயுண்டு, வெளியிற்கூடப் பேயுண்டு,
எட்டிலடங்காது, எண்ணிமுடியாது, ஈனப்பேய்கள்
தொகை ஏராளமானதால்— (சர்)

Y. G. Bonnell, P. B.

# PEACE

## சமாதானம்

சமாதானமென்பது மனுமக்கள்யாவருக்கும் அவசியமானவை யாவற்றினுமரிய ஒன்று. சமாதானத்திற் பலவகையுண்டாயிருந்த போதிலும் எல்லாம் இரண்டினுள் முடியுமென்பது வுண்மை. அஃதாவன: உட் சமாதானம் புறச்சமாதான மென்பவைகளே. சமாதானமென்பதற்குப் பதம், கலக்கமின்மை யெனப்படலாம். மனக்கலக்கமற்றிருப்பதே உட்சமாதானமாகும். சமாதானமென்பதற்கு எதிர்ச் சொல், பகை; பகையற்றிருப்பதே புறச்சமாதானமாகும். புறச்சமாதானத்தை முதற் பேசிப் பின் மனச்சமாதானமுள்ளவர் தமக்கு மற்றெல்லாச் சமாதானமுமுண்டாயிருக்குமென்பதை விவரிக்கலாம். புறச்சமாதானமோ, செல்வப் பெருக்காலும் மிகுந்த கல்வியாலும் மிஞ்சின நாகரீகத்தாலும் இலேசாய் அடையக் கூடியதாயிருந்தபோதிலும்,, இதைத் தானும், நாளதுவரையில் அநேகர் அடையாதிருப்பது மகா விசனமான காரியம். சிலர் நினைக்கிறபடி, மற்றவரிடத்தில் வாது செய்யாமலும் சண்டையிடாமலுமிருக்கிறதே சரியான புறச்சமாதானமல்ல; ஆனால் நன்மையான பாதையில் ஓடவும் நடக்கவும் தேவன் உண்டாக்கிய பாதங்களைத் தீமையான பாதையிற் செல்லவிடாது காத்துக்கொள்வதுமே புறச்சமாதானம். நன்மையைப் பெறவும் நன்மையைச் செய்யவுங் கடவுள் படைத்த கரங்களைக்கொண்டு தீமையைப் புரிவது புறச்சமாதானமாகுமோ? நன்மையானவைகளைக் காண்பதை விட்டு காணத்தகாதவைகளைக் கண்டு களிப்பது புறச்சமாதானமல்லவே. இணக்கத்தோடு பார்க்கும் பார்வையை விட்டு எடுப்பாக பார்க்கும்பார்வை புறச்சமாதானத்தைத் தருமோ? தேனிலும் இனிய சொற்களிருக்க எட்டியினுங் கசப்பான கடுஞ் சொற்கள் வாயிற் பிறப்பதால் புறச்சமாதானம் வருமோ. மோசம் போக்கும் வாக்கு லேசாக வாயைவிட்டோடி வருவதால் என்ன சமாதானமுண்டாகும்! செய்வதொன்றிருக்க வேறொன்றை வெளிப்படுத்தும் வாயடையுஞ் சமாதானம் தெய்வத்திடமிருந்தோ அல்லது சாத்தானிடமிருந்தோ? நியாயம் யாவருக்கும் நன்மையாயிருக்க அக்கிரமக்காரர் செழிப்பதற்கேதுவாக அநியாயத்தைப் பொழியும் வாயடையுஞ் சமாதானமதென்ன சமாதானமோ? வாசிக்க தேவ வார்த்தையிருக்க, பாவ வார்த்தையைத் தேடிப் படிக்கும் வாய்க்குக் கிட்டுவதுஞ் சமாதானமாமோ? புறங்கூறித்திரியும் வாயே நீ சமாதானத்தைக் கண்டடையாமற் போவது சத்தியம்.



செவியே உனக்குச் சமாதானமுண்டாக கோளுரையைக் கேளாதிருப்பாயாக. மற்றவர்களை யொருவர் இகழ்ந்து பேச நீயதை உற்றுக்கேட்டு மகிழாதிருந்தால், செவியே, தேவன் உனக்கு சமாதானத்தை யருளுவார். தனக்கடுத்தவர்களின் அந்தரங்கக் காரியங்களை அறிய பல பாடுபட்டுத் திரியுஞ் செவி சமாதானத்தைக் கண்டடைவதெக்காலம்! வேதவசனிப்பிலும் தேவ கீதங்களிலும் பிரியப்படாத செவியே, நீ கேட்டின் மகன் பின்னே போகிறாய் என்பதைத் திட்டமாயறிந்துகொள்.

தேவனுக்கஞ்சி நடவாவிட்டாலும் உலகத்துக்கஞ்சி மேற்கூறியவைகளை விலக்கி புறச்சமாதானத்தைப் பெற்றிருப்பாருமுண்டு. ஆனால் இதற்குப் புறச்சமாதானமெனும் பெயரையுந்தள்ளிப் போலிச் சமாதானமென்றே பெயரிடல் வேண்டும். மெய்யான புறச்சமாதானமுண்டாக வேணுமானால் சகல அவயவங்களை உங்களுக்குக் கர்த்தர் இட்ட சட்டத்தின்படியே ஒழுகுங்கள். செய்யவேண்டியதைச் செய்தால் அதை விரும்பாதவன் பகைப்பதினால் நமக்காவதென்ன? நாம் மற்றவர்க்கு விரோதமாக நினைக்கும் நினைவும் பேசும்வார்த்தையும் நடத்துங் கிரியையுமே நமது சமாதானத்தை யெடுத்துப்போடுமென்பதை யாமறியோமோ? நாம் மெய்ச் சமாதானம் பெற்றிருக்க வேண்டுமென்றும், அச்சமாதானம் புறம்பேயிருந்து வாராமல் அதாவது மற்றவர் மற்றவைகளிடமிருந்துதிக்காமல் நம்மிடமிருந்தே புறப்படவேண்டியதாயிருக்கிறதென்பதை நாமுணரும் பொருட்டல்லவோ 'உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என, சர்வ வல்லவர் கற்பித்தார். சரீரத்தின் ஒரு அவயவம் செய்யவேண்டியதைச் செய்தும் மற்றோர் அவயவம் செய்யத்தகாததைச் செய்துவருமாயின் அக்காலத்தில் அற்பமாகிய புறச்சமாதானமும் உண்டாயிருக்குமென்பது பிசகு. புறச்சமாதானமாகிய சரீர சமாதானம் சிலருக்குண்டாயிருந்தாலும் உட்சமாதானமாகிய மனச் சமாதானத்தை யவர்களடையாததற்குக் காரணம் அவர்கள் புரியும் நற்கிரியை யாவும் ஊற்றில் நீர் சுரக்குமாப்போல் இயல்பிலே வெளிவாராமல் ஏதோ சில காரணமெனுங்கயிற்றில் காரியமெனும் பாத்திரத்தைக் கட்டி சித்தியெனுந் தீர்த்தத்தை ஆழமான பாழ்கிணற்றினின்று வெளி யெடுப்பதுபோலிருப்பதினாலன்றோ. புறச்சமாதானமிருந்தும் மனச்சமாதான மில்லார்க்கு வரும் மகிமை யென்ன?

நன்னீர் ஊற்றுப் பெருக்கெடுத்தோட, தாகத்தால் நாவறள நடப்பாருமுண்டோ! அவ்வண்ணமே மனச்சமாதானமுடையோரிடம் சகல நற்கிரியைகளும் பொருந்தி நிற்பது சகஜமாகையால் அவர்களுக்குப் புறச்சமாதானமும் உண்டாயிருக்குமென்பது திண்ணம். சரீரமோ மனத்திருப்தியினால் சமாதானமடையும், மனமோ மனச்சாட்சியினால் குத்தப்படாத நாட்களில் சமாதானம் பெற்றிருக்குமென்பதற்கோர் ஐயமில்லை. மனச்சாட்சியாவது நமது உடலில் நின்று கர்த்தருக்கானவைகளை யெடுத்துக்காட்டி நமக்குள்ளுண்டாகுந் தீய எண்ணங்களை அதட்டி நாம் பேசும் ஆகாத சம்பாஷணைகள் வீணான வார்த்தைகள் யாவையுங் கண்டித்து துர்க்கிரியைகள் யாவையும் தகாததென தீர்க்கும் தேவ ஆவியாயிருக்கிறது. இத்தேவ ஆவியின் தீர்ப்பின்படி சகலரும் தங்களைப் பாவிகளென்றே ஒத்துக்கொள்ளுகிறார்கள். இவர்களுடைய நற்கிரியைகளும் மற்ற யாவும் இவர்களுக்குச் சமாதானங்கூற சக்தியற்றவைகளா யிருக்கின்றன. ஆதலால் தங்களைத் தாங்களே பாவிகளென்றறிக்கை செய்வது, ஏதோ கடவுளுக்கு விரோதமாக அதாவது அவருடைய கூரிய நீதிக்கு முன் நிற்கக்கூடாதவிதமாக, ஒன்றையோ அல்லது சிலவற்றையோ அல்லது அநேகத்தையோ, நினைத்தோ அல்லது பேசியோ அல்லது செய்தோ, சர்வவல்லவருக்கு ஆகாதவர்களானார்களென்பதை வற்புறுத்திக் காட்டுகிறதன்றோ? நாம் மனிதர்களுக்கு மெய்யாகவே ஆகாதவர்களாயிருப்போமானால் நமக்குச் சமாதானமிராதே. அப்படியானால் தேவனுக்காகா தீயவராயிருக்கையில் நமக்குச் சமாதானமுண்டென்றறைவது உண்மையோ? ஆ, சர்வாதிப கர்த்தரே தமது பேரன்பால் இவ்வுலகத்திற்கு வராவிடின் நமது நிலையென்ன? அவரே நமது பாவங்களை யேற்றுக்கொண்டு கெத்சேமனே தோட்டத்தில் மேல்மூச்செரிந்து உதிரவேர்வை சிந்தினார் என்பதை கவலையீனமாய் வாசித்து விடுவோமானால் நிர்பந்தராவோம். அவருடைய சிலுவைப் பாடுகள் உலகத்தாரின் திரண்ட பாவங்களுக்கல்லவென்றால் அவர் செய்த குற்றமென்ன? நாளதுவரையிற் சூழ்ந்துநிற்கும் அறிவான சாட்சிகளை ஆகாதென்று விட்டாலும், அவருடைய வாக்குறுதியும் வல்லமையும் பரிசுத்த நிலைமையுமே, தேவாதிதேவன் மனுவுருவமைந்தார் என்பதை, சிலரது சந்தேக இருள் பறந்தோட, எடுத்துக்காட்டவில்லையோ?

இரக்கமுள்ள ஆண்டவர் நமக்கு இலவசமாக ஏற்படுத்திய ரட்சிப்பை இக்காலத்தில் நாம் லக்ஷியஞ்செய்துஞ் செய்யாமற்போனால் நமது பின்னிலை மகா பயங்கரமென்பதை ஒருக்காலும் மறக்கப்போகாது. என்னை விசுவாசிக்கிறது மெய்யானால் என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று திருவுளம்பற்றிய சமாதானமூர்த்தியின் புண்ணியத்தை நினைவுகூறுதலினாலல்லாமல் நமது மனச்சாட்சி நம்மை மாபாவிகளெனத்தீர்த்து முற்றுஞ் சமாதானமற்றவர்களாக்குமென்பதற்கு என்ன தடை? (கர்த்தரை விசுவாசிப்பதுடன் கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்பது, அவரது திருநாமத்தை விசுவாசிக்கும் விசுவாசத்தினாலேயே சகல கிரியைகளுங் காணப்படுமென்று நமதநுபவத்திலறிந்திருப்பதைப் போலவே, கிரியைகளற்றவர்கள், கட்டளையைக் கைக்கொள்ளாதவர்களல்ல. ஆனால் அவிசுவாசிகள் என்றறிந்துகொள்ள வேண்டியதவசியம்). ஆகையால் நம்மை நாமே விசுவாசிகளோ என்று சோதித்து விசுவாசிகளல்லவென்றால் விசுவாசியாக இதுவே ஏற்றகாலம். விசுவாசியென்றால் நமது விசுவாசத்தைப் பேச்சியிலேயல்ல, ஆனால் பெலத்திலே விசுவாசிகளெனக்காட்டிச் சமாதானத்தின்மேல் சமாதானத்தைப்பெற்று நித்ய சமாதானத்திற்குள் பிரவேசிக்க தேவாதி தேவனாகிய இயேசு ரக்ஷகர் தாமே கிருபைசெய்தருள்வாராக. ஆமென்.



## THE SHORTCOMINGS OF THE FAITHFUL

## விசுவாசிகளிடத்தில் காணப்படுகிற பாவம்

(தொடர்ச்சி)

### இரண்டாவது: விசுவாசியில் காணப்படவேண்டிய பரிசுத்தத்தின் அளவு

1-வது: 'நீங்கள் பாவஞ்செய்யாதபடி இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்' (1 யோவா. 2 : 1). 'தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்' (1 யோவா. 3 : 9). 'பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்' (1 யோவா. 3 : 8). 'பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை அவரை அறியவுமில்லை' (1 யோவா. 3 : 6). இந்த வாக்கியங்கள் அறியாமையின் பாவங்களைக் குறிக்கிறதில்லை. மனச்சாட்சிப்படி பாவமாகத் தோன்றுகிறவைகளை மாத்திரம் குறிக்கிறது. பாவசோதனை வருவதை அறிந்திருந்தும் அதை ஜெயிக்காமல் அதில் தவறிவிழுவதே மனச்சாட்சி அறியச்செய்யும் பாவம். இப்படிப்பட்ட பாவம் தேவனால் பிறந்த பிள்ளைகளில் காணப்படக்கூடாது. இப்படிப்பட்ட பாவத்தைச் செய்கிறவன் தேவனுடைய பிள்ளையல்ல. மனதறியப் பாவத்தைச் செய்துகொண்டு, அதை

ஜெயிக்கக்கூடிய வழிவகைகளைத் தேடாதிருக்கிறவன் குணப்பட்டவனென்று சொல்லத்தகுமா? விசுவாசியே, நீ செய்கிற ஒவ்வொரு பாவமும் பிசாசுக்குச் செய்கிற நமஸ்காரமும் இயேசுவுக்குச் செய்கிற துரோகமுமாயிருக்கிறது. உன்னிலிருக்கிற பாவப் பிரமாணத்துக்கிசைந்து நீ பாவம் செய்யும்போது, சாத்தானுடைய பிள்ளையென்று உன்னை நீயே காட்டுகிறாய். பாவத்தை நீ ஜெயிக்கும்போது உன்னை தேவனுடைய பிள்ளையாகவும் தேவனோடு ஜீவிக்கிறவனாகவும் காண்பிக்கிறாய். பாவத்தை ஜெயிக்கிறதிலிருந்துதான் 'தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்.' (1 யோவா. 3 : 10.)

2-வது: விசுவாசிகளான தேவனுடைய பிள்ளைகள் எந்தநேரமும் குற்றமற்ற மனச்சாட்சியுடையவர்களாயிருக்கவேண்டும். விசுவாசியே, 'இந்த நேரம் என் மனச்சாட்சி என்னைக் குற்றவாளி என்று தீர்க்கிறதில்லை' என்று நீ எப்போதும் சொல்லக்கூடுமா? கூடாவிட்டால் நீ நடுநடுங்கவேண்டும். குற்றமுள்ள மனச்சாட்சியோடு நீ தேவனை தைரியமாய்ச் சந்திக்கக்கூடுமா? (1 யோவா. 3 : 19–22 ; 2 : 28.)

3-வது: எந்த நிமிஷமும் ஒளியில் அதாவது தேவசமுகத்தில் ஜீவிக்கிறவர்களாகவும், அதின் பலனாக எந்த நிமிஷமும் கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டவர்களாகவும் விசுவாசிகள் யாவரும் இருக்கவேண்டும். 'இந்த நிமிஷம் நான் சுத்திகரிக்கப்பட்டவனாகவும், சுத்திகரிப்பின் பலனாக தேவசமுகத்தில் ஜீவிக்கிறவனாயும் இருக்கிறேன்' என்று நீ சொல்லக்கூடுமா? (1 யோவா. 1:7.)

4-வது: குணப்பட்டபோது தேவ அன்பை ருசிபார்த்து தேவ அன்பில் தேவனோடு இணைக்கப்பட்ட விசுவாசி, தேவனில் நிலைத்திருப்பதால் தேவ அன்பில் அவன் பூரணப்படுமளவும் அந்த அன்பை அறிவதிலும் அந்த அன்பை மற்றவர்களுக்குக் காட்டுவதிலும் அவன் வளரவேண்டும். விசுவாசியே, பரிசுத்தமும் அன்பும் உன்னில் ஒன்றாய் வளரவேண்டும் அல்லது ஒன்றாய்த் தணியவேண்டும், அன்பில்லாமல் பரிசுத்தம் இல்லவேயில்லை. (1 யோவா. 4 : 7–20.)

5-வது: தேவனால் பிறந்தவன் உலகத்தை ஜெயிக்கிறவனாகவும், கிறிஸ்துவின் ரட்சிப்புக்கு அவன் பரிசுத்த ஆவியோடு ஐக்கியப்பட்ட சாட்சியாகவும் உலகத்தில் விளங்கவேண்டும். (1 யோவா 5 : 1–12.)

விசுவாசியே, இவைகளை நீ அறிவாயா? இவைகளுக்கு நீ சாட்சியா? இவ்வித நிலைமையில் இருப்பவனே விசுவாசி. மற்றவன் விசுவாசியல்ல. கிறிஸ்தவனென்ற பெயரைத் தரித்திருந்தும் இவைகளை அறியாதவனே! உன்னை பரிசுத்த யோவான் விக்கிரகாராதனைக்



காரன் என்றழைக்கிறார். உள்ளான நிலைமையின்றி வெளித்தோற்றத்தை மாத்திரம் உடையவனே விக்கிரகாராதனைக்காரன். 'பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வீர்களாக!' (1 யோவா. 5 : 21.)

## மூன்றாவது: இவ்வித ஜீவியத்திற்கு இரகசியமாக பரிசுத்த யோவான் சொல்லுகிறதென்ன?

1-வது: 'தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது' (1 யோவா. 3: 9). தேவனுடைய வசனமே அவருடைய வித்து. (1 பே. 1 : 23.) பாவத்தில் அடிக்கடி விழுகிற விசுவாசியே, நீ பரிசுத்த வேத எழுத்துக்களைச் சரியானபடி நேசிக்கவில்லை, கனப்படுத்தவில்லை, வாசிக்கவில்லை, தியானிக்கவில்லை, இருதயத்தில் பத்திரப்படுத்தவில்லை. 119-ம் சங்கீதத்தை ஒவ்வொரு வாக்கியமாக வாசித்து, ஆமென், என் விஷயத்திலும் இந்த வாக்கியம் சத்தியம் என்று நீ சொல்லக்கூடுமா? அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் ஆண்டவர் விளம்பின வேதம் உனக்கு அதிக அருமையா? 'உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம்' என்று நீ உத்தமமாய்ச் சொல்லக்கூடுமா?

2-வது: 'அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை' (1 யோவா. 3: 6). இயேசுவோடு நீ எவ்வளவுதூரம் ஐக்கியப்பட்டிருக்கிறாய்? பரிசுத்த யோவான் கிறிஸ்துவோடு நெருங்கி ஐக்கியப்பட்டிருந்தார். தம்மைப்போல நம்மையும் ஐக்கியப்படும்படி அழைக்கிறார். (1 யோவா. 1 : 3.) இயேசுவோடு ஐக்கியப்படும்படி ஒவ்வொருநாளும் எவ்வளவுநேரம் செலவிடுகிறாய்? இயேசுவை ஒருநாளில் எத்தனைதரம் நினைப்பாய்? நாள்முழுவதும் நினைத்துக்கொண்டிருக்கப் பிரியமா? பாவத்தில் தவறுகிற விசுவாசியே, உன் தனி தியானநேரத்தை அதிகப்படுத்து. நாள்முழுவதும் இயேசுவை மாத்திரம் சிந்திக்க உன் நினைவை ஒருமுகப்படுத்து.

3-வது: 'தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்' (1 யோவா. 5 : 4). இயேசுவானவர் தேவகுமாரனென்றும், சர்வவல்லவரென்றும், பாவத்தில் விழாதபடி உன்னைக் காக்கக்கூடியவரென்றும் நீ விசுவாசிக்கிறாயா? அவருடைய சர்வவல்லமை உன்னில் கிரியைசெய்ய அவருக்கு இடங்கொடுத்தாயா? நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகும்.

4-வது: ‘தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் என்று அறிந்திருக்கிறோம். தேவனால் பிறப்பிக்கப்பட்டவர் (அதாவது, கிறிஸ்து) அவனைக் காக்கிறார். பொல்லாங்கன் அவனைத் தொடான்’ (1 யோவா. 5 : 18). மூலபாஷையில் இந்த வாக்கியம் இந்த அர்த்தம் உடையதாயிருக்கிறது. இயேசு உன்னில் வாசம்செய்கிறாரா? அவர் உன்னோடிருக்கமாத்திரம் நீ பார்த்துக்கொள். சத்துரு உன்னைத் தொடாதபடி அவர் உன்னைக் காத்துக்கொள்வார்.

இவைகளை வாசித்தறிகிற விசுவாசியே, இவைகளின்படி செய்வாயானால் நீ மகா பாக்கியவானாயிருப்பாய்; இவைகளை அவமதிப்பாயாகில், கிறிஸ்துவின் நாளில் உன் உத்தரவாதம் மகா பெரிதாயிருக்கும்!